40 3-4

ஆனந்த போதினி

ஜய்– அக்டோபர், 1954

ஆ
ன811, N15AB
N54·40·3-4
209046


புரட்டாசி மீ
SEP 1954
MADRAS
3
அணா

அன்பானந்தன் அல்லது அருஞ்செல்வன் விழைந்த பெருஞ்செல்வம்

இந்நூலின் கதாநாயகன் பெயரே இந்நூற்கும் பெயராய் அமைந்தது. அன்பானந்தன் என்னும் பெயரால் இரண்டு உண்மைகள் அறியலாகும்; அன்பு, ஆனந்தத்தில் முடிந்து அதனோடு ஒன்றாகி விளங்கும் என்பதொன்று; மற்றொன்று இந்நூல் எந்தப் பாஷையில் எழுதப் பட்டுள்ளதோ, எந்தப் பாஷை நமக்குத் தாய்ப்பாஷையாக வுள்ளதோ, அந்தப் பாஷையின் பெருமை இப்படிப் பட்டதென்பது. தமிழ் என்னும் சொல்லே இனிமை என்று பொருள் படும். அன்பைவிட இனிமையுள்ளது வேறில்லை. இவ்வன்பும் அவ்வினிமையும் கலந்தால் ஆனந்தம் பிறக்கத் தடையென்ன? இந்த ஆனந்தம் தமிழ்பாஷை முழுவதும் நிரம்பி யிருக்கிறது என்பதைக் குறிப்பிக்கவே, தமிழ் எழுத்துக்களின் முதலெழுத்தாகிய 'அ' என்பதும், இறுதி எழுத்தாகிய 'ன்' என்பதும் இந்நூற் பெயர்க்கு முதலும் இறுதியுமாக அமைந்தன. இதன் விலை ரூபா 1-4-0

ஞானகாந்தி

கறையின்ற ஜோதியாக விளங்கும் ஞானகாந்தி என்னும் இக்கதா நாயகியின் பதிபக்தி, அறிவு, ஆற்றல், பொறுமை, தன்னடக்கம், பிறர் துயரு

ஆங்கில பாஷா போதினி

விலை ரூபா 3-8-0 தபாற்கூலி அணா 9

800-பக்கங்களுக்கு மேல் திக்கு காகிதத்தில் அச்சிடப்பட்டது

இதைச் சிரத்தையுடன் கற்றுக்கொள்ளத் தொடங்குவோர் பணச் செலவில்லாமலும், வேறெவ்விதக் கஷ்டமில்லாமலும் மிக எளிதில் இங்கிலீஷ் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுக் கொள்ளலாம். 10 வருஷம் படிப்பதனால் எவ்வளவு ஆங்கிலத் தேர்ச்சி யுண்டாகுமோ அவ்வளவு தேர்ச்சியை ஒரு மாதம் அல்லது 40 நாட்களில் இப்புத்தகத்தின் உதவியைக் கொண்டு அடைந்து, ஆங்கிலத்தை அதி விரைவில் படித்துக் கொள்ளலாம்.

இதில் ஒரு ரூபா முதல் 10 ஆயிரம் ரூபா வரை சம்பளப் பட்டிக் கணக்கு, வட்டிக் கணக்கு, ஒவ்வொரு தேசத்திலும் ஏற்படும் மணி வித்தியாசம், அன்னிய தேச நாணய மதிப்பு முதலியனவெல்லாம் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. இது முக்கியமாக மணியகாரர் கர்ணம், வில்லேஜ் முன்சீப் முதலியவர்களுக்கும், சிலோன் தோட்டங்களிலிருக்கும் கங்காணிமார்கட்கும் உதவி செய்யக்கூடியது.

ஷை தெலுங்கு பதிப்பு ரூ. 4.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167. மதராஸ்.

ஆனந்தபோதினி

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி 40 } ஜயஞு புரட்டாசிமீ கஉ 1954ஞு செப்டம்பர்மீ 17உ { பகுதி 3

உள்ளுறை.

எண்.		பக்கம்.
1.	கடவுள் வணக்கம்	122
2.	ஸ்ரீ வேங்கடேசுவரர் பல்கலைக் கழகம் (தலையங்கம்)	123
3.	சிரித்த முல்லை (கவிதை)	127
5.	ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர்	128
4.	புது வாழ்க்கை	[illegible]
6.	சான்றவர் வாழியோ !	[illegible]
7.	செல்வனின் [illegible]	[illegible]
8.	இலக்கிய உலகம்	145
9.	கருணை யுள்ளம்	[illegible]
10.	எம்பெருமான் பின் பிறந்தார்	156
11.	தைரியசாலி	159
12.	எதிர் வீட்டுப் பெண்	162
13.	ஊக்கம்	166
14.	வாழ்க்கைப் புயல் (தொடர் கதை)	170
15.	பஞ்சாங்கம்	180

OFFICE OF ... REGISTRAR OF BOOKS
20 SEP 1954
MADRAS

ஆனந்த போதினி

கடவுள் வணக்கம்

நம்பனை நால்வேதங் கரைகண் டானை
ஞானப் பெருங்கடலை நன்மை தன்னைக்
கம்பனைக் கல்லால் இருந்தான் தன்னைக்
கற்பகமாய் அடியார்கட்கு அருள் செய்வானைச்
செம்பொன்னைப் பவளத்தைத் திரளும் முத்தைத்
திங்களை நாயிற்றைத் தீயை நீரை
அம்பொன்னை ஆவடுதண் துறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே. (1)

மின்னானை மின்னிடைசேர் உருமி னானை
வெண்முகிலாய் எழுந்துமழை பொழிவான் தன்னைத்
தன்னானைத் தன்னொப்பார் இல்லா தானைத்
தாயாகிப் பல்லுயிர்க்கோர் தந்தை யாகி
என்னானை எந்தை பெருமான தன்னை
இருநிலமும் அண்டமுமாய்ச் செக்கர் வானே
அன்னானை ஆவடுதண் துறையுள் மேய
அரனடியே அடிநாயேன அடைந்து உய்ந்தேனே. (2)

பத்தர்கள் சித்தத்தே பாவித் தானைப்
பவளக் கொழுந்தினை மாணிக் கத்தின்
தொத்தினைத் தூநெறியாய் நின்றான் தன்னைச்
சொல்லுவார் சொற்பொருளின் தோற்ற மாகி
வித்தினை முளைக்கிளையை வேரைச் சீரை
வினைவயத்தின் தன்சார்வை வெய்ய தீர்க்கும்
அத்தனை ஆவடுதண் துறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே. (3)

ஒருமணியை உலகுக்கோர் உறுதி தன்னை
உதயத்தின் உச்சியை உருமா னானைப்
பருமணியைப் பாலோடு அஞ்சா டானைப்
பவித்திரனைப் பசுபதியைப் பவளக் குன்றைத்
திருமணியைத் தித்திப்பைத் தேன தாகித்
தீங்கரும்பின் இன்சுவையைத் திகழுஞ் சோதி
அருமணியை ஆவடுதண் துறையுள் மேய
அரனடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே. (4)

ஸ்ரீ வேங்கடேசுவரர் பல்கலைக் கழகம்

இரு வாரங்களுக்கு முன், தமிழ்நாட்டின் வடக் கெல்லையான திருவேங்கடத்தில் ஒரு பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டிருக்கின்றது. இந்நற் செய்தி மக்களிடையே பல கலைகளும் பரவவேண்டும்; கலாஞானம் உண்டாக வேண்டும் என விரும்பும் பொதுநல நோக்குடையோருக்கு மகிழ்ச்சியைத் தருவதாகும். ஸ்ரீ வேங்கடேசுவர் பல்கலைக் கழகம் என்று பெயரிட்டு அழைக்கப்படும் இச் சர்வகலாசாலை இந்தியாவில் இதுவரையுள்ள 30 சர்வகலாசாலைகளுடன் முப்பத்தோராவதாகும். தென்னிந்தியாவிலுள்ள சர்வகலாசாலைகளில் இது ஐந்தாவதாகும்.

இப் பல்கலைக் கழகத்தை ராஜ்ய சர்க்கார் எதுவும்—ஏன்? இந்திய சர்க்கார் கூடத் தொடங்கவில்லை. திருப்பதி தேவஸ்தானமே இதைத் தொடங்கி வைத்திருக்கிறது. அது மட்டுமல்ல; இப் பல்கலைக்கழகம் தங்கு தடையின்றி ஒழுங்காக நடைபெறுவதற்காக ஏராளமான மான்யங்களை வழங்கி வசதிகள் பல செய்து கொடுத்திருக்கிறது. இப் பல்கலைக் கழகம் தக்க இட வசதியுடன் நன்கு அமைவதற்கு ஆயிரம் ஏக்கரா நிலங்களையும் 16 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள கட்டிடங்களையும் ஏற்கனவே வழங்கி யிருக்கிறது. இதுவன்றி இப் பல்கலைக் கழகத்தின் தொடக்கச் செலவுக்கு ஆறரை லட்சம் ரூபாய் மான்யம் அளித்திருப்பதுடன், ஆண்டுதோறும் இரண்டரை லட்சம் ரூபாய் மான்யம் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறது. ஆகவே, இப் பல்கலைக் கழகம் யாதொரு குறைவுமின்றி மிகச் சிறப்பாக நடைபெற்று வரும் என்பதில் யாதொரு ஐயமில்லை. இப் பல்கலைக் கழகத்தின் மற்றொரு சிறப்பு என்னவென்றால், இதன் வேந்தராக—அதாவது தலைவராக ஒரு நீதிபதி நியமிக்கப்பட் டிருப்பதாகும். நீதிபதி கே. சுப்பராவ் அவர்கள் தாம் இப் பல்கலைக் கழகத்தின் வேந்தராக அமர்ந்திருக்கிறார். கல்வித் துறையில் பெரும் அனுபவம் வாய்ந்த திரு எஸ். கோவிந்தராஜலு நாயுடு தாம் துணை வேந்தராக நியமனம் பெற்றிருக்கிறார். இந்தியாவிலுள்ள பெரும்பாலான பல்கலைக் கழகங்கள், பிரிட்டிஷ் சர்க்கார் அமல் நடத்தி வந்த சம்பிரதாயத்தை யொட்டியே, அந்தந்த ராஜ்ய கவர்னர்களையே தலைவராக அமர்த்தி வைத்திருக்கின்றன. ஆனால் ஸ்ரீ வேங்கடேசுவரர் பல்கலைக் கழகம் நீதிபதி யொருவரைத் தன் தலைவராகக் கொண்

டிருக்கிறது. இவ்விதம், இது நடுவணர் ஒருவரைத் தலைவராகப் பெற்றிருப்பதும், தேவஸ்தானத்தால் நடத்தப்படுவதும் மிகவும் பாராட்டத்தக்க தொன்றாகும். இவ்வித ஏற்பாட்டால், இப் பல்கலைக்கழகம், சர்க்கார் பல்கலைக் கழகங்கள் பெரும்பாலானவைபோல், அரசியல் வாதிகள் செல்வாக்குக் குட்பட்டோ, அரசியல் நோக்கத்தை நிறைவேற்றும் முறையில் அடிமைப்பட்டோ இருக்கவேண்டிய அவசியமில்லை. அப்படியிருந்துங்கூட, ஆந்திர அரசியல்வாதிகளின் ஆதிக்கத்தில் இப் பல்கலைக்கழகம் சிக்கி விட்டிருக்கிறது. இன்று ஆந்திர சர்க்காரின் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்போர் தங்களுடைய அரசியல் நோக்கப்படி, இப் பல்கலைக் கழகத்தை இயக்கி வைக்க முற்பட்டிருக்கிறார்கள்.

ஆந்திர ராஜ்யம் தனியாக ஏற்பட்டுப் பல மாதங்களாயினும், நீதிமன்றங்கள் முதலியன கூடத் தனியாக ஆந்திர நாட்டு எல்லைக்குள்ளாகவே ஏற்பட்டு வருகின்றன வாயினும், எல்லையோரப் பிரதேசங்கள் எந்த ராஜ்யத்துடன் சேர வேண்டுமென்ற பிரச்னை இன்னுந் தீர்க்கப்படாமல் இருந்து வருகின்றன. விவகாரத்துக்கு—தகராறுக்குரிய பிரதேசங்களில் சித்தூர் ஜில்லா முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதாகும். இந்த ஜில்லாவில், திருப்பதி, திருத்தணி, காளத்தி முதலிய ஊர்கள் இருப்பது வாசக நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம். மேற்குறித்த ஊர்கள் தமிழ்நாட்டின் வடவெல்லைப் பகுதியில் இருப்பனவாகும். தமிழகத்தின் வடக்கெல்லையாய் விளங்குவது வேங்கடமலையே என்பது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே—அதாவது, தொல்காப்பியர், பனம்பாரனார் காலத்திருந்தே கூறப்பட்டு வரும் வரலாற்று உண்மையாகும். சரித்திர உண்மை, பூகோள அமைப்பு, நூல்வழக்கு, மக்கள் தொகை ஆகியன, இன்னமும் தென்குமரியும் வடவேங்கடமும் தமிழகத்தின் தெற்கெல்லை, வடக்கெல்லைகளேயாம் என்ற உண்மையை உறுதிப்படுத்தி வருகின்றன. இப்படியெல்லாமிருந்துங் கூட, திருப்பதி போன்ற இரண்டொரு பிரதேசங்களில் தெலுங்கர்கள் அதிகமாக வாழ்கிறார்கள் எனக் காரணங் காட்டி, அப் பகுதிகளனைத்தும் ஆந்திர ராஜ்யத்தைச் சேர்ந்தவையே என, திரு. பிரகாசம் போன்ற பிரமுகர்கள் வல்வழக்காடி வருகின்றனர். இவ்விதம் பின்னால் விவகாரஞ் செய்வதற்காகவே; இவர்கள் முன் கூட்டித் திட்டமிட்டே, திருப்பதி, காளத்தி, திருத்தணி போன்ற தமிழ்நாட்டு வடக்கெல்லைப் பகுதிகளில் தங்கள் தெலுங்கு மக்களை மெள்ளக் குடியேற்றி வந்திருக்கிறார்களோ என்று

நாம் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னைமா நகரைத் தங்களுக்குரியதென்று சொல்லிக்கொள்ள—தங்கள் ராஜ்யத்தின் தலைநகர் எனச் சொல்லிக்கொள்ள, திரு. பிரகாசமும், திரு. புலுசு சாம்பமூர்த்தியும் திருமதி துர்க்காபாயும், திரு. நாகேசுவரராவும் சுதந்திரப் போராட்ட காலத்திலிருந்தே திட்டமிட்டு இரகசியமாக வேலை செய்து வந்திருக்கிறார்களல்லவா! அது போலத்தான், வடவெல்லைப் ப தியிலும் இவர்கள் இரகசியமாக வேலை செய்து வந்திருக்க வேண்டுமென்று நாம் ஊகிக்கவேண்டியதாயிருக்கிறது.

நாம் இவ்விதம் எண்ணுவதற்கு முக்கிய காரணம், திருப்பதி தேவஸ்தானத்தின் நிர்வாகிகளால் தொடங்கப்பட்டு, அதன் மான்யத்தைக் கொண்டு நடத்தப்படப் போகும் இப்பல்கலைக் கழகத்தை, பொதுப் பல்கலைக் கழகமாக்காமல், ஆந்திரப் பல்கலைக் கழகமாகவே ஆக்க முயன்று, ஆந்திராவின் இரண்டாவது சர்வகலாசாலை என்று சொல்லத் தொடங்கியிருப்பதும், ராயலசீமையிலுள்ள கல்லூரிகளை இப் பல்கலைக் கழகத்துடன் இணைக்க முயல்வதும் ஆன காரியங்களாகும். ஆந்திர ராஜ்ய முதல் அமைச்சர் திரு. பிரகாசம்தான் இப்பல்கலைக் கழகத்தைத் தொடங்கி வைத்திருக்கிறார். அவர் தம் தொடக்கப் பேச்சில், அறிவுக்கும் அருளுக்கும் உறைவிடமான ஸ்ரீ வேங்கடேசுவரரின் பெயரால் தொடங்கப்பட்டிருக்கும் இப்பல்கலைக் கழகம் நாட்டில் எங்கும் ஞான ஒளியைப் பரப்புமென்றும், நலாந்தா சர்வகலாசாலையைப்போல இப் பல்கலைக் கழகமும் விளங்கும் என்றும், மற்றப் பல்கலைக் கழகங்களைப்போலல்லாமல் இது கலாசார கேந்திரமாக விளங்கும் என்றும் குறிப்பிட்டார். இவர் பேச்சுதான் பரந்த மனோபாவத்துடன் காணப்படுகிறதேயொழிய அந்தரங்கத்தில் குறுகிய நோக்கமுடையவராயிருக்கிறார். இவர்மட்டுமல்ல; ஆந்திர அரசியல் தலைவர்கள், ஆட்சியாளர்கள் அத்தனை பேரும் திருப்பதி முதலிய பிரதேசங்கள் விஷயத்தில் குறுகிய புத்தியுடையவராகவே யிருக்கின்றனர்; நப்பாசை யுடையோராகவே யிருக்கின்றனர். கலாசார கேந்திரமாகவும், ஆத்ம ஞானத்தைப் போதிக்கும் வித்யாபீடமாகவும் விளங்கும் என்று முதன் மந்திரியும் கல்வி மந்திரியும் வருணிக்கும் ஸ்ரீ வேங்கடேசுவரர் பல்கலைக் கழகத்தில் தமிழுக்கு இடமேயளிக்கப்படவில்லை என்பதை நோக்கும்போது ஆந்திர ஆட்சியாளர், அரசியல் வாதிகளுடைய அந்தரங்க நோக்கத்தை நன்கு புரிந்து

கொள்ளலாம். அதுவும் இத் திருப்பதியில் ஏற்கனவே ஒரு கல்லூரி இருந்து வந்திருக்கிறது. திருப்பதி தேவஸ்தானத்தால் நடத்தப்பட்டுவந்த இக் கல்லூரியில் தமிழ் ஆராய்ச்சிக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருந்தது. அத்தகைய கல்லூரி பல்கலைக் கழகமாக மாறியிருக்கும்போது, அக்கழகத்தில் தமிழுக்கல்லவா முதலிடங் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும்? அதுவும் ஆத்ம ஞானத்தைப் போதிக்கும் கழகமாயிருக்கும் கழகத்தில் தமிழ் அல்லவா முன்வரிசையில் இருக்கவேண்டும்? ஆன்மீகம், தத்துவம் போன்ற விஷயங்கள் தெலுங்கில் எந்த அளவுக்கு இருக்கிறது? தமிழில் உள்ளதுபோல், தெலுங்கில் ஏராளமாக உண்டா? என்று கேட்டால் ஆந்திர சகோதரர்கள் என்ன பதில் சொல்வார்கள். தமிழ் மொழியில் ஆன்மீகம், தத்துவம் முதலிய விஷயங்கள் குறித்து ஏராளமான நூல்கள் இருக்கின்றன என்பது ஆந்திர ஆட்சியாளர்களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் ஒரு சிறிதாயினும் தெரியாது என்று சொல்ல முடியுமா? தெரிந்தும் தெரியாததுபோல் பாவனை செய்கிறார்கள் அவர்கள். இப்பல்கலைக் கழகத்தை, திருப்பதி தேவஸ்தானம் ஏராளமாக மான்யம் வழங்கி நடத்த முன் வந்திருக்கிறதென்றால், அது கொடுத்திருக்கும், மான்யம், இந்தியா வெங்கணுமுள்ள எல்லா இந்து மக்களும் செலுத்திய பிரார்த்தனைக் காணிக்கைப் பொருளேயாகும். இக்காணிக்கைப் பொருளில் பெரும் பகுதி தமிழ் மக்களால் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்திருக்கிறது. இவ்விதம் தமிழ் மக்கள் வரையாது வழங்கிவரும் பெரும் பொருளால் நிர்வகிக்கப்பட்டு வரும் திருப்பதி தேவஸ்தானம் நடத்த முன்வந்துள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரர் பல்கலைக் கழகம் தமிழ்க் கலைஞானம், ஆன்மதத்துவம் முதலியவைகளுக்கு முதலிடம் தந்து தமிழ் மாணவர்களுக்குப் பெரும் பயன் உண்டாகும்படியாகச் செய்வதல்லா முறைமை? நியாயம்?

ஆந்திர ஆட்சியாளர்கள், அரசியல் வாதிகளின் ஆதிக்கத்தில் மேற்படி பல்கலைக் கழகம் இருக்கும்வரை, தமிழ் மொழிக்கோ, பிற மொழிகளுக்கோ, அவைகளின் கலாசார, ஆத்ம தத்துவ ஞானங்களுக்கோ தக்க பிரதிநிதித்துவம் கிடைக்கும் என்று நம்மால் சொல்ல முடியவில்லை. ஆதலால், மத்திய சர்க்கார், ஸ்ரீ வெங்கடேசுவரர் பல்கலைக் கழகத்தை, காசி, அலிகார், டெல்லி, சாந்திநிகேதன் பல்கலைக் கழகங்களைப் போலத் தங்கள் நேர்பார்வையில், நிர்வாகத்தில் கொண்டு வந்து, எல்லா ராஜ்ய மக்களுக்கும் பொது

சிரித்த முல்லை

கா. கணபதி

★

கானலிடை மலர்ச் சோலையிலே—எழில்
கட்டித் தழுவிடும் வேளையிலே—சிறு
கூனலிளம்பிறை காட்டிடும் வெள்ளொளி
கொண்ட முறுவலைக் கொட்டினதே!
காரைஒயில் குயில் கூவுமொலி—எங்கும்
நாடிடும் வண்டுகள் தேருமொலி—குளிர்
நீரையெலாம் கொண்டு தேக்கிடும் மென்னடை
அன்னங்கள் நீக்கரும் புன்னகையே!
சோலையெலாம் வண்ணப் பூமலராம்—அங்குச்
சொக்கிடும் பொன்னொளித் தாரகையாம்—வெண்
பாலையெலாம் சொரி பாத்திர மென்னவே,
பார்த்துச் சிரித்ததோர் முல்லைமலர்!
கள்ளமிலா உள்ள வெண்மலரே!—என்னைக்
கண்டு நகைத்தல் குறும்பலவோ—உன்
உள்ளமுறு செயல் உரைத்திடாய்—என்றதும்
உள்ளூறு புன்னகை பூத்ததுவே!

வானதாக பதினெண்மொழி பேசும் மக்களும் ஒன்றுகூடி அள்ளவளாவித் தத்தம் கலாசார, ஆன்மதத்துவ உண்மைகளை உணர்ந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும்படி செய்யவேண்டும். அப்போதுதான் இப்பல்கலைக்கழகம், உலகப்பிரசித்தி பெற்ற நலாந்தாபோல, ஒரு சாந்தி நிகேதனம் போல, ஒரு காசி பல்கலைக் கழகத்தைப் போல, ஓர் அலிகார் பல்கலைக் கழகத்தைப்போல, ஒப்பற்று விளங்கி எல்லா மக்களுக்கும் உயர் ஞானத்தையும் ஆன்ம தத்துவத்தையும் போதிக்க முடியும். தேச மெங்கணுமிருந்து பக்தர்கள் வந்து திருப்பதி வேங்கடேசப் பெருமாளுக்குக் காணிக்கை செலுத்துவதுபோல, இந்தியா முழுவதுமுள்ள அறிஞர் பெருமக்கள் வந்து இக்கல்விக் கோவிலுக்குக் காணிக்கை செலுத்துவார்கள். தமிழ்நாட்டிலும் இது போன்ற பல்கலைக் கழகமொன்று சிறப்பாக ஏற்பட வேண்டும்.

ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர்

வி. சங்கரய்யர்

★

"எப்பொழு தெல்லாம் தர்மத்துக்கு இடையூறு நேரிடு கிறதோ, எப்பொழு தெல்லாம் அதர்மம் அதிகப் படுகிறதோ, அப்பொழு தெல்லாம் நான் அவதரிக்கிறேன்."

(4-வது அத்தியாயம்—7.)

"நல்லோரைக் காக்கவும், தீயோரை நாசஞ் செய்யவும், தர்மத்தை நிலை நிறுத்தவும் வேண்டி ஒவ்வொரு யுகத்திலும் நான் அவதரிக்கிறேன்."

(4-வது அத்தியாயம்—8.)

எனப் பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அர்ஜுனனிடம் கூறுகிறார்.

மனிதர்களுக்கு நன்மையைச் செய்யவும், உலகத்தைத் தீயோரிடமிருந்து காக்கவும் வேண்டிக் கடவுள் பல அவதாரங்கள் உலகின் பல பாகங்களிலும் எடுக்கின்றனர் என்பதை ஹிந்துக்கள், முகம்மதியர்கள், கிறிஸ்துவர்கள், ஜெயினர்கள் முதலிய எல்லா மதத்தினரும் ஒப்புக் கொள்ளுகின்றனர். இவ்வாறு அவதரித்த மஹான்களே, ஸ்ரீராமர், கிருஷ்ணர், புத்தர், ஏசு கிருஸ்து, முகம்மது நபி முதலியோர். இவ்வாறு அவதரித்தவர்களில் ஒருவராகவே ஸ்ரீ கிருஷ்ண சைதன்யரும் கருதப் படுகின்றனர்.

கி. பி. 15-வது நூற்றாண்டில், வங்காளத்தில் கல்விப்பயிற்சி மிகுதியாக யிருந்தும் ஜனங்களில் பெரும் பான்மையோர் கடவுள் பக்தி யில்லாதவர்களாகவும், தன்னல மேலிட்டவர்களாகவும், நீதியும் நேர்மையும் குன்றியவர்களாகவும் இருந்தனர்.

16-வது நூற்றாண்டில் சுபத்திர ராயர் என்ற இந்து அரசரை நாட்டைவிட்டுத் துரத்திவிட்டு ஹுசேன்ஷா என்ற முகம்மதிய அரசன் வங்காளத்தை ஆண்டு வந்தான். இவன் ஒரு கொடுங்கோல் மன்னன். இவனுடைய பிரதான மந்திரியான சந்தகாஜியும் இரக்கமோ ஈரமோ இல்லாத மிகக் கொடியவன். பெண்களின் கற்பை அழித்தலும், கொலையும், களவும், கொள்ளையும், மதுவும் வங்காள நாட்டில் சிறந்து விளங்கலாயிற்று.

இந்த சந்தர்ப்பத்தில் ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் தோன்றி, அரசியல் அதிகாரிகளையும், முகம்மதிய மன்னனான ஹுசேன்ஷாவையும், அவனது மந்திரியான சந்தகாஜியையும் மற்றும் அக்கிரமம் செய்யும் பல துர்மார்க்கர்களையும் தம் மஹிமையாலும் சாந்த வசனங்களாலும் கிருஷ்ண நாமம், ஹரி நாமம் ஆகிய மஹா மந்திரங்களின் மஹிமையாலும் தம் வசப்படுத்தித் திருத்தி தெய்வ பக்தியை ஊட்டி நாட்டின் நிலைமையை சீர் திருத்தி தர்மத்தை ஸ்தாபித்தார்.

ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் கி. பி. 1486-ல் பங்குனி மாதம் பௌர்ணிமையும் உத்திர நக்ஷத்திரமும் கூடிய சுபயோக சுப தினத்தன்று வங்காள நாட்டில் நவத்தீபம் (Nadia) என்னும்

ஊரில் பிறந்தார். இவருடைய தந்தை ஜகன்னாத மிச்ரர் என்னும் பண்டிதர். தாய் சசீதேவி. இவர் பெயர் கௌராங்கர். துறவியான பிறகுள்ள இவரது பெயர் ஸ்ரீகிருஷ்ண சைதன்யர். இவருடைய தமையனாரான விசுவரூபன் பிறந்து பத்து வருஷ காலத்துக்குப் பிறகு இவர் பிறந்ததனால் இவரது பெற்றோர்கள் இவரை மிகப் பிரியமாக வைத்து வளர்த்து வந்தார்கள். அதனால் பாலியத்தில் முறட்டுத் தனமும் பிடிவாதமும் உள்ளவராக இவர் இருந்தார்.

விசுவரூபன் நன்கு கல்விகற்று வேதாந்த விசாரத்தில் ஈடுபட்டு துறவாம் பூண்டு விட்டார். அப்போது கௌராங்கருக்கு வயது ஒன்பதுதான். அச்சமயத்தில் இவருக்கு உபநயனம் செய்யப்பட்டது. வழக்கம்போல இவர் குருவின் இல்லத்தில் கல்வி கற்று வந்தார். இவரது பதினோராவது வயதில் தந்தை ஜகன்னாத மிச்ரா விஷஜ்வரம் கண்டு பரலோக மெய்தினர்.

பிறகு இவர் கங்கா தாஸ் என்பவரிடமிருந்து வியாகரணமும், சார்வபௌமரிட மிருந்து தர்க்க சாஸ்திரமும் நன்கு கற்ரூர். இவைகளுக்கு மிக அருமையான உரைகளும் இவர் எழுதினர். தாமே ஒரு பாடசாலையை ஏற்படுத்தி இலவசமாக பல மாணவர்களுக்குக் கல்வி கற்பித்து வந்தார்.

ஒரு சுபமான முகூர்த்தத்தில் இவருக்கு மஹா வித்துவானன ஸ்ரீ வல்லபாசாரியருடைய குமாரியான ஸ்ரீ லக்ஷ்மி தேவியைத் திருமணம் செய்வித்தார்கள். ஒரு நாள் ஈசுவரபுரி என்ற ஒரு யதீசுவரரை இவர் சந்தித்தார். அவரை தம் இல்லத்துக்கு அழைத்துவந்து சோடச உபசாரம் செய்து அதிதி ஸத்காரம் செய்தார். இவ் விருவருக்கும் நட்பு நன்கு வளர்ந்து வந்தது.

இவர் தமது 18-வது வயதில் வங்காளத்துக்குக் கிழக்கேயுள்ள நாடுகளுக்குப் புறப்பட்டார். ஜனங்களுக்கு இவரைக் காணவும் ஹரிபக்தி தானகவே உண்டாகிவிட்டது. பலர் ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்து கொண்டே இவரைப் பின் தொடர்ந்தார்கள்.

பிறகு நவத்வீபத்துக்கு வந்தார். அப்பொழுது இவருடைய மனைவி பரமபத மடைந்தாள். அதனால் இரண்டாம் தாரமாக அவ்வூர் சனாதன மிச்ரருடைய மகளான விஷ்ணுப் பிரியையை மனைவியாக மணம் முடித்தனர். கயா என்னு மிடத்திலுள்ள ஈசுவரபுரி என்ற பெரியோரிட மிருந்து ராதாகிருஷ்ண உபாஸனா மார்க்கத்தை உபதேசம் பெற்றார். ஜாதிமத வித்தியாசமின்றி பலர் இவரைப் பின் தொடர்ந்து கிருஷ்ண நாம சங்கீர்த்தனம் செய்ய ஆரம்பித்தனர். நாட்டில் கிருஷ்ணபக்தி நன்கு பரவ ஆரம்பித்து விட்டது. மிகக் கொடிய கொத்தவாலர்களான மாதை, ஜகை என்ற இரு முகம்மதியர்கள் கூட இவரது சீடர்கள் ஆனார்கள். ஹரி நாமத்தை உச்சரிக்கக் கூடாது எனக் கடுமையான உத்தரம் போட்ட கொடுங்கோல் மன்னனகை காஜி என்ற வங்காள கவர்னரான முகம்மதியன் கூட இவரது சீடனாகி ஹரிநாம கீர்த்தனம் செய்ய ஆரம்பித்து விட்டான். எவ்வளவோ பிரபல முகம்மதியர்களும் கூட இவரைக் கண்ட மாத்திரத்தில் ஹரி நாமத்தை உச்சரித்து இவருடைய சீடர்கள் ஆனார்கள்.

கத்துவா என்னு மிடத்திலுள்ள கேசவ பாரதி என்னும் மஹானை கௌராங்கர் அணுகி அவரிடமிருந்து துறவறம் பூண்டார். அன்றே இவருடைய நாமம் ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் என மாற்றப்பட்டது. பின் பூரி என்ற ஜகன்னாத க்ஷேத்திரத்தை அடைந்தார். பிறருடைய மனதை வசியப்படுத்தி கிருஷ்ண பக்தியில் ஈடுபடும்படியான ஒரு திவ்யதேஜஸ் இவருக்கு இருந்தது. இவருடைய பெருமை விஹாரம், ஒரிஸ்ஸா, மேற்கு வங்காளம், கிழக்கு வங்காளம் ஆகிய மாகாணங்களில் நன்கு பரவின.

கொஞ்ச நாட்கள் சென்றதும் கோவரி நதிக்கரையை இவர் அடைந்தார். விஜய நகரத்து அரசரான இராமானந்த ராயரும் இவரது சீடரானார். சென்ற இடங்களிலெல்லாம் இவருக்கு சீடர்களே காணப்பட்டார். ஆங்காங்கு சில தெய்வீக நிகழ்ச்சிகளையும் செய்ததாக கூறுகிறார்கள். பிரபுக்கள், அரசர்கள், பண்டிதர்கள், பாமரர்கள், பௌத்தர்கள், ஜைனர்கள், முகம்மதியர்கள் யாவரும் இவருக்குச் சீடர்களானார்கள்.

மஹாராஷ்டிர தேசத்து துக்காராம் சுவாமியும், கூர்ஜர தேசத்து பிரபல நாராயண சுவாமியும் கூட இவரது சீடர்கள் ஆனார்கள். இப்பொழுது இவரது வயது முப்பத்தி ஒன்றுதான். பிறகு மறுபடியும் ஜகன்னாத க்ஷேத்திரத்தில் நாற்பத்தி எட்டாவது வயது வரை தங்கி ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்துவந்தார். ஜகன்னாதத்திலுள்ள சார்வபௌமர், காசியிலுள்ள பிரகாசானந்த சரஸ்வதி, மாலட்டாவிலுள்ள பல கர்னாடகதேச வித்வான்களும், ரூபன், சனாதனன் என்ற பிரபல வங்காளிகளும், ஹுஸேன்ஷா என்ற முரட்டு முகம்மதிய அரசனும் இவரது சீடர்களாகி இவருடன் வசிக்க ஆரம்பித்து ஹரிபஜனை செய்யலானார்கள்.

எல்லோருக்கும் ஜாதிமத வித்தியாசமின்றி கிருஷ்ணபக்தி என்ற அமிருதத்தைக் கொடுத்து பருகும்படி இம்மகான் செய்தார். சங்கராசாரியருடைய பஜகோவிந்தத்தையே இவர் அடிக்கடி சீடர்களுக்கு உபதேசித்து வந்தார். அந்த பஜகோவிந்தம் அத்யாத்மிக, ஆதி பௌதிக, ஆதி தெய்வீகக் கஷ்டங்களை நீக்கும் தன்மை வாய்ந்தது என்பதை அறியாதார் இரார்.

இவர் ஒரு நாள் பூரி க்ஷேத்திரத்தில் கோபீநாதருடைய ஆலயத்தில் ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது திடீரென்று பக்தி மேலீட்டால், "கண்ணனைக் கண்டேன், கண்ணனைக் கண்டேன்" என்று கூறிக்கொண்டே பல சீடர்களுடன் கூடச் கடலைநோக்கிச் சென்றார். நீரின்மீதே சிறிது நேரம் நடந்து சென்றார். பிறகு இவரை யாருமே காணவில்லை. அங்கு கூடியிருந்த சீடர்கள் மிக வியப்படைந்தனர்.

கடவுள் ஒவ்வொரு தடவையும் மனித உருவத்தில் ராமர், கிருஷ்ணர், கிருஸ்து, நபி நாயகம், புத்தர், சங்கராசாரியர், மஹாத்மா காந்தி என்ற பல பெயர்களுடன் தர்மத்தைக் காக்கவும், கெட்டவர்களை ஒடுக்கவும், நல்லவர்களைக் காக்கவும் வேண்டி இந்த பூமியில் அவதரிக்கிறார். பக்தி ஒன்றுதான் யாவரையும் காக்கும என்பதை நன்கு உணரவேண்டும்.

புது வாழ்க்கை

★

சௌமித்திரன்

ஆபீசிலிருந்து தன் வேலைகளை எல்லாம் முடித்துக்கொண்டு இன்னும் கால்மணி நேரம் இருக்கும் போதே கிளம்பி விட்டான் சந்திர சேகரன். ஒருவித உற்சாகத்துடன் மாடிப் படிகளில் தடதடவென்று இறங்கி வந்துகொண்டிருந்தான். 'ஸார், தந்தி!' என்று கூவிக்கொண்டே எதிரே ஓடி வந்தான் தந்திச் சேவகன். ஏமாற்றம் அடைந்தவன்போலானான் சந்திர சேகரன். பேரிடி விழுந்தவன்போல் நிலைதடுமாறி ஸ்தம்பித்து நின்றுவிட்டான். கைகள் நடுநடுங்கத் தட்டித் தடுமாறி கையெழுத்துப் போட்டுவிட்டு தந்தியைப் பிரித்தான். ஆ! என்ன பயங்கரச் செய்தி—அந்த ஒரு கணத்தில்—ஒரே கணத்தில் இருந்த அவனுடைய மனோநிலையை வர்ணிக்க வார்த்தைகளே அகராதியில் இல்லை. குழம்பிய உள்ளத்துடன் கவலை தோய்ந்த முகத்தை வைத்துக்கொண்டு வீட்டிற்கு வந்தான்.

தினசரி மாலை 6 மணிக்குப் பிறகுதான் அவன் ஆபீசிலிருந்து திரும்புவது வழக்கம். ஆகையால் இந்த வழக்கத்திற்கு விரோதமான சம்பவம் அவன் மனைவி கோமதிக்கு மிகவும் வியப்பை அளித்தது.

மேலும் அன்று காலை சந்திரசேகரன் ஆபீசுக்குச் செல்லும் போது திரும்பி வருவதற்கு கொஞ்சம் நேரம் ஆனாலும் ஆகலாம் எனக் கூறி, கோமதியைச் சாப்பிட்டுவிட்டுத் தூங்கச்சொல்லி இருந்தான்.

காரணம் அன்று ஊரிலிருந்து சந்திரசேகரனின் மைத்துனியும், அவள் கணவன் சங்கரனும் வருவதாக தந்தி வந்திருந்தது. ஸ்டேஷனுக்குச் சென்று அவர்களை அழைத்து வரவேண்டும் என்று சந்திரசேகரன் சீக்கிரமாக ஆபீஸ் வேலைகளை எல்லாம் முடித்துக்கொண்டு கிளம்பினான். ஆனால் இந்தமாதிரி பயங்கரமான தந்தி வரும் என்பது அவனுக்கு எப்படி தெரியும்?

சந்திரசேகரனின் முகத்தில் துக்கத்தின் ரேகை படர்ந்தது. அவன் முகபாவம் கோமதியின் உள்ளத்தில் என்னென்ன சந்தேகங்களையோ எழுப்பவிட்டது. அவள் உள்ளக் கொந்தளிப்பை வெளிக்காட்டாமல், "என்ன சமாசாரம்? உங்கள் முகம் ஒரு மாதிரி வாட்டமாக இருக்கிறதே!" என்றாள். அவன் சிறிது நேரம் மௌனமாக இருந்தான். பிறகு, "கோமதி! இந்தத் தந்தியைப் பார்" என்றான் தழுதழுத்த குரலில். கோமதி திகைத்து தந்தியை வாங்கிப் படித்தாள்.

"கார் விபத்து...! சங்கரன் மரணம்...உமா ஆஸ்பத்திரியில்—"

அடுத்த கணம் கோமதி "ஐயோ!"—என்று வீரிட்ட வண்ணம் முகத்தை இரு கரங்களாலும் பொத்திக்கொண்டாள். சந்

திரசேகரன் செயலற்று ஸ்தம்பித்து நின்றுவிட்டான். அவனுடைய பூத்துப்போன கண்களிலே கண்ணீர் ததும்பியது.

* * *

உமா அவனுடைய மைத்துனி. அதாவது, அவன் மனைவி கோமதியின் தங்கை. கோமதியும் உமாவும் தவிர அவர்களுடைய பெற்றோர்களுக்கு வேறு குழந்தைகள் கிடையாது. பெரிய பணக்காரர்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

பணக்காரனை சந்திரசேகரனுக்கு இக்குடும்பத்துடன் தொடர்பு ஏற்பட்டதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. தந்தைக்கு ஒரே மகனை சந்திரசேகரன்தான் கோமதியைத் தவிர வேறு யாரையும் மணக்கமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்து அவளையே மணந்து கொண்டான். இது அவனது பெற்றோர்களுக்கு அவ்வளவாகப் பிரியமில்லாமையால் சிறிது மனஸ்தாபம் ஏற்பட்டது. அதனால் சந்திரசேகரன் தனியே குடித்தனம் ஏற்படுத்திக் கொண்டு மாமனார், மாமியார், மைத்துனி இவர்களையும் வீட்டிலேயே வைத்துக் கொண்டான்.

அப்போது உமா பதினாறு வயது பருவமங்கை. கோமதியை விட மூன்று நான்கு வயது இளையவள். கோமதி ரொம்ப அடக்கமான பெண். அவள் கல்லூரி படிக்கும் போதுகூட படிக்கும் நேரத்தைத் தவிர மீதி நேரத்தில் அவளை தெருப் பக்கமே பார்க்கவே முடியாது. ஆனால் உமா அதற்கு நேர் எதிரிடை. ரொம்ப துருதுருப்பு. எப்பொழுதும் தன் சிநேகிதி வீடுகளுக்குப் போய் அரட்டை அடித்துக்கொண்டிருப்பாள். நின்ற இடத்தில் நிற்கமாட்டாள். கண்களிலும் முகத்திலும் ஒரு சுறுசுறுப்பு சதா நிலைத்திருக்கும். பார்க்கும் பொருள்களிலெல்லாம் ஏதோ அதிசயத்தைக் காண்பதுபோல அவள் கருவிழிகள் மலர்வது அவளது அழகைப் பன்மடங்கு மிகைப்படுத்தும்.

முதல்முறை அவளைக் கண்டதும் சந்திரசேகரனுக்கு ரொம்பவும் பிடித்து போயிற்று. எப்பொழுதும் சிறு குழந்தையைப் போல சந்திரசேகரனுடன், 'அத்திம்பேரே, அத்திம்பேரே' என்று வளைய வளைய வருவதும், அடிக்கடி அவனைக் கேலி செய்து பேசுவதும் அவனது உள்ளத்திலுள்ள ஒருவித அர்த்தமற்ற பாசப் பொய்கையைக் கிளறிவிட்டது.

அவள் தனிக் குடித்தனத்தைத் துவக்கிய பிறகு அவ்வீட்டிலே குதூகலம் நிரம்பி வழிந்தது. குதூகலம் நிரம்பிய வீட்டிலே துக்கம் தலைகாட்டுவது உலக இயல்புதானே. அவர்கள் தனிக் குடித்தனம் நடத்த ஆரம்பித்த இரண்டாவது வருடம் கோமதியின் மாமனார் மரணமடைந்துவிட்டார். கணவனிறந்த பிறகு தனக்கு இவ்வுலகில் வேலையில்லை என்று சொல்வதுபோல் சந்திரசேகரனின தாயாரும் சில மாதங்களுக்குள் விடைபெற்றுக் கொண்டாள்.

உமாவின் கல்லூரி படிப்பும் முடிந்ததும் கோமதி அவளுக்கு மணம் முடித்துவிட விரும்பினாள். பல இடங்களில் சந்திரசேகரன்

அலைந்து கடைசியாக ஒருவனைப் பிடித்துக்கொண்டு வந்தான். பையனின் பெயர் சங்கரன். உமாவுக்கு ஏற்ற நல்ல அழகன்! எம். ஏ. பட்டதாரி. செக்ரடேரியட்டில் நல்ல உத்தியோகத்தில் உள்ளவன்.

ஒரு முகூர்த்த நாளில் சங்கரனுக்கும், உமாவுக்கும் திருமணத்தை வெகு விமரிசையாக முடித்துவிட்டு, "உஸ், அப்பாடா!" என்று பெருமூச்சுவிட்டான் சந்திரசேகரன்.

மூன்று வருடங்கள் உமாவின் மணவாழ்க்கை இன்பகரமாக ஓடியது. இதற்கிடையில் கோமதியும் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றாள். எல்லோர் உள்ளமும் உவகையால் நிறைந்திருந்தது. ஒரு நாள் உமாவிடமிருந்து தானும் தன் கணவனும் குழந்தையைப் பார்ப்பதற்குப் புறப்பட்டு வருவதாகக் கடிதம் வந்தது. அன்று மாலை சந்திரசேகரன் உற்சாகத்துடன் அவர்களை எதிர்சென்று அழைத்துவர ஸ்டேஷனுக்குக் கிளம்பியபோதுதான் அந்தப் பேரிடியும் விழுந்தது.

* * * *

கார் விபத்தில் அதிக ஆபத்துக்குள்ளாகாத உமா ஆஸ்பத்திரியில் சிகிச்சை முடிந்ததும் கணவனை இழந்து விதவையாக, சந்திரசேகரனின் வீட்டை அடைந்தாள். அவள நிலையைக் கண்டு சந்திரசேகரனும் கோமதியும் மனம் வெதும்பினர். பதறியழுதனர்.

தன் கண்ணெதிரே தான் சுமங்கலியாக வாழ்ந்து வருகையில், தன் தங்கை மங்களநாண், நல்லாடைகள், மணமலர், குங்குமம், அணிகள் போய் வாழ்வதை அவள் எப்படி சகிப்பாள்? இந்த அழகியின் வண்ணம் கெடுத்து, அவள் வாழ்வைக் குலைக்கும் மூடச் சடங்குகளை இனிச் செய்தாகவேண்டுமே? அதுவும் தமக்கையாகிய தான் மஞ்சளும், பூவுமாகக் காட்சி யளிக்கையில், தன் தங்கை—அழகே உருவான தன் தங்கை மஞ்சளிழந்து, வாச மலர்மாலை யிழந்து வாழ்வதை கோமதியின் சகோதரபாசம் எப்படித் தாளும்? தன் தோற்றம் நல்லவைகளுக்குக் குறிகோளாக விளங்கி வருகையில், தன் தங்கை பிறர் கண்களில் 'சகுன'த் தடையாகத் தென்படுவதை அவள் நினைத்துப் பார்க்கவும் அஞ்சினாள். என்ன செய்தும் துக்கம் தீர்ந்தபாடில்லை. நெருப்பு எரிவதுபோலிருந்தது அவர்களுக்கு.

வாழ்க்கையில் இப்பெரும் கொடுமைக்கு உள்ளான உமாவைத் தேற்றவும், மீண்டும் அவள் மனதில் சந்தோஷமுண்டாக்கவும், சந்திரசேகரன் பட்டபாடு இவ்வளவு அவ்வளவு அல்ல. அவள் முகத்தில் ஒரு புன்னகை தோன்றாதா என்று ஏங்குவான். வாழ்க்கையில் மீண்டும் உற்சாகம் கொள்வதற்காகப் பல பல தேறுதல் மொழிகள் கூறினான்.

கோமதியின் குழந்தை கண்ணன் அவளுக்கு உற்ற துணையானான். மழலைமொழி பேசும் அம் மதலையின் உறவு அவளது

நொந்த இதயத்திற்கு மிகவும் ஆதரவாக இருந்தது. சினிமா, நாடகம் முதலிய கேளிக்கைகளுக்கு உமாவையும், கோமதியையும் அழைத்துச் செல்வான் சந்திரசேகரன்.

* * * *

உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூடமுடியுமா? சிறிது சிறிதாக உமா தனது துக்கத்தை மறந்து வாழ்க்கையில் மீண்டும் களிப்பெய்தி இருப்பது ஊராரின் கண்களை உறுத்தியது போலும்.

வேலையற்றுத் திரியும் சோம்பேறிகளின் வாயிலிருந்து வரும் வம்பையே நம்பி உயிர்வாழும் சில ஊர்ப் பிடாரிகளின் கைங்கரியத்தினாலும் சந்திர சேகரனைப் பற்றியும், உமாவைப் பற்றியும் பற்பல வார்த்தைகள் பரவலாயின.

"ஏண்டி அம்புலு! உனக்குச் சேதி தெரியுமா?..."

"எல்லாம் தெரியும். ஊரே கொல்லுனு சிரிப்பா சிரிக்கிறதே. என்ன வெட்கங்கெட்டத்தனம்!"

'அதைத்தானே நானும் கேக்கறேன். வயசுப் பெண்ணை வீட்டில் வைத்துக்கொண்டு அவன் அடிக்கும் கொட்டத்தைப் பாரேன். பெண்டாட்டி இடம்கூட இப்ப ஜாஸ்தி பேச்சு வார்த்தை இல்லையாம். எப்பப் பார்த்தாலும் மைத்துனி பின்னாலேயே பல்லை இளிச்சுண்டு நிக்கறானாம்!"

"எனக்கு அப்பவே தெரியும். அந்தக் குலுக்குக்காரி மகா துடுக்கு. கல்யாணத்துக்கு முந்தியே அவனை மயக்கிட்டாளே, அவனுக்குப் புருஷன் வீட்டிலே எப்படி இனிக்கும்? அதுதான் மகராஜி புருஷனையே முழுங்கிவிட்டு மீண்டும் அத்திம்பேரை அண்டிக்கொண்டு விட்டாள!"

இம்மாதிரி பேச்சுக்கள் பல சந்திர சேகரனின் காதில் காற்றுவாக்கில் விழலாயின. ஆனால் அவன் அதைப் பொருட்படுத்தவில்லை. "சி, மனிதப் பிசாசுகளே! நீங்களும் ஒரு மனிதர்களா?" என்று வெறுப்புடன் அந்த இடத்திலேயே காரித் துப்பிவிட்டு அப்பால் சென்றுவிடுவான்.

ஆனால், இதே பேச்சுக்கள் கோமதியின் காதிலும் விழுந்திருக்கவேண்டும். அவளால் இந்த அபவாதத்தைத் துச்சமாக மதிக்க முடியவில்லை. சகோதர பாசம் சிறிது சிறிதாக மறைய ஆரம்பித்தது. உடனே அதிர்ஷ்டக் கட்டை, மூதேவி, தொட்டது விடியாத பீடை போன்ற வார்த்தைகள் சர்வ சகஜமாக உமாவின்மீது கோமதியிடமிருந்து பிரயோகிக்கப்பட்டு வந்தன. உமாவும் தன் விதியை நினைத்து கண்ணீர் பெருகிக் காலத்தைக் கழித்து வந்தாள்.

ஒருநாள் சந்திரசேகரன் ஆபீசிலிருந்து ஆறுமணிக்கு வீட்டுக்கு வந்தான். அப்பொழுது கோமதி வீட்டில் இல்லை. உமா மாத்திரம் தன் அறையில் உட்கார்ந்துகொண்டு தனது வாழ்க்கைப் பாதையின் கரடுமுரடுகளை நினைத்து வருந்திக்கொண்டிருந்தாள். அவள் உள்ளம் துன்பத்தால் நிறைந்திருந்தது.

"கோமதி" என்ற சந்திரசேகரனின் குரலைக் கேட்டு உமா எழுந்து வந்தாள்.

"ஏன் உமா. அக்கா எங்கே?"

"பக்கத்து வீட்டில் வந்து ஏதோ விசேஷமாம், அடுத்தாத்து மாமி வந்து கூப்பிவிட்டுப் போனாள்"

"ஏன் நீ போகவில்லையா—?' என்று கேட்கப்போன அவன் முகத்தைப் பார்த்து சட் என்று பேச்சை நிறுத்திக்கொண்டான். ஆம்! அவள்தான விதவை யாயிற்றே! சுப காரியங்களுக்கு இனி அவளை கூப்பிடமாட்டார்கள். அவள் 'சகுன'த் தடை! இதை நினைத்தபோது சந்திரசேகரனின் கண்களில் நீர் தலும்பியது. அதற்குள் இதைப் புரிந்துகொண்டு விட்ட உமா சட் என்று முகத்தைத் தன் இரு கரங்களாலும் பொத்திக்கொண்டு ஓவென்று அழுதுவிட்டாள். இத்தனைநேரம் அணை போட்டுத் தேக்கிவைத்திருந்த துயரக் கண்ணீர் வெள்ளம்போலக் கொட்டி அவளை நனைத்தது.

சந்திரசேகரன் வளர்த்த பாசத்தால் உமாவை நெருங்கி ஆறுதல் வார்த்தைகள் சொல்லி, வாஞ்சையாக அவள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருக்கும் போது, அறைக்கதவு திறக்கப்பட்டு அங்கே கோமதி பிரசன்னமானாள்.

"பேஷ்! நன்றாக இருக்கிறது. ரொம்ப நன்றா யிருக்கிறது. இன்னும் மடிமேல் உட்கார்த்தி வைத்துக்கொண்டு கண்ணைத் துடையுங்கள்! பாவம்."

'சீ! வாயை மூடு, கழுதை" என்று கூறி அவள் கனனத்தில் பளீர் என்று அறைந்து விட்டு வீட்டைவிட்டு வெளியேறினான் சந்திரசேகரன்.

மறுபடியும் அவன் வீட்டிற்கு இரவு ஒன்பது மணிக்குத் திரும்பி வந்தான்.

"அத்தான்! அக்கா எங்கேயோ போனவள் வரவில்லை..." என்றாள் உமா பதற்றத்துடன் நடுநடுக்கம் கலந்த குரலில்.

"என்ன? கோமதி காணவில்லையா?......எங்கே போய்விட்டாள்?" அவன் வீடு முழுவதும் தேடிப் பார்த்தான். தேடாத இடமெல்லாம் தேடி அலைந்தான். அவன் உடம்புதான் தேய்ந்ததே தவிர, கோமதியைக் காணவில்லை. அவளைப் பற்றிய ஒரு விதத் தகவலும் கிடைக்கவில்லை.

மறுநாள் அவன் ஆபீசுக்குப் போகும்போது சலவைத் துணிகள் வைக்கப்பட்டிருந்த பெட்டியைத் திறந்தான். ஒரு 'கவர்' அவன் கண்களுக்குத் தட்டுப்பட்டது. சேகரன் அக் கடிதத்தைப் படித்துவிட்டு உமாவிடம் நீட்டினான். உமா அதை ஆவலுடன் அவனிடமிருந்து வாங்கிப் படித்தாள். கடிதம் மிகவும் வருத்தத்தை அளிக்கக் கூடியதாக இருப்பினும் பெரும்பாலும் வியப்பையே அளித்தது.

"அன்புள்ள உமாவுக்கு,

இக் கடிதத்தைக்கண்டு நீ என்ன நினைப்பாயோ நான் அறியேன். ஆனால் உடைந்துபோன என் உள்ளத்தை ஒன்று சேர்க்க முடியாது. உமா!...நீ ஒரு களங்கமற்ற அபலை என்பதை நான் அறியாமல் சில ஊர்ப் பிடாரிகளின் அபாண்டமான உன் மீது சுமத்தைப்பட்ட நியாயமற்ற குற்றச் சாட்டுக்களை உண்மை என்று நம்பினேன். உன் வெந்துபோன உள்ளத்தை வேல் பாய்ச்சிக் கிளருவதுபோல பல கொடுமைகளைப் படுத்தி உன் உள்ளம் நோகும்படி எவ்வளவு சபித்தேன்? எல்லாவற்றையும் வெளிவிடாமல் உன் மனதிற்குள்ளேயே வைத்துக்கொண்டு எவ்வளவு வெதும்பிப் புலம்பினாயோ?...... அப்பொழுதும் நான் உன்னைப் புரிந்துகொள்ளாமல் உன்னிடம் நெஞ்சிரக்கமற்ற மிராதகியாக நடந்து கொண்டேன்! நீ உன் ஆசைக் கணவனை இழந்து தத்தளித்துக் கொண்டிருப்பதைக்கூட நினைத்துப் பார்க்காமல் உன்னைப் பலவாறாகக் கொடுமைப் படுத்தினேன். நான் இதற்கெல்லாம் தண்டனையைப் பெறுவிட்டால் என்னைக் கடவுள் மன்னிக்கமாட்டான். உமா!......"

"உமா...நான் இந்த உலக விடுதலையடையும் தருணத்தில் உன்னிடம் ஒரு உதவியை நாடுகிறேன்...என் கணவர்!...என் குழந்தை!...இருவரையும் உன் கையில் ஒப்படைத்து விட்டுச் செல்கிறேன். கைவிட மாட்டேயே உமா...! வீழ்ச்சியடைந்த உன் வாழ்வு மீண்டும் துளிரட்டும் என்று இறைவனை வேண்டுகிறேன்......

இப்படிக்கு,
உன் அன்புள்ள அக்கா,
கோமதி.

கடிதத்தைப் படித்து முடித்ததும் உமாவின் இரண்டு கண்ணீர் முத்துக்கள் அவள் கையில் பிடித்திருந்த கடிதத்தில் அவள் கன்னங்களின் வழியே உருண்டு விழுந்தன. கலங்கிய கண்ணீருடன் சந்திரசேகரனை ஏறிட்டுப் பார்த்தாள்.

"அத்தான்!...என்னை மன்னியுங்கள். நான் உங்கள் இன்ப வாழ்க்கையைக் குலைத்து விட்டேன்..."

"உமா!..." என்று ஒருதரம் உரக்கக் கூவினான் சந்திரசேகரன். அடுத்த கணம் அவளுடைய மெல்லிய கரங்களை இருகப் பற்றி அவளை அணைத்துக் கொண்டான். துன்பத்திலும் இன்பம் காணும் அவள் கண்களோடு வருத்தமுற்ற தன் கண்களை இணைத்து, "உன்னை நான் மன்னிப்பதற்கு நீ செய்த தவறென்ன, உமா? நீ என்னைக் கைவிட்டால் எனக்கு உலகில் தலைசாய்க்க வேறு இடம் எங்கே இருக்கிறது?—" என்றான்.

அவனுடைய தீனக்குரல் அவள் நெஞ்சை உருக்கியது. அவளுடைய கண் கலங்கிற்று. அவள் பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொண்டாள்.

அட்டைப் படக் கட்டுரை:

சான்றவர் வாழியோ!

வித்துவான்-தி. மு. சங்கரலிங்கம்

★

மாலை நேரம். இரு மருங்கும் வீடுகள் நிறைந்துள்ள வீதி. அதன் வழியே தலைவன் ஒருவன் சென்றான். தலைவனுக்குரிய பெருமை, உரன் முதலியன நிறையப் பெற்றவனாயினும் முகம் உள்ளத்திலுள்ள துன்பத்தைக் காட்டியது. வாழ்வில் எவ்வளவுதான் பலவிதத்தும் சிறப்புற்றவன் எவனாயினும், தான் நினைத்த காரியம் சிறியதாக இருப்பினும், முடியவில்லை என்றால் அவன் படும் துன்பம் அளவிற்றோ? இது புதிதல்ல; வாழ்வில் நாம் அனுபவிக்கும் பண்புதான். இந்நிலையில் துன்பத்தி லாழ்ந்து மன அமைதி குலைந்த அவன், மனதிற்கு மகிழ்வுண்டாக்கக் கடற்கரையை நோக்கிச் சென்று தனிமையிலிருந்து காட்சிகளைக் காண எண்ணினான். வீதியின் வழியே செல்கிறான். வழியிலுள்ள காட்சிகளைக் கண்டு களித்தான். மனம் அமைதியின் எல்லையை நாடிற்று. பெரும்புயல் ஒன்று வீசியது. என்னவென்று அறியத்தானே நம் மனம் அலைகிறது. சென்ற வீதியிலுள்ள அழகான வீடொன்றின் வாயிலில் அழகுத் தெய்வமாய் ஒருத்தி நின்று களிப்புடன் கண் வலை வீசிக் காணப்பட்டாள். அவ்வழகின் ராணியைக் கண்டான். கண்டதும் மனத்தைப் பறி கொடுத்தான். அவன் அழகின் இருப்பிடமான அவளைக் கண்டதும வறியவன் பெற்ற வளம்போல மகிழ்ந்தான். அவள் அங்கேயே நின்று கொண்டிருந்தாளா? என்றால் அதுதானில்லை. மின்னலென மறைந்தாள். வலையிற் சிக்கினான். அமைதி தேடிய உள்ளம் சூறுவளியாற் சிக்குண்டது. தென்றற்காற்று புயலாக இருந்தது. மணமலர் மனத்லைத வாட்டியது: உறக்கம் மறைந்தது. ஊன் குறைந்தது. நெஞ்சத்தை அவன் கண்ட தெய்வம் தங்குதற்கு இடமாக வைத்தான். கண்கள் அவளுருக் காண ஏங்கின. காதலாற் கசிந்தான்; கண்ணீர் மல்கியது. இந்நிலையில் நாட்கள் வாரங்கள் எனவும், வாரங்கள் திங்களெனவும், திங்கள் ஆண்டுகளெனவும் இவ்வாறாகக் கடக்கிறது. அவன் உள்ளத்தில் காதல் நாளுக்குநாள் வளர்பிறை போல உயர்கிறது. அமைதி தேடிய உள்ளத்திற் சூறுவளி வீசவே அவன் பைத்தியம் பிடித்தவன்போற் காணப்பட்டான். தன்னிலையிற் றாழ்ந்து அவள் மிசை கொண்ட காதலைப் பலரும் அறியும்படிச் செய்ய எண்ணுகிறான். ஆவிரைப்பூவுடன் எருக்கமலர் புனைந்து, மணிகள் ஒலிக்க, பனைமடலாற் செய்த குதிரை மீதேறி அவளுரு எழுதிய கிழி பிடித்து ஊர்ந்து வீதி வழியே சென்றான். சான்றோர் பலரும் குழுமி யிருந்தனர். தலைவன் இவ்வாறு ஊன் கெட்டு, உள்ளம் வாடி, சோழிந்து நிலையின்றி செல்லும் நிலைமை யறிந்த

சான்றவர் கூட்டம் அழைத்துக் காரணம் வினவியது. அவர்களைப் பார்த்துத் தலைவன்,

"சான்றவர்களே! அறிஞர்களே! நீவிர் வாழிய! நீவிர் சான்றவர்களாயின் பிறர் நோயும் தன்னோய் போற் பேணுதலன்றோ கடமை? "அறிவினா லாகுவதும் உண்டோ? பிறர் நோயும் தன்னோய் போற் போற்றாக் கடை" என்றல்லவா தமிழ்மறை தந்த வள்ளுவர் வழுத்துகிறார். ஆதலால் என்னிலை யறியாத நுங்கட்கு அறியும்படி ஒன்று கூறி அறிவுறுப்பேன். கேண்மின்! என்னை ஒருத்தி கண்வலை காட்டி மயக்கினாள். உடன் மறைவுற்றாள். காதலாற் கவல்கிறேன். வாழும் எனக்கு அவள் தந்த பரிசுகளைப் பாருங்கள்:— அணிந்துள்ள ஆவிரை மலர், சூடியுள்ள எருக்க மலர், ஏறியுள்ள மடலாற் செய்த குதிரை இவைகள்தான். யான் அவளிடம் வேண்டும் இன்பத்திற்கு அவள் எனக்குத் தரும் பரிசுகளைப் பாருங்கள். இதுதானா? காமக் கடலகப்பட்ட எனது கண்கள் உறங்குதலை மறந்தது. ஊன் குறைவால் உடல் தளர்ந்தது. உள்ளம் வாடுகிறது. பலரும் மகிழ ஈத்துவக்கும் என் நெஞ்சம் அவளுருவை நினைத்தால் வெப்பத்தாற் சுடுகிறது. இவை மட்டோ? என்னென்பேன். இவ்வாறெல்லாம் துன்புற்றுழலும் யான், அவளைப் பெறும் வழியைக் கூறுங்கள். இன்புற இதனையறிந்து நீவிர் ஆவன செய்யுங்கள். "எம்மால் இதனைச் செய்ய இயலாது" என்று கூறி விடாதீர்கள். சான்றவரே! ஒரு காலத்தில் தவக்குறைவு பட்ட மன்னன் ஒருவன் சுவர்க்கம் புக்கபோது தவக்குறைவை யறிந்து நிறைவேற்றி அவனை மேலுலகம் செல்லும்படி செய்தனரே! நும்மை ஒத்த சான்றவர்கள். இது நீங்க ளறிந்ததுதானே! என்னையும் அவ்வாறு இன்புற வைத்து எண்ணியதை முடித்துக் காப்பாற்றுதல் சான்றவராகிய நுங்கள் கடன்" என்று கூறிப் புலம்பினான். சான்றவர்கள் செவியேற்று ஆவன செய்தனர் போலும். இவ்வாறு சான்றவர்களிடம் கூறின் பிறர் நோயைத் தன்னோய் போல் எண்ணி ஆவன செய்து நம்மை மகிழ்விப்பர் என்ற கருத்தினால் தலைவன் கூற்றாக சான்றவர் வாழியோ! சான்றவர் வாழியோ? என்று கூறிய ஆசிரியரின் திறனை யாதென்பேம். இவ்வாறாகத் தலைவன் மடலேறுங் காலத்துச் சான்றவரை நோக்கிக் கூறும் முறையில் தலைவன் கூற்றாக வைத்துச் செய்யுள் செய்த நல்லந்துவனார் பலபடப் பாடிச் சிறப்பித்துள்ளார். இதோ பாருங்கள் யாத்தளிக்கும் அவர் பாடலை.

சான்றவர் வாழியோ சான்றவர் வாழியோ
பிறர்நோயும் தந்நோய்போற் போற்றி அறனறிதல்
சான்றவர்க் கெல்லாம் கடனால் இவ்விருந்த
சான்றீர் உமக்கொன் றறிவுறுப்பேன் மான்ற
துளியிடை மின்னுப்போல் தோன்றி ஒருத்தி
ஒளியோ டுருவென்னைக் காட்டி அளியளென்
நெஞ்சாறு கொண்டாள் அதற்கொண்டும் துஞ்சேன்
அணியலங் காவிரைப் பூவோ டெருக்கின்

செல்வனின் காதலி

பி. வெங்கடேசன்

★

அவள் பெயர் முல்லை. முல்லை அரும்பினால் மணம் வீசி வண்டு மொய்ப்பது இயற்கைதானே. அவள் பருவ மங்கை. பார்ப்பவர் கண்விட்டகலாப் பண்பு கொண்டாள். மாந்தளிர் போன்ற மேனியும், நன்கு நீண்டு பிறழும் சேல் கெண்டை போன்ற கண்களும், கண்ணாடி போன்ற கன்னமும் கிராமியத்தில் தோய்ந்த இயற்கை யழகும் அவளை அழகுக் கலைக்கு ஒரு உதாரண மாக்கின.

அவள் வாழ்ந்தது ஒரு சிற்றூரில். அவ்வூரில் சுமார் முன்னூறு வீடுகள் தான் உண்டு. ஊருக்கருகில் ஒரு ஏரி. ஏரிக்கரையில் வேப்ப மரங்கள் கோடையின் கொடுமையை போக்கிக் கொண்டிருந்தன. கோடைக் காலத்திலும் நீர் வற்றாதபடி ஓர் ஆற்றிலிருந்து நீர் கொண்டுவந்து நிரப்பி இருந்தனர். இத்தனையும் சேர்ந்து அந்த ஏரிக்கரை ஒரு சுவர்க்க லோகமாகக் காணப்பட்டது, அந்தக் கிராம மக்களுக்கு.

முல்லை, மாலை நேரம் மங்கிக்கொண்டிருக்கும்போது ஏரிக்கரைக்கு வந்தாள் நீர் மொள்ளுவதற்கு அது வரையில் வீட்டு வேலைகள் சரியாய் இருந்தன.

அவள் தந்தை தாமோதரம் பிள்ளை பெரிய பண்ணைக்காரர் மாலை வேளையில் பண்ணை வேலை முடித்துவரும் கூலிக்காரர்களுக்குப் படி கொடுப்பது, கன்று காலிகளைக் கட்டும்படி கூறி, அவற்றிற்குத் தீனி போடச் செய்வது போன்ற வேலைகளை யெல்லாம் மேற்பார்வை செய்யும் பொறுப்பு முல்லையினுடையதே. தாமோதரம் பிள்ளையின் மனைவி ஒரு பையனையும், பெண்ணையும் விட்டு மாய்ந்து போனாள்.

பையன் நல்ல வயதடைவதற்குள் அம்மை நோய் அவனை அவன் தாய் இருந்த இடத்திற்கு அழைத்துக்கொண்டு போய் விட்டது. ஆகவே, குடும்பப் பொறுப்பு முழுதும் முல்லையே கவனிக்க வேண்டியதாயிற்று.

பிணையலங் கண்ணி மிலைந்து மணியார்ப்ப
ஓங்கிரும் பெண்ணை மடலூர்ந்தென் எவ்வநோய்
தாங்குதல் தேற்றா இடும்பைக் குயிர்ப்பாக
விங்கிழை மாதர் திறத்தொன்று நீங்காது
பாடுவேன் பாய்மா நிறுத்து.
யாமத்தும் எல்லையும் எவ்வத் திரையலைப்ப
மாமேலேன் என்று மடல்புணையா நீந்துவேன்
தேமொழி மாதர் உறாஅ துறீஇய
காமக் கடலகப் பட்டு;
உய்யா அருநோய்க் குயலாகும் மையல்
உறீஇயாள் ஈத்தஇம் மா,

தாமோதரம் பிள்ளை தன் மகளுக்குத் தகுந்த கணவனைத் தேர்ந்தெடுத்து தன் வீட்டிலேயே வைத்துக்கொள்ள எண்ணினார். அதற்காக ஊரூராய் திரிந்துக்கொண்டிருந்தார். அதனால் முல்லையின் பொறுப்பு மும்மடங்காயிற்று. ஆகையினால் தான் அந்தி மங்கிய பிறகு தண்ணீர் மொள்ள வரவேண்டியதாயிற்று.

குடத்தைக் கழுவித் தூசுகளைத் தட்டி தண்ணீர் மொண்டு கொண்டு கரை ஏறினாள் முல்லை. "முல்லை" என்று யாரோ கூப்பிடுவதுபோல் கேட்டது. காற்றின் ஒலி அவ்வாறு கேட்பதாய் எண்ணிக்கொண்டு, மென்மையாக வீசும் வேப்பங்காற்றை வாங்கிச் செல்லலாம் என்ற கருத்தில் ஏரிக்கரை மேல் குடத்தை வைத்து விட்டு உட்கார்ந்தாள் முல்லை.

அருகில் யாரோ வரும் அரவம் கேட்டது. திரும்பினாள், "செல்வன்." அவளுக்கு வியப்பாகி விட்டது. சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன பத்து வயது சிறுவன்! அவன் தந்தை ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர். அவர் அவ்வூருக்கு வரும்போதெல்லாம் தாமோதரம் பிள்ளை வீட்டில்தான தங்குவார். மேலும் விடுமுறை காலங்களில் தன் மகன் செல்வனையும் அழைத்து வருவதுண்டு. அப்போது முல்லை சிறு பெண்ணாக இருந்தாள். செல்வன் தான் புதிது புதிதாகக் கற்று வந்த விளையாட்டுக்களை முல்லைக்குச் சொல்லிக் கொடுப்பான். குறும்பாகச் சில சமயங்களில் அடித்து விடுவதுங் கூடவுண்டு. முல்லை தன் தந்தையிடம் கூறி முறையிடுவாள். அதிகாரியின் மகனென்று வாய் பேசாது விட்டுவிடுவார் தாமோதரம் பிள்ளை.

ரெவின்யூ இன்ஸ்பெக்டரை வேற்றிடத்திற்கு மாற்றி விட்டார்கள். என்றாலும் செல்வன் மட்டில் அடிக்கடி வந்து சென்று கொண்டிருந்தான். காரணம் அவன் படித்துக்கொண்டிருந்த பாடசாலை முல்லையின் ஊருக்குச் சமீபத்தில் இருந்தது தான். மேலும் விடுமுறை நாட்களை முல்லையோடு கழிப்பதில் அவனுக்கு அலாதிப் பிரியம். காந்தம் இரும்பை இழுப்பது இயற்கை தானே!

மேல் படிப்பிற்காக செல்வன் சென்னைக்குப் போய்விட்டான். மாதம் ஒருமுறையாவது முல்லையின் வீட்டுக்கு வரத் தவறாதவன் ஐந்தாண்டுகளாய் வரவே யில்லை. முல்லை செல்வனை நினைப்பதுண்டு. ஆனால் வெளிக்குக் காட்டவில்லை. உள்ளக்கருத்தை வெளியிடாமல் மறைப்பதில் பெண்கள் நிகரற்றவர்களல்லவா?

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் தான் ஏரிக்கரையில் செல்வன் காட்சி யளித்தது. செல்வன் வாலிபத்திற்கேற்ற கட்டான உடல் படைத்தவன்.

"முல்லை."

"செல்வன், நீ எத்தனையோ ஆண்டுகள் கண்காணாமல் போய் விட்டாயே."

"முல்லை, உன்னை மறந்து வாழவில்லை நான். என் படிப்பு என்னை அப்புறம் இப்புறம் செல்லவொட்டாமல் தடுத்தது. என்னோடு படித்தவர்கள் வீணாகக் காலம் போக்கியதால் எத்தனையோ பேர் தேர்வில் வெற்றி பெறாமல் போனதோடு வாழ்க்கையையும் பாழாக்கிக் கொண்டார்கள். நான் சிறிதும் தளர்ச்சியின்றி படித்ததினால் B. A. வகுப்பில், முதல் மாணவனாகத் தேர்ந்தேன். இந்த மகிழ்ச்சியை உன்னிடம் கூற வேண்டுமென்றே........" என்று நிறுத்தினான் செல்வன்.

முல்லைக்கு யோசனை பிறந்து விட்டது. தன் தந்தை தன்னைப் படித்துப் பட்டம் பெற்றவனுக்குக் கொடுப்பதில்லை என்று கூறினாரே, ஒருவேளை செல்வனுடைய நல்ல குணங்களையும் நடக்கைகளையும் அறிந்த தன் தந்தை செல்வனையே தன் கணவனாகத் தேர்ந்தெடுப்பாரா என்று எண்ணினாள்.

"முல்லை, நீ மலர்ந்திருக்கிறாய். மணமும் கொண்டிருக்கிறாய் நீ பயன்படும் இடத்தில் இருக்கவேண்டாமா?"

"அதற்குத்தான் என் தந்தை முயன்று வருகிறார். நல்ல மருமகனாகக் கிடைத்தால் தன் வீட்டிலேயே கொண்டுவந்து வைத்துக்கொள்ள நினைத்திருக்கிறார்" என்றாள் முல்லை.

"முல்லை! இன்னும் நீ என் உள்ளத்தை அறியவில்லையா? நாமிருவரும் மணந்துக் கொண்டால் என்ன?" என்றான் செல்வன்.

"கேலிக்கூத்து, தாங்களோ படித்துப் பட்டம் பெற்றவர். நாகரீகத்தை நன்றாய் உணர்ந்தவர். நான் பட்டிக்காட்டுப் பெண். நான் தங்களோடு வந்தால் பார்ப்பவர்கள் கேலி செய்வார்களே!"

"முல்லை, நீ மறுமுறையும் இவ்வாறு சொன்னால் எனக்குக் கோபம் தான் வரும்."

"கேலி! இவ்வாறு கேலி செய்து செய்துதான் நகரங்கள் நாட்டுப் புறங்களைச் சுரண்டித் தின்கின்றன. அந்தக் கொள்கை எனக்கு உடன்பட்டதே இல்லை. எப்படியாவது நீ உன் தந்தையிடம் என் கருத்தைத் தெரிவித்து உடன்படச் செய்யவேண்டும்" என்று ஏங்கிக் கொண்டவனைப்போல் கூறினான் செல்வன்.

"நேரமாயிற்று. வீட்டில் எவ்வளவோ வேலைகள் உள்ளன" என்று கூறிவிட்டு, ஒரு பார்வை பார்த்தாள் முல்லை. அதற்கு விரிவுரை கூற முடியவில்லை செல்வனால்; பி. ஏ. பட்டம் பெற்றும் கூட.

வீட்டில் முல்லை எதிர்பார்த்த விதமாய்த் தாமோதரம் பிள்ளை வந்திருந்தார். எப்போதும் மலர்ந்த முகத்தோடு முல்லையை அழைக்கும் அவர் முகம் நெருப்பைப் போலச் சிவந்து போய் இருந்தது.

"முல்லை, ஏன் இவ்வளவு நேரம்? ஏரிக்குப் போனதும் திரும்பாமல் இதுவரை என்ன செய்து கொண்டிருந்தாய்?"

"காற்று சற்று மென்மையாக வீசிற்று" என்று எப்போதும் போலக் கூறினாள் முல்லை.

"காற்றுங் அமைதியாக இருக்கும். அந்த களவாணிப் பயலின் பேச்சுங்கூடக் குளுமையாக இருக்கும். நல்ல காலம் பேச்சோடு போய்விட்டான். வேறேதாவது குறும்பு செய்திருந்தால் குழி தோண்டி விட்டிருப்பேன். அவனுக்குப் படிப்பைத் தவிர, என்ன இருக்கிறது. எங்காவது வேலை கிடைத்தால் உண்டு. இல்லையானால் இந்தப் படிப்பை வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும்? அவன் இந்தப் பக்கம் தலைகாட்டட்டும். வாலை ஒட்ட நறுக்குகிறேன். தீட்டின மரத்திலேயே கூர் பார்க்க ஆரம்பித்து விட்டானே" என்று உறுமினார் தாமோதரம் பிள்ளை.

முல்லை, தன் தந்தை எல்லாவற்றையும் தெரிந்து கொண்டாரென்று வெலவெலத்துப் போனாள். ஒன்றும் பேசத் துணிவுண்டாகவில்லை. என்றாலும், முன்பின் அறியாத ஒருவனைக் கணவனாக ஏற்றுக்கொள்ள அவள் உள்ளம் விரும்பவில்லை. மனதைத் திடம் செய்து கொண்டாள்:

"அப்பா! மன்னிக்கவேண்டும். செல்வனை நமக்குச் சின்ன வயது முதல் தெரியுமல்லவா? அவர் எவ்வளவு பெருந்தன்மையுடையவர்" என்று குமுறிக் கொட்டினாள் முல்லை.

"போதும், உன் வாயை மூடு" என்று புலி போல் உறுமினார் தாமோதரம் பிள்ளை.

முல்லையினால் அதற்குமேல் ஒன்றும் கூற முடியவில்லை.

தாமோதரம் பிள்ளை பழையபடி மாப்பிள்ளை தேடும் படலத்தைத் தொடங்கினார்; மகளை எச்சரித்து விட்டு. அன்று ரெவின்யூ இன்ஸ்பெக்டராக இருந்தவர் இன்று அந்தப் பகுதியின் தலைமை அதிகாரியாய் இருப்பது தெரிந்தது. அவர் பதவியோடு அவர் புகழும் தாமோதரம் பிள்ளையின் காதுக்கெட்டியது.

இதற்கிடையில் ஒருநாள் தாமோதரம் பிள்ளையின் தங்கை மகன் கதிர்வேல், பிள்ளையைச் சந்தித்தான். சிறு வயதிலேயே வெளியூருக்குச் சென்று விட்டான் அவன். படிப்பும் மட்டம். அறிவும் அப்படியே. அவன் செல்வனைப்பற்றி தாமோதரம் பிள்ளையிடம் பலவாறு கோள் சொல்லி வைத்தான். அதனால் செல்வனைப்பற்றி இருந்த நல்லெண்ணம் கூட பிள்ளைக்குப் பறந்து போய்விட்டது.

தாமோதரம் பிள்ளை வருவதற்கு நீண்ட நாட்கள் ஆயின. செல்வனும் முல்லையும் மாலை வேளைகளில் வேப்பமரத்தடியில் சந்தித்துப் பேசினர். முல்லை தன் தந்தையின் பிடிவாதத்தைப் பற்றி செல்வனிடம் கூறினாள்.

செல்வன் மணந்தால் முல்லையை மணப்பது. இல்லையானால், மரித்துப் போவதென்று முடிவு கட்டி விட்டான். இம் முடிவு முல்லையின் தலையில் பேரிடி விழுந்தது போலாயிற்று.

தாமோதரம் பிள்ளை ஒருநாள் சென்னைக் கடற்கரையில் உலவிக்கொண்டிருந்தார். அவர் வியப்படையும் படி ஒரு காட்சி தென்பட்டது. தம் கண்களைத் தாமே நம்பவில்லை தாமோதரம் பிள்ளை. தன் தங்கை மகன் கதிர்வேல் நவநாகரீகமான உடையணிந்த ஒரு பெண்ணிடம் கொஞ்சிக் கொண்டிருந்தான்.

பிள்ளை சற்று மறைவாக நிற்பதற்கு வசதியாய் அவர்கள் அங்கே விட்டிருந்த ஒரு படகின் பக்கத்தில் உட்கார்ந்தார்.

கதிர்வேல் பேச்சைத் தொடங்கினான்: "பொன்னி, என் மர்மன் மண்டையில் மூளையில்லாதவன். செல்வன் தெரியுமா உனக்கு வீண் வம்புக்கே போகமாட்டான். பாவம் அந்த அப்பாவி எப்படியோ பி.ஏ. வரை படித்து விட்டான். அவன் அயோக்கியன் என்று சாடு விட்டேன். அதை அப்படியே நம்பி விட்டார் என் மாமன்."

"தாங்கள் தங்கள் மாமன் மகளை மணந்துகொண்டு என்னை நட்டாற்றில் விட்டுவிடுவீர்கள்?" என்றாள் அந்த கடற்கரைக் காதலி.

"அடி! அசடே! நான் உன்னை விடுவேனா? பணம் கறப்பதற்கல்லவா மாமன் மகள் பாசமெல்லாம் உன்னிடம் தான். பயப்படாதே" என்றான் கதிர்வேல்.

இவற்றைக் கேட்டதும் தாமோதரம் பிள்ளைக்கு உலகமே தலை கீழாகச் சுழல்வதாய் எண்ணினார். உடனே தன் ஊர் திரும்பினார்.

மாலை சுமார் 7 மணி இருக்கும். செல்வனும் முல்லையும் சந்தித்திருந்தனர்: வேப்பமரத்தடியில் செல்வன் அந்த நிலவைத் தனக்கு எமனாக வாய்த்ததாய்க் கருதினான். "இந்த அமைதியான வேப்பங்காற்றும் சந்திரனுடைய ஒளியும் எத்தனையோ பேருக்கு எல்லையற்ற இன்பத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கும். ஆனால் நான் இவற்றின் இடையிலேயே என் முடிவுக் காலத்தைத் தேட வேண்டியவனாய் இருக்கிறேன்" என்று கூறினான். அவன் குரல் கம்மியது.

முல்லை கண் கலங்கினாள். அடுத்து தானும் அந்த முடிவே செய்திருப்பதாய்க் கூறினாள். அவன் கைகள் அவளுக்கு ஆறுதல் அளிக்க நீண்டன. அவள் சிந்திய கண்ணீர் காதலன் கைகளை நனைத்தன. அந்த மாலையின் அமைதி இவர்கள் துன்பத்தில் இயற்கையன்னை கூட பங்கெடுத்துக் கொண்டதுபோல இருந்தது.

"செல்வன்! செல்வன்! அவசரப்பட வேண்டாம். உன்னைப் பொல்லாதவனென்று நினைத்தேன். தனக்கேற்ற கணவனைத் தானே தேர்ந்தெடுத்துக் கொண்டாள் முல்லை" என்ற குரல் இவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தது.

முல்லை நடுங்கினாள். அக்குரல் தன் தந்தையினுடைய குரல்தான் என்பது நன்றாகத் தெரியும்.

வீட்டிற்கு வந்த தாமோதரம் பிள்ளை புது ஆளாக மாறிவிட்டார். தன் மகளின் மனதிற்கு மாறாக நடப்பதால் பெரும் பழி உண்டாகும் என்று அவர் மனச் சாட்சி உறுத்தியது. மகள் ஏரிக்குத்தான் சென்றிருப்பாளென்பது அவருக்குத் தெரிந்தது. அவசர அவசரமாக ஓடி வந்தார். தம்மையும் மீறி உணர்ச்சி பெருக்கில் தான் மேற்கண்டவாறு கூறினார்.

உடனே தன்னைத்தானே நொந்து கொண்ட காதலர்கள் இருவரையும் வாயார வாழ்த்தினார்.

காதலர்கள் தமக்குப் புகலிடமாய் இருந்த ஏரிக்கரையையும், வேப்பஞ்சோலையையும் வாயார வாழ்த்தினர்.

சில நாட்கள் சென்றன. ஒருநாள் செய்தித்தாளில் கதிர்வேலை சாராயம் குடித்ததற்காகப் போலீசார் சிறையில் அடைத்தனர் என்பதைப் பிள்ளை அவர்கள் கண்டார். அவர் வாய் "அடாது செய்பவர்கள் படாது படுவர்" என்று முணுமுணுத்தது.

ஆரணி-குப்புசாமி முதலியார் எழுதிய

கற்பக சுந்தரி

அல்லது

மூன்று கறைகளின் மர்மம்

இதில் பொதுவாய் ஆண்பாலார் பெண்பாலார் யாவர்க்கும் பல நற்புத்திகளைப் புகட்டத்தக்க விஷயங்களே அடங்கியிருக்கின்றன. நம் சகோதர சகோதரிகள் அவசியம் படிக்கத்தக்க கதை.

இரண்டு பாகங்கள் அடங்கியது

இதன் விலை ரூபா 3. (தபாற் செலவு வேறு.)

ஆனந்தபோதினி ஆபீஸ்,

தபால்பெட்டி நெ. 167, சென்னை-1.

இலக்கிய உலகம்

சேந்தமிழ்ப் பித்தன்

★

இலக்கியம் இன்பப் பூஞ்சோலையாகும். அச்சோலையில்
வண்ண வண்ண மணங்கமழும் நறுமலர்கள் தேன்
பிலிற்றி, நகை சிந்தி மலராப் பேரின்பமூட்டும். அச்சோலையில்
தான் எத்துணை மலர்கள்! மலர்களில்தான் எத்துணை வகைகள்!
வகைகளில்தான் எத்துணை வண்ணங்கள்! வண்ணங்களிலும்
அகத்தை அடிமையாக்கும் திருமணத்தில்தான் எத்துணை
மணங்கள்!

"அறிதொறும் அறிதொறும் அறியாமை கண்டற்றால்"
அறிவுமிக மிக அகமும் புறமும் விளக்கமுறுகிறது. வண்மையை
அறிய அறிய ஆர்வம் மிகுதியாகிறது. இலக்கிய வாழ்க்கை
பேரின்ப வாழ்க்கை! அங்கே கோடிக்கணக்கான பேருணர்ச்சிகள்
பொருதுப் பொங்குகின்றன. கோடிக்கணக்கான பேரறிவுக்
கதிர்கள் ஒளி பாய்ச்சுகின்றன. கோடிக்கணக்கான பேருண்மை
கள் பெருக்கெடுக்கின்றன.

வானிலே அளவில்லா விண்மீன்கள்—கோள்கள்—இயங்கு
வதுபோல அளவில்லா இலக்கிய மன்னர்கள் இலங்குகின்றனர்.
அவர்கள் அத்தனை பேரும் ஒவ்வொரு ஒப்பற்ற மணமலர்கள்!
உலகில் எவ்வளவோ உயிர்கள்—உயிரினங்கள் இருக்கின்றன.
அத்தனையையும் நாமறிய முடிவதில்லை. அதேபோல, இலக்கியச்
செல்வர்களையும், அவர்களின் ஒப்பற்ற படைப்புக்களான இலக்
கியங்களையும் நம்மால் முற்றும் அறிய முடிவதில்லை.

உயிர்களுக்கு உலக இன்பங்கள் அத்தனையையும் நுகர்ந்து
இன்புறவேண்டும் என்ற கொள்ளை ஆவல் இருக்கத்தான்
செய்கிறது. ஆனால் முடிகிறதா? இல்லை. அதுபோல, இலக்
கியச் செல்வங்களையும், இலக்கியச் செல்வர்களையும் கற்று அறிய
ஆவலிருந்தாலும் முடியவில்லை.

ஆனாலும் முடிந்தவரை கிடைக்கும் இன்பத்தைச் சுவைக்கத்
தானே வேண்டியிருக்கிறது!

மேலை நாட்டிலக்கிய உலகில் கோடிக்கணக்கான ஒளி
மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன! எத்தனை எத்தனை பூஞ்
சோலைகள்! புது மலர்கள்!......

சுவைத் தேனீக்களான நாம் எல்லாவற்றையும் ஆற அமரச்
சுவைத்து இன்பத்தேன் பருக இயலாது. எனவே மேலோட்ட
மாக மலர்களின் அழகையும், மணத்தையும் சற்றே நுகர்ந்து
வரலாம்.

தமிழிலக்கியத்தில் பழமைக்கே சிறப்பும் சீரும் புகழும்
உண்டு. மேலை நாட்டில் பழம் பெருமை இல்லை; புதுப்புகழே
உண்டு. சிற்சில மேலை நாடுகளே பழங்கலைப் பெருமை உடை
யன. ஒரு சில வரையறைகளை அமைத்துக்கொண்டு இலக்கியப்
பூம்பொழிலிடை உலவி வரலாம்!

2. நம் பெருமை

கலைஞர், கவிஞர், கனவுலகில் வாழ்பவர்கள் ஆகியவர்களோடு தொடர்பு கொள்ளுவதே ஒரு தனிப் பெருங்கலை. அவர்களை எண்ணுவதே ஒரு தனிப் பேரின்பம்! நல்லாரின் பெருமையை—அவர்கள் தம் திருப்பெயரை அறிந்து மகிழ்வதும் ஒரு பேரின்பமாகும்.

உலகக் கலைஞர்களில் ஒரு சிலர்; காலத்தில் மறைந்து தம் கவினாற்றலால் அழியா உடம்பில் வாழ்கின்ற ஒரு சிலர் உங்கள் முன்னர் அணிவகுத்து நிற்கின்றனர்.

வாழ்க்கையில் சில நொடிப் பொழுதுகளையேனும் அவர்களைச் சந்திக்கும் பெரும் பேற்றுக்கு ஆளாகும் பெருமிதமேனும் நமக்குக் கிட்டுமன்றோ?

3. ஆங்கிலக் கவிஞர்

1 ஜோசப் அடிசன் (Joseph Addision) *1671-1719* கட்டுரையாசிரியரும் கூட.
2 மெத்யூ ஆர்னல்ட் (Matthew Arnold) *1822 - 1888* கட்டுரையாசிரியருமாவார்.
3 வில்லியம் பிளேக் (William Blake) *1757 - 1828.*
4 கலை முனைவர் ராபர்ட் பிரிட்சச் (Dr. Robert Bridges) *1844 - 1930.*
5 எலிசபெத் பார்ரெட் ப்ரௌனிங் (Elizabeth Barrett Browning) *1806 - 1861.*
6 ராபர்ட் பிரௌனிங் (Robert Browning) *1812 - 1889.*
7 சியோ ஃபெரி சாசர் (Geoffry Chaucer) *1340 - 1400.*
8 சி. கே. செச்டர்டன் (G. K. Chesterton) *1874 - 1935* புதின ஆசிரியருமாவர்.
9 சாமுவேல் டெய்லர் கோல்ரிட் (Samuel Taylor Coleridge) *1772 - 1834.*
10 வில்லியம் கௌபெர் (William Cowper) *1731 - 1800.*
11 சான் டிரெய்டென் (John Drydon) *1631 - 1700.*
12 எட்வர்ட் ஃபிட்ச் கிரால்ட் (Edward Fidzgerald) *1809-1883.*
13 சான் கே (John Gay) *1685 - 1732.*
14 ஆலிவர் கோல்டுச்மித் (Oliver Goldsmith) *1728 - 1774* புதின ஆசிரியர், கட்டுரையாளர்.
15 தாமச் கிரே (Thomas Gray) *1716 - 1771.*
16 அலெக்சாண்டர் போப் (Alexander Pope) *1688 - 1744.*
17 சான் மில்டன் (John Milton) *1607 – 1664.*
18 வில்லியம் மாரிச் (William Morris) *1834 - 1896.*
19 ராபர்ட் இரிக் (Robert Herrick) *1591 - 1674.*
20 தாமச் ஊட் (Thomas Hood) *1798 - 1845.*
21 பென் சான்சன் Ben Jonson) *1574 - 1637.*
22 சான் கீட்ச் (John Keats) *1795 - 1821.*
23 ருட்யார்ட் கிப்ளிங் (Rudyard Kipling) *1865—.*

24 வால்டேர் சேவேச் லேண்டர் (Walter Savage Lander) *1775 - 1864.*
25 வில்லியம் லேங் லேண்ட் (William Lang Land) *1332 - 1400.*
26 செல்வர். தாமச் பேபிங்டன் மெக்காலே (Lord Thomas Babington Mecaulay) *1800 - 1859* வரலாற்றாளர்.
27 சான் மேச் ஃபீல்ட் (John Masefield) *1874—.*
28 வில்லியம் எர்னெச்ட் என்லே (William Ernest Henley) *1849 - 1903* ஆங்கிலக் கவிஞர் திறனாய் வாளரும் ஆவர்.
29 கிரிச்டியானா ராசட்டி (Christina Rossetti) *1830 - 1894.*
30 டான்ட் காபிரில் ராசட்டி (Dante Gabriel Rossetti) *1828 - 1882.*
31 வில்லியம் சேக்ச்பியர் (William Shakespeare) கி. பி. *1564 - 1616* நாடகாசிரியரும்.
32 பெர்சி பைசி செல்லி (Percy Bysshe Shelley) *1792-1822.*
33 சர். பிலிப் சிட்னி (Sir. Philip Sidney) *1544 - 1586.*
34 ஃபிரான்சிச் தோம்சன் (Francis Thomson) *1839 - 1907.*
35 ஆச்கார் ஒயில்ட் (Oscar Wilde) *1856 - 1900* நாடகாசிரியருமாவர்.
36 வில்லியம் வேர்ட்ச் வொர்த் (William Words Worth) *1770 - 1850.*
37 எட்மண்ட் ச்பென்சர் (Spencer Edmund) *1553 - 1599.*
38 அல்சர்னன் சி. ச்வின் பிருன் (Algernon C. Swinburne) *1837 - 1909.*
39 செல்வர். ஆல்பர்ட் டென்னிசன் (Lord Alfred Tennyson) *1809 - 1892.*
40 செல்வர். சியார்ச் கார்டன் பைரன் (Lord George Gordon Byron) *1788 - 1824.*
41 கலைமுனைவர். சான் டான்னி (Dr. John Donne) *1573-1631.*

4. யவன கவிஞர்

42 ஓமர் (Homer) கி. மு.
43 சாப்போ (Sappho) கி. மு. *60* ஏறத்தாழ.

5. இலத்தீன் கவிஞர்

44 விர்சில் (Virgil) கி. மு. *70 - 19*
45 டெரென்ச் (Terence) கி. மு. *195 - 159*
46 சாலச்ட் (Sallust) கி. மு. *86 - 34*
47 சுவினல் (Juvenal) *50 - 130*
48 டிடச் கருச் லுக்கிரிடிச் (Titus Carus Lucretius) கி. மு. *98 - 55*
49 ஓரேச் (குவாய்ன்டச் ஓரேடியச் ஃபிளாக்கச்) (Horace [Quintus Horatius Flaccus]) கி. மு. *65 - 8*
50 ஓவிட் (Ovid [P. Ovidius Naso]) கி. மு. *43* - கி. பி. *17*

6. ஃபிரெஞ்சு கவிஞர்

51 அல்ஃபிரெட் டி விக்னி (Alfred de-Vigny) 1797 - 1863
52 லூயிச் சார்லச் அல்ஃபிரிட் டி முசெட் (Louis Charles Alfred de-Musset) 1810 - 1857 நாடகாசிரியரும் புதின ஆசிரியருமாவார்.
53 நிகோலச் பாய்லியூடிச் பெரிக்ச் (Nicholas Boileau Des Preaux) திறனாய்வாளருமாவர்.
54 அல்போன்ச் லா மார்டின் (Alphonse La Martine) 1790 - 1869
55 பைரி டி ரன்சார்ட் (Pierre de-Ronsard) 1524 - 1585
56 என்றி ரின் ஆல்பர்ட் கெ டி மாப்பசான் (Henri Rene Albert Guy de-Maupassant) 1850 - 1893 புதின ஆசிரியரும், சிறுகதையாசிரியருமாவர்.
57 பிரானகாய்ச் வில்லான் (Francois Villon) 1431 - 1463
58 பால் வெர்லய்ன் (Paul Verlaine) 1844 - 1896

7. உரோம கவிஞர்

59 பெர்ரோனியச் (அர்பிட்டெர்) (Petronius [Arbiter])

8. அமெரிக்க கவிஞர்

60 சான் கிரீன்லீஃப் விட்டிர் (John Greenleaf Whittier) 1807 - 1892
61 வால்ட் விட்மன் (Walt Whitman) 1819 - 1892
62 சேம்ச் ரச்சல் லாவெல் (James Russell Lowell) 1819 - 1891
63 என்றி வாட்ச்வொர்த் லாங்ஃபெல்லோ (Henry Wadsworth Longfellow) 1807 - 1882
64 ரால்ப் வால்டு எமர்சன் (Ralph Waldo Emerson) 1803 - 1882 கட்டுரையாசிரியருமாவர்.

9. செர்மன் கவிஞர்

65 சோஅன் உல்ஃப்கங்க வான் கெதே (Johann Wolfgang Von Goethe) 1749 - 1832
66 ஐன்ரிச் ஐன் (Heinrich Heine) 1799 - 1856
67 ஃபிரிட்ரிச் வான் சில்லர் (Friedrich Von Schiller) 1759 - 1805
68 சார்லச் பைரி படிலெய்ரி (Charles Pierre Baudelaire) 1821 - 1867 ஃபிரெஞ்சு கவிஞர்.
69 வில்லியம் இ அய்டன் (William E. Ayton) 1813 - 1865 சுகாட்லாந்து கவிஞர்.
70 ராபர்ட் பர்ன்ச் (Robert Burns) 1759 - 1796 சுகாட்லாந்து கவிஞர்.
71 பெட்ரோ டிலா பர்கா கால்டீரான் (Pedro de-la-Barca Calderon) 1600-1681 சுபானிய கவிஞர், நாடகாசிரியர்.
72 கியூசு கார்டூக்கி (Giosue Carducci) 1936 - 1907 இதாலியக் கவிஞர்.

73 அல்கிரி டாண்டே (Alighieri Dante) 1265 - 1321 இதாலியக் கவிஞர்.
74 வில்லியம் டுன்பார் (William Dunbar) 1465 - 1530 சுகாட்லாந்து கவிஞர்.
75 ஃபிரான்சிச்சோ பெட்ரார்ச் (Francisco Petrarch) 1304 - 1394 இதாலியக் கவிஞர்.
76 எட்கார் ஆலான் போ (Edgar Allam Poe) 1809 - 1849 அமெரிக்க கவிஞர், புதின ஆசிரியர்.
77 அலெக்சாண்டர் புச்கின் (Alexander Pushkin) 1799 - 1837 உருசிய கவிஞர் சிறுகதை எழுத்தாளர்.
78 டார்க்வுடே டாசு (Torquato Tasso) 1513 - 1595 இதாலியக் கவிஞர்.
79 லூப் ஃபிலிக்ச் டி விகா கார்பியா (Lope Felix de-Vega Carpia) 1562 - 1635 சுபானிய கவிஞர், நாடகாசிரியர்.
80 எமிலி வெர்எரென் (Emile Verhaeren) 1855 - 1916 பெல்சியக் கவிஞர்.
81 ஈட்ச் (W. B. Yeats) 1865 - ஐரிச் நாட்டுக் கவிஞர்.

10. புதினம்

இலக்கியச் சோலையில் புதுமையழகை—புதிய இன்பத்தை—அரிய பயனை இப்புது இலக்கிய முறை உண்டாக்கி விட்டது. இன்றைய இலக்கிய உலகில் புதினமே பேராட்சி செய்கிறது என்று சொல்லி விடலாம்.

நாளைக்கொரு புதுமையும், வேளைக்கொரு பாணியும் இன்று கலைத்துறையில் இடம் பெறுவது இயல்பாகி விட்டது. புதுமை! புதுமை! புதுமை! என்று எப்பக்கம் நோக்கினும் புதுமை மறுமலர்ச்சி பூத்துக் குலுங்குகிறது. இந்த அரிய காலத்தில் 'புதினம்' காலத்திற்கேற்ற பெயரும் உருவும் பயனும் உடையதாய்த் தோன்றியது ஒரு வியப்பல்ல.

மனிதன் மனம் வளர வளர அதன் ஆக்கங்களும் நோக்கங்களும் வளர்கின்றன. அவன் எண்ணங்களின் உருவம் இன்று குறுகிய எல்லையினின்றும் விடுதலைபெற்று, ஞாலமளாவிப் பரந்துள்ளது.

இத்தகைய பெருந்தன்மை சான்ற புதினப் பாத்திமை ஆய்வோம்.

11. புதின ஆசிரியர்

82 வில்லியம் ஆரிசன் என்ச் வொர்த் (William Harrison Ains Worth) 1805 - 1882 ஆங்கிலம்.
83 அந்தோனி ட்ரோ லூப் (Anthony Trollope) 1815-1882.
84 மேரி வெப் (Marry Webb) 1883 - 1927.
85 எச். சி. வெல்ச் (H. G. Wells) 1866—.
86 ஆர்னல்ட் பின்னெட் (Arnold Bennett) 1867 - 1932.
87 ரிச்சார்ட் டாட்ரிட்ச் ப்ளாக் மோர் (Richard Doddridge Black More) 1825 - 1900.

88 சார்லோட் [க்ரர் பெல்] ப்ரோன்ட் (Charlotte [Currre Bell] Brontte) *1816 - 1855.*

89 எமிலி ப்ரோன்ட் (Emily Brontte) *1818 - 1848.*

90 சாமுவேல் பட்லர் (Samuel Butler) *1835 - 1902.*

91 வில்கி காலின்ச் (Wilkie Collins) *1824 - 1889.*

92 சோசப் கான்ரேட் (Joseph Conrad) *1857 - 1925.*

93 டேனியல் டிஃபு (Daniel Defoe) *1661 - 1731.*

94 வில்லியம் டி மார்கன் (William de-Morgan) *1839-1917.*

95 சார்லச் டிக்கென்ச் (Charles Dickens) *1812 - 1870.*

96 சர் ஆர்தர் கானன் டாய்லி (Sir Arthur Conan Doyle).

97 சியார்ச் [மேரியன் சவான்ச்] இலியட் (George [Marian Evans] Eliot) *1820 - 1881.*

98 சான் கால்ச் வொர்தி (John Galsworthy) *1867 - 1933.*

99 சார்லச் கிங்ச் லே (Charles Kingsley) *1819 - 1875.*

100 ஃபிரடரிக் மேரியட் (Frederick Marryat) *1792 - 1848.*

101 சியார்ச் மெர்ரிடித் (George Meredith) *1828 - 1909.*

102 சியார் மூர் (George Moore) *1853 - 1933.*

103 டாபியச் ச்மாலெட் (Tobias G. Smollett) *1721 - 1771.*

104 லாரென்ச் ச்டெர்ன் (Laurence Sterne) *1713 - 1768.*

105 அந்தோனி ட்ரோல் லூப் (Anthony Trollope) *1815-1882.*

106 மேரி வெப் (Mary Webb) *1883 - 1927.*

107 எச். சி. வெல்ச் (H. G. Wells) *1866—.*

12 பிற புதின ஆசிரியர்கள்

108 ஆனர் டி பால்சாக் (Honore de - Balzac) *1799 - 1850* ஃபிரெஞ்சு புதின ஆசிரியர்.

109 மாட்டோ பென்டெல்லோ (Matteo Bandello) *1480-1562* இதாலிய புதிய ஆசிரியர்,

110 சர். சே. எம். பார்ரி (Sir J. M. Barrie) *1560-1937* ச்காட்லாந்து புதின ஆசிரியரும், நாடகாசிரியரும் ஆவர்.

111 சியோவானி பொக்காசியோ (Giovanni Boccaccio) *1313-1375* இதாலிய புதின ஆசிரியரும், சிறு கதை எழுத்தாளருமாவர்.

112 மிகல் டி செர்வாட்ச் (Miguel de-Cervantes) *1547 - 1616* ச்பானிய புதின ஆசிரியர்.

113 சாமுவேல் லேங் ஆர்ன் செலிமென்ச் (Samuel Langhorne Clemens) *1835-1910* அமெரிக்க புதின ஆசிரியர்.

114 அல்போன்ச் டவ்டெட் (Alphonse Daudet) *1840 - 1897* ஃபிரெஞ்சு புதின ஆசிரியர்.

115 ஃபியோடர் நிக்கெய்ல் அவிச் டாச் டாய்வ்ச்கி (Feodor Nikkail Avich Dostoievsky) *1821 - 1881* உருசிய எழுத்தாளர்.

116 சியார்ச் [பிரௌன்] டக்ளச் (George [Brown] Douglas) *1869 - 1902* ச்காட்லாந்து புதின ஆசிரியர்.

117 தியோடர் டிரெய்செர் (Theodore Dreiser) *1871—* அமெரிக்க புதின ஆசிரியர்.

118 அலெக்சாண்டர் டூமாச் (Alexandre Dumas) *1803-1870* ஃபிரெஞ்சு புதின ஆசிரியர்.

119 கெச்டவ் ஃபிளாபர்ட் (Gustave Flaubert) *1821 - 1880* ஃபிரெஞ்சு புதின ஆசிரியர்.

120 தியோபைல் கைடியர் (Theophile Gautier) *1811 - 1872* ஃபிரெஞ்சு புதின ஆசிரியர்

121 ஃபிரான்சிச் ப்ரெட் அர்ட (Francis Breat Harte) *1839 - 1902* அமெரிக்க புதின ஆசிரியர்.

122 நாதேனியல் ஆவ்த்ரோன் (Nathaniel Hawthrone) *1804 - 1864* அமெரிக்க புதின ஆசிரியர்.

123 விக்டர் இயூகோ (Victor Hugo) *1802 - 1885* ஃபிரெஞ்சு புதின ஆசிரியர்.

124 சாரிச் கார்ல் அய்ச்மென்ச் (Joris Karl Huysmans) *1848 - 1907* ஃபிரெஞ்சு புதின ஆசிரியர்.

125 வைசன்ட் ப்ளாச்கோ இபெனிச் (Vicente Blasco Ibanez) *1867 - 1928* ச்பானிய புதின ஆசிரியர்.

126 வாசிங்டன் இர்விங் (Washington Irving) *1783 - 1859* அமெரிக்க புதின ஆசிரியர்.

127 என்றி சேம்ச் (Henry James) *1843 - 1916* அமெரிக்க புதின ஆசிரியர்.

128 சார்லச் சே லிவர் (Charles J. Lever) *1806 - 1872* ஐரிச் நாட்டு புதின ஆசிரியர்.

129 பைரி லூடி (புனைபெயர்-லூயிச் மேரி சூலியன் வியாட்) (Pierre Lote [Pen Name of Louis Marie Julien Viaud]) *1850 - 1923* ஃபிரெஞ்சு புதின ஆசிரியர்.

130 நைல் மன்ரோ (Neil Munro) *1864 - 1930* ச்காட்லாந்து புதின ஆசிரியர்.

131 ஃபிராங்காய்ச் ரேபிலெய்ச் (Francois Rabelais) 1483 - *1553* ஃபிரெஞ்சு புதின ஆசிரியர்.

132 சியார்ச் சேண்ட் (George Sand) 1804 - *1876* ஃபிரெஞ்சு புதின ஆசிரியர்.

133 ப்ராச்பர் மெரிமீ (Prosper Merimee) 1803 - 1870 ஃபிரெஞ்சு புதின ஆசிரியர், கட்டுரையாளர்; பழம்பொருளாராய்ச் சியாளர்.

134 சர் வால்டர் சிகாட் (Sir Walter Scott) 1771 - 1832 ச்காட்லாந்து புதின ஆசிரியர்

135 ராபர்ட் லூயி ச்டீவன்சன (Robert Louis Stevenson) *1850 - 1894* ச்காட்லாந்து புதின ஆசிரியர்:

136 ஆகச்டு ச்டிரின்ட்பெர்க் (August Strindberg) *1849 - 1912* ச்வீச் நாட்டு எழுத்தாளர்.

37 செல்வர் டால்ப்டாய் (Lord Tolstoy) 1883 - *1910* உருசிய புதின ஆசிரியர். சிறுகதை எழுத்தாளருமாவர்.

138 ஐவான் துர்கெனிவ் (Ivan Turgenev) 1818 - 1883 உருசிய புதின ஆசிரியர்.

139 எமிலி சோலா (Emile Zola) 1840 - 1902 ஃபிரெஞ்சு புதின ஆசிரியர்.

13. நாடகாசிரியர்

140 சியார்ச் பெர்னார்ட் சா (George Bernard Shaw) 1856 - ஐரிச் நாடகாசிரியர்; புதின ஆசிரியருமாவர்.

141 ஆண்டன் செக்காவ் (Anton Tchekhov) 1869 - 1904 உருசிய நாடகாசிரியர்.

142 சொபக்ளிச் (Sophocles) கி. மு. 496 - 404 யவன நாடகாசிரியர்.

143 ரிச்சர்ட் பிரின்ச்லி செரிடன் (Richard Brinsley Sheridan) 1751 - 1816 ஐரிச் நாடகாசிரியர்.

144 சின் பாபடிச்ட் ராசின் (Jean Baptiste Racine) 1639 - 1699 ஃபிரெஞ்சு நாடகாசிரியர்.

145 டிடச் மெகியச ப்ளாடச் (Titus Maccius Plautus) கி. மு. 251 - 204 உரோம நாடகாசிரியர்.

146 மோலியர் (Moliere) 1622 - 1673 ஃபிரெஞ்சு நாடகாசிரியர்.

147 கிரிச்தபர் மார்லௌ (Christopher Marlowe 1564 - 1539 ஆங்கில நாடகாசிரியர்.

148 காட்டோல்ட் இப்ரெய்ம் லெச்சிங் (Gotthold Ephraim Lessing) 1729-1781 செர்மன் நாடகாசிரியர் திறனாய்வாளருமாவர்.

149 என்றிக் இப்சென் (Henrik Ibsen) 1828 - 1906 நார்வே நாடகாசிரியர்.

150 யூரிபிடிச் (Euripides) கி. மு. 480-406 யவன நாடகாசிரியர்.

151 பைர்ரி கார்னில் (Pierre Corneille) 1607-1684 ஃபிரெஞ்சு நாடகாசிரியர்.

152 வில்லியம் காங்க்ரிவ் (William Cangriv) 1670 - 1729 ஆங்கில நாடகாசிரியர்.

153 ஃபிரான்சிச் பிமாண்ட் (Francis Beaumont) 1586 - 1615 ஆங்கில நாடகாசிரியர்.

154 அரிச்டோபானிச் (Aristophanes) கி. மு. 444-384 யவன நாடகாசிரியர்.

155 எசிலச் (Aesehylus) கி. மு. 456— யவன நாடகாசிரியர்.

14. பிறதுறை

குறிப்பிட்ட தனித்தனி துறைகளை நோக்கிய நாம், இனி பொதுவாகப் பல காட்சிகளையும் காணுதல் நலமாகும்.

இலக்கியத் துறையில் ஏனைய பகுதிகளை இனி ஆராயலாம். பொதுவான மேல் நோக்கு நோக்கும் நம் நோக்கத்தில் ஒரு சிறு காட்சியும் கூடப் பெரும் பயன் தருவது என்பதை நாம் மறத்தல் கூடாது.

(அடுத்த இதழில் முடிவுறும்.)

கருணையுள்ளம்

எஸ். கணபதி

★

மார்கழி மாதத்துப் பனியின் மூட்டம் எங்கும் நிறைந்திருந்தது. வானத்தில் உள்ள வெள்ளிகள் மறைந்து வெண்மை படரலாயிற்று. கிழக்கு லேசாக வெளுத்தும் கூட வீடுகளில் இருந்து ஒருவரும் வெளியில் வரவில்லை. குளிர் நடுக்கம் தாங்கமாட்டாமல் வீடுகளை பூட்டியபடியே வீட்டிற்குள் முடங்கிக்கொண்டு அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்தனர்.

பண்ணையார் சொக்கப்ப நாயக்கரின் மனம் மட்டும் அமைதியின்றி தவித்துக் கொண்டிருந்தது. தான் செய்த கொடிய பாவத்திற்காகத் தான் இறைவன் தன்னைச் சோதிக்கிறானே! என்று எண்ணமிடலாயிற்று அவரது நொந்த உள்ளம்.

கோயில்கள் பல சென்று குளங்களில் பல நீராடி தவமிருந்து பெற்ற தனது ஒரே அருமைச் செல்வி பத்து வயது நிரம்பாத பச்சிளங் குழந்தை படுத்த படுக்கையாய் இருப்பது காண உள்ளத்திலே வேதனை அலைகள் விம்மி விம்மி யெழுந்தன. புத்திர சோகத்தைப்பற்றி அப்பொழுது தான் அவரது உள்ளம் உணரலாயிற்று.

விடிந்தால் பொங்கல் திருநாள் எல்லா உள்ளங்களும் பொங்கல் சாதங்களை உண்டு சந்தோஷத்தால் பொங்கி வழியும். சொக்கப்ப நாயக்கரின் உள்ளம் மட்டும் ஏங்கி வருந்தலாயிற்று. குழந்தை பிழைக்க வேண்டுமெனத் தன்னையு மறியாமல் கையெடுத்துக் கும்பிட்டார் கடவுளை எண்ணி அப்பொழுது அவரது உள்ளத்திலே போன பொங்கலன்று நடந்த சம்பவங்கள் திரைப்படக் காட்சிபோல் தோன்றலாயிற்று.

* * *

'எங்கே! அந்த ஆறுமுகப் பயலை யின்னும் காணோம்! விடிஞ்சா பொங்கல்! பொழுதோ பன்னண்டு ஆகப்போகுது? எப்ப இந்த பய பட்டணத்துச் சந்தையிலே சாமான் எல்லாம் வாங்கிட்டு வர்வரன்' என்று தனக்குள் திட்டியவாறே முன்னும் பின்னுமாக கைகள் இரண்டையும் பின்னுக்குக் கட்டிக்கொண்டு உலாவிக் கொண்டிருந்தார்.

'எஜமான்' என்ற குரலைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தார் எதிரே பண்ணையார். ஆறுமுகம், கை இரண்டையும் கட்டியவாறு, அடக்கமாக நின்று கொண்டிருந்தான்.

"வாங்க! வாங்க!!" என்று ஏளனமாகக் கூறியவாறே "ஏண்டா! பொழுது என்ன ஓடுது பாத்தியா? எப்ப நீ வண்டியைக் கட்டிக்கிட்டுப்போயி சந்தையிலே சாமான்க ளெல்லாம் வாங்கிட்டு வர்ரது."

"எஜமான்...வ...ந்...து!"

"என்னடா வந்து?"

"சின்னக் கொழந்தை சின்னுவுக்குக் காச்சப் போட்டுப் பொரியுது. உடம்பெல்லாம் ஒரே கொதிப்பா கொதிக்குது. தாழையூத்து தங்கப்ப பண்டாரத்தைக் கூட்டியாந்து கொழந்தையை காமிக்கலாம்னு நினைக்கிறேன். தாழையூதது போறதுக்கு இன்னிக்கி ஒரு பொழுது லீவு வேணும், எஜமான" என்று நடுங்கிய குரலில் பயந்தவாறே கூறினான்.

"என்ன லீவா? பொங்கலும் நல்ல நாலுமா வீட்டுக்கு இன்னா ஒரு சாமானும் வாங்கியாகல்லே; லீவு வேணும்னு, கேட்க வந்துட்டியே?

லீவு ஒன்னும் கிடையாது! வண்டியைப் யோட்டிப் போயி சந்தையிலே சாமானெல்லாம் வாங்கியா! புள்ளைக்கு உடம்புச் சரியில்லேன்னு சுக்குத்தட்டிருடுப்பியா அதை உட்டுட்டு வைத்தியரைக் கூட்டியாந்து காமிக்கப் போருராமில்லே! ஏன் பட்டணத்து டாக்டரை கூட்டியாந்து காமிக்கறது தானே?" என்று ஏளனமாக மொழிந்தார் பண்ணையார்.

அந்த ஏழை! மறுத்துப் பேசினாலே கால் வயிறு கஞ்சி கூட கிடைக்காது போய்விடும். அந்நிலையிலுள்ள அவனால் பணத்தால் மக்களது மனத்தையும் அடிமை கொள்ள முடியும் என்று எண்ணி இறுமாந்திருக்கும் இரக்கமில்லா அரக்கரிடம் எதிர்க்கத்தான் முடியுமா? பிறர் குழந்தை பிழைத்தாலும் சரி, இறந்தாலும் சரி. தங்களுடைய சுகத்திற்கு எவ்வித குந்தகமும் ஏற்படலாகதென அடக்குமுறை ஆட்சி செய்யும் அந்தத் தனிகரிடம் போட்டியிடத்தான் முடியுமா? அந்த ஏழை மறுத்துக் கூற வகை யறியாது மௌனமாகவே மாடுகளை வண்டியில் பூட்டிக்கொண்டு பக்கத்து ஊரை நோக்கிச் சென்றான்.

பண்ணையார் வீட்டுப் பொங்கல் திருநாளுக்குரிய சாமான்களையெல்லாம் வாங்கிக்கொண்டு சதங்கை ஒலி முழங்க சாலையில் வந்து கொண்டிருந்தான் பண்ணையாள் ஆறுமுகம்.

மாடுகளின் சதங்கை ஒலியைவிட ஏழை ஆறுமுகத்தின் குடிசையிலிருந்து எழும் அழுகை ஒலி வானமுட்ட எழுந்து காற்றுடன் கலந்து அக் கிராமம் முழுவதும் எதிரொலித்துக்கொண்டிருந்தது.

பண்ணையாரின் சந்தோஷத்திற்காக ஏழை ஆறுமுகத்தின் குழந்தையைப் பலிகொண்டு விட்டான் காலதேவன்.

'எஜமான், என் கொழந்தை செத்துப்போச்சே' என்றலறியவாறே, தடாலென வண்டியில் இருந்தவாறே கீழே விழுந்து மூர்ச்சை யடைந்து விட்டான் ஆறுமுகம்.

அவன் கூறிய மொழியில் சிறிது கடுமையும் கலந்திருந்தது. அத் தொனியின் அர்த்தம் சண்டாளா! உனது சுகத்துக்காக எனது குழந்தையைப் பலி கொடுத்து விட்டேனே என்று இடித்துக் காட்டுவனபோல் இருந்தது.

பண்ணையார் அக் காட்சியைக் கண்டு சில விநாடி நேரம் அசைவற்று நின்றுவிட்டார். அப்பொழுதும் அவரது கௌரவத்தை விட்டுக்கொடுக்க மனமின்றி "என்னடாப்பா! இப்ப குடி முழுகிப் போச்சு! லட்சரூவா சொத்துக்கு வார்சை இழந்துட்டவன் கவலைப்படற மாதிரில்லே யிருக்கு நீ கவலைப்படறது" என்று ஏளனம் தொனிக்கக் கூறினார் பண்ணையார்.

குழந்தையை இழந்த துக்கத்தாலும் வறுமையாலும் சரிவர வேலைகளைச் செய்ய முடியாமல் சில தவறுதல்களும் ஏற்படலாயின. ஆறுமுகத்தின் வேலைகளில்,

தவறுதல்களைக் கண்ட பண்ணையார் அவனது தரித்திர நிலையைக் கவனியாது ஆறுமுகத்தை வேலையிலிருந்தே நீக்கி விட்டார்.

* * *

சதங்கை ஒலிச்சத்தத்தைக் கேட்டு எண்ணக்கடலில் இருந்து விடுபட்டார் பண்ணையார்.

கிழக்கு நன்றாக வெளுத்துவிட்டது. செங்கதிர்களைப் பரப்பிக்கொண்டு வானத்தின் உயரே எழும்பிக்கொண்டிருந்தான் ஆதவன்.

பண்ணையார் டாக்டரை அழைத்து வருமாறு பண்ணையாள் பரமசிவத்தை பக்கத்தூருக்கு அனுப்பி யிருந்தார்.

மாடுகளின் சதங்கை ஒலி நெருங்க நெருங்க பண்ணையாரின் இதயமும் பட படவென அடித்துக்கொள்ள லாயிற்று.

வண்டியும் பண்ணையாரின் வீட்டு முற்றத்தில் வந்து நின்றது.

வண்டியை ஓட்டிக்கொண்டு வந்தவனைக் கண்ட பண்ணையார் செயலற்று சிலையாக நின்றுவிட்டார்.

வண்டியை ஒட்டி வந்தவன் வேறு யாருமல்ல மாஜி பண்ணையாள் ஆறுமுகம் தான்.

"எஜமான்" என்ற குரலைக் கேட்டு ஆச்சரியத்தால் அசைவற்றிருப்பதை உணர்ந்து கொண்டார்.

"ம், யாரு? ஆறுமுகமா? பரமசிவத்தை எங்கே?" என்று படபடவென்று கூறிக்கொண்டு சென்றார் பண்ணையார்.

ஆறுமுகம்தான், எஜமான் காப்புக் கெட்டறதுக்காக கம்மங்கதிரு ஒடிக்க காட்டுப்பக்கமாப் போயிருந்தேன். காட்டுக்

எம்பெருமான் பின் பிறந்தார்

வி. கிருஷ்ணமூர்த்தி

★

"எம்பெருமான் பின் பிறந்தார்" என்ற பதம் கம்பநாட்டாழ்வாரால் குஹப்பெருமான் வாயிலாகச் சொல்லப்பட்டது. குஹப்பெருமான் பரதாழ்வாரை கங்கை வடகரையில் காண்கின்றார். குஹன் தென்கரையில் நிற்கின்றனன். கானகத்துக்குச் சென்ற தன் தமையனாகிய இராமனைக் கொல்ல பரதன் வந்திருப்பதாக குஹன் நினைக்கின்றான். பிறகு கவனித்ததில் பரதனுடைய உண்மை நிலையை குஹன் உணர்கின்றான்.

"வற்கலையி னுடையானை மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்
விற்கையினின் றிடைவிழ விம்முற்று நின்றொழிந்தான்."

"நம்பியு மென்னாயகனை யொக்கின்றா னயனின்றான்
தம்பியையு மொக்கின்றான் தவவேடந் தலைநின்றான்
துன்பமொரு முடிவில்லைத் திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பென்றான்."

குலப்பெருமை அக்குலத்தில் உதித்தோர்களுக்கு ஒரு பெருமையையும் கௌரவத்தையும் கொடுக்கும். "தாயைப் பார்த்து

மகளைக் கொள்" என்று சொல்வதுண்டு. அதேபோல் இராமபிரானுக்குப் பின் சகோதரர்களாகப் பிறந்தவர்கள் என்றால் குணத்தில் இராமபிரானுக்கு மாறுபட்டவர்களாக இருக்க முடியாது; இருக்கவும் மாட்டார்கள். இராமனுக்குப் பின் பிறந்த சகோதரர்களில் இலக்குவனைக் குஹன் ஏற்கனவேயே அறிவான். மற்றொரு சகோதரனாகிய பரதனை குஹன் இப்பொழுது அறிகிறான். ஏற்கனவே பரதனைப்பற்றி தான் கொண்டிருந்த எண்ணம் பிசகானது என்பதைப் பரதனைப் பார்த்தவுடன் உணர்கிறான். அதனால் குஹன் "எம்பெருமான் பின் பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு" என்கிறான். இராமன் தம்பி பிசகு செய்வான் என்று தான் எண்ணியது தவறு என்பதை உணர்கிறான். பரதனை அணுகி குஹன் வணங்குகிறான். பரதனும் குஹனைத் "தந்தையினுங் களிகூரத் தழுவினான்."

பரதன் கானகத்துக்கு வந்த காரணத்தை அறிய குஹன் விரும்பி பரதனைக் கேட்கிறான். பரதனும்

"முழுதுலகளித்த தந்தை முந்தையோர் முறையினின்றும்
வழுவினன் அதனை நீக்க மன்னனைக் கொணர்வான் வந்தேன்"

என்கிறான். அஃதாவது தசரதன் தொன்று தொட்ட பழக்கப்படி மூத்தோன் அரசு ஆளவும், இளையோர் தொண்டு செய்யவும் இருக்க அந்தப் பழக்கத்தினின்றும் தவறி இளையோன் ஆளவும், மூத்தோன் கானகம் செல்லவும் விளித்தனன். அந்தக் குற்றத்தைப் போக்கவும், குலப்பெருமையைக் காக்கவும் இராமனை நாட்டிற்கு அழைத்துப்போக வந்ததாக பரதன் தெரிவிக்கிறான். இது பரதனுடைய நற்குணத்தையும், அறந்தலை நிற்றலையும் காட்டுகின்றது.

தனக்கு உரியதாகிய அரசியலை வேண்டாம் என்று விட்டு விட்டு கானகம் அடைந்தான் இராமன். இது கடுந்துறவு. கைகேயி இராமனை கானகம் செல்லவேண்டும் என்று அரசன் தெரிவித்ததாகச் சொல்லுகிறாள். அப்பொழுது இராமனுடைய முகம்

"அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றது."

என்கிறார் கம்பர். சிறிதேனும் துயரம் இல்லை, இராமருக்கு. தன் பாரம் நீங்கியதாகக் கருதுகிறார்.

என்னினி யுறுதியிப்பால் இப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னொளிர்கானம் இன்றே போகின்றேன் விடையுங் கொண்டேன்"

என்கிறார்.

தனக்கு உரியதாக இல்லாததும், தாய் வரத்தால் தனக்கு வலிய கிடைத்ததுமான அரசுரிமையை தனக்கு வேண்டாம் என்று தள்ளி இராமனை காட்டிற்கு அழைக்க வருகிறான் பரதன் இதுவும் கடுந்துறவு. பரதனுக்கும் அரசுரிமையை விடுவதில் சிறிதேனும் துயரம் இல்லை. அரசுரிமை கிடைத்ததில் துயரம் இவர்களில் இராமன் உயர்ந்தவனா என்று பார்க்குங்கால், தனக்கு உரியதைவிட்ட இராமனைவிட தனக்கு வலிய வந்த செல்வத்தை வேண்டாம் என்று விட்ட பரதனே உயர்ந்தவன் என்று குஹன் பரதனைப் பாராட்டுகிறான்.

குள்ளறே இருந்து சாலையைப் பாக்கறப்போ சாலையிலே ஒரு வண்டி பள்ளத்திலே கொடை சாய்றாப் போலத் தோணுச்சு. அங்கெருந்து ஓடியாந்து பாக்கறேன். பள்ளத்திலே விழுந்து கெடந்தது நம்ம வண்டியா யிருக்கு! வண்டிமாட்டுக் கொன்னும் சேதமில்லை. பரமசிவத்துக்குத் தான் கால்லேயும் கைமேலேயும் கொஞ்சம் பெலமாகவே அடிபட்டிருந்தது சின்ன அம்மாவுக்காக (பண்ணையாரின் குழந்தை) டாக்டர்ய்யாவை கூப்பிடத்தான் வண்டி கட்டிக்கிட்டு போறான்ங்கிறதை புரிஞ்சுக்கிட்டேன். பரமசிவத்தையும் வண்டியிலே தூக்கிப் போட்டு டாக்டரய்யாகிட்டே அவனச் சேத்துட்டு டாக்டரையாவை கையோட கூட்டியாந்தேன், எஜமான்' என்று கபடமில்லா உள்ளத்துடன் நடந்தவைகளைக் கூறினான் ஆறுமுகம்.

அன்று அவனது குழந்தை சாகக் கிடக்கும் பொழுது தன் சுகமே பெரிதென வேலை வாங்கலை. அந்த கல் நெஞ்சனின் குழந்தை இன்று நோய்வாய்ப் பட்டு இருக்கும் பொழுது வண்டி கொடை சாய்ந்ததைப் பொருட்படுத்தாது அவன் வந்திருந்தால் பண்ணையாரின் குழந்தை பலியாவது நிச்சயம். ஆனாலும் பலி வாங்கும் எண்ணமிட அந்த ஏழையின் "கருணை யுள்ளம்" இடந்தரவில்லை.

அந்த ஏழையின் கருணை யுள்ளத்தை யுணர்ந்த பண்ணையார் ஆறுமுகத்தை அப்படியே இறுகத் தழுவிக்கொண்டார். அவரது கண்களிலிருந்து வழிந்துவரும் கண்ணீரிலே பலகால இதயத்திலே ஊறிப் போயிருந்த ஏற்றத்தாழ்வுகள் எல்லாம் கழுவப்பட்டுச் சென்றன.

"தாயுரைகொண்டு தாதை யுதவிய தரணி தன்னைத்
தீய்வினையென்ன நீத்துச் சிந்தனை முகத்திற்றேக்கி
போயினையென்ற போழ்து புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரமிராமர் நின்கேளாவரோ தெரியினம்மா."

பிறகு பரதன் இராமன் படுத்திருந்த இடத்தை குஹன் காட்டப் பார்க்கிறான். பிறகு இராமனுடன் தானும் கானகம் அடைந்தவனும், இராமனுக்குத் தொண்டு செய்வதே தன் கடமை என்று கருதி அவ்விதமே செய்தவனும், இராமனுடன் சுகதுக்கத்தை அனுபவிப்பவனும் ஆகிய இராமனுடைய மற்றொரு தம்பியாகிய இலக்குவன் எங்கு பொழுது கழித்தான் என்று பரதன் குஹனை வினவ, குஹன்.

"அல்லையாண் டமைந்தமேனி யழகனு மவளுநம் துஞ்ச
வில்லையூன்றிய கையோடும் வெய்துயிர்ப் போடும்வீரன்
கல்லையாண் டுயர்ந்ததோளாய் கண்கணீர் சொரியக்கங்குல்
எல்லை காண்பளவு நின்றான் இமைப்பிலன் நயனமென்றான்."

உடனே பரதன்தான் இராமனுக்கு துன்பத்தைச் செய்தவனாகின்றதாகவும், இலக்குவன் அத் துன்பத்தைப் போக்க ஆறுதலாக இராமன் பால் நிற்கின்றதாகவும் சொல்லி

"அன்பத்துக் கெல்லையுண்டே அழகி தென்னடிமை."

என்றான்.

பிறகு குஹன் பரதன் முதலானவர்களை ஓடத்தில் ஏற்றி கங்கைத் தென்கரையில் சேர்க்கின்றான். பிறகு பரதன் இராமபிரானைக் கண்டு பாதுகையைப் பெற்றுக்கொண்டு நந்திக்கிராமம் அடைகிறான்.

எம்பெருமான் பின் பிறந்தார்களில் இருவர் பரதனும், இலக்குவனும் இருவர்களும் இராமனுக்குப் பின் பிறந்த தம்பியாவர்கள் என்று சொல்லுவதற்குரியவர்கள். வாலியும் இராமன் தன் பேரில் பாணம் போட்ட பின்பு இராமனைப் பார்த்து,

"வாய்மையும் மரபுங்காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்தனே நீ பரதன்முன் தோன்றினாயே."

என்கிறான். ஆகவே பரதன் சிறந்தவன் என்பது தெரிகின்றது. "பரதனுக்கு சகோதரனாக இருந்தும் இவ்விதம் செய்தனையே" என்பது பொருள்.

இராமாயணம் சகோதரர்கள் எவ்விதம் இருக்கவேண்டும் என்பதை உணர்த்துகின்றது. இக் காலத்திலும் சகோதரர்கள் ஒற்றுமையுடனும், அன்புடனும் இருந்து, அவரவர்கள் கடமைகளைச் செய்துகொண்டும் இருப்பின், குடும்ப ஒற்றுமையும், க்ஷேமாபி விர்த்தியும் ஏற்படும். ஒவ்வொருவரும் இராம சரிதத்தைப் படிக்கிறார்கள், பிறர் சொல்லக் கேட்கிறார்கள். அவ்விதம் இருந்தும் சகோதரர்களுக்குள் ஒற்றுமை இல்லாமல் குடும்ப அல்லல்களை எழுப்பிக்கொண்டிருந்தால், இராம சரிதம் படித்தும், லாபம் இல்லை. அவர்கள் இரண்டையும் செய்ய அருகதையுடையவர்களாக மாட்டார்கள். ஆகவே இராம சரிதம் தெரிவிக்கும் மற்ற தர்மங்களோடு சகோதர தர்மத்தையும் நாம் ஒவ்வொருவரும் அநுஷ்டித்து சுகத்தில் இருக்க ஸ்ரீ இராமபிரான் அருள்வாராக.

தைரியசாலி ★

"சுவாசு" ★

சென்ட்ரல் ஸ்டேஷனின் இரண்டாவது ப்ளாட்பாரத்திலிருந்து புறப்படும் நீலகிரி எக்ஸ்பிரஸில் என்னுடைய தங்கையை ஏற்றிவிட்டு, ஸ்டேஷனுக்கு வெளியே வந்தேன். அப்போது இரவு மணி 8-30 இருக்கும். எனக்கு எதிர்புறமாக ஒரு ஆள் வந்துகொண்டிருந்தான். அவனுடைய பரட்டைத் தலையும், கருத்த முகமும், கிருதா மீசையும், முழங்கால்வரை தொங்கிய கட்டம்போட்ட கைலியும், வர்ணப் பட்டைகள் இட்டிய முண்டா பனியனும் ஆளைக் கதிகலங்கச் செய்தன. அவனைப் பார்த்த எவரும் அவனை மூர்மார்க்கெட் ரௌடி என்பதனை எளிதில் உணர்ந்து விடுவார்கள். "புல்தடுக்கி பயில்வான்"-"கொத்தவரங்காய்" என்று நிறையப் பட்டங்கள் வாங்கிய நான் அந்தப் பயங்கர மனிதனைக் கண்டதும் நடுங்க ஆரம்பித்தேன். அவனும் என்னை நோக்கியே வர ஆரம்பித்தான். வந்ததும், "சார்......" என்று இழுத்தான். அவன் அதைச் சாதாரணமாகத்தான் உச்சரித்தான். ஆனால் அது எனக்கு அதட்டும் குரலாகவே பட்டது. "என்ன வேண்டும்?" என்றேன் நடுங்கிக்கொண்டே. உடனே அவன் அரை அடி அகலமாக இருந்த தனது இடுப்பு பெல்டிலிருக்கும் பர்ஸிலிருந்து எதையோ எடுக்க எத்தனித்தான். அவன் இடுப்பிலிருந்து எதை எடுக்கப் போகிறானோ என்று பதற்றத்துடன் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது அவன் பளபளக்கும் ஒரு அழகிய ரிஸ்டு வாட்சை வெளியே எடுத்து, "சார், புத்தம் புதிய ரிஸ்டு வாச், சார். இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால் உங்களுக்கு இதுமாதிரியான பஸ்டு கிளாஸ் வாட்ச் மலிவு விலைக்குக் கிடைக்காது. விலை அம்பது ரூபாதான். என்ன யோசிக்கிறீங்க? இவ்வளவு புதிய வாட்சை சல்லிசா விடறேனேன்னு பார்க்கிறீங்களா? எல்லாம் பணமுடை தான் காரணம்......" என்று அடுக்கிக்கொண்டே போனான் அந்தக் கிருதா மீசைக்காரன்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால் அதற்குக் காரணம் இல்லாமல் போகவில்லை. கொஞ்சம் தைரியமாக அவன் கொடுத்த வாட்சைக் கையில் வாங்கித் திருப்பிப் பார்த்தேன். சந்தேகமே இல்லை, அது என் நண்பன் ராமநாதனின் வாட்சேதான். அதன் பின்புறத்தில்கூட "R" என்று அழகாகப் பொறிக்கப்பட்டிருந்தது. போன வாரம்தான் அதை அவன் 95 ரூபாய்க்கு வாங்கினான். இந்த வாட்ச் இந்த ஆளிடம் எப்படி வந்தது. எனக்கு விஷயமெல்லாம் ஒரு நிமிஷத்தில் விளங்கிவிட்டது. இந்த ஒரு வாரத்திற்குள் எப்போதோ ராமநாதன் மூர்மார்க்கெட் பக்கம் வந்திருக்கிறான். இந்த 'ரௌடி' தன் வேலையைப் பக்குவமாகச் செய்துவிட்டிருக்கிறான். இதைத் தானே வைத்திருந்தால் யாராவது சந்தேகப்பட்டு பிடித்துவிடப் போகிறார்களே என்று விற்கவும் துணிந்து விட்டான். பேரயும் என்னிடம்தானா வந்து மாட்டவேண்டும்?" எனக்கு அவனைப் போலீஸில் பிடித்துக் கொடுத்துவிட வேண்டும் என்ற

எண்ணம் உதித்தது. எனக்கு எப்படி அப்படிப்பட்ட தைரியம் உண்டாயிற்று என்று எனக்கே விந்தையாக இருந்தது.

'இவனைச் சாமர்த்தியமாகப் போலீஸில் பிடித்துக் கொடுத்து விடவேண்டும். பிறகு நேரே நண்பன் வீட்டுக்குச் சென்று அவனை ஆச்சரியத்தில் மூழ்கச் செய்யவேண்டும். அவன் என்னை "சபாஷ்டா" என்று மெச்சவேண்டும்' என்று மனதிற்குள் பிளான் போட்டேன்.

'அப்பா; இங்கேயே கொஞ்ச நாழி இரு. கொஞ்சம் வெளியே போய்விட்டு ஒரு நொடியில் திரும்பிடறேன்' என்று கூறிவிட்டு வெளியே வந்தேன். ஸ்டேஷன் போலீஸ் ஸ்டேஷனில் நுழைந்து அங்கு இன்ஸ்பெக்டரிடம் சுருக்கமாக விஷயத்தை விளக்கி, இரண்டு ஜவான்களுடன் அந்தக் கிருதா மீசைக்காரனிடம் வந்தேன்.

அவர்கள், அந்தக் "கேடியை"க் கைது செய்து இழுத்துச் சென்றார்கள்.

'சார்...சார்...' என்று என்னமோ சொல்ல வாயெடுத்தான் அவன்.

'சாராவது மோராவது. உன்னை மாதிரி பல மூர்மார்க்கெட் ரௌடிகளை நான் கைது செய்திருக்கிறேன். சும்மா நட அப்பேன்" என்று கூறிக்கொண்டே அந்த ரௌடியை இட்டுச் சென்றனர் ஜவான்கள்.

"நிச்சயமாகச் சொல்றேன் சார். இந்த ரிஸ்டு வாட்ச்......"

'அட சரிதாம்பா. உன் பிரதாபங்களை யெல்லாம் அங்கே வந்து சொல்லு. இங்கே வாயை 'கப்சிப்' என்று மூடிக்கிட்டு நட'.

நான் போலீஸ் ஸ்டேஷனில் என் அட்ரஸையும், என்னுடைய நண்பனது அட்ரஸையும் கொடுத்துவிட்டு, 'நண்பனுடன் வருகிறேன்' என்று சொல்லி வெளியே வந்தேன்.

என் மனதில் நிம்மதி உண்டாயிற்று. எனக்கு எப்படி இந்தத் திடீர் தைரியம் உண்டாயிற்று என்று என்னாலேயே நம்ப முடியவில்லை.

நேரே நண்பன் வீடு சென்றேன்.

'ராமநாதன், உனக்கு ஒரு சந்தோஷ சமாசாரத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். அதற்கு நீ உன் நண்பனுக்கு என்ன பரிசு கொடுக்கப் போகிறாய்?"

"என்னப்பா, என்னமோ பெரிசா அஸ்திவாரம் போடுகிறாயே. விஷயத்தைச் சொல்லப்பா!"

"அது சரி, உன் ரிஸ்டு வாட்ச் எப்ப தொலைந்தது?......"

"தொலையவில்லையே."

"சும்மா 'டுப்' விடாதே. அதனால் பரவாயில்லை. கவலைப் படாதே, சீக்கிரம் கிடைத்து விடும்."

"என்னப்பா, புதிர் போடுகிறாய். அது தொலைந்தால்தானே கிடைப்பதற்கு? நான்தான் அதை மூந்தாநாளே மூர்மார்க்கெட் சென்று விற்று விட்டேனே. 'போனஸ்' கிடைத்தது என்று சந்தோஷமாக 'வாட்ச்' வாங்கினேன். ஊரிலே அப்பாவிற்கு உடம்பு சரியில்லை என்று தந்தி வந்தது. உடனே அதை விற்பதைத் தவிர எனக்கு வேறு வழி புலப்படவில்லை. பண முடை என்றால் என்ன செய்கிறது, மணி. இன்று காலைதான் நானே இங்கு வந்தேன்." என்று அடுக்கினான் ராமநாதன்.

"அது சரி ராம், உன்னிடம் 'வாட்ச்' வாங்கிய ஆள் எப்படியிருப்பான்?........" என்றேன் அவசர அவசரமாகப் படபடப்பு மிகுதியால்.

"ஏன், பரட்டைத் தலையும், கிருதா மீசையும் அசல் ரௌடி மாதிரிதான் இருப்பான். ஆனால் மனசு நல்ல மனசு. எனக்கு அவசரத்துக்கு நாற்பது ரூபாயாவது கொடுத்தானே......"

எனக்கு அந்தப் பூமியே சுழல்வது போன்றிருந்தது. மிகவும் "தைரியசாலி" என்று என்னை என் நண்பன் வானளாவ புகழப் போகிறான் என்று நினைத்த எனக்கு எப்படி இருக்கும்?......

'என்னப்பா, சுற்றி வளைத்துவிட்டு, நீ சொல்ல வந்த விஷயத்தைச் சொல்லி முடிக்காமல் போகிறாயே" என்று சொன்ன என் நண்பன் சொற்களைச் செவியிலேயே ஏற்காமலேயே நான் நடையைக் கட்டினேன்.

ஸ்ரீமத்

விவேகானந்த சுவாமிகள்

விரிவான திவ்ய சரித்திரம்

(3-ம் பதிப்பு)

சுவாமிகளின் அதியற்புதமான சரித்திரமும், அரிய உபதேசங்களும் அனுபவசாரமான கடிதங்களும், மேலான பிரசங்கங்களும் இடையிடையே விளங்குகின்றன. சுவாமிகள் அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய பிரதேசங்களில் பூசஞ்சாரம் செய்து வேதாந்த விஷயங்களை விரிவாக உபன்யசித்து ஹிந்து மதத்தை நிலைநாட்டியது இதில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. இவ்வளவு விரிவான சரித்திரம் இதுவரை எவராலும் வெளியிடப்படவில்லை. கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டு முழு காலிகோ பைண்டு செய்யப்பட்டது.

இதன் விலை ரூபா 5. தபால் செலவு வேறு.

ஆனந்தபோதினி ஆபீஸ்,

தபால்பெட்டி நெ. 167, மதராஸ்-1.

எதிர் வீட்டுப் பெண்

எஸ். கணேசன்

★

"டேய் ராமு! நான் சொன்னது பொய் என்றாயே. இதோ பார்! கைகளிலே கண்ணாடி வளையல்கள் பலவும் குலுங்க மேல்தாவணி தரையினிலே புரள, அதோ வருகின்றாள் பார்; என் நாரீமணி" என்றான் சுந்தரம்.

ராமுவும் பார்த்தான்.

அவள்—மாடியில் இருந்த அவள், விறு விறுவென வந்து, ஜன்னலின் அருகினிலே நின்றாள். பின்பு எதையோ பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் எதைப் பார்த்துக்கொண்டிருக்கின்றாளோ!

எதிர்வீட்டிலிருந்த சுந்தரம், அவள் தன்னைத்தான் பார்க்கிறாள் என நினைத்தான்.

"டேய் ராமு! பார், அவளது பார்வையைப் பார்! அவளது ஒய்யாரமான உடலைப் பார்! எனது கருணைகடாக்ஷத்திற்குத்தான் இவ்வளவும். ஒரு முறையாவது அவளை நான் திரும்பிப் பார்ப்பேனா!" என்று கூறிவிட்டு, கடைக்கண்ணால் ஜன்னலை நோக்கி ஒரு பார்வை விட்டான்.

இன்னும் அவள் நின்றுகொண்டு இருந்தாள். ஏன் நின்றிருந்தாள்; யாருக்காக நின்றிருந்தாள் என்று யாருக்குத் தெரியும்?

சுந்தரம், அவள் தனக்காகத்தான் நின்று கொண்டிருக்கிறாள் என்று கூறுகின்றான்.

பின்னால் நடக்கப் போவதை, முன்னமேயே அறிந்து கொள்ளும் தீர்க்கதரிசிகளின் கூட்டத்தைச் சேர்ந்தவனோ என்னவோ அவன்.

* * * *

சுந்தரம் ஓர் இளைஞன்தான்; பி. ஏ. பட்டதாரி. 'வேலை' வேட்டையிலே அமோக தோல்வியடைந்த அவன், ஒரே மகன் என்ற காரணத்தால், தனது சொந்த வீட்டிலே தாய் தந்தையர்களுடனே சுகஜீவனம் செய்து கொண்டிருந்தான்.

ஏதோ வயிறார உண்ண உணவுக்குப் பத்துக்காணி நிலமும் இருக்க வீட்டிற்கு, மதுரையிலே ஓர் வீடும் இருந்தது.

வயது ஏறக்குறைய இருபதிற்கு மேற்படாது. நல்ல களையான, பார்ப்போரை வசீகரிக்கக்கூடிய முகம். உயரத்திற்கு ஏற்ற, பருமனுடன் கூடிய தேகம். கண்களிலே கண்ணாடி.

இவற்றுடன் அவன் ஓர் ஒப்புயர்வற்ற இளைஞனாகவே விளங்கினான்.

* * * *

அவள் எதிர்வீட்டு மாடியில் நின்றிருந்தாள். அவள் மாட்டிற்கு நின்றுகொண்டேயிருந்தாள். இரவு கவ்வும் வரை நின்றுகொண்டேயிருந்தாள்.

வஸந்தா—அதுதான் அவளது பெயர். வாழ்க்கையிலே இருமுறை தோல்வியைக் கண்ட அபாக்கியவதி அவள்.

அவளது வாழ்க்கையில் முன் ஏட்டை இருப்புவோம்.

செல்வந்தர் குடும்பத்திலே பிறந்தாள். பிறந்தவுடனே தாயை இழந்தாள். அவளுக்கு ஒரே அண்ணன்.

கலியாண வயதை எட்டிய அவளுக்கு, மிகப் பெரிய, பெரிய பெரிய மனிதர்களின் பிள்ளைகள் ஜாதகங்கள் எல்லாவற்றையும் அலசினார்.

ஆம்! கடைசியில் ஒருவனைத் தேர்ந்தெடுத்தார். அவன் ராஜ்ய மந்திரி ஒருவரின் பிள்ளை. இந்திய அரசாங்கத்தால் அமெரிக்காவுக்கு ஹைகமிஷனராக அனுப்பப்பட்டவன்.

எல்லாவித ஏற்பாடுகளும் தடையின்றியே நிறைவேறி விட்டன. இதுவரை யாருமே செய்தறியாததுபோல், வெகு விமரிசையாகத் திருமணம் நடத்தப் பேர்வதாகத் தீர்மானித்தார்.

தீப்பொறி கிளம்பியது வரதட்சிணையின் வாயிலாக.

"வரதட்சிணை என்றால் ஓர் பைசா தரமாட்டேன்" என்றார் பெண் தகப்பனார்.

"லக்ஷரூபாய் வரதட்சிணை கொடுத்தால் சம்பந்தம். இல்லையானால், கடையைக் கட்டிக்கொண்டு போய்விடும்" என்று கோபாவேசமாகக் கூறினார் பிள்ளையின் தகப்பனார்.

"நான் வரதட்சிணை வாங்கிக்கொண்டா மணம் புரிந்து கொண்டேன்? வரதட்சிணையின் கொடுமையிலே தான் ஐயா, இந்தியா இக் கதியிலே சென்று கொண்டிருக்கிறது."

"மென்மேலும் பேசிக்கொண்டே செல்வானேன்.

"'வரதட்சிணை! என்று ஒரு செப்புக்காசு தரமாட்டேன்.

"ஆனால் எனது மகளின் நன்மையை உத்தேசித்து எனது வைராக்யத்தைக் கொஞ்சம் தளர்த்திக் கொள்கிறேன்.

"வரதட்சிணை பேரிலே தாங்கள் கேட்கும் லக்ஷ ரூபாய்க்கு வேறு ஏதாவது செய்து விடுகிறேன். எது வாங்கிக் கொடுக்கச் சொன்னாலும் சரியே! லக்ஷத்திற்கு மேற் போனாலும் பரவா

யில்லை. அமெரிக்காவிலே வேண்டுமாயினும் பங்களா வாங்கி வைத்து விடுகின்றேன். என்ன சரிதானே!" என்று நிறுத்தினார்.

"என்னய்யா! சும்மா வளவளன்னு பேசிண்டே போறீங்க. நம்ம கிட்டே யெல்லாம் கண்டிப்புன்னா கண்டிப்புதான். நீங்க போகலாம்" என்று மந்திரி தோரணையிலே பதிலளித்தார்.

அடியுண்ட நாகம்போல் அவரது வீட்டினின்றும் உடனேயே வெளியேறினார் வஸந்தாவின் தந்தை.

தனது கொள்கை, 'வரதட்சிணையே கொடுக்கக் கூடாது' என்பதையே அடியோடு மாற்றிக்கொண்டார். மிகத் தீவிரமாக முனைந்தார் வரன் வேட்டையிலே.

தரைப்படைத் தலைவன், லெப்டினென்ட் கர்னல் முரளீதரனைத் தேர்ந்தெடுத்தார்.

மும்முரமாகக் கலியாண வேலைகள் நடந்து கொண்டிருந்தன. ஆயிற்று. நாளை மாப்பிள்ளை அழைப்பு. மாப்பிள்ளை டில்லியிலிருந்து விமானத்திலே திருமணத்திற்காக வந்து கொண்டிருந்தான். விமானம் யாதோ கோளாறினால் தலைகவிழ்ந்தது. உயிர் துறந்தான் முரளீதரன்.

மனம் ஒடிந்தார் வஸந்தாவின் தந்தை. அதே ஏக்கத்திலே படுத்த படுக்கையானார்.

மரணப் படுக்கையிலே படுத்துக்கொண்டிருந்தார்.

"சேகர்! நீ எல்லாம் அறிந்தவன். எனக்குப் பின் வஸந்தாவைக் கவனித்துக்கொள்ள வேண்டியவன் நீதான். வஸந்தா ஒன்றுமே அறியாதவள். தகுந்தவனுக்கு, அவளை மணம் முடித்து வைப்பது உன் கடமை" என்று கூறி இறந்து போனார்.

* * *

"பாரடா! அவள் என்னையே பார்த்துக்கொண்டிருக்கிறாள். அவளது இமைகளின் அழகைப் பாரடா! அசைந்தாடும் அவளது விழிகளைப் பாரடா! சிமிழ்போன்ற அவளது நாசியைப் பாரடா! காதிலே தொங்குகின்ற குண்டலங்களைப் பாரடா!" என்று இவ்விதமாகக் கூறிக்கொண்டிருந்தான் சுந்தரம். கேட்டான் இதை சேகர்—வஸந்தாவின் அண்ணன்.

சுந்தரைக் கண்டான். கட்டுமஸ்தான அவனது தேகத்தைக் கண்டான். எப்போதும் சிரிப்பது போலவே தென்படும் அவனது முகத்தைக் கண்டான். இன்ப போதையிலே ஆழ்ந்தான்.

"தங்கைக்கு ஏற்றவன் இவன்தான்" என்று தீர்மானம், செய்துகொண்டு தனது வீட்டிற்குச் சென்றான்.

அங்கு அவனது தங்கை ஒரு பாட்டுப் பாடிக்கொண்டிருந்தாள். அப் பாட்டு மேன்மேலும் அவனது எண்ணத்தை ஸ்திரப் படுத்தியது.

"சுந்தர்! ஆசை கொண்டேன் உன்மேல் நீ என்னை மணப்பாயோ! நீ என்னை மணப்பாயோ!"

என்று 'மோகன சுந்தர'னில் ராதா பாடுவதைப் பாடிக்கொண்டிருந்தாள்.

அண்ணன் வந்ததைக் கண்டதும், பாட்டைப் பாதியிலே நிறுத்திவிட்டு, அவனை வரவேற்றாள்.

சேகர் கிண்டலாக, "சுந்தர் இதோ இருக்காரே!" என்றான்.

"எங்கே? எங்கே?" என்றபடியே அவள் தற்செயலாக எதிர் வீட்டை நோக்கினாள்.

சுந்தரமும் எதிர்வீட்டை நோக்கிக் கொண்டிருந்தான்.

இருவர்கள் கண்களும் சந்தித்தன. காதல் கீதம் பரிமாறின.

"என்ன வஸந்தா! ஒரேயடியா விழுங்கி விடுகிறாப்போல பார்க்கிறே. கலியாணம் முடிஞ்சுடட்டும்," என்றான்.

"போ அண்ணா! உனக்கு எப்பவுமே கேலிதான்" என்று கூறிக்கொண்டே உள்ளே போக விரைந்தாள்.

மறுநாள் பொழுது விடிந்தது. எதிர்வீட்டுச் சேகர் இருஇருவென்று சுந்தரததின் வீட்டிலே நுழைந்தான. ஏதோ பேசிவிட்டுச் சென்றுவிட்டான்.

மத்தியானம் சுந்தரம் அசந்து தூங்கிக்கொண்டிருந்தான். அவனது அம்மா, "ஏய் சுந்தரம்! எழுந்திருடா. பெண் பார்க்கக் கிளம்புடா" என்று அவனை எழுப்பிக் கொண்டிருந்தாள்.

தூக்கக் கலக்கத்திலே அவன், "யாருக்கு அம்மா பெண்ணு?" என்று உளறினான்.

சுந்தரம் தாய் தந்தையர்களுடனே எதிர்வீட்டிற்குச் சென்றான். அங்கே அவன் கண்ட மணப்பெண் யார்?

வஸந்தாவே தான்!

மணம் முடிந்தது. வஸந்தாவின் அதிருஷ்டத்தினாலே என்னவோ அவனுக்கு வேலையும கிடைத்தது.

தூக்கம்

"கவி"

நூறு ஆண்டு வாழும் ஒருவர் (நல்ல வேளை, நமக்கு அந்தத் தொல்லை எதற்கு? அவர் ஒரு அமெரிக்காராகக் கூடவது!) தமது வாழ்நாளில் ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகள் தூங்கியே கழித்திருக்கிறோம் என்று நினைத்துப் பார்ப்பதில்லை. இவ்வாறு நம் வாழ்நாளில் நாம் பாதி வாழ்நாளை 'உயிரோடு செத்த' தூக்கத்தில்தான் கழித்திருக்கிறோம் என்று நாம் நினைத்துப் பார்த்ததுண்டா! ஏன்? "தூங்குகையில் வாங்குகிற மூச்சு ஒரு திசை மாறிப்போனாலும் போச்சு" என்று பாடினார் ஒரு சித்தர். இறந்து போனவனை 'அவன் மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டான்' என்றுதானே கூறுகிறோம்?

தூக்கம்தான் நமது வாழ்க்கையில் எவ்வளவு இன்றியமையாததாக இருக்கிறது! தூங்கவேண்டுமே எனத் துக்கப்படுபவன் எவனாவது இருக்க முடியுமா! "ஏன் இருக்க முடியாது, உங்களைப்போன்ற எழுத்தாளர்கள் எத்தனை பேர் இரவில் தூங்குகிறார்கள்? அவர்களுக்குத் தூங்குவதென்றால் சிம்ம சொப்பனம் கண்டமாதிரி" என்கிறீர்களா? சரிதான்! ஆனால் அவர்கள் தூங்கவில்லையே, தூங்காதபோது சிம்ம சொப்பனம் காண்பது எப்படி? இப்பூமியில் பிறக்கும்பொழுதே தூங்கிக்கொண்டுதான் பிறக்கிறோம். இறக்கும்பொழுதும் தூங்கிக்கொண்டுதானிறக்கிறோம். எவ்வளவு பொருத்தம் பார்த்தீர்களா!

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

என்று திருவள்ளுவப் பெருமான் கூறியிருக்கிறார். உறங்குவது போன்றது சாக்காடு. அதுதான் ஆனால் பிறப்பு எப்படி 'விழிப்பது போன்றது?" நாம் பிறக்கும்போது கண்களை மூடிக் கொண்டல்லவா பிறக்கிறோம்? ஒரு வேளை மறு பிறப்புக்களில் அப்படியோ என்னவோ!

ஒருவருக்கு உணவு எவ்வளவு அவசியமோ அவ்வளவு—ஏன் அதற்கு மேலாகவே தூக்கமும் அவசியமாகும். உணவில்லாமல் எத்தனையோ பேர் பட்டினி கிடக்கிறார்கள் இரவு பகலாய். அதற்குக் கௌரவமாக 'உண்ணாவிரதம்' என்றும் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் ஒரு இரவிலாவது கண் விழித்துக்கொண்டு தூங்காமலிருப்பார்களா? மூன்றாலும் பசி, தூக்கத்தை வரவழைத்து விடுமே. உண்ணாதவன் உறங்குகின்றான்; உண்ணுகின்றவனும் உறங்குகின்றான். தூக்கத்திற்குக்கூட அளவுகள் உண்டென வைத்தியர்கள் கூறியிருக்கிறார்கள் பாருங்கள்! சிறுவர்களுக்குப் பத்துமணி நேரம், வாலிபர்களுக்கு எட்டுமணி நேரம், நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஆறு அல்லது ஏழு மணி நேரம், அறுபது வயது மேற்பட்டவர்களுக்கு இரவில் எட்டு மணி நேரம், பகலில் ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் முறையே தூக்க காலங்களாம்! மனிதன் வளர வளர மறுபடியும் 'சிறு பிள்ளை'யாகின்றான்

என்பதற்குச் சிறுவர்களுக்கு உள்ளது போலவே பெரியவர்களுக்கும் அத்தனை மணி நேரம் தூக்கம் வேண்டும் என்று கூறுவதிலிருந்து ஆதாரம் கிடைக்கவில்லையா! இந்த அட்டவணையை இதைவிட உயர்ந்த முறையில் அமுல் நடத்துபவர்கள் பலருளர், அவர்கள் யார்? தூங்குமூஞ்சிகள்! திண்ணைத் தூங்கிகள்!

'இனிது இனிது ஏகாந்தம் இனிது' என்கிறாள் ஜெமினி
ஔவையார், நான் கூறுவேன் 'இனிது இனிது தூக்கம் இனிது'
என்று. தூங்குவதிலுள்ள இனிமை வேறு எதிலும் இல்லை.
அறுசுவை யுண்டி ஒருவன் சாப்பிடுகிறான். அது சாப்பிடும்
பொழுது ஏற்படும் இன்பம், சாப்பிட்டவுடன் தூங்குகிறானே
அந்த இன்பத்திற்கு ஒருகாலும் ஈடாகாது! உணவு வாய்க்கேற்ற
ருசியுடையதாக இருக்கவேண்டும். உடை உடுத்துவதற்கேற்ற
வசதியுடையதாக இருக்கவேண்டும். ஆனால் தூக்கத்திற்கோ
இட வசதி கூட வேண்டியதில்லை. தூக்கம் வந்துவிட்டால்
உட்கார்ந்துகொண்டே தூங்கி வழியும் ஆசாமிகள் எத்தனையோ
பேர்! ஒரு ஊரிலிருந்து நடந்து வரும்பொழுது களைப்பு அதிகமாக
இருந்தால் ஒரு மர நிழலில் உட்கார்ந்தால் அப்படியே தூங்கி
விடுகிறோம். உயிர் வாழ்வதற்கு உணவு உண்கிறோம். அவ்
வாறே உயிர் வாழ்வதற்குத் தூங்கவும் வேண்டும். ஒரு நாளைக்குத்
தூங்காவிட்டாலுங்கூட, உடல்நிலை கெட்டுவிடுமாம். தூங்காத
உடம்பு! ஆரோக்கியமற்ற உடம்பாகும் என்று கூறுகிறார்கள்
வைத்தியர்கள். "ஏமம் புகினும் சாமத்துறங்கு" என்பது நமது
நாட்டு முதுமொழி அல்லவா!

ஒருவனுக்கு நல்ல நிம்மதியான தூக்கம் இருந்தால் அவன்
ஆரோக்கியமுள்ளவன் என நாம் நம்பலாம். 'மெத்தை
இருந்தால்தான் தூக்கம் வரும்; கொசுவலை இருந்தால்தான்
தூக்கம் வரும்; தலையணை இருந்தால்தான் தூக்கம் வரும்,'
என்றெல்லாம் கூறுவார்கள் பலர். அப்படிப்பட்டவர்கள்
ஆரோக்கியமில்லாதவர்கள் என்பது என் தாழ்மையான கருத்து.
கோபித்துக் கொள்ளாதீர்கள்! ஆரோக்கியமுள்ள உடம்பு எந்
நிலையிலும்—எச் சூழலிலும் நிம்மதியான தூக்கங் கொள்ளுமாம்.
பயணஞ் செய்வோர், கிடைத்த திண்ணைகளிலோ வீதிகளிலோ
அப்படியே படுத்து ஆழ்ந்து உறங்கி விடுகின்றனர். உழைப்
பாளிகள் படுக்கை வசதிகளில்லாதபோதும் நன்றாகவே உறங்கு
கின்றனர். குளிரா யிருந்தாலுங்கூட அதையும் பொருட்படுத்
தாது நிம்மதியாகத் தூங்குபவர் பலருளர். அவ்வித நிலையி
னரை தமிழ்ப் புலவரொருவர் வருணித்திருத்தலைப் பாருங்கள்:

"கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையு ளிருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழையாளன்"

நிம்மதியான தூக்கமென்று கூறிக்கொண்டு இரவில் இடி
விழுந்தாற்கூட எழுந்திருக்காத ஆசாமிகள் பலருண்டு. தூக்கத்

திற்கு உதாரணமாகத்தான் கும்பகருணன் இருக்கின்றானே. அவன் பல நாட்கள் கணக்காகத்தான் தூங்குவானாம். எழுப்ப வேண்டுமென்றால் இரு பெரிய கடப்பாரைக் கம்பிகளை நெருப்பில் காய்ச்சி மூக்கில் திணிப்பார்களாம். அதனால் அவன் திணறி விடும் மூச்சால் கம்பிகள்கூடக் குளிர்ந்து போய்விடுமாம். அவனை எழுப்புவது பெரிய திண்டாட்டமாகி விடுமாம்! அதுபோன்ற கும்பகருணர்கள் எத்தனையோ பேர் நம்மிடைய உள்ளனரே! இரவில் ஒரு பெரிய விபத்து ஏற்பட்டாலும் எழுந்திருக்க மாட்டார்கள் அவர்கள். இரஷியா வந்து கோபால்ட் குண்டே போடட்டுமே, எழுந்திருக்க மாட்டார்கள்! அவர்களாகத் தூக்கம் தெளிந்து எழுந்திருந்தால்தான் எழுந்திருந்தது. இல்லாவிட்டால் ஒருவேளை மீளாத் தூக்கம் மேற்கொண்டு விடுவார்களோ என்னவோ! தூக்கம் வேண்டியதுதான். அளவுக்கு மிஞ்சுவது அமுதமும் நஞ்சல்லவா! அகாலத் தூக்கங்கள் உடம்பிற்குக் கெடுதியாம். அது சோம்பலின் அறிகுறியாம்! திமிரின் அடையாளமாம்! நமது உடல் உழைப்பிற்கும் உள்ள உழைப்பிற்கும் ஏற்ற காலம் பகல். அவைகளுக்கு ஓய்வு கொடுக்க அவசியமான காலம் இரவு. இரவில்தான் கட்டாயம் உறங்க வேண்டும். உறக்கம வருவதும் அப்போதுதான். பிற காரணங்களால் வரும் தூக்கம், அளவுக்கு மீறி உண்ணும்போதும் அளவுக்கு மீறி வேலை செய்யும்போதும்தான், பகலில் விலாப் புடைக்க உண்டு நித்திரை போதல் அந்நேரத்தில் சுகமாகத்தானிருக்கும். ஆனால் அது சோகை பிடித்ததுமாதிரி இருக்கும். உடம்பிற்கும் கெடுதல் உண்டு பண்ணும். இவை தவிர, வேலை ஒன்றும் செய்யாமல் வீணாக 'ஊரைச் சுற்றுபவைகள்' எத்தனையோ உண்டு. திருட்டுத் தொழில் செய்தல், பிறரை ஏமாற்றிப் பிழைத்தல் ஆகியன செய்வர்களுமுண்டு. முன்னவர் காலத்தை ஓட்டுவதற்குத் தூங்குவர். பின்னவர் இரவில் வேலை செய்வதற்காகப் பகல் முழுவதும் தூங்குவர். இவர்கள்தாம் "தூங்குமூஞ்சிகள்!" "திண்ணை தூங்கிகள்!"

துன்பங்களை மறப்பதற்குச் சிறந்த சாதனம் தூக்கம்தான்! மனத்தி லடக்க முடியாத தூக்கத்தை மறக்கத் தூங்கினால் போதும். ஷேக்ஸ்பியர் 'சண்டமாருதம்' என்ற தமது நாடகத்தில், "தூங்குதல் ஒரு சிறந்த சாதனம் துயரங்களைப் போக்குதற்கு. அதை ஏற்றுக்கொள்" என்கிறார். நிம்மதியாகத் தூங்கும்போது கவலைகள் எவையும் தெரிவதில்லை. அவ்வகைத் தூக்கத்திற்குப் பின் உள்ளமும் உடலும் அலுப்பு நீங்கியிருத்தலை உணரலாம்.

ஆபீசில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும்போதே தூங்கி வழிகிறோம். அது வேலை அலுப்போ, இரவில் தூக்கமில்லாததாலோ, துக்கத்தாலோ! எல்லாம் பொருந்தும். தூங்கும்போது குறட்டை வரும் ஆசாமிகள் ஆபீசுகளில் குறட்டை விடாமலிருக்கவேண்டும்! அப்படிக் குறட்டை விட்டால் அவர்கள்பாடு ஆபத்துதான்! அரசாங்கத்தை நடத்தும் சட்டசபையிலேயே

எம். எல். ஏக்கள் தூங்கி வழிகிறார்களே! தூங்கும்போது குறட்டை விடலாமா என்றுங்கூட ஒரு எம். எல். ஏ. கேள்வி கேட்டதை நாம் மறக்கவில்லை. பள்ளிக்கூடங்களில் பையன்கள் பாடங்கள் நடக்கும்போது தூங்குகிறார்கள். வேலையாட்கள் வேலை பார்க்கும்போதே தூங்கி விடுகிறார்கள். பக்தர்களோ ஆண்டவனின் நினைப்பில் இணைந்து அப்படியே தூங்கி விடுகிறார்கள்!

"தூங்கும் புலியை எழுப்பாதே" என்கிறோம். தூங்கும் சிலரை எழுப்பிப் பாருங்கள். அவர்கள் பாய்வதில் அப்பொழுது புலிதான்! தூக்கம் அவர்களுக்கு அவ்வளவு இனிமை! ஆபீசர்களைப் பார்க்கப் போனால் "ஐயா தூங்குகிறார்கள்" என்பது ஒரு தட்டிக்கழிக்கும் பேச்சாக அமையும். இப்பொழுதெல்லாம் காலை எட்டு மணி வரை தூங்குவதுதான் நாகரிகம். காலை நான்கு அல்லது ஐந்து மணிக்கு எழுந்திருந்தால் உடல் எவ்வளவு சுறுசுறுப்பாக இருக்கிறது தெரியுமா? அதை யார் அனுபவித்திருக்கப் போகிறார்கள்!

'தூக்கம்' என்ற சொல் நம் வாழ்க்கையிலும் பலவிதங்களில் பயன்படுகிறது. அவன் ஒரு 'தூங்குமூஞ்சி' என்றால் அவனைச் சோம்பேறி என்று கூறுவதாகப் பொருள். 'தூங்காமை கல்வி துணிவுடைமை' ஆகிய மூன்றும் நிலனாள்பவற்கு நீங்காதவை என்கிறார் திருவள்ளுவர். தூங்காமையை அவர் போற்றுகிறாரே! காரியத்தில் தூங்காமை என்க. அஃதாவது சுறுசுறுப்பாக வேலை செய்தல். 'ஆபீசு தூங்குகிறது' என்கிறோம். 'வேலை தூங்குகிறது' என்கிறோம். அப்படி என்றால் ஆபீசில் வேலை இல்லை, வேலையில் சுறுசுறுப்பில்லை என்பன பொருள்களாகும்.

இவ்வளவு எழுதுகிறோம். தூக்கம் வராமல் துன்பப்படுபவர்களைக் கவனிக்காமல், தூக்கம் வரவில்லை என்று எத்தனையோ பேர் 'தூக்க மருந்து' வாங்கிச் சாப்பிடுகிறோம். தூக்க மருந்து சாப்பிட்டும் பல நேரங்களில் தூக்கம் வருவதேயில்லை. வீட்டிலிருக்கும் கிழவர்கள் கிழவிகள் இரவில் தூங்கவே மாட்டார்கள். ஒரு சிறிய சத்தம் கேட்டாலும் உடனே விழித்துக்கொண்டு திருடன் வந்துவிட்டானோ எனப் பார்ப்பார்கள்!

தூங்கி விழுவதால் எவ்வளவோ கெடுதல்களும் நேரத்தான் செய்கின்றன. ஆபீசில் தூங்கி விழுவதை அதிகாரிகள் பார்த்துவிட்டால் நம் வேலை காலிதான்! காவல் காப்பவர்கள் தூங்கிவிட்டால் திருடனுக்குக் கொண்டாட்டம்! பரீட்சைப் பேப்பர்கள் திருத்துபவர் தூங்கி வழிந்தால் சுளையான மார்க்குகள் விழுந்தாலும் விழும்; சுழி விழுந்தாலும் விழும்! பத்திரிகாசிரியர் தூங்கிக் கொண்டே பிரசுரத்திற்கு வந்த கட்டுரைகளைப் பார்த்தால் அவைகளும் சௌகரியமாக குப்பைக் கூடையில் "தூங்கிவிடும்!" இக் கட்டுரையை இரவில் தூங்காமல் நெடுநேரம் விழித்து எழுதியிருக்கிறேன். இதைப் படிக்கும் ஆசிரியரும் நல்ல காலமாகத் 'தூங்கி விழாமல்' இருக்கவேண்டும்! தூங்கி விழுந்துகொண்டே பார்த்தாரானால் அது என்னிடம் 'தூங்கிக்கொண்டிருக்கத்' திரும்பி வந்துவிடும்.

தொடர் கதை:

வாழ்க்கைப் புயல்

எஸ்.என்.கே.ராஜன்

அவளுடைய அசட்டுத்தனத்தைக் கண்டு கமலாவும் ராமசாமியும் கல கலவென்று சிரித்தனர்.

சற்று நேரத்தில் சரவணன் வந்து சேர்ந்தான். அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்தைக் கண்டு வியப்படைந்தான். அர்த்தமில்லாமல் விருந்து ஏன் என்று ஆச்சரியப்பட்டான் விஷயத்தை தெரிந்து கொள்ளாத அவன். சரவணனை கமலாவுக்கும் ராமசாமிக்கும் அறிமுகப் படுத்தினாள் கண்ணம்மாள். அப்படிச் செய்வதற்குள் கண்ணம்மாள் அடைந்த வெட்கத்தைக் காண வேடிக்கையாக யாக இருந்தது மற்றையோர்க்கு.

எல்லோரும் விருந்துண்ண ஆரம்பித்தனர். அன்றைய விசேஷத்திற்கென்றே புது தினுசான, ருசிகரமான பல காரங்களைத் தயாரித்திருந்தாள் கண்ணம்மாள். அங்கு வந்ததிலிருந்து அரைப் பட்டினியால் அவஸ்தைப்பட்ட சரவணனுக்கு விருந்தில் வைக்கப் பட்டிருந்த பலகாரங்களை அவசர அவசரமாக ஒரே மூச்சில் தின்றது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

விருந்தின்போது கண்ணம்மாளும் கமலாவும் கேலி வார்த்தைகள் பேசிச் சிரித்துக்கொண்டிருந்தனர். அதில் அவ்வப்பொழுது ராமசாமியும் சரவணனும் கலந்து கொண்டனர்.

“பெரியம்மா எப்பொழுது வருவார்கள்?” என்று கேட்டான் ராமசாமி கண்ணம்மாளைப் பார்த்து.

“இன்னும் இரண்டு மூன்று நாளாகும்!” என்றாள் கண்ணம்மாள்.

“அப்படியானால் சரவணனின் வயிற்றுக்கு வேட்டைதான்!... என்ன, சரவணா? அந்த அம்மாள்—அதுதான் கண்ணம்மாளின் தாயார் வீட்டிலிருக்கும்போது இதைப்போல் பலகாரமும் பட்சணமும் தினமும் கிடைக்காதல்லவா? உம்...சாப்பாடே சரியாகக் கிடைக்காதென்றால் அப்புறம் பலகாரப் பட்சணங்களைப் பற்றிச் சொல்லவாவேண்டும்? அவர்கள் சாப்பாட்டை ஒரு பொருட்டாகக் கருதுவதே இல்லை!...நீ இன்னும் கொஞ்சநாள் இங்கே இருந்தால் ஆளே அடையாளம் தெரியாமல் போய்விடுவாய். கடைசியில் எலும்பும் தோலும்தான் மீதி யாகும்...ஆமாம்! உனக்கு முன் இருந்த வாத்தியாரைப்பற்றி நினைத்தால் எனக்குச் சிரிப்பும், பரிதாபமும் கலந்து ஈர்க்குமாதிரி ஆகி விட்டாரென்றால் பார்த்துக் கொள்ளேன்!” என்று கல கலவென்று சிரித்துக்கொண்டே கூறினான் ராமசாமி.

ஏற்கனவே தாங்கொணா வேதனையால் உள்ளம் நொந்து, உடல் குன்றிப் போயிருந்த சரவணனுக்கு ராமசாமியின் செய்தி பெருத்த திகிலை உண்டு பண்ணியது. கிலி பிடித்தவனுக்கு முன்னால் புலி

வந்து நின்றதுபோலிருந்தது அவனுக்கு. இருளில் தனிப்பிரயாணம் துவங்கியவனிடம் பேய் பிசாசுக் கதைகளைச் சொன்னால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது சரவணனின் நிலை.

சிந்தனையில் மூழ்கினவனாய் அமர்ந்து விட்டான் சரவணன். அவனிடம் தோன்றிய கலகலப்பு நீங்கியது. விருந்திலும் அவன் நாட்டம் செலுத்தவில்லை.

அவன் மனம் வேதனையால் வெந்து கந்திப் போயிருக்கும் போது, விருந்தில் எப்படிக் குஷியுடன் கலந்துகொள்ள முடியும்? விருந்து முடியுஞ் சமயம் கண்ணம்மாள் திடீரென்று தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள். எல்லோரும் அதைக் கண்டு திடுக்கிட்டனர்.

“கண்ணம்மா! கண்ணம்மா! என்ன சமாசாரம்? ஏன் இப்படித் திடீரென்று அழ ஆரம்பித்து விட்டாய்?” என்றாள் கமலா, ஒன்றும் தோன்றாதவளாய், கண்ணம்மாளின் தோளைப்பற்றி உலுக்கி.

கண்ணம்மாள் பதில் சொல்லவில்லை. ஆனால் அழுகைதான் அதிகமாயிற்று.

நிலைமையை ஒருவாறு புரிந்து கொண்டான் ராமசாமி. சரவணன் ஒரு தடவையாவது கண்ணம்மாள் இருந்த பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அவனது பாராமுகமே கண்ணம்மாளின் திடீர் அழுகைக்குக் காரணமாக இருக்க வேண்டும் என்று ஊகித்தான்.

உடனே சரவணனைப் பார்த்து, “என்ன, சரவணா? இப்படி உட்கார்ந்து விட்டாயே? இவளிடம் ஏதாவது விநயமாகப் பேசி இவளுக்கு ஆறுதல் சொல். நீ தேற்றினால்தான் சமாதானப்படுவாள் போலத் தெரிகிறது. நாங்கள் இப்பொழுது போய்விட்டுச் சாவகாசமாகப் பிறகு வருகிறோம்!” என்று கூறிக்கொண்டே கமலாவுக்குக் கண்சாடை காட்டினான் ராமசாமி.

சரவணன் திகைப்படைந்தான். உடனே அவன், “நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?...எனக்கு ஒன்றும் புரியவில்லையே!...நீங்கள் நினைப்பது”...என்று ஏதேதோ உளறினான்.

“நான் ஒன்றும் பிரமாதமாக நினைக்கவில்லை...இனிமேல் உங்கள் பொறுப்பு!” என்று சிரித்துக்கொண்டே கூறித் தன் இருப்பிடத்தைவிட்டு எழுந்தான் ராமசாமி. கமலாவும் எழுந்தாள்.

“என்ன? என் பொறுப்பா? “சரிதான்!...நான் தனிமையில்” என்று சரவணன் சொல்லி முடிப்பதற்குள், ராமசாமி குறுக்கிட்டு, “உனக்குக் கூட்டத்தோடு சேரப் பிரியமே இருப்பதில்லையோ? விசித்திரமான பிறவிதான்!” என்று கூறிவிட்டு அவ்விடம் விட்டகன்றான். அவனைப் பின்தொடர்ந்தாள் கமலா.

அவர்கள் போனபின் கண்ணம்மாள் விக்கி விக்கிப் பலமாக அழ ஆரம்பித்து விட்டாள். இருக்க இருக்க அழுகுரல் உச்சஸ்

தாயிக்குப் போனதே தவிரக் குறைந்த பாடில்லை. சரவணன் ஒன்றும் தோன்ருதவனாய் சில விநாடிகள் அவளையே பரிதாபத்துடன் பார்த்தவாறு நின்றிருந்தான். பிறகு செய்வதொன்று மறியாமல் அவ்விடம் விட்டகன்ருன்.

அதன் பின்னும் கண்ணம்மாள் தனது சாகசத்தைக் காட்டிக் காதல் வலையை அவன்மேல் வீசினாள். ஆனால் அவ்வலைக்குள் விழுந்து விடாமல் சர்வ ஜாக்கிரதையாகத் தப்பித்துக்கொண்டான் சரவணன். அது கண்ணம்மாளுக்கு எதிர்பாராத ஏமாற்றத்தை உண்டாக்கிற்று. ஏமாற்றம் ஏக்கததை உண்டாக்கிற்று. வர வர அவ்வேக்கம் சரவணனின்மேல் ஆத்திரமாக மாறியது. ஆத்திரத்தால் சரவணனுக்கு வைரியானாள். சரவணனைக் கட்டோடு பிடிக்காத தன் தாயுடன் சேர்ந்துகொண்டு அவனுக்குப் பல விதத்திலும் தொல்லைகொடுத்துத் துன்புறுத்தத் தலைப்பட்டாள்.

• • • •

சரவணன் எதிர்பாராத சம்பவங்களில் அகப்பட்டுத் திண்டாடிக் கொண்டிருக்கும்போது, அவன் தாயும் தங்கையும் ஜீவரத்தினத்தின் வீட்டில் இருந்துகொண்டு, தேவலிங்கத்தினிட மிருந்து ஏதாவது உதவி செய்யும் தகவல் வருமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவர்கள் ஜீவரத்தினத்தின் அன்பான ஆதரவில் யாதொரு குறைவு மில்லாமல் வாழ்ந்தனர். ஜீவரத்தினத்திற்குச் சீதாவின் மேல் அலாதியான அன்பு. சீதாவின் அடக்க ஒடுக்கமான அருங்குணங்கள் ஜீவரத்தினம் அவள் மேல்கொண்ட பாசத்தை அதிகப்படுத்தினவே தவிரக் குறைக்கவில்லை.

ஒருநாள் ஜீவரத்தினம் ஒரு ஓவியத்திற்கு வர்ணம் தீட்டிக் கொண்டே, அருகிலமர்ந்து அதைக் கவனித்து வந்த சீதாவுடன் உரையாடலானாள்.

"உங்கள் சிற்றப்பாவிட மிருந்து ஏன் இன்னும் யாதொரு தகவலும் வரவில்லை? அவர் உங்களுக்கு உதவி செய்யப் போகிருரா இல்லையா? அது கூட நிச்சயமாகத் தெரியவில்லையே!" என்ருள் ஜீவரத்தினம்.

"எனக்குந்தான் ஒன்றும் தெரியவில்லை. அக்கா!' என்ருள் சீதா.

"அவரிடம் ஏராளமாகப் பணம் இருக்கிறதென்று நினைக்கிறேன்"

"ஆமாம். அவர் பணக்காரன் என்றுதான் நாங்கள் நினைத்துக்கொண் டிருக்கிருேம். அப்படித்தான் என் அப்பாவும் சொல்லி விட்டு இறந்தார்!"

"அதை நீங்கள் நிச்சயம் நம்பலாம். ஒரு மனிதனுக்கு இனிய மனமும் பரோபகார சிந்தையும் இல்லாவிட்டால் அவன் சாதாரணமாகவே பணக்காரனாகத்தான் இருப்பான்!"

"ஆனால் அவர் மிகவும் முரடர், இல்லையா அக்கா?"

"முரடரா? ஹி!......ஹி!......கொடுமைக்காரன்! கோம்பை நாய் பெருங்கரடி! தெரியுமா? உன் சிற்றப்பாவைப் பற்றி இப்படிச் சொல்வதற்கு உனக்குக் கோபம் வரலாம். ஆனால் உள்ளதைச் சொன்னேன்!"

"உண்மைதான்! ஆனால் அது அவருடைய பிறவிக்குணமோ என்னமோ?"

"பிறவிக்குணமாவது ஒன்ருவது! புதுப் பணக்காரனின் மிடுக்கு!"

"அவர் சிறு வயதிலிருந்தே ரொம்பவும் கஷ்டப்பட்டிருப்பார் என்றே நினைக்கிறேன். அதனால் அவர் குணம் அப்படி யிருக்கலாம். என்ன இருந்தாலும் அவரைப்பற்றி இப்படித் திடீரென்று தவருக நினைப்பது தவறுதான் அக்கா!"

தனது சிற்றப்பனுக்காகச் சீதா பரிந்து பேசினது ஜீவரத்தினத்திற்கு வெறுப்பைத் தந்தது. உடனே அவள், "அது சரியம்மா! நீ நினைப்பது சரிதான்! மேலும் நீ அப்படித்தான் நினைக்கவேண்டும் அவரைப்பற்றி...ஆனால் நான் சொல்கிறேன், அவரையும் கஷ்டப்படுத்திக் கொள்ளாமல், உங்களையும் சுகப்படுத்தி நல்வாழ்வு வாழச் செய்யச் சிறிதளவாவது உதவி செய்யலாமல்லவா? அத்தனை பணத்தை வைத்துக்கொண்டு ஒண்டிக்கட்டையான அவர் என்ன செய்யப் போகிருர்?"

"அவர் பணத்தில் நாங்கள் பிழைக்கவேண்டும் என்கிற விருப்பம் எனக்கில்லை, அக்கா! நாங்களே சம்பாதித்து அதைக்கொண்டு வாழ்க்கை நடத்தினால் தான் இன்பமும் திருப்தியும் ஏற்படும். என் சிற்றப்பன் என்னை ஏதாவது ஒரு வேலைக்குச் சிபார்சு செய்து சேர்த்து விட்டாரென்ருல் அதுவே போதுமானது..." என்று சீதா தனது பேச்சை முடிப்பதற்குள் வெளிக்கதவை யாரோ பலமாகத் தட்டும் சத்தம் கேட்டது.

உடனே சீதா ஓடிப்போய்க் கதவைத் திறந்தாள். தேவலிங்கம் உள்ளே நுழைந்தார்.

சில விநாடிகள் ஜீவரத்தினத்தையும் சீதாவையும் ஒருவிதமாகப் பார்த்துவிட்டுப் பிறகு சீதாவை நோக்கி, "நீ இப்பொழுது தயாராக இருந்தால் தாமதமில்லாமல் போய் வேலையை ஒப்புக்கொள்ளலாம்!" என்று படபடப்புடன் பேசினார்.

அப்பொழுது உள்ளே வேலையாக இருந்த காந்தம்மாள் அங்கு வந்தாள். அவள் தன்னை அன்புடன் வரவேற்பதைக் கூடச் சரியாகக் கவனியாமல், காந்தம்மாளை நோக்கி, "பெண்களுக்கு வேண்டிய உடைகளை தயாரித்து விற்கும் ஒரு தையற்கடையில் கையாளாக இருக்க சீதாவுக்கு நான் சிபார்சு செய்யப்போகிறேன்!" என்ருர் மீண்டும் அதே படபடப்புடன்.

"உண்மையாகவா? தையற் கடையிலா?" என்று வியப்புடன் கேட்டாள் காந்தம்மாள்.

சீதா ஒன்றும் பேசாமல் தனது மகிழ்ச்சியையும், ஆச்சரியத்தையும் மறைத்துத் தலைகுனிந்து நின்றாள்.

"ஆம்! தையற்கடையில் தான்! கல்யாணி என்பவள் அந்தக் கடையை வைத்து நடத்துகிறாள். சீதாவுக்கு அந்த வேலை பிடித்திருந்தால் இப்பொழுதே அழைத்துக்கொண்டு போய் சிபார்சு செய்து வேலையில் சேர்த்து விடுகிறேன்!" என்றார் தேவலிங்கம்.

இதைத் தவிர வேறெங்விதமான பண உதவியும் தன் மைத்துனர் செய்யமாட்டார் என்பது தெளிவாகி விட்டது, காந்தம்மாளுக்கு. அதனால் அவ்வேலையை ஒப்புக்கொள்வதில் தன் மகளின் சம்மதத்தைக் கேட்டாள், அவளும் சரி என்று ஒப்புக்கொண்டாள்.

உடனே தேவலிங்கம் சீதாவை அழைத்துக்கொண்டு கல்யாணியின் தையற்கடையை நோக்கிப் போனார்.

போகும்போது சீதா தன் சிற்றப்பனை நோக்கி, "இந்த வேலை எனக்குக் கிடைத்தால் நான் ரொம்பவும் அதிர்ஷ்டசாலிதான், சித்தப்பா!" என்றாள் குதூகலத்துடன்.

தேவலிங்கம் மௌனமாக நடந்தார்.

சீதா மீண்டும், "வேலையில் சேர்ந்ததும் வேறு வீட்டிற்கு அம்மாவுடன் குடிபோய் விடலாமா, சித்தப்பா?' என்று கேட்டாள்.

"ஆமாம்......உங்களுக்காக ஒரு தனி வீட்டை வாடகைக்கு அமர்த்தி யிருக்கிறேன். அதில் நீயும் உன் தாயாரும் குடி யிருக்கலாம். தினமும் உன் வேலை முடிந்ததும் இரவில் வீடு திரும்பி உன் தாயாருடன் தங்கலாம்!"

"இரவில் வந்து தாயாருடன் தங்குவதா?"

"ஆமாம்...பகலெல்லாம் நீ அங்கேயே தங்கி வேலை செய்ய வேண்டும். மத்தியானச் சாப்பாடும் உனக்கு அங்கேயே கொடுப்பார்கள். இரவானதும் தான் வீடு திரும்பலாம்!"

"ஓஹோ! சரிதான் ... உம் ... சம்பளம் எவ்வளவு?"

சம்பளத்தைப் பற்றி ஒன்றும் சொல்லாமல் நடந்தார் தேவலிங்கம்.

கடைசியாகக் கல்யாணியின் தையற் கடையை அடைந்தனர். அங்கே வெளியே நின்று கொண்டிருந்த வேலைக்காரனிடம் தான் வந்திருப்பதாகக் கல்யாணியிடம் சொல்லச் சொன்னார். அவன் சென்று கல்யாணியை அழைந்து வந்தான். மூவரும் ஒரு சிறிய அறையில் போய் அமர்ந்தனர்.

கல்யாணி சீதாவுடன் எல்லாவற்றையும் விவரமாகப் பேசி, உடைகளை விற்பனை செய்வதிலே தனக்கு உதவியாக இருக்கும்படியும், முதலில் வாரத்திற்கு ஐந்து ரூபாய் சம்பளம் கொடுப்பதாகவும், மறு நாள் காலையில் வந்து வேலையில் சேரும்படியும் கூறினாள். பிறகு வியாபாரத்தைப் பற்றி விரிவாகச் சொன்னாள்.

அதன் பின் தேவலிங்கமும் சீதாவும் வீடு திரும்பினர்.

வழியில் தேவலிங்கம், "உன் அதிர்ஷ்ட வசமாக ஒரு வேலை கிடைத்து விட்டது. இப்பொழுது நீயும் உன் தாயாரும் இருக்கும் இடத்தை விட்டு நீங்கி, நான் பார்த்து வைத்திருக்கும் வீட்டிற்கு உன் தாயாருடன் குடி வந்துவிடு ... என்ன? ... தெரிந்ததா?" என்றார்.

"கடைக்கும் வீட்டுக்கும் ரொம்ப தூரமா, சித்தப்பா?"

"ரொம்ப தூர மொன்றுமில்லை. நுங்கம்பாக்கத்திற்கும் சிந்தாதிரிப் பேட்டைக்கும் ரொம்ப தூரம் என்று நீ நினைக்கிறாயா என்ன?"

"எனக்கென்ன தெரியும்? நுங்கம்பாக்கம் எங்கே, சிந்தாதிரிப் பேட்டை எங்கே என்று எனக்குத் தெரியாதே!"

"கடை இருப்பது நுங்கம் பாக்கத்தில்; நீங்கள் குடியிருக்கப் போவது சிந்தாதிரிப் பேட்டையில்!"

"கடைக்கும் வீட்டுக்கும் வழி தெரியாதே?"

"என் வேலைக்காரனை அனுப்பி வழி காண்பிக்கச் சொல்கிறேன்!"

கடைசியாக சீதாவை ஜீவரத்தினத்தின் வீட்டில் விட்டுவிட்டுத் தன் இருப்பிடத்திற்குச் சென்றார் தேவலிங்கம்.

சீதா தன் தாயாரிடமும், ஜீவரத்தினத்தினிடமும் போன காரியம் கை கூடி விட்டதாகவும், அடுத்த நாளிலிருந்து வேலைக்குப் போகவேண்டு மென்றும், தன் சிற்றப்பன் ஏற்பாடு செய்திருக்கும் வீட்டிற்குக் குடி போக வேண்டும் என்றும் கூறினாள். அவர்கள் தன்னை விட்டுப் பிரிந்து போவதைக் குறித்து ஜீவரத்தினம் மிகவும் வருந்தினாள். வேலை கிடைத்ததைக் குறித்து மிக்க மகிழ்ச்சி என்றும், ஆனால் தேவலிங்கம் ஏற்பாடு செய்திருக்கும் வீட்டிற்குக் குடி போகாமல் தன்னுடனே தங்கி விடும்படியும் காந்தம்மாளிடமும், சீதாவிடமும் மன்றாடினாள். ஆனால் தனது சிற்றப்பனின் ஏற்பாட்டிற்கு எதிராக நடந்தால் அதனால் விபரீதம் ஏற்பட்டு கிடைத்திருக்கும் சிறு உதவிக்கும் ஊனம் நேரலாமென்று அஞ்சி, அதை எடுத்துச் சொன்னாள் சீதா. அதுவும் உண்மை என்று கண்ட ஜீவரத்தினம் அவர்கள் இஷ்டப்படி இருக்கச் சம்மதித்ததுடன், அடிக்கடி வந்து பார்த்து தன்னாலான உதவிகள் செய்வதாக வாக்களித்தாள்.

மறு நாள் கல்யாணியின் தையற் கடையில் சீதா வேலையில் சேர்ந்தாள். அன்று மாலை தாயையும் மகளையும் புதிய வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போக தேவலிங்கத்தினிடம் வேலைசெய்யும் கந்தசாமி ஒரு வண்டியுடன் வந்து சேர்ந்தான். காந்தம்மாளும் சீதாவும தங்களிட மிருந்த சில சாமான்களை எடுத்துக் கொண்டு, ஜீவரத்தினத்திடம் பிரியா விடை பெற்றுக் கந்தசாமியுடன் புறப்பட்டனர். ஜீவரத்தினம் தன் அன்பிற் கறிகுறியாகத் தான் எழுதிய சீதாவின் உருவப்படத்தை அவளுக்குக் கொடுத்தாள். அதை சீதா மிக்க மகிழ்ச்சியுடனும், நன்றியறிதலுடனும் பெற்றுக்கொண்டாள். பிறகு எல்லோரும் புதிய வீட்டை அடைந்தனர்.

அது ஒரு சிறிய வீடு. சிந்தாதிரிப் பேட்டையில் கூவம் நதியோரத்தில் இருந்தது. சிறு வீடானாலும் தனி வீடு. இரண்டு அறைகளே இருந்தன. ஒன்று சமையலறை; மற்றொன்று படுக்கையறை. கொண்டு வந்த சில சாமான்களை கந்தசாமி ஒழுங்காக அந்தந்த இடங்களில் அடுக்கி வைத்தான். சீதா வீட்டைச் சுத்தப்படுத்தி, ஜீவரத்தினம் எழுதிக் கொடுத்த தனது உருவப்படத்தைச் சுவரில் மாட்டினாள். அதற்குள் காந்தம்மாள் இரவுச் சாப்பாட்டைச் செய்து முடித்தாள். வேலை யெல்லாம் முடிந்த பிறகு கந்தசாமி போய் வருவதாகச் சொன்னான்.

"அதற்குள் என்ன அவசரம், கந்தசாமி? இன்றிரவு இங்கேயே சாப்பிட்டு விட்டுப் போ!" என்றாள் காந்தம்மாள்.

"சாப்பாட்டுக்கு என்னங்கம்மா அவசரம்? இந்த உடம்பு வளர்ந்ததே உங்கள் சாப்பாட்டினால்தான். ஐயா இருந்தபோது என்னைச் சொந்த சகோதரன் போலப் பாவித்து தன்னாலான உதவிகளெல்லாம் செய்தார்! அதை யெல்லாம் என் உயிர் உள்ள வரை மறக்கமாட்டேன். அதற்காக நான் உங்களுக்கு ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறேன். என்னாலான உதவிகளை உங்களுக்கு எப்பொழுதும் செய்யச் சித்தமா யிருக்கிறேன்!" என்றான் கந்தசாமி நன்றி பிரதிபலிக்கும் குரலில். பிறகு, "சாப்பிடவில்லை என்ற வருத்தம் வேண்டாம். எஜமான் என்னைச் சீக்கிரம் வரச் சொல்லியிருக்கிறார். நான் போய்விட்டு வருகிறேனுங்க!" என்று கூறி, விடை பெற்றுக்கொண்டு சென்றான்.

"பாவம்! கள்ளங் கபடற்றவன்! நன்றி மறவாதவன்! ஏழைகளுக்குத்தான் இளகிய மனதைக் கொடுத்திருக்கிறார் கடவுள்!" என்றாள் காந்தம்மாள்.

* * *

காதலில் தோல்வி கண்ட கண்ணம்மாளும், சரவணனைக் கண்டாலே கட்டோடு பிடிக்காத தாயாரம்மாளும் சரவணனுக்குக் கொடுத்த தொல்லைகளுடன் மற்றொரு புதிய தொல்லைக்கு அவன் இலக்கானான். அது கண்ணன்மேல் அன்பு காட்டிப் பழகினான். அந்த அன்பு சரவணனுக்கு அவனை அடிமை யாக்கிவிட்டது. தன்னால் முடிந்த மட்டும் சரவணனுக்கு என்னென்ன உதவிகள் வேண்டுமோ அவற்றை யெல்லாம் செய்தான். அத்துடன் சதா சரவணனின் அருகிலேயே இருப்பதிலும், அவனுடன் பேசிப் பழகுவதிலும் கண்ணன் அளவிலா ஆனந்தமும் திருப்தியும் அடைந்தான். கண்ணன்மேல் சரவணன் காட்டும் அலாதியான, அபரிமிதமான அன்பைக் கண்டு, அவனைச் சதா துன்புறுத்துவதில் நாட்டம் கொண்ட வேலாயுதமும், தாயாரம்மாளும் அழுக்காறடைந்தனர். அதன் காரணமாகக் கண்ணனுக்குக் கிடைத்த பலன் அடியும் உதையுமே! சரவணனை ஒன்றும் செய்ய முடியாத அவர்கள், அவன்மேல் கொண்ட கோபத்தைக் கண்ணன்மேல் திருப்பி அவனை அவதிக்குள்ளாக்கினர். சரவணனும் நாளடைவில் அவர்களால் அதிகமாக வெறுக்கப்பட்டாள். அதில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டாள் கண்ணம்மாளும்!

ஒருநாள் அதிகாலை குளிர் நடுக்கியது. சரவணன் தன் அறையில் நன்றாகப் போர்த்திப் படுத்துக்கொண்டிருந்தான். அப்பொழுது

வேலாயுதம் பரபரப்புடனும் ஆத்திரத்துடனும் அவ்வறைக் கதவைத் தட்டினார். தூக்கவெறியில் இருந்த சரவணன் திடீரென்று கிளம்பிய கதவுதட்டும் ஓசையைக் கேட்டு திடுக்கிட்டெழுந்து வந்து கதவைத் திறந்தான். அங்கே அவனுக்கு முன்னால் வேலாயுதம் ரௌத்திராகாரமாக நின்று கொண்டிருந்ததைக் கண்டான்.

"கண்ணன் எங்கே?......எங்கே?...எங்கே கண்ணன்?" என்ற வேலாயுதத்தின் கோபம் கொந்தளிக்கும் கடுமையான குரல் அவ்வீட்டையே அதிரச் செய்தது.

சரவணனுக்கு, தூக்கி வாரிப்போட்டது. வேகமாக அறையைவிட்டகன்று, கண்ணன் வழக்கமாகப் படுத்துத் தூங்கும் இடத்தைப் பார்த்தான். அங்கே கண்ணன் காணப்படவில்லை!

சரவணனைப் பின்தொடர்ந்து சென்ற வேலாயுதம், கோபத்தால் சிவப்பேறிய கண்களால் அவனைப் பார்த்து, "உம்...சொல்லு...எங்கே அவன்?" என்று கர்ஜித்தார்.

"நேற்றிலிருந்து அவனை நான் பார்க்கவே இல்லையே!" என்று அச்சம் தோய்ந்த குரலில் பதிலளித்தான் சரவணன். கண்ணனின் மறைவு அவனுக்கே ஆச்சரியத்தை விளைவித்தது.

அதற்கு மற்ற சிறுவர்கள் அங்கே வந்து கூடி வேடிக்கை பார்க்கலாயினர். வேலாயுதத்தின் அனல் கக்கும் பார்வை அவர்களிடம் கண்ணனைப்பற்றிக் கேட்டார். அவர்கள் மௌனமாகத் திரு திருவென்று விழித்தவாறு நின்றனர். அவர்கள் ஒன்றும் தெரியாமல் விழித்தனரோ அன்றி தெரிந்ததைச் சொன்னால் வேலாயுதம் தங்களை அடித்து நொறுக்கி விடுவார் என்கிற பயமோ தெரியவில்லை.

ஆத்திரத்திற்குள்ளான வேலாயுதம் மீண்டும் சிறுவர்களைப் பார்த்து, "கண்ணனை யாராவது பார்த்தீர்களா? எங்கே அவன்? சொல்லுங்கள்!" என்று சீறினார்.

அப்பொழுது ஒரு சிறுவன், "கண்ணன் எங்கோ ஓடி விட்டான், சார்!" என்று முணுமுணுத்தான்.

"என்ன, ஓடி விட்டானா?...யார் அப்படிச் சொன்னது?" என்று கேட்டுக்கொண்டே அச்சிறுவர் கூட்டத்தை முறைத்துப் பார்த்தார் வேலாயுதம்.

"தம்புசாமி, சார்!" என்றனர் அத்தனை சிறுவர்களும் ஏககாலத்தில், தங்கள்மேல் விழப்போகும் அடியினின்று தப்பித்துக் கொள்ள.

சட்டென்று வேலாயுதம் சிறுவர் கூட்டத்தில் நுழைந்து, ஒரு சிறுவனின் காதைப் பிடித்துத் திருகி, "அப்படியானால் அந்தத் திருட்டுக் கழுதை ஓடிப்போனது உனக்குத் தெரியுமா?" என்று கத்தினார்.

"ஆமாம், சார்! அவன் வீட்டை விட்டு வெளியே போனதை நான் பார்த்தேன்!" என்றான் அச்சிறுவன் நடுங்கிய குரலில்.

மேலும் இரண்டு குத்துகள் விழுந்தன அச்சிறுவனின் முதுகில். அவன் வீறிட்டுக் கதறினன். உண்மையை ஏன் சொன்னேம் என்ருகி விட்டது அவனுக்கு!

"எந்தப் பயலும் இங்கிருந்து எதற்காகத் திருட்டுத்தனமாக ஓட வேண்டும்?" என்று ஆக்ரோஷத்துடன் கேட்டுக் கொண்டே, அச்சிறுவர்களைப் பிடித்து தொப், தொப் பென்று மொத்தினர் வேலாயுதம்.

இதை யெல்லாம் தூர நின்று பார்த்துக் கொண்டிருந்த தாயாரம்மாள் தன் கணவனை அணுகி, "இதெல்லாம் என்ன கலாட்டா?" என்று வினவினள்.

வேலாயுதம் சிறுவர்களை அடிப்பதை நிறுத்தித் தன் மனைவியைப் பார்த்து, "என்ன வென்ரு கேட்கிருய்? அந்தத் தடிப் பயல் கண்ணான் எங்கோ ஓடிப்போய் விட்டான்!" என்ருர்.

அதைக் கேட்ட அவள், "ஏன் ஓடமாட்டான்? அவனுக்குச் செல்லம் கொடுப்பவர்கள் இருக்கும் வரை அவன் தலைக்கு மேல் ஏறியல்லவா கிடப்பான்! அவன் உருப்படுவதேது?" என்று பேசியவளாய், சரவணன் பக்கம் தலையைத் திருப்பி முகத்தைச் சுளித்தாள்.

பிறகு விர்ரென்று வெளியே சென்று வீட்டைச் சுற்றிலும் கண்ணனைத் தேடினள். ஆனல் கண்ணன் அவள் கண்களுக்குப் புலப்பட வில்லை.

கோபாவேசமாக மீண்டும் விட்டிற்குள் நுழைந்து, தன் கணவனைப் பார்த்து, "உடனே வெளியே போய் முக்கியமான பாதைகளில் தேடிப் பாருங்கள். அந்தப் பாதைகளின் வழியாகத்தான் எங்காவது கம்பி நீட்டிக்கொண்டிருப்பான் அவன். வண்டியிலோ, பஸ்ஸிலோ, ரயிலிலோ போக அவனிடம் பணம் ஏது? சாப்பாட்டுக்கும் வழி இல்லை! சீக்கிரம் கிளம்புங்கள்!" என்று துரிதப்படுத்தினள்.

உடனே கண்ணனைத் தேடப் பரபரப்புடன் விட்டை விட்டு வெளியேறினர் வேலாயுதம்.

அவர் போன பிறது சரவணன் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சாப்பிடச் சென்ருன். வெறுப்பும் கோபமும் கலந்த குரலில் சரவணனை முணு முணுத்துத் திட்டிக் கொண்டே அரை குறையாக ஆகாரம் பரிமாறினள் தாயாரம்மாள். அதைக்கூடச் சாப்பிடப் பிடிக்காத சரவணன் சட்டென்று எழுந்து கையைக் கழுவிக்கொண்டு வகுப்பறைக்குச் சென்ருன். சிறிது நேரம் அவன் மனம் மதியைக் கண்ட மாகடல்போல் கொந்தளித்தது. கண்ணனைப்பற்றிய கவலை அவனை அதிகம் வேதனைக் குள்ளாக்கியது. அந்தரங்க நண்பனன தன்னிடம் கூட விஷயத்தை வெளியிடாமல் எங்கோ சென்றுவிட்டானே என்று வருத்தப்பட்டான்.

அன்று மத்தியானம் வேலாயுதம் மிகவும் களைத்துப்போய், கோபம் தலைக்கேறி, கத்திக்கொண்டே வந்து சேர்ந்தார். உடனே சரவணன் வெளியே வந்து பார்த்தான், உடம்பெல்லாம் புழுதி படிந்திருந்த கண்ணனை வேலாயுதம் பிடித்து இழுத்துக்கொண்டு

வாசற்படியை நோக்கி வருவதைக் கண்டான். அதற்குள் தாயாரம்மாளும் கண்ணம்மாளும் அங்கு வந்து சேர்ந்தனர். வேடிக்கை பார்க்க எல்லாச் சிறுவர்களும், அக்கம் பக்கத்தாரும் வந்து கூடி விட்டனர். அதைக் கண்ட வேலாயுதம் சிறுவர்களை வகுப்பறையில் போய் உட்காரும்படி சீறினர்.

சற்று நேரத்தில் ஒரு பிரம்பை எடுத்துக் கொண்டு, கண்ணனைப் பிடித்து இழுத்துக் கொண்டே வகுப்பறையினுள் நுழைந்தார் வேலாயுதம். அவரது ருத்திர மூர்த்தியான சொருபத்தைக் கண்டு சரவணன் உட்பட எல்லோரும் நடுங்கினர்.

வேலாயுதம் கண்ணனை எரித்து விடுபவர் போலப் பார்த்து, "உம் ... இப்பொழுது நீ என்ன சொல்கிருய்? அறுதைக் கழுதையே!" என்று கத்தியவாறு பிரம்பை மேலே தூக்கி ஆட்டினர்.

கண்ணன் பதிலொன்றும் சொல்லாமல் திரு திரு வென்று விழித்தவாறும். உச்சி முதல் உள்ளங்கால் வரை ஆடிக்காற்றில் அசைந்தாடும் மரம்போல நடு நடுங்கியவாறும் நின்ருன்.

"ஏன் ஓடினய் என்று சொல்லப் போகிருயா இல்லையா?...உம்... 'சொல் சீக்கிரம்!" என்று கூறிப் பிரம்பை மேஜையின்மேல் சடார் என்று தட்டிக் கர்ஜித்தார் வேலாயுதம்.

தன் உள்ளத்தை அப் பிரம்பு கொண்டு அடித்தது போலிருந்தது சரவணனுக்கு! மற்றச் சிறுவர்கள் அலண்டு நடுங்கினர்! கண்ணனுக்குப் பாதி உயிர் போய்விடும் போலிருந்தது.

"என்னை விட்டு விடுங்கள், சார்! ... என்னை விட்டு விடுங்கள், சார்!" என்று விம்மல்களுக் கிடையே கெஞ்சினன் கண்ணான்.

"ஹும்! விடுவதா? உன்னையா? ... உன் உயிர் போகும் வரை இந்தப் பிரம்பாலேயே அடித்து நொறுக்கப் போகிறேன்! இந்த விட்டை விட்டு ஓடுவதற்கு அவ்வளவு தைரியமா?" என்று கத்திச் சளார், சளார் என்று பிரம்பால் கண்ணனை அடிந்தார் வேலாயுதம்.

அடி பொறுக்க மாட்டாமல் பதறித் துடித்தான் கண்ணன்.

"நன்றிகெட்ட நாயே! அறுந்தப் பிண்டமே! கதியற்ற கழுதையே'" என்று தாயாரம்மாள் கண்டவாறு திட்டிக்கொண்டே கண்ணன்மேல் பாய்ந்து 'திம், திம்' என்று முதுகின்மேல் குத்துகள் வைத்தாள். ஓவென்று அலறிய கண்ணன் நிற்க முடியாமல் தொப் பென்று கீழே விழுந்தான்.

கீழே விழுந்தவனை அடிக்கப் பிரம்பைத் தூக்கினர் வேலாயுதம். அதைக்கண்ட சரவணனல் பொறுக்க முடியவில்லை. "நிறுத்துங்கள்!" என்று தொண்டை கிழியக் கத்தினன்.

ஏற்கனவே வேலாயுதத்தின் கோபம் கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருந்தது! இப்பொழுது கொழுந்து விட்டெரிந்த கோபத்தின் மேல் ஒரு டின் மண்ணெண்ணெயைக் கொட்டியதுபோ லிருந்தது!

(தொடரும்).

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

ஜய ஹூ புரட்டாசிமீ கலியுகாதி 5056, சாலிவாகனம் 1877,
பசலி 1364, ஹிஜிரா 1374 கொல்லமாண்டு 1130,
இங்கிலீஷ் 1954 செப்டம்பர்—1954 அக்டோபர்

புரட்டாசி	செப்டம்பர் (1954 அக்டோபர்)	வாரம்.	திதி.	நட்சத்ரம்	அமிர்தாதி யோகம்.	விசேஷங்கள்
1	17	வெ	பஞ்10-00	✱கி48-58	சி48-58ம	கிருத்திகை விரதம்
2	18	சனி	சஷ்3-48 சப்58-43	ரோ45-25	சி60	அவமாகம்
3	19	ஞா	அ54-55	மிரு43-15	சி60	காலாஷ்டமி, மத்யாஷ்டமி
4	20	திங்	நவ52-28	திரு42-15	சி42-15அ	அவிதவாநவமி, தேதிமழை
5	21	செவ்	தச51-13	புன42-10	சி60	... ...
6	22	புத	ஏ51-08	பூச43-55	சி60	சர்வ-மத்வ ஏகாதசி
7	23	வியா	து52-08	ஆ46-25	சி46-25அ	துலாயனம் கா33-32
8	24	வெ	திர54-05	மக49-50	ம49-50சி	பிரதோஷம்
9	25	சனி	சது57-00	பூர54-10	சி54-14ம	மாத சிவராத்திரி
10	26	ஞா	●60-00	உத்29-23	அ60	மஹாளய அமாவாசை த்ரிதின ஸ்ப்ருக்
11	27	திங்	,, 0-48	அ60-00	சி60	
12	28	செவ்	பிர5-25	,, 05-20	சி60	
13	29	புத	துதி10-53	சித்12-08	சி60	
14	30	வியா	திரு17-00	சு19-30	அ19-30சி	
15	1	வெ	சது23-28	வி27-13	சி60	
16	2	சனி	பஞ்29-55	அ34-53	சி60	
17	3	ஞா	சஷ்35-48	கே41-58	ம41-58அ	
18	4	திங்	சப்40-38	மூ47-58	சி47-58ம	
19	5	செ	அ43-50	பூ52-25	சி57-25பி	
20	6	புத	நவ45-03	உ54-50	அ54-50சி	
21	7	வியா	தச44-05	திரு55-10	சி60	விஜய தசமி
22	8	வெ	ஏ40-55	அ53-20	சி60	சர்வ-மத்வ-ஏகாதசி
23	9	சனி	து35-45	சத49-33	அ49-33ம	கோ-த்வாதசி
24	10	ஞா	திர28-50	பூ44-10	சி44-10அ	அசோகத்ரிராத்திரி விரதம்
25	11	திங்	○ச20-43	உட்37-38	சி60	ஸ்ரீ நடராஜர் அபிஷேகம்
26	12	செ	ப11-35	ரே30-18	சி60	கார்த்திர ஸ்நாநாரம்பம்
27	13	புத	பி2-08 துதி52-45	அ22-48	ம22-48சி	ஆஸ்வின பகுளம், அவமாகம
28	14	வியா	திரு43-55	✱ா15-33	சி15-33ம	கிருந்திகை விரதம்
29	15	வெ	சது36-03	கிரு9-50	சி9-05ம	சங்கஷ்ட சதுர்த்தி
30	16	சனி	பஞ்29-23	ரோ3-40 மிரு59-40	சி60	துலாரவி கா-59-17

			கே
	7- துலா-புத 19-வ்ரு-சுக் 24-மக-அங் 30-துலா-ரு		குரு புரே
ரா அங்		செப் ச, சுக்	சூரி புத

Edited, Printed and Published by N. MUNISWAMI MUDALIAR, at the "ANANDA BODHINI PRESS", No. 6, Lawyer Chinnathambi Mudali Street, Sowcarpet, Madras.

தங்க மாத்திரை

இம்மருந்து தாதுபுஷ்டியைத் தருவதில் நிகரற்றது. இதில் கஞ்சா பின் முதலிய லாகிரி வஸ்துக்கள் சிறிதும் சேர்க்கப்படவில்லை. வயது திர்ந்த காரணத்தால், உலக இச்சை இல்லாதவர்களுக்கும் இழந்த பலத்தையும் ஆச்சரியப்படத்தக்க விதமாய் ஒரு விதமான சுறுசுறுப்பையும் கொடுக்கும்.

இதுவன்றி வேறு எந்த நோயினுலுண்டான பலவீனமும் இம்மருந்தினல் நீங்கும். இரத்த விருத்தியை யுண்டாக்கி நரம்புகளுக்கு உறுதியைக் கொடுக்கும் தன்மையில் இது கைகண்ட மருந்து. வயோதிகமே தெரியாது. களைப்பும் தோன்ருது. சோர்வையும் சோம்பலையும் நீக்கித் தேக பலத்தைக் கொடுக்கும்.

இது, தங்கம், வெள்ளி, முத்து, அயம், காந்தம் முதலிய உயர்ந்த உலோகச்சரக்குகளும், சஞ்சீவிக்கு நிகரான பல மூலிகைகளும் சேர்க்கப்பட்டு சிறந்தமுறைபாக செய்பாகங்களாய் தயாரிக்கப்பட்டது. இதனை ஒரு முறை வாங்கி உபயோகித்தால் இதன் மேலான குணம் தானே தெரியும். 20-மாத்திரை கொண்ட சீசா 1-க்கு விலை ரூபா 2. தபாற்கூலி 1—0—0.

ருதுக நிவாரணி மாத்திரை

ஸ்திரீகளுக்கு மாதாந்திர பஹிஷ்டை (ருது) கிரமமாக வெளிப்படாமல் காலந் தவறி வெளிப்படுதல், சிலகாலம் வெளிப்படாமலேயிருத்தல், வயிற்றுவலி, ஜுரம், மார்பு நோய், மயக்கம், கழுத்திசிவு, ஜன்னி தோஷங்கள், மஞ்ச காமாலை, உணர்ச்சியின்றி சிறுநீர் பெருக்கெடுத்தல், மூர்ச்சையாகுதல், மார்பு படபடவென்று அடித்துக்கொள்ளுதல், மேல்மூச்சு வாங்குதல், மர்மஸ்தானத்தில் பொறுக்கமுடியாத வேதனை உண்டாகுதல் இன்னும் மாதர்களுக்குக் காணும் ருது சம்பந்தமான எல்லா வியாதிகளையும் கண்டித்து கருப்பகோசத்தைச் சரிப்படுத்திச் சந்தான விருத்தியை உண்டாக்கும்.

ஒரு டப்பி மாத்திரை விலை ரூபா 1. தபாற்கூலி 1-0-0.

சர்வபடை சம்மாரன்

சரீரத்தின் இடுக்கான இடங்களாகிய துடையின் இடுக்கு, அக்குள், இடுப்பு முதலிய இடங்களில் சிறிது சிறிதாகப் படர்ந்து இரவில் ஓயாத நமைச்சலைத் தந்து நித்திரையைப் பங்கப்படுத்திச் சரீரத்துக்கு அதிக கஷ்டத்தை உண்டுபண்ணும் படைகள் ஒரே தடவையில் இந்தச் சர்வபடை சம்மாரன் என்னும் தைலத்தை உபயோகித்த மாத்திரத்தில் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். புட்டி 1-க்கு விலை அணு 4. தபாற்கூலி 1-0-0.

4-புட்டிக்கு விலை ரூ. 1. தபாற்கூலி 1-0-0.

ஆகையால எப்போதும் 4-புட்டிகளையே தருவித்துக் கொள்ளுங்கள்.

தனலட்சுமி கம்பெனி,
நெ. 6. லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை-1.

அமிர்த சஞ்சீவி லேகியமும்,

அயக்காந்த செந்தூரமும்

இந்த லேகிய செந்தூரத்தால் நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன:

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போக்காலும் அவர்களுக்கு உண்டான 20-வகை மேக ரோகங்கள், சூலைரோகம், குன்மரோகம், பித்தபாண்டு, கைகால் முடக்கு, ஓடு வாய்வு, பித்த எப்பம், நெஞ்சு, தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீர்ணம், பசியில்லாமை, தாதுஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரை யில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்க முடியாத பாதையைத் தரும் தந்தி மேகம் முதலியவைகள் ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீங்கிவிடும். பயங்கரமான மேக சம்பந்த வியாதிகளைப் பத்தே வேளையில் போக்கி சப்த நரம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்த விருத்தியைப் பெருக்கிப் பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின லேகிய பஸ்பம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்வோம். இதெல்லாம் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத்தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதிகளைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரங்களே முதன்மையானவை யென்பதை யாம் எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம்.



இந்தியா உள்நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ. 2–0–0. போஸ்டேஜ் ரூ. 1–0–0. 48-நாள் மருந்து ரூ. 4–0–0. போஸ்டேஜ் ரூ. 1—8—0.

நரை மயிர் கருக்கும் தைலம்.

தற்காலத்தில் பலவிதமாகச் செய்து விற்கப்பட்டு வருகிற கப்புகள் மயிரைச் செம்பட்டையாகவும், பசுமை நிறமாகவும், சாம்பல் வர்ணமாக்வும் ஆக்கி விகாரப்படுத்தி விடுகின்றன. நமது தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 3 நிமிஷத்திற்குள்ளாக, நரைப்பதற்கு முன்பிருந்த கருமை நிறத்தையும் பளபளப்பையும் உண்டுபண்ணும், மேலே கூறியுள்ள விகார குணங்கள் இதில் உண்டாகமாட்டா. இதைப் பூசிய பிறகு முகலட்சணமும் வசீகரமு முண்டாகிறபடியால் வயோதிகரும் வாலிபரைப்போல் தோற்றப்படுவார்கள். இதை உபயோகிக்கும் விதம் பார்சலோடு தெரிவிக்கப்படும். இதன் விலை ரூ. 1. தபால் கூலி 1—0—0.

தனலட்சுமி கம்பெனி

நெ. 8. லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை-1.

கல்யாணி கிருதம்

பெண்களுக்கு ஓர் வரப்பிரசாதம். ஸ்திரீகளின் கர்ப்பாஸய சம்பந்தமான எல்லா வியாதிகளுக்கும் அமிர்தத்திற்கு ஒப்பான திவ்விய ஒளஷதம். மாதவிலக்கு காலங்களில் உண்டாகும் வயிற்றுவலிக்கு இது ராஜா. கர்ப்பம் கலைதல், கர்ப்ப அழிவு, கருக்குழியில் உண்டாகும் கோளாறுகள், பெரும்பாடு போகுதல், சூதகவயிற்றுவலி முதலியவைகளை குணப்படுத்தி கர்ப்பாசயத்தை பலப்படுத்தும். இம்மருந்தால் குழந்தைப்பாக்கியம் பெற்றவர்கள் அனேக ஆயிரம். மாதாந்த ருது பேதப்படுவதால்தான் ஸ்திரீகளுக்கு எண்ணிக்கையில்லாத பல வியாதிகள் உண்டாகின்றன. சரீரம் ஸ்தூலித்தல், உளைதல், குத்தல், கைகால் சோர்வு, இடுப்புநோய், சூதகத்தின் நிறம்மாறுதல், இரத்தம் கட்டி முட்டையாகவும் கறுத்தும் வெளிப்படுதல், மாதா மாதம் சூதகம் வரத் தடைப்படுதல், சூதகம் சிறிது கண்டு மறைதல், ஒரே பக்கத்துத் தலைவலி, தொடைநோய், முதலிய பல வியாதிகளை குணப்படுத்தும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 3. தபால் சார்ஜ் 1-0-0.

வாத கெஜாங்குசம்

மேகவாயு, அண்டவாயு, சரீரம் முழுதும் பரவி உபத்திரவிக்கும் வாயு, முடக்குவாயு, பார்ஸவாயு, முழங்கால், முழங்கால்வாயு, முட்டுக்களில் நீர் தங்கி உபத்திரவிக்கும் வாயு முதலிய எவ்விதமான வாயு ரோகங்களையும் கண்டிக்க இது சிறந்த ஒளஷதம். கை கால் சந்துக்களில் காணும் வலி, குதிக்கால் நோய், முட்டு வீக்கம், ஆனைக்கால், மலபந்தம், மலச்சிக்கல், தொடைகளில் உண்டாகின்ற வலி, தொடை, நரம்புகளில் பிசுவு, உடம்பு ஸ்தூலித்தல், அடிக்கடி அபானவாயு பறிதல், வயிறு உப்புதல், மேல் மூச்சு சுவாஸகாசம், மார்பு வலி, குன்மம், ஓடுவாயு முதலாகச் சொல்லப்பட்ட அவரவர்களின் சரீர கூறுக்குத் தக்கபடி உண்டாகும் எல்லாவித வாயுரோகங்களையும் கண்டித்து மலமூத்ராதிகளை சரிப்படுத்தி தேக ஆரோக்கியத்தை உண்டு பண்ணும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 3. தபால் சார்ஜ் 1-0-0.

காமதேனு

இது சகலவிதமான மேக நோய்களைக் கண்டித்து நிடகாத்திரமான சக்தியை உண்டாக்கும்.

இந்த மருந்தை ஆண், பெண் ஆகிய எவ்வயதினரும் சாப்பிடலாம். உடம்பு மெலிந்து சக்தியற்று எலும்பும் தோலுமாய் இருக்கும் எவரும் இந்த 'காமதேனு'வை சாப்பிட்டு வந்தால் தசை புஷ்டியாகி, நரம்புகளுக்குப் பலமும், முறுக்குமேற்றி, ஜீரண கருவிகளை வலுவுறச் செய்து, உடம்பிற்குப் பலமும், வசீகரத்தையு முண்டாக்கும். பலம், புஷ்டி, ஆரோக்கியத்தையும் தரக்கூடியது. புத்துயிரளிக்கவல்ல இளமையைத்தரும். மலையாள முறையில் தயாரிக்கப்பட்ட சிறந்த ஒளஷதம்.

டின் 1க்கு விலை ரூ. 3–0–0. தபால் கூலி 1–0–0.

நீராத மேஹரணங்களுக்கு சஞ்சீவி களிம்பு விலை 0—12—0.

தபால்கூலி 1–0–0.

தனலட்சுமி கம்பெனி,

நெ. 8, லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை-1.

தமிழ் நாவல்களும் கதைப் புத்தகங்களும்

ஆரணி-குப்புசாமி முதலியார் இயற்றியவை

	ரூ	அ.
இரத்தினபுரிரகசியம் 9-பாகமும்	18	14
ஞானசெல்வாம்பாள் 5-பாகம்	9	10
கற்பகச் சோலையின் அற்புதக் கொலை ...	2	0
கடற்கொள்ளைக்காரர் 2பாகம்	4	0
மதனம்பாள் 2-பாகம் ...	4	0
லோகநாயகி ...	1	0
விளையாட்டுச் சாமான் ...	1	6
பவளத்தீவு 2-பாகங்கள் ...	3	12
தபால்கொள்ளைக்காரர்கள் ...	1	0
அமராவதி 2-பாகங்கள் ...	5	0
மஞ்சள் அறையின் மர்மம் ...	2	0
கற்கோட்டை ...	2	8
பூங்கோதை ...	0	12
வீரநாதன் ...	0	12
கனகபூஷணம் 2-பாகமும் ...	4	0
கமலசேகரன் ...	2	8
தினகர[illegible] ...	1	8
சந்திரபாய் ...	2	8
இராஜமணி ...	2	8
இரத்தினபாய் ...	2	8
மதனபூஷணம் ...	2	0
சுவர்ணம்பாள் ...	0	12
தேவசுந்தரி ...	2	0
குணசுந்தரன் ...	1	0
பத்மாவனி ...	1	0
ஆனந்தஸிங் ...	2	0
மின்சார மாயவன் ...	2	0
ஆனந்தசிங்கின் அஷ்டஜயங்கள்	2	0
அரசூர் இலக்ஷ்மணன் ...	3	0
கைவல்லிய நவநீத வசனம் ...	2	4
சகோதரவாஞ்சை ...	0	5
கம்பராமாயணவசனம் ...	4	0
ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரித்திரமும் உபதேசங்களும்	3	8
விவேகானந்தர் சரித்திரம் ...	5	0
தமிழ் மெடீரியா மெடிகா ...	3	8
மாதவி மாதவன் 2-பாகம் ...	2	4
மலையாள பகவதி ...	1	4
அற்புத நவநீத ரம்பை ...	1	8
அகட விகட விலாச விநோதம்	0	10
சிமோட்டி கார்த்தியாயினி ...	0	14

	ரூ.	அ.
தாசி ரமணி ...	1	8
உயிரோவியம் ...	1	8
யான் ஏன் பெண்ணைப் பிறந்தேன் ...	2	0
இவ்வுலகை திரும்பிப்பாரேன்	1	12
சிலப்பதிகார ஆராய்ச்சி ...	2	0
ஆர்ய மத சித்தாந்தம் ...	3	0
பூலோக லக்ஷ்மி கதை ...	0	14
கனகரத்தினம் ...	0	12
கண்டிராஜா நாடகம் ...	0	12
குசேலோபாக்கியான வசனம்	1	[illegible]
உதயணன் ...	0	6
தசக்கிரீவன் ...	0	14
போஜ சரித்திரம் ...	0	5
சதானந்தர் ...	1	4
கர்ணன் சரிதை ...	0	12
பீஷ்ம விஜயம் ...	0	10
கீர்த்திசிங்கன் ...	0	7
மூப்பெருந்தாசர் ...	0	10
அரிச்சந்திரன் சரிதை ...	0	8
மணவாளன் ...	0	3
பரசுராமன் ...	0	3
சிசுபாலன் ...	0	8
அங்கதன் ...	0	4
[illegible]வதார மகிமை ...	0	6
கிருஷ்ணன் தூது வசனம் ...	0	6
சண்டோபாக்யானம் ...	0	6
கருணாகரரும் சத்தியசீலரும்	0	8
சத்தியவசனன் ...	0	4
விமலன் ...	0	4
கண்ணபிரான் ...	0	4
செய்யுட்பாடத்திரட்டு ...	0	4
நாலு மந்திரி கதை ...	0	4
மங்களேசுவரன் ...	0	6
தக்கன் ...	0	6
சீமந்தனி ...	0	8
நான்குகோடி ...	0	4
மதிமோசவிளக்கம் ...	1	0
மெய்க்காதலி ...	0	12
மேனுமினுக்கி கதை ...	0	12
வீணுகானன் ஞானேந்திரி ...	0	8
கோமளவல்லி கதை ...	0	12
விகடவல்லி கதை ...	0	6
தாலிகட்ட மறந்த கதை ...	0	7

இந்திர கவசமென்னும் சர்வ தேவதா வசியம் விலை ரூபா 1-4-0.

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167, சென்னை-1.

ஜாதக சாகரம்

மூலமும், விருத்தியுரையும்.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரிய முழுமுதற் பரம் பொருள் அருளிச் செய்த, வேதம் நான்கினுடைய அங்கங்களா யுள்ள வேதாங்கம் ஆறினுள், நேத்திரங்களாய் மிளிர்ந்திலங்கும் சோதிட சாஸ்திரமானது கணித ஸ்கந்தம், ஜாதகஸ்கந்தம், ஸம்மி தாஸ்கந்தம் என்னும் மூன்று பிரிவுகளை யுடையதாகும். இவற் றுள் இந்நூல் ஜாதக ஸ்கந்தத்தைப் பற்றியதெனக. ஜாதக பலன்களை மிக திட்பநுட்பமாக அறிந்து மக்களின் முக்கால நிகழ்ச்சியின் பயன்களை மொழிவதற்கு ஜனனகால நிச்சயம், கிரக பாவ ஸ்புடங்கள், கிரகங்களின் அறுவகைப் பலங்கள் வர்க்கங் கள் முதலியன அஸ்திவாரம் போன்றதாகும். இதனை, "செப்பரிய பல பாகம் பகரவேண்டில், செங்கதிரோன் முதல் நவக்கோள் செறிபலங்கள் தெரிந்தே........சாற்றிடு பத்தொன்பதென தகு புடங்கள் வரைந்தே, இப்புவியில் உரைத்தவர்க்கே சித்திக்கும் பலன்கள்" எனவரும் ஜாதகாலங்கார வசனத்தினல் இனிதறிய லாம்.

இதன் விலை ரூபா 3—0—0

ஜாதக சாகரம்

இரண்டாவது பாகம்

அச்சில் இருந்த ஜாதக சாகரம், இரண்டாம் பாகம், அநேக விஷயங்க ளுடன் வெளியாகி இருக்கிறது. இதில் ஜாதகம் புதிதாக கணித்துப் பலன் சொல்லும் திறமை யுண்டாகும் அளவுக்கு ஒவ்வோரிடத்திலும் தக்க முறைக ளுடன் முழுதும் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதைப்படித்து "ஜாதகங் கணித்து கர்ப்பசிஷ்ட தெசை புக்தி நிலுவை கண்டு கொள்ளவும். மற்ற தெசைகளில் அந்தர, அந்தராந்தர, ஸூக்ஷ்ம, ப்ராண பக்திவாரா பிரித்துக் கொள்ள வழிகளும் சொல்லப்பட்டும், பதங்களும் பிரித்து அமைக்கப்பட் டிருக்கின்றதுடன் லக்னாதி துவாதச பாவங்களினல் அறியவேண்டிய பலன் களையும், பாவ, கிரக, காரக ஆதிபத்தியாதி விவரங்களையும், அந்தந்த ஸ்தானங் களிலிருக்கும், கிரக தெசைகளில் மேற்படி கிரகங்களினல் சேரக்கூடியபலன் கள், பின்னும் கோச்சார பலன்கள், அதிலுள்ள முக்கிய விசேஷம், அவை நேரிடாதிருக்கக் காரணம், பலன்கள் நேரிடும் சமயம் உண்டாகக்கூடிய விசேஷ பலன், அற்ப பலன், நிதானமான நடுநிலைமையான பலன், இவைகளை யும இன்னும் மற்ற முக்கியமானவைகளையும் அதிசயமான விசேஷ பலன்க ளுடன் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூபா 2. (தபால் செலவு வேறு.)

1-ம் 2-ம் பாகம் சேர்த்து வாங்கினல் விலை ரூபா 4-8-0.
(தபால் செலவு வேறு.)

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

Registered as a News Paper in Ceylon

இந்த அபூர்வ மருந்தானது அநேககோடியர் வியாதிகளை ஆச்சரியமாக கண்டிக்கக் கூடியது. வியாதியினாலாவது வேறு எந்தக் காரணத்தினாலாவது இளைத்துப் போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பல விருத்தி தருவதில் இது நிகரற்ற மருந்தாகும். சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல் நோய் கண்டு அவஸ்தைப் படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தை யடைவார்கள்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15 நாள்சாப்பிட்டால் இது இணையில்லாத ஆனந்தத்தைத் தரும். மனிதர் தாம் இழந்துபோன தேக திடத்தைப் பழையபடி யடைதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. ஒருவன் 40 நாள் மருந்தை உட்கொள்ளும் பக்ஷத்தில் அவனுடைய தேகம் வஜ்ஜிரமே யாம். இதனால் யாதொரு பத்தியமும் கிடையாது.

20-நாள் மருந்து விலை ரூ. 1. 40-நாள் மருந்து விலை ரூ. 1-12-0.

போஸ்டேஜ் 20-நாள் மருந்துக்கு வேறு, 40-நாள் மருந்துக்கு வேறு.

அயத்தங்கத திராவகம்

தனலட்சுமி கம்பெனி, 6. லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்

Edited, Printed and Published by N. MUNISWAMI MUDALIAR, at the "ANANDA BODHINI PRESS", No. 6, Lawyer Chinnathambi Mudali Street, Sowcarpet, Madras.

"ஜீவா" தீட்டிய

எழுத்து ஓவியங்கள்

யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்?

விலை ரூ. 2–0–0.

தா சி ர ம ணி

விலை ரூ. 1–8–0.

உ யி ரோ வி ய ம்

விலை ரூ. 1-8-0

காதலனா? காதகனா?

விலை ரூ. 1-4-0.

இவ்வுலகைத் திரும்பிப் பாரேன்?

விலை ரூ. 1-0-0.

சீமாட்டி கார்த்தியாயினி

விலை அணா 14.

ஒவ்வொரு புத்தகத்துக்கும் தபால் சார்ஜ் வேறு.
6—புத்தகங்களுக்கும் தபால் சார்ஜ் வேறு.

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஆனந்தபோதினி

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி 40 | ஜய ௵ ஐப்பசி ௴ ௧ ௳ 1954 ௵ அக்டோபர் ௴ 17 ௳ | பகுதி 4

உள்ளுறை.

எண்.		பக்கம்.
1.	கடவுள் வணக்கம்	182
2.	கல்வித்துறையில் அரசியல் வாதிகள் (தலையங்கம்)	183
3.	ஒப்பற்ற சகோதரன்	187
4.	பிரிவாற்றாத காதலர்	191
5.	நீலத் திரை	197
6.	ஸ்ரீ சுயம்பிரகாச யோகினி	206
7.	தமிழ்த் தாய் (கவிதை)	212
8.	இலக்கிய உலகம்	213
9.	இதய ராணி	220
10.	அவள் யார்? (கவிதை)	229
11.	சமுதாய நலத் திட்டம்	230
12.	வாழ்க்கைப் புயல் (தொடர் கதை)	232
13.	பஞ்சாங்கம்	340

ஆனந்த போதினி

தமிழ்நாடு ... நூலகம்
209046
சென்னை-600 033

கடவுள் வணக்கம்

மாலுலா மனந்தந்(து) என்கையில் சங்கம்
வவ்வினான் மலைமகள் மதலை
மேலுலாம் தேவர் குலமுழு தாளுங்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாம் கழனித் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழல்கீழ் நின்ற
வேலுலாம் தடக்கை வேந்தன்என் சேந்தன்
என்னும்என் மெல்லியல் இவளே. (1)

இவளைவார் இளமென் கொங்கைபீர் பொங்க
எழில்கவர்ந் தான்இளங் காளை
கவளமா கரிமேல் கவரிசூழ் குடைக்கீழ்க்
கனகக்குன் றெனவரும் கள்வன்
திவளமா ளிகைசூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
குவளை மாமலர்க்கண் நங்கை யானைக்கும்
குழகன்நல் அழகன்நங் கோவே. (2)

கோவினைப் பவளக்குழ மணக்-கோலக்
குழாங்கள்சூழ் கோழிவெல் கொடியோன்
காவல்நற் சேனைஎன் னக்காப்பவ னென்
பொன்னை மேகலை கவர்வானை
தேவினற் றலைவன் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
தூவிநற் பீலி மாமயி லூரும்
சுப்பிர மண்ணியன் தானே. (3)

மருண்முறை கோயில் மல்குநன் குன்றப்
பொழில்வளர் மகிழ்திருப் பிடவூர்
வெருண்டமான் விழியார்க்கு அருள்செயா விடுமே
விடலையே எவர்க்கும்மெய் அன்பர்
தெருண்டவை திகழ்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
குருண்டபூங் குஞ்சிப் பிறைச்சடை முடிமுக்
கண்ணுடைக் கோமளக் கொழுந்தே. (4)

கல்வித்துறையில் அரசியல் வாதிகள்

சமீபத்தில் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாக்களிலும் மற்றும் பல இடங்களிலும் கல்வித் துறையில் பழுத்த அனுபவமுடைய பல பேரறிஞர்கள் இன்றைய கல்வி முறையைப்பற்றித் தங்களுடைய அரிய கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். அவற்றில் முக்கியமாக இரு அபிப்பிராயங்களை அவர்கள் வற்புறுத்திக் கூறியிருக்கிறார்கள். அதாவது, பொதுவாகச் சர்வகலாசாலைப் படிப்பு தரங் குறைந்து வருகிறது என்பது ஒன்று. இந்தியைத் தேசீய மொழியாக அதாவது போதனா மொழியாக ஆக்குவதில் அவசரப்படக்கூடாது என்பது மற்றொன்று. கல்லூரிப் படிப்பு நாளுக்குநாள் தரங் குறைந்து வருகிறது என்ற கூற்றை மற்றெல்லோரையும் விட, அதிகமாக வற்புறுத்தி அடிக்கடி சொல்லி வருபவர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரான டாக்டர் ஏ. இலக்குமணசாமி முதலியார் அவர்களாவர். ஸர். மீர்ஸா. இஸ்மாயில் போன்ற பேரறிஞர்களும் இவ் விஷயத்தில் இவருடைய கருத்தையே கொண்டிருப்பது கவனிக்கத் தக்கது. அத்துடன் கல்வித்துறையில் அரசியல் வாதிகளின் ஆதிக்கம் அதிகமாக நிலவுவதை மேற்குறித்த இரு பேரறிஞர்களுமே அழுத்தந் திருத்தமாகக் கண்டிக்கிறார்கள். கல்லூரிப் படிப்பின் தரங் குறைவதற்கு, அரசியல் வாதிகளின் அர்த்தமற்ற கொள்கைகளே காரணம் என்பது இவ்வறிஞர்களுடைய அந்தரங்கக் கருத்து ஆகும்.

அண்ணாமலை சர்வகலாசாலை இருபத்து நான்காவது பட்டமளிப்பு விழாவின்போது டாக்டர் இலக்குமணசாமி முதலியார் நிகழ்த்திய சொற்பொழிவில், இன்றைய கல்வியின் தரத்தைக குறித்துக் குறிப்பிடுகையில், உயர்ந்த தரத்துக்குச் சமமான கல்வி யளிக்கும் நோக்கத்துடன் இருபது ஆண்டுகளுக்கு முன் இந்திய சர்வகலாசாலைகள் அளிக்கும் பட்டங்களை எல்லா சர்வகலாசாலைகளுக்கும் ஏற்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. துரதிர்ஷ்ட வசமாக அந்த எண்ணம் கைகூடவில்லை. உயர்வதற்குப் பதிலாக, பொதுவாகத் தரம் குறைந்து அது எங்கும் சமமாகிவிட்டது. இருபது ஆண்டுகளுக்குமுன் முதலாவதாகத் தேறியவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். இப்போது

ஒவ்வொரு சர்வகலாசாலையும் நூற்றுக்கணக்கான முதல் வகுப்பு மாணவர்களை உண்டாக்கி வருகிறது. சர்வகலாசாலைகளில் தொகை பெருத்ததுடன் அனுபவம் அதிகமில்லாதவர்கள் கல்வி புகட்டுவதும் கல்வியின் தரம் குறைவதற்கு வழி செய்தது. இந்நிலையில் எல்லா சர்வகலாசாலைகளின் பட்டங்களுக்கும் தங்குதடையின்றி அங்கீகாரமளிப்பது விரும்பத்தக்கதா என்று ஆலோசிக்கவேண்டிய சமயம் வந்து விட்டது," என்று கூறினார்.

மேலும் அவர் போதனா மொழி பற்றிப் பேசுகையில், "எண்ணங்களைத் தெரிவிக்கும் மொழி முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இதில் சிலர் காட்டும் பிடிவாதம் அநாவசியமாகும். போதனைக்குத் தாய்மொழியின் அனுகூலங்களை நான் மறுக்கவில்லை. ஆனால் இன்று நவ இந்தியாவின் தேவை உயர்தர அறிவுத்துறைகளில் அதாவது, விஞ்ஞானிகள், டாக்டர்கள், ரசாயனவாதிகள், உடல் நூல் நிபுணர்கள், எஞ்சினீயர்கள் போன்றோர் இன்றியமையாதவர்களாயிருக்கின்றனர். எல்லாத் துறைகளிலும் புது அறிவைத் தோற்றுவிக்கும் நிலையில் இந்தியா இருக்க வேண்டும். இதை உணர்ந்தால் வெறும் ஆத்ம உணர்ச்சிக்காக வேண்டி ஆங்கிலம் போன்ற சர்வதேச மொழியை இச்சமயத்தில் வேரறுக்கவோ அல்லது புறக்கணிக்கவோ கூடாதென்று கூறுவோரின் கருத்தை உணர இயலும்," என்றும் வற்புறுத்தினார்.

நம் நாட்டுக் கல்வி போதனையில் ஆங்கிலம் அவசியம் என்று டாக்டர் முதலியார் கூறும் இதே கருத்தை ஸர். மீர்ஸா இஸ்மாயில், சமீபத்தில் பூனா சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் பேசுகையில் வற்புறுத்தியிருக்கிறார். சர்வகலாசாலைப் படிப்பு என்றால், உலகின் பிற பகுதிகளில் எதைக் குறிக்குமோ அதே தகுதியும் தரமும் இருக்க வேண்டுமாயின், இன்னும் பல வருஷங்களுக்கு இந்திய சர்வகலாசாலைகளில் போதனையும் படிப்பும் ஆங்கிலத்திலேயே இருக்கவேண்டும்...........சுதந்திர இந்தியாவில் இந்திய மொழிகளுக்கே சிறப்புண்டு என்பதில் ஐயமில்லை. ஆனால், ஆங்கிலம் பேணப்படவேண்டுமென்று கூறுவது அக்கருத்துக்கு முரணானதல்ல. ஆங்கிலம் பல விதங்களிலும் நம் நாட்டுக்குத் தவிர்க்க முடியாததாகும். தேசத்தின் சொத்தாகிய ஆங்கில அறிவை வேண்டுமென்றே அழிப்பது நிறுத்தப்படவேண்டும். உலக அரங்கங்களிலும் பிற துறைகளிலும் ஆங்கிலம் முக்கிய ஸ்தானம் வகிக்கிறது. இன்றைய சர்வகலாசாலைப் படிப்பில் ஆங்கிலத்தின்

தரம் மிகக் குறைந்துவிட்டது. நல்ல ஆங்கில அறிவு பெற பள்ளிக்கூடத்தில் சரியான அஸ்திவாரம் போடப்படாவிட்டால்; சர்வகலாசாலைக் கட்டத்தில் திடீரென்று அந்தப் பாஷை மந்திரத்தினால் வந்துவிடாது என்பதைக் கல்விக் கொள்கைகளை நிர்ணயிப்பவர்கள் நினைவிலிறுத்திக் கொள்ளவேண்டும். நாட்டின் மகத்தான வருங்காலத்தை மனதில் கொண்டே ஆங்கிலத்தைப் பேண வேண்டுமென நான் வற்புறுத்துகிறேன். கலாசாரத் துறையில் தனித்து நிற்றல் நமது தலை சிறந்த பாரம்பரியத்துக்கு முரணானது. மேற்கு நாடுகளின் கலாசாரத்தைத் தெரிந்துகொள்ள ஆங்கிலம் இன்றியமையாதது" என்று கூறியிருப்பது டாக்டர் முதலியாரின் அபிப்பிராயத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டியதாகும். மைசூர் முதல் அமைச்சர் ஸ்ரீ ஹனுமந்தையாவும், "அறிவும் விரிந்த நோக்கமும் வளர வேண்டுமென்பது தான் கல்வியின் நோக்கம். இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு உதவியாக இருக்கக்கூடிய எந்த மொழியையும் துவேஷமின்றிப் படிக்கலாம். ஆங்கிலம் நமக்கு எல்லா அறிவுகளையும் போதிக்கிறது. ஆங்கிலம் கற்றதால்தான் நாம் இந்தியர்கள் என்ற உணர்ச்சி நமக்கு உண்டாயிற்று. உலக முழுவதும் ஒரே ராஜ்யமாக இருக்கவேண்டும் என்ற இயக்கம் பரவிவரும் காலத்தில் ஆங்கிலத்துக்கு முக்கியத்துவம் அவசியம்." என்று சமீபத்தில் சென்னைச் சமஸ்கிருதக் கல்லூரி ஒன்றில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார். டாக்டர் இராஜகுமாரி அமிருதகௌரி போன்ற மத்திய சர்க்கார் மந்திரிகளும், ராஜ்ய சர்க்கார்களின் மந்திரிகளும் கூட ஆங்கிலத்தின் அவசியம் பற்றி அடிக்கடி வற்புறுத்திப் பேசி வருகின்றனர்.

இவர்கள் இப்படிப் பேசுவதாலேயே இந்தியாவுக்கு ஒரு தேசீய மொழி அல்லது ராஜ்ய மொழி அவசியம் என்பதை அலட்சியப்படுத்தவில்லை. "ஹிந்தியைத் தேசீய மொழியாக்குவதற்கு எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம். அரசாங்கம் அங்கீகரித்துப் பயன்படுத்தும் ஒரு தேசீய மொழியை ஒரு தேசம் பெற்றிருக்கவேண்டும் என்பதில் சந்தேகமில்லை. இந்தியாவில் அந்த மொழி ஹிந்தியாகும். இதுவரை ஆங்கிலம் இருந்து வந்ததுபோல் இனி ஹிந்தி அகில இந்திய கருத்துப் பரிமாற்றத்துக்கான மொழியாக இருக்கும்" என்பதை ஸர். மீர்ஸா இஸ்மாயில், ஹனுமந்தையா போன்றோர் ஒப்புக்கொள்ளுகின்றனர். ஆனால், 'அதற்காக ஹிந்தியை

வனுக் கட்டாயமாகத் திணிக்கக்கூடாது' என்று தான் அவர்கள் சொல்லுகின்றனர். 'தேசிய மொழியை வற்புறுத்துபவர்கள் அவசரப்படக் கூடாது. நிதானம் காட்ட வேண்டும். தேசிய மொழி ஆர்டருக்குச் செய்யும் பொருள் அல்ல' என்றும், 'ஹிந்தி வழங்காத இடங்களில் ராஜாங்க அல்லது பொது காரியங்களுக்கும் பள்ளிப் போதனைக்கும் ஹிந்தியைக் கட்டாயமாகத் திணிக்கச் செய்யப்படும் முயற்சிகள் கண்டிக்கத்தக்கது. அப்பகுதிகளில் சீக்கிரமாக ஆங்கிலத்தின் ஸ்தானத்தைப் பிரதேச பாஷைகளே பெறவேண்டும்' என்றும் அவர்கள் வற்புறுத்துகின்றனர். இதுபோன்ற நடுநிலைக் கருத்துக்களை நாம் முன் பலமுறை தெரிவித்தபோது, கோபங்கொண்ட ஹிந்திப் பித்தர்கள் இப்போது இப்பேரறிஞர்கள் கூறும் கூற்றுக்கு என்ன சொல்லுவார்களோ?

டாக்டர் இலக்குமணசாமி, ஸர். மீர்ஸா இஸ்மாயில் போன்றோர் எடுத்துக்காட்டுவதுபோல், இன்றைய கல்வியின் தரம் பலவகையிலும் குறைந்திருப்பதற்கு, ஆட்சிப் பீடத்திலிருக்கும் அரசியல் வாதிகளின் அநாவசியத் தலையீடும் கல்வித் திட்டம் பற்றி அவர்கள் கொண்டுள்ள நிலையில்லாக் கொள்கையும் தான் மூலகாரணமாகும். ஆதலால், கல்வியின் எதிர்காலம் நன்றாக இருக்க வேண்டுமானால், அரசியல் வாதிகள் அநாவசியமாகக் கல்வித் துறையில் தலையிடக் கூடாது என்று நாம் வற்புறுத்துகிறோம்.

இன்றைய கல்வி தரம் குறையாமலிருப்பதற்கும் நம் நாட்டுக்குகந்த தேசிய மொழியை நிர்ணயிப்பதற்கும் கல்வித் துறையில் பழுத்த அனுபவமுள்ள அறிஞர் பெருமக்கள் ஒருங்கு கூடி ஒரு நல்ல திட்டத்தை வகுத்துத் தர வேண்டும் என்று நாம் இச்சமயத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். மனித சமுதாயத்தின் அறிவு வளர்ச்சியில் ஆர்வமும் அன்பும் கொண்ட ஆன்றோர்கள் அவசியம் முன் வந்து செயலாற்றுவார்கள் என்று நாம் நம்புகிறோம்.



ஒப்பற்ற சகோதரன்

வி. கிருஷ்ணமூர்த்தி

☆

கும்பகருணன் இராவணனுடைய தம்பி. இராக்கதர் குலத்தில் பிறந்தவன். ஆனால் உயர்ந்த குணம் படைத்தவன். கும்பகருணனை துஷ்டன் என்று சொல்லுவதற்கில்லை. தன் கடமையை உணர்ந்தவன். சூரிய வம்சத்தில் பிறந்த சகோதரர்களாகிய இராமன், இலக்குவன், பரதன், சத்துருக்கனன் இவர்களுக்குள் ஒருவர்க்கொருவர் எவ்வளவு அன்பு கொண்டிருந்தனரோ அதே சகோதர அன்பை கும்பகருணன் தன்னுடைய சகோதரர்களாகிய இராவணன், விபீடணன் இவர்களிடம் கொண்டிருந்தனன். தர்மத்தை உணர்ந்தவன். நன்மை இத்தன்மைத்து, தீமை இத்தன்மைத்து என்று உணரவல்லவன்; உணர்ந்தவன். சிறந்த—மிக உயர்ந்த மனப்பான்மை கொண்டவன். இராமனிடத்தில் மிகுந்த பக்தி கொண்டவன். தீயனவாக நினைக்கும் குலத்தில் பிறந்த போதிலும் தீயகுணம் படைத்தவன் அல்லன். அத்தகைய கும்பகருணனைப் பற்றி சிறிது இக்கட்டுரையில் ஆராய்வோம்.

இராமருக்கும் இராவணனுக்கும் நடந்த முதல் நாள் யுத்தத்தில் இராவணன் தோற்று வெறுங்கையோடு "பூதலம்" என்னும் நங்கை தன்னையே நோக்கி இலங்கை மாநகரம்' அடைகின்றான். மந்திராலோசனையின் பேரில் கும்பகருணனைப் போருக்கு அனுப்புவது என்று தீர்மானிக்கிறான். துயிலுதலையே தன்னுடைய வரப்பிரசாதமாகக் கொண்ட கும்பகருணன் வெகு சிரமத்திற்குப் பிறகு தூக்கத்திலிருந்து விடுதலை அடைகிறான். கும்பகருணன் மிகுந்த வலிமையுள்ளவன், அவன் எழுந்ததைக் கம்பநாட்டாழ்வார்.

"பூவுளான் புணரிமேலான்
பொருப்பினான் முதல்வராய
யாவரும் துணுக்குற்று ஏங்க
எளிதினில் எழுந்தான் வீரன்"

என்கிறார். பிரமன், மஹாவிஷ்ணு, பரமசிவன் முதலிய எல்லோரும் அவன் எழுந்ததனால் அச்சங் கொள்ளுகிறார்கள்.

கும்பகருணனுக்கு ஆகாராதிகள் கொடுக்கப்பட்ட பிறகு இராவணனே அவனுக்கு வீரப்பட்டம் கட்டி. சாந்து அணிந்து கவசமும் அணிகிறான. அந்தக் காலத்தில் கும்பகருணனுடைய இடது புருவமும் இடது தோளும் துடிக்கின்றன. இராவணனைப் பார்த்து கும்பகருணன்,

"அன்ன காலையில் ஆயத்தம் யாவையும்
என்ன காரணத்தால் என்று இயம்பினான்."

அதற்கு இராவணன்,

"வானரப் பெருந்தானையர் மானுடர்
கோனகர்ப்புறம் சுற்றினர் கொற்றமும்
ஏனையுற்றனர் நீயவர் இன்னுயிர்
போனகத் தொழில் முற்றுதிபோய் என்றான்"

இதற்கு, கும்பகருணனுடைய பதிலானது கும்பகருணனுடைய நல்ல குணத்தையும் உயர்ந்த பரந்த நோக்கத்தையும் காட்டுகின்றது.

"ஆனதோ வெஞ்சமம் அலகில் கற்புடை
சானகி துயரினம் தவிர்ந்த தில்லையோ"
"கல்லலாம் உலகினை வரம்பு கட்டவும்
சொல்லலாம் பெருவலி இராமன் தோள்களை
வெல்லலாம் என்பதும் சீதை மேனியைப்
புல்லலாம் என்பது போலு மாலைய."

உலகத்தை கல்லுதல், உலகத்துக்கு எல்லை கட்டுதல் என்கிற காரியங்களை ஒருவன் செய்ய வலிமையுடையவனாக இருக்கலாம். ஆனால் கற்பிற்கரசியாகிய ஜானகியைப் புல்லுதலும், இராமனை ஜயிப்பது என்பதும் நடைபெறாது. இவ்வாறு கும்பகருணன் இராவணனுக்குச் சொல்லிப் பிறகு இராவணனைப் பார்த்து சீதையை இராமன் பால் விட்டுச் சமாதானம் செய்து கொள்ளும்படிக்கும், அவ்விதம் செய்ய இராவணனுக்கு இஷ்டம் இல்லாவிட்டால், ஒரேயடியாக முழு பலத்தையும் கொண்டு சண்டை செய்யவேண்டுமே யொழிய கூட்டம் கூட்டமாக சேனைகளை அனுப்பி அவை அழிய மனம் வருந்திக்கொண்டிருப்பது சரியாகாது என்று சொல்லுகிறான்.

இராவணன் சீதையை இராமனிடம் விடச் சம்மதிக்கவில்லை. கும்பகருணனை இகழ்கிறான். அதைக் கண்ட கருணன் போருக்குச் செல்ல சித்தமாகி சில முக்கியமான விஷயங்களை இராவணனுக்குத் தெரிவிக்கிறான்.

"நான் போரில் இறப்பது நிச்சயம். நான் இறந்து விடுவேனாகில் சீதையை விட்டு விடுதலே நலம் என்று எண்ணி, சீதையை விட்டுவிடு. அதுவே உனக்கு நன்மை தரும். உனது மகனாகிய இந்திரஜித்தும் இறப்பது நிச்சயம். இராக்கத சைன்யமும் காற்றினால் உந்தித் தள்ளப்பட்ட சாம்பல் போல் பறந்துவிடும். என்னை இராமர் ஜயிப்பாரேயானால் உன்னையும் அவர் ஜயிப்பது நிச்சயம். ஆகையால் சீதையைவிட்டு விடுதல் நல்லது" என்று கும்பகருணன் இராவணனிடம் தெரிவிக்கிறான். இதிலிருந்து கும்பகருணனுடைய நல்ல குணமானது நன்றாகத் தெரிகிறது. தன் சகோதரனும், மற்றை இராக்கத சைன்யங்களும், இராச்சியமும் அழிந்துவிடும் என்ற இரக்கத்தின் பேரில் மேலே கண்டவாறு சொல்லுகிறான். தவிர பிறருடைய ஸ்திரீயை வைத்துக்கொண்டிருப்பது முறையல்ல என்பதையும் தெரிந்து சொல்லுகிறான். ஆகவே இராக்கதனாக இருந்த போதிலும் தான் ஒரு மனிதன் என்பதையும் மிருக

குணம் படைத்தவன் அல்ல என்பதையும் காட்டுகிறான். "அரிது அரிது மானிடராதல் அரிது" என்பதை நிரூபிக்கிறான். ஆயினும் தன்னுடைய சகோதரன் தன் வார்த்தைகளுக்குச் செவி சாய்க்காததைக் குறித்து வருந்தி தன்னை இளம் வயதிலிருந்து வளர்த்து ஆளாக்கி பிறகும் போஷித்து வந்து போருக்கென்று தன் கையினாலேயே போர்க்கோலம் செய்துவிட்ட தமையனுக்குத் தான் செய்யவேண்டிய கடமையை உணர்ந்து போருக்குக் கிளம்புகிறான்.

போர்க்களத்திலே விபீடணன் கும்பகருணனிடம் வருகிறான். கும்பகருணன் விபீடணனைத் தழுவிக்கொள்ளுகிறான். "நீயாவது இராமனுடன் இருந்தால் இறந்து போகும் எங்களுக்கு நீர்க் கடன் கொடுக்க இயலும். இராமனிடத்திலேயே நீ இருப்பது உனக்கும் நல்லது, எங்களுக்கும் நன்மையைக் கொடுக்கும்." என்று விபீடணனைப் பார்த்து கும்பகருணன் சொல்லுகிறான்.

"ஐயநீ அயோத்தி வேந்தற்கு அடைக்கல மாகி யாங்கே
உய்கிலை என்னில் மற்று இவ் வரக்கராயுள்ளோ ரெல்லாம்
மொய்கணை மாரியாலே இறந்து பாழ்முழுதும் பட்டால்
கையினால் எள்நீர் நல்கிக் கடன் கழிப்பாரைக் காட்டாய்."

விபீடணன் கும்பகருணனை இராமனிடம் தன்னைப்போல் அடைக்கலம் புகவேண்டும் என்று சொல்லுகிறான். "இராமபிரானை நீ அடைந்தால் அவன் அருளையும் பெறலாம், அபயப் பிரதானமும் அளிப்பார், பிறவியையும் நீ ஒழிக்கலாம். இம்மையில் இலங்கா இராச்சியத்தையும் அடையலாம்" என்கிறான். அதற்குக் கும்பகருணன் சம்மதிக்கவில்லை. இது விஷயமாக கும்பகருணன் விபீடணனுக்குச் சொல்லும் பதிலைக் கம்பநாட்டாழ்வார் வெகு அழகாகச் சித்திரித்திருக்கிறார்.

"நீர்க்கோல வாழ்வைநச்சி நெடிதுநாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலம் செய்துவிட்டாற்கு உயிர்கொடாது அங்குப் போகேன்
தார்க்கோல மேனிமைந்த என் துயர் தவிர்த்தியாயின்
கார்க்கோல மேனியானைக் கூடுதி கடிதில் என்றான்."
"கருத்திலா இறைவன் தீமை கருதினால் அதனைக் காத்துத்
திருத்தலாமாகில் நன்றே திருத்துதல் தீராதாயின்
பொருத்துறு பொருளுண்டாமோ பொருதொழிற் குரியராகி
ஒருத்தரின் முன்னம் சாதல் உண்டவர்க் குரியதம்மா."

"எனக்கு விரோதியான இராமனைச் சேர்தல் தக்கது அல்ல" என்கிறான். இங்கு கும்பகருணன் உண்ட வீட்டுக்கு இரண்டு நினைத்தல் தகாது என்கிறான். கும்பகருணனுக்கும் விபீடணனுக்கும் உள்ள வித்தியாசம் இது. விபீடணன் இராவணனை விட்டு எதிரியாகிய இராமனை அடைந்தவன். கும்பகருணன் தன்னை வளர்த்த தமையனை விட்டு எதிரி பக்கல் போவது நியாயம் அல்ல என்றும், தன் தமையன் இருந்தானால் அவன்

இறப்பதற்கு முன் தான் இறத்தலே கடமை என்றும் சொல்லுகிறான். இது கும்பகருணனுடைய செய்நன்றி மறவாமையைக் காட்டுகின்றது.

பிறகு கும்பகருணனுக்கும் இராமருக்கும் நடக்கும் போரில் கும்பகருணன் தன்னுடைய சரீரத்திலுள்ள ஒவ்வொரு அங்கத்தையும் இழக்கிறான். சாவதற்கு முந்தி கும்பகருணன் இராமனிடம் சில வார்த்தைகள் சொல்லுகிறான். அது கும்பகருணனுடைய பெருந்தன்மையையும், நற்குணத்தையும், சகோதர வாஞ்சையையும் காட்டுகின்றது.

"தம்பியென நினைந்திரங்கித் தவிரானத் தகவில்லான்
நம்பியிவன் தனைக்காணில் கொல்லுமிறை நல்கானுல்
உம்பியைத்தான் உன்னைத்தான் அநுமனைத்தா ரொருபொழுதும்
எம்பி பிரியானாக அருளுதி யான் வேண்டினேன்."

"இராவணன் விபீடணனைத் தம்பி என்று பாராமல் கொன்றுவிடுவான். ஆகவே விபீடணனை ஜாக்கிரதையாக உன் தம்பியுடனும், உன்னுடனும், அநுமனுடனும் வைத்துக்கொள்ள வேண்டும்" என்கிறான்.

இவ்விதமுள்ள கும்பகருணனை துஷ்டன் என்றோ இராக்கத குணம் படைத்தவன் என்றோ சொல்ல இயலுமோ! இராமாயணத்தில் வரும் நல்ல சகோதரர்களுக்குள் கும்பகருணனும் ஒருவனாகவே விளங்குகிறான். செய்நன்றி மறவாதவன். தர்ம சிந்தனை உள்ளவன். நியாயம் தவறாத மனப்பான்மையுள்ளவன். அவனும் இராமாயணத்தில் ஒரு சிறந்த உயர்ந்த ஸ்தானத்தை அடைய உரியவன். அவனுடைய குணங்கள் யாவரும் பின்பற்றத்தக்கவை.

சந்தா நேயர்களுக்கு

சந்தா நேயர்கள் நமது காரியாலயத்துக்கு எழுதும் கடிதங்கள் ஒவ்வொன்றிலும் தங்களுடைய சந்தா நம்பரைக் குறிப்பிட்டு எழுதும்படி கேட்டுக் கொள்கிறோம். சந்தா நம்பர் குறிப்பிடாமல் விலாசத்தை மாற்றும்படியோ, அல்லது வேறு எவ்விதமான காரியத்துக்கோ எழுதப்படும் கடிதங்களால் காரியாலயத்தினருக்கு வீண் காலதாமதமும் சிரமமும் ஏற்படும் என்பதை அறிவித்துக்கொள்கிறோம்.

பிரிவாற்றாத காதலர்

சேந்தமிழ்ப் பித்தன்

✲

உறக்கம் வரவில்லை. இரவும் உறங்குகிறதோ என்று ஐயுறும் வண்ணம் உலகம் அமைதியில் ஆழ்ந்திருக்கிறது. சுவரில் 'படுக்கையறை விளக்கு' தன் சிற்றொளி பரப்பி எரிந்து கொண்டிருந்தது. அளக்க வியலாத அகச்சோர்வு என்னை மூடுபனி போலக் கவிந்து கொண்டிருந்தது. ஏன் இச் சோர்வு?...

புரண்டேன். படுக்கை 'வெறிச்'சென்றிருந்தது. இடக்கை குறுந்தொகைமீது விழுந்தது. இனிமேல் உறக்கம் வராது என்று முடிவு செய்த பின், எழுந்து தண்ணீர் குடித்து விட்டுப் படுக்கையிலமர்ந்தேன். ஏதாவது படிக்கலாமென்று, தலையணையினடியிலிருந்த புத்தகங்களை எடுத்தேன். படிப்பு சுவை நல்காதென என் உள்ளமே தீர்ப்பளித்து, ஒதுக்கிவிட்டது. மீண்டும் படுத்துக்கொண்டேன். கண்களை மூடிக்கொண்டேன். நினைவிலே ஒரு காட்சி. ஆம். அவள்!—...அவள்!—...அவளே தான்!

என் மனைவி செல்வி!...

"பல் கற்களுக்கு அப்பால் தன் தாய் வீட்டில் அந்நல்லிளங் குறுமகள், மிக ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்திருப்பாள். அவளுடல் வியர்த்து விட்டிருக்கும். உறக்கத்தில் தன்னையுமறியாது அவள் புரண்டு படுப்பாள். அவள் கூந்தலிலிருக்கும்—முல்லையோ—மல்லிகையோ—வாடிக் கசங்கி இருக்கும்...ஆ!... அவள் இப்போது நம்மை எண்ணுவாளா?...நாம் நினைந்துருகுவதுபோல, அவளும் நம்மை இதே பொழுதில் நினைத்தால்!... ஆ!...—"இந்த நினைவே பேரின்பமளித்தது.

அவளோடு பயின்ற நாட்கள் பழகிய இன்ப வாழ்வுணர்வு நினைவில் தோன்றியது. இளமையின் பெருமையே பெருமை! நினைத்தாலும் இனிக்கும் காதல் நினைவுகள் பொங்கிப் பொங்கி சுரக்கும் பேறுடைப் பொற்காலம் இளமையல்லவா! வாழ்க நல்லிளமை!

என் காதலியின் முகம்; அழகுமுகம்! அன்புமுகம்—உள்ள எழினியில் தோன்றியது. அவளுடைய அந்த இளவேனியின் மூன்றும் பிறை நிலவனைய அழகுள்ள இளம் புன்சிரிப்பிலே, மறைவிலிருந்து எட்டிப் பார்க்கும் பூப்பெய்திய பருவக் குமரி போலத் தோன்றுமற் றோன்றும் எழில் பெரு நாணம...கண்களிலே மின்னலைவிட ஒளி மிகுந்த 'வாழ்த்தும்' வளரெழிற் காதல் நோக்கம்; இதனையும் தோன்றியது.

கண்களைத் திறந்துகொண்டேன். பல கணி வழியாக வெளியே நோக்கினேன். வானில் இயற்கைப் பெண்ணின் முடிக்

காத கோலப் புள்ளிகளாகச் சிந்திக்கிடந்த விண் மீன்கள், பளிச் சென்று கண்ணடித்துக் கொண்டிருந்தன.

தனிமை உணர்ச்சி, உள்ளத்தில் தாய்மொழிப் பற்றற்ற உள்ளத்தைப்போல வறட்சியான வெறுமையை உண்டாக்கி விட்டது. நீர் வேட்கை மிகுந்தது. மீண்டும் தண்ணீர் பருகி விட்டுப் படுத்தேன். முடிக்காத கட்டுரை ஒன்று, துவங்கி இரண்டே பக்கம் வளர்ந்த நாடகம் ஒன்று...எழுதவேண்டிய குறிப்புக்கள்—எல்லாம் படுக்கையின் ஓரத்தில் தாயற்ற குழந்தைபோல, கேட்பாரற்ற தமிழகம் போலக் கிடந்தது.

"செல்வி இப்பொழுது இங்கே வந்தால்?..." என்ற நினைவு தோன்றியது. உம்!—

நடக்க முடியாதவைகளைப்பற்றித் தானே நெஞ்சம் எண்ணி எண்ணி ஏங்கும்!

எண்ணம் சோர்வடையவில்லை. மீண்டும் தன் கற்பனையை வளர்த்திக்கொண்டே சென்றது.

"அவள் கன்னத்தைத் தட்டி, மார்போடு அணைத்துத் தழுவி, இதழோடு இதழ் அச்சுப்பொறியாக—"

"சேச்சே! இது என்ன பாழ் நினைவு!...நல்லது. படிக்க வேண்டும்..." என்று முடிவு செய்து விளக்கைத் தூண்டி, பெரி தாக்கிக்கொண்டு அமர்ந்தேன்.

எழுத்துக்கள் கண்களுக்குத் தோன்றியதே தவிர, எழுத் துக்களுக்குரிய நுண் பொருளாம் கருத்து ஒன்றுமே தெளிவாக வில்லை!...

இதற்கெல்லாம் காரணம் அந்தச் சிறு பெண் என் மனைவி தான் என்றெண்ணும்போது சீற்றம் வரவில்லை; சோர்வு மிக வில்லை; காதல் பெருகியது; உணர்வு உருகியது; நெஞ்சு நெகிழ்ந் தது. அவள் நினைவிலே கண்களைத் திறந்தபடியே கனவு காணத் துவங்கி விட்டேன்.

அவள் சாயல், அவளுடைய அழகான அமைதி நடை—ஆர் வம் மிக்க மொழிகள் எதையும் அணு அணுவாக எண்ணிக்களிக் கடத்தாடியது அகம்.

களிற்றியானைகள் இரண்டின் கைப்பட்டு இழுக்கப்படும் தேய்புரிப் பழங்கயிறுபோல நைந்தது என் ஆண்மை நெஞ்சம்.

"என் கண்மணி தமிழ்ப் பெண்மையின் உருவம். அன்பரு ளின் கரு. இன்பக்கோயில், நாணக்கருவூலம்; காதற்பண்டாரம்"

சேச்சே! இதென்ன இது! நானே என் இல்லக்கிழத்தியைப் புகழ்ந்து கொளவதென்றால்!—...

'இல்லனில் ஊர் வாழ்தல் போன்றது காதலி இன்றி வாழ் வது' என்பது எவ்வளவு உண்மை! "பாழே மடக்கொடி இல்லா மனை" என்று பழித்த புலவர் வாழ்க்கையை நன்கு சுவைத்தவர் என்று வழிபட்டது உளளம்.

பாலைத்திணைப்பாட்டுக்கள என்றால் எனக்கு மிக மிக விருப்பம். ஆ! ஆ! ஆ! எத்துணை பேருணர்வுப் பெருங்களஞ்சி யங்கள் அவை! ஒவ்வொன்றும் ஒவ்வொரு 'ஞாலம்'! அகநானூற் றில் ஒரு பாடலில் அவ்வையார், "நம்முடை உலகம் உள்ளார் கொல்லோ!" என்று பாடியுள்ளார். "பெண்ணுலகத்தை என் காதலர் நினைத்துப் பார்க்கமாட்டாரோ?" எனப் பிரிவாற்றால் புலம்பி இருக்கிறார். அவ்வுணர்ச்சியை அணு அணுவாக உணர்ந்து சுவைக்கிறேன். ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன் பாடப்பட்ட பாடல் இன்னும அழகாக உள்ளத்துணர்ச்சியைக் கிளறி விடுகிறதெனின் அதுவே ஒப்பில்லாத பேரிலக்கியமாகும்!

'பாலைபாடிய பெருங்கடுங்கோ' தன் வாழ்க்கையில் ஆருயிர்க் காதலியை எக்காரணத்தாலோ பிரிந்து ஆற்ற வியலாது வருந்தி இருக்கவேண்டும். இல்லையென்றால், அவரால் அத்துணை சிரிய பிரிவுத்துன்ப உணர்ச்சியைப் பாடியிருக்க முடியாதென்று எண்ணினேன். என் உணர்வுகள் உருகிவிட்டன.

அவ்வையாரும், வெள்ளி வீதியாரும், பெருங்கோழி நாயகன் மகள் நக்கண்ணையாரும், ஆதிமந்தியாரும் காதலர்களைப் பிரிந்து, அல்லற்பட்டு ஆற்றாது, காதல் மீறிக் கசிந்து, கண்ணீர் மல்கி, ஓதுவார் உள்ளத்துணர்வுகள் ஓவென்று ஆர்கலியன்னப் பொங் கப் பொங்கப் பாடியிருப்பர் என்றெண்ணினேன். ஏங்கினேன். கண்களில் நீர் சுரந்துவிட்டது!

அன்பின் அழகு நிலை காதற் பிரிவினால் ஏங்கும் ஏக்கத்தின் கண்ணன்றோ ஒளிக்கப்பட்டிருக்கிறது!

"கண்ணால் காணும்போதெல்லாம் இனிய எழில் வாய்ந்த தோற்றம் உடையவளாய், காதலன் விரும்புகின்றவற்றைப் பூண்டவளாய், அஞ்சத் தகுவனவற்றிற்கு அஞ்சுபவளாய், ஊரார்க்கு நாணத்தக்க பண்பினை இயல்பாகப் பெற்றவளாய், காதலொழுக்கத்தில் இடமறிந்து நிலையுணர்ந்து ஊடல் செய்து; இனிமை கலந்த இன்பத்தோடு ஊடல் உணர்ந்து, தெளிந்து புணர்ந்து பேரின்பம் நல்குதலையும், மென்மையும் இனிமையும் வாய்ந்த நன்மொழிகளை உடைய பெண்ணே உண்மையான கற்புடைய பெண்ணாவாள். உண்மையான 'பெண்' என்ற பெருமை—தகுதி உடையவள் அவள் தான்!"

கண்ணின் மணியென்றும், மனைமாண் சுடரென்றும், பேரிற் கிழத்தி யென்றும் போற்றப்படும் புகழ் மிக்க பேற்றுக்குரிய பெண் நல்லாளின் பெண்மைத் தன்மைகள் 'இவை' என்று நல்லோர் போற்றும் நாலடியார் என்னும் அழகுச் செந்தமிழ் ஒண்மைசால் உயர்நூல் மொழிகிறது.

"கட்கினியாள் காதலன் காதல்வகை புனைவாள்
உட்குடையாள் ஊர்நாண் இயல்பினாள்—உட்கி
இடனறிந்(து) ஊடிஇனி தின் உணரு(ம்)
மடமொழி மாதராள் பெண்"

[நாலடியார்—காமத்துப் பால்—இன்பவியல்—கற்புடைய மகளிர் —348ம் பாடல்.]

மேற் கூறிய செந்தமிழ்ச் செய்யுளின் பேரினிமையை என் வாழ்க்கைத் துணைவியிடம் நான் துய்க்கிறேன்.

'கற்பின் வழாஅது நற்பல உதவிப் பெற்றோன் பெட்கும் பிணையாக விளங்கும் அவளை எண்ணி ஏங்குகிறதென்னகம்.

வானிலே திடீரென ஓர் எரி விண்மீன் வீழ்வதுபோல என்னகத்தில் ஒரு சிலிர்ப்பு.

ஊருக்குப் போகும் முன் என்னருகில் வந்து நின்று ஏக்கமும், பிரிவுப் பெருந்துயரும், ஆர்வமும், அளவில்லா ஆவலும், பொருமும் பொங்குபெரு காதலும் மிக என்னைப் பேசாமல் அமைதியாக நோக்கினவள், "நீங்கள் எப்போது வருவீர்கள்?" என்று வினவினாள். அவளின் உணர்வுக்களமான திருமுகத்தை நோக்கி, முகவாய்க் கடையைப்பற்றி, முகத்தை நிமிர்த்தினேன். ஆற்றாத துயரோடு என் மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள். தழுவியவண்ணம் அவளைப்பற்றி முகத்தை நிமிர்த்தி முத்தமிட்டேன். என்னால் பேச முடியவில்லை. மேடையிலே ஏறினால் மணிக்கணக்காக, கேட்பவர்கள் வியக்கும் வண்ணம் நிரந்தினிது பேசும் என் நாக்கு மொழியுணரா ஊமைபோல முடங்கி விட்டது. கண்கள் உணர்ச்சிகளை அளவளாவிக் கொண்டன. யாரோ அழைத்தார்கள் உள்ளே. உடனே அவளை விட்டு விட்டேன். இயங்கிய வண்ணம் என் முகத்தை ஏங்கும் சிறு குழந்தை போலப் பார்த்துவிட்டு மெல்ல மெல்ல நகர்ந்து, திரும்பி நடந்தாள். முற்றானையால் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

வண்டியிலேறும் முன் என்னருகில் வந்தாள். "எப்போது வருவீர்கள்?"

"நான் வரமாட்டேன்!"

நான் விளையாட்டிற்குத்தான் கூறினேன். அவள் முகம் திரிந்தது. ஒளி மழுங்கியது. தலை குனிந்தாள். மெல்ல அவள் முதுகைத்தட்டி, அவள் தோளைப்பற்றி, "கண்ணா, மகிழ்ச்சியாக இரு" என்று கூறினேன். நிமிர்ந்து நோக்கிவிட்டுத் தலை குனிந்தாள் பேசாமல்.

என் உயிரை—உணர்வை என்னிடத்திலிருந்து பறித்துக் கொண்டு, உயிரும், உணர்வும், உள்ளமும், அன்பும் இல்லாத ஊர்தி ஓடி மறைந்தது!"

நினைவுகளின் தொடர்பில் சிலை மறந்து கிடந்த நான் திடுக்கிட்டு கையிலிருந்த புத்தகத்தைப் புரட்டினேன்.

உள்ளத் துணர்வுடையான் ஓதிய நூலற்றால்
வள்ளன்மை பூண்டான் ஒண்பொருள்—தெள்ளிய
ஆண்மகன் கையில் அயில்வாள் அனைத்தரோ
நாணுடையாள் பெற்ற நலம்.

—(நாலடியார்—காமத்துப்பால்—இன்பவியல்: 386)

"அகத்து உணர்வுச் செறிவமைதியான அறிவுடையவன் கற்று அறிந்த நூலின் பயன் போலவும், ஈகைப் பண்புடையவனிடத்தில் அமைந்த பொருட் செல்வத்தின் பயன் போலவும்; தெளிந்த ஆண்மை மிகுந்த மறவனது கையில் உள்ள கூரிய வாளின் பயன்போலவும், நாணமுடையவள் பெற்றிருக்கும் நலமாகிய கற்பின் பயன்." என்ற நுண்ணிய அறிவு விருந்தைப் படித்தேன். நெட்டுயிர்த்தேன்.

உள்ளம் என்ற விதையுள்ளே செயலாற்றல் என்ற பயிர்—மரம் நுண்மையாக அடங்கிக் கிடக்கிறது. காலம் வரும்போது அஃது வெளிப்படுகிறது.

என் அருமைச் செல்வி அருகிலிருந்தபோது என்னுள்ளத்தில் எழாத பெருங் காதல் எழுச்சியை அவளைப் பிரிந்தபோது தான் உணர்கிறேன்.

"அறிஞனின் கல்வி ஊருணி நீர்போலும் உற்று உதவி, உறுபயன் விளைக்கும். நாணம் மிக்க நல்லவளின் கற்பு; ஞாலத்திற்கு—கொண்ட கொழுநனுக்கு—கொடுத்த பெற்றோருக்கு—கொடுக்க, பெற்றோருக்கு—பெண்மைப் பண்பாட்டிற்குப் பெருமை நல்கும்; பேரின்பம் பயக்கும்! அத்தகைய கற்புச் செல்வியைப் பெற்றவருக்கு ஏறுபோற் பீடு நடை நடக்கும் ஆண்மை வாழ்வன்றோ வாழ்வார்! உறு துயரம் ஒரு கோடியாயினும் அரை நொடியில் அவற்றை அழிக்கும் பேராற்றலாண்மையைப் பெறுவான்........"

என நீண்ட எண்ணங்கள்; இருளில் சுவரில் முட்டிக்கொண்டு வெருவி நிற்பதுபோல, நின்றன.

குளிர் வாடைக் காற்று பலகணி வழியாகப் புகுந்து உடலைச் சிலிர்க்க வைத்தது.

கூடிக் கொஞ்சும் காதற் பேரின்பத்தை ஆடித் திங்கள் பிரித்து விட்டது. மீண்டும் அத்தாவணியாளை ஆவணித் திங்களல்லவா பிணைக்கும்!......சே! பன்னிரெண்டு திங்களில் ஆடித் திங்கள் வராமல் இருக்கக் கூடாதா?

"சே! என்ன எண்ணம்? ஆட்டனத்தியைப் பிரிந்த ஆதிமந்தி, "அத்தியோ அத்தி" என்றலறிப் பித்தம் கொண்டு தமிழகமெங்கும் காதலனைத் தேடி ஓடினாளாம்; அதுபோல "செல்வியோ செல்வி" என்று கூவிய வண்ணம் செல்லலாமோ?...சே!..."

"செல்வியோ செல்வி! என்று ஒரு முறை முணு முணுத்துக் கொண்டேன்.

அவள்—வேறு மற்றவர்—யாரும் அங்கில்லை என்று எண்ணியதில் ஓர் ஆறுதல் பிறந்தது.

வளைகின்ற வாய்ப்புருவத்தையும், சிரிக்கின்ற கண்களையும், வட்டமிடும் தடைதனில் வளைவான கூந்தலையும் பொலியுமிள

எழில் முகத்தையும் எண்ணி மயங்கிய என் நினைவை வெளியே பறந்து சென்ற காக்கை கரைந்த ஓசை தட்டி எழுப்பியது.

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற பாட்டைப் பாடிய வண்ணம் எழுந்து வந்தேன்.

வைகறையின் வெள்ளொளி கீழ் விண்ணில் பொலிந்தது. விடி வெள்ளி மின்னும் வைரமென ஒளிர்ந்தது. என் வாழ்க்கையின் இன்ப வைகறையின் 'ஒளிச் செல்வி'யைக் காண்பது போன்ற உணர்ச்சி உள்ளத்தில் தோன்றியது. அவளும் இரவில் என்னைப் போலவே, என்னை நினைந்து நினைந்து உருகியது போன்ற உணர்வை உணர்ந்தேன்.

விரைந்துள்ளே சென்று அவளின் நிழற் படத்தை எடுத்து என்னை மறந்து நோக்கினேன்.

'ஆம். விரைவில் விடுமுறையில் சென்று அவளைக் கண்டு வர வேண்டும்' என்று உறுதி பூண்டேன். அவ்வுறுதியை அடைந்த பின்னர் இருள் மறைந்து ஒளி துவக்கிய ஞாலம்போல உள்ளம் புதுமை யடைந்தது.

“அன்புமுகம் கண்டால் ஆயிரங் கனவுகள்
அகத்தில் பொங்குதடி—செல்வி...”

என்று பாடிய வண்ணம் வெளியே சென்றேன். எங்கோ ஒரு சேவல் தன் ஓங்கிய குரலெடுத்து 'கொக்கரகோ!' எனக் கூவியது.

'பொழுது புலர்ந்து விட்டது' எனக் கூவிய கோழியின் பேச்சைக் கேட்டு விண் மீன்கள் தூங்கப் போய் விட்டன. என் உள்ளம் இரவிலிருந்து பகலுக்கு வந்தது. எந்தக் கதிரவனால்?

அவள்! அவளால்தான்!



நீலத்திரை

“சச்சி” ★

வாசலில் கார் வந்து நின்றது. 'பாம், பாம்' என்ற ஓசை எழும்பியது. சமையலறையில் வேலையாயிருந்த விமலாவின் காதில் அந்த ஓசை விழுந்தது.

'நம வீட்டிற்கு யார் காரில் வருவார்கள்' என்ற சந்தேகத்துடன், மெள்ள எழுந்து நிதானமாக வாசலை நோக்கி நடந்தாள். அதற்குள் காரிலிருந்து இறங்கி உள்ளே வந்துகொண்டிருந்த பெண்மணியைக் காண அவளுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

“வா, இரஞ்சனி. நலமாய் இருக்கிறாயா? என் வீட்டிற்கும் நீ வருவாய் என்று எதிர்பார்க்கவே யில்லை. வழி தவறி வந்து விட்டாயா?” என்றெல்லாம் சொல்லிக்கொண்டே அவளை அன்புடன் உள்ளே அழைத்துச் சென்றாள்.

“விமலா, ஏதோ சிறுவயதில் நாம் சண்டை போட்டுக் கொண்டோம். அதையெல்லாம் நான் அப்பொழுதே மறந்துவிட்டேன். நான்தான் தெரியாத்தனமாய் உன் அழகைக் கண்டு பொறாமைப்பட்டு உன்னைக் கண்டபடி திட்டிவிட்டேன். இப்பொழுது என்மேல் உனக்குக் கோபம் இல்லையே?” என்று மிகவும் அன்புடன் கேட்டாள்.

“இல்லை, இரஞ்சனி. உண்மையில் நான்தான் உன் செல்வத்தைக் கண்டு பொறாமையால் உன்மேல் வெறுப்பு கொண்டேன். பணத்தினால் உனக்குக் கர்வம் உண்டு என்று தவறாக நினைத்து விட்டேன். இரண்டு வருஷத்திற்குப் பிறகு உன்னைப் பார்ப்பதற்கு எவ்வளவு சந்தோஷமா யிருக்கிறது தெரியுமா?” என்று கண்களில் ஆனந்த நீர் கலங்கக் கூறினாள் விமலா.

விமலா, மிகச் சிறிய வீட்டில் மிகவும் எளிமையான வாழ்க்கை நடத்துவதைக் கண்டு இரஞ்சனி இரக்கப்பட்டாள். ஆனால், அவள் விமலாவை ஒன்றுமே கேட்கவில்லை. கேட்டால், அவள் மனம் வருத்தப்படுமே என்று எண்ணி அவள் சும்மா இருந்துவிட்டாள். எனினும், அவள் சுற்று முற்றும் பார்த்து மனம் நொந்து கொண்டாள்.

அப்பொழுது தூங்கிக்கொண்டிருந்த விமலாவின் குழந்தை எழுந்து, குறுகுறுவென்று நடந்து வந்து தன் தாயின் மடிமேல் உட்கார்ந்து கொண்டான். புதிதாக வந்த இரஞ்சனியை உற்றுப் பார்க்கலானான்.

விமலா தன் குழந்தையை அன்புடன் அணைத்துக்கொண்டு கொண்டு, “இவன்தான், இரஞ்சனி, என் மகன். ஒன்றரை வயதாகிறது. சரியாக வளரவேயில்லை,” என்று கூறினாள். அவளுக்கு அப்பொழுது எவ்வளவு ஆனந்தம் இருந்ததென்பதை அளவிட்டுச் சொல்ல முடியாது.

“இங்கே வாடா, கண்ணு! உன்பெயர் என்ன?” என்று இரஞ்சனி அவனை அன்புடன் கைநீட்டி அழைத்தாள்.

அவன் குறுநகை செய்துகொண்டே தன் தாயின் மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டான்.

"போடா சந்திரா! மாமி கூப்பிடுறாங்கோ, போ" என்றாள் விமலா. அவன் மெதுவாகத் திரும்பி இரஞ்சனியைப் பார்த்தான்.

"இங்கே வா" என்ற சைகையால் மீண்டும் அவனை அழைத்தாள் இரஞ்சனி.

ஆனால், அவன் அவளிடம் போகவேயில்லை.

"எனக்கும் ஒரு குழந்தை இருக்கக்கூடாதா?" என்று மனதில் எண்ணிச் சிறிது ஏங்கினாள் இரஞ்சனி.

பிறகு, "விமலா, உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்லவே நான் இங்கே வந்தேன்" என்று கூறினாள்.

"என்ன இரஞ்சனி?" என்று ஆவலோடு கேட்டாள் விமலா.

"உன் கணவர் ஆபீசிலிருந்து எத்தனை மணிக்கு வீட்டுக்கு வருகிறார்?"

"இப்பொழுதெல்லாம் இரவு எட்டரை அல்லது ஒன்பது மணிக்குப் பிறகுதான் வருகிறார். ஆபீசில் யாரோ ஒருவர் லீவு போட்டிருக்கிறாராம். அவருடைய வேலையும் இவரே செய்வதால் நேரமாகுது என்கிறார். ஏன்? என்ன சமாசாரம்?"

"ஒன்றுமில்லை, விமலா. அவர் சொல்லுவதெல்லாம் சுத்தப் பொய். இனிமேல் நீ ஏதாவது காரணம் சொல்லி அவரை சீக்கிரமே ஆபீசிலிருந்து நேரே வீட்டிற்கு வரும்படி செய் ஆமாம்."

"ஏன் இரஞ்சனி?"

என் கணவர் 'நீலத்திரை மருந்துக் கடைக்குப் போயிருந்தாராம். அப்பொழுது உன் கணவர் அந்தக் கடையில் உள்ள நீலத்திரையின் பின்னாலிருந்து வந்தாராம்."

"அந்த மருந்துக் கடைக்காரன் தன் சிநேகிதன் என்று சொன்னார் ஒருநாள்."

"இருக்கலாம். ஆனால், மிகவும் ஆபத்தான விஷயம், விமலா."

"என்ன சொல்லுகிறாய் இரஞ்சனி! எனக்குப் பயமாய் இருக்கிறதே."

"என் கணவர் உன் கணவரைப் பார்த்திருக்கிறாரே தவிர பழக்கம் கிடையாதாம். அதனால்தான் அப்பொழுதே கண்டிக்காமல் விட்டுவிட்டார்".

"என்ன விஷயம் இரஞ்சனி! எனக்கு ஒன்றுமே, புரியவில்லையே!"

"நான் நான்கு நாள் கழிந்தபின் மீண்டும் இங்கே வருவேன். அப்பொழுது எல்லாம் விளக்கமாய்ச் சொல்லுவேன்,"

"என் மனதில் குழப்பத்தை உண்டாக்கி விட்டாயே, இரஞ்சனி"

"கவலைப்படாதே விமலா. உன் கணவர் வந்ததும் அவரை என் கணவர் 'நீலத்திரை' மருந்துக் கடையில் பார்த்ததாகச் சொல். பிறகு என்ன நடக்கிறதென்பதை என்னிடம் தெரிவி.

எல்லாம் நாங்கள் சரிப்படுத்தி விடுவோம்" என்று சொல்லிவிட்டு வீட்டுக்குச் செல்லப் புறப்பட்டாள் இரஞ்சனி.

"நீலத்திரை மருந்துக் கடை என்பது என்ன? விவரமாய்ச் சொல்லாமல் என் மனதில் கலவரத்தை உண்டாக்கி விட்டுப் போகிறாயே!" என்று விமலா திகிலுடன் கேட்டாள்.

"நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம், விமலா, நாங்கள் பார்த்துக் கொள்ளுவோம்" என்று கூறிவிட்டு வெளியே போய்விட்டாள் இரஞ்சனி.

அவளை வழி அனுப்பிவிட்டுத் திரும்பினாள் விமலா. கலவரத்தினால் இரஞ்சனிக்குக் கொடுக்க மறந்துவிட்ட காபியைப் பார்த்தாள். பிறகு, அம்மாவின் ஏக்கத்தைப் பார்த்துக் கொண்டே நின்ற குழந்தையை வாரி எடுத்து அணைத்துக் கொண்டு கண்ணீர் சிந்தினாள்.

அன்றிரவு சுமார் ஒன்பது மணி இருக்கும். அப்பொழுது தான் விமலாவின் கணவர் தணிகாசலம் வீடு திரும்பினார். விமலா எப்பொழுதும் போலவே அவருக்கு உபசாரம் செய்யத் தொடங்கினாள். ஆனால் முன்பு இருந்த பரபரப்பு மிகவும் குறைந்து விட்டது. மனதில் தோன்றிய கலவரம் அவளை ஊமையாக்கி விட்டது.

மாலையில் இரஞ்சனி வந்து சென்றதைப் பற்றி அவரிடம் கூறி விஷயம் என்னவென்று விளக்கமாய்த் தெரிந்துகொள்ள அவள் மனம் மிகவும் துடி துடித்தது. ஆனால், அதைச் சொன்னால் அவர் மனம் எப்படி மாறுமோ என்று எண்ணி, அவர் சாப்பிட்டு முடிந்த பிறகே எதையும் கேட்கவேண்டுமென்று முடிவு செய்து விட்டாள்.

பிறகு இலையைக் கொண்டுவந்து போட்டாள். சாதம், கறி முதலியவைகளைக் கொண்டு வந்து வைத்தாள். கை கழுவ நீர் கொண்டுவந்தாள். ஆனால், அவரோ மிகவும் அலுப்படைந்தவர் போல நாற்காலியில் சாய்ந்தவண்ணம் உட்கார்ந்திருந்தார்.

"இந்தாருங்கோ. கையை அலம்பிக்கொண்டு வாங்கோ. சாப்பிடுவீங்க."

"ஊம்...சாப்பாடா?......எனக்கு வயிற்றை என்னவோ செய்யறது, விமலா......ஒரே எரிச்சலாய் இருக்குது......சாப்பாடே பிடிக்கலை......நீ போய் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொள்......போ."

"இப்படி தினமும் இராத்திரியில் சாப்பிடாமல், வயிற்றில் எரிச்சலாய் இருக்குது, சாப்பாடு பிடிக்கலை என்றிருந்தால் உடம்பு என்னாதுக்குத்தான் ஆகும். இப்பவே துரும்பாகி விட்டது. டாக்டரையாவது பார்க்கக்கூடாதா?" என்று சொல்லிக் கொண்டே கலங்கிய கண்ணீரை முன்தானையால் துடைத்துக் கொண்டாள்.

"என்னைத் தொந்தரவு செய்யாதே விமலா...பேசாமல் போ......போ என்றால் போய்விடு. அவ்வளவுதான்; இங்கே நிற்காதே."

"வர வர என்மேல் கடிந்து கொள்ளவும் ஆரம்பித்து விட்டீர்கள்."

"இல்லாவிட்டால் உன்னை மடிமேல் எடுத்துவைத்துக் கொஞ்சணுமா! சின்ன குழந்தை பாரு."

"உங்கள் பேச்சு நாளுக்குநாள் மாறிக்கொண்டே போகுது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை."

"புரியாவிட்டால் பேசாமல் போய்ப் படுத்துத் தூங்கு, போ. என் பிராணனை வாங்காதே."

....

"சாயந்திரம் இரஞ்சனி வந்திருந்தாள்."

"அது யார், அது இரஞ்சனி?"

"என்னோடு படித்தவள். இரண்டு வருஷத்துக்கு முன்னே நம் ஊருக்கும வந்திருந்தாள். அவள் கணவர்கூட மதுவிலக்கு இலாகாவிலே பெரிய உத்தியோகஸ்தராய் இருக்கிறார்"

"ஆமாம்! எப்பொழுதோ சொன்னது போல நினைவு இருக்கிறது."

"அவர் உங்களை 'நீலத்திரை 'மருந்துக் கடையில் பார்த்தாராமே!"

சற்று திகிலடைந்து, "அப்படியா! ஊம். என்னிடம் அவர் பேசவே யில்லையே! என்ன சொன்னாள் இரஞ்சனி?"

"ஒன்றும் சொல்லவில்லை. நமமைப் பார்தது இரண்டு வருஷத்துக்கு மேல் ஆச்சே, அதனால் பார்க்கணுமனு ஆசையா வந்திருந்தாள்."

"அவளுக்கு இந்த வீடு எப்படித் தெரிந்தது?'

"அவளுடைய வீட்டுக்காரர் உங்களை மருந்துக்கடையில் பார்த்தபிறகு, அன்று இரவே நீங்கள் வீட்டுக்குள் நுழையும் பொழுதும் பார்த்தாராம். விலாசத்தைக் குறித்துக்கொண்டு போய இரஞ்சனியிடம் சொன்னாராம்."

"அப்படியா! இரஞ்சனி வேறே என்ன சொன்னாள்?"

"வேறே ஒன்றும் சொல்லவில்லை. நாளைக்குச் சாயந்திரம் அவளும் அவரும் இங்கே வருவார்கள். நீங்கள் ஆபீசிலிருந்து சீக்கிரம் வீட்டுக்கு வந்து விடுங்கள்"

"நானா?...உம்...நாளைக்கா?......எனக்கு இப்பொழுது ஆபீசில் வேலை அதிகம் எனறு உனக்குத்தான் தெரியுமே! சொல்லக்கூடாதா?"

"சொன்னேன். அவர்கள் என்னவோ'உங்களைக் கட்டாயம் பார்க்கவேண்டுமாம், நாளைக்குமட்டும் சீக்கிரம் வந்து விடுங்கள்?"

"அப்படி என்ன விசேஷம் இருக்கிறதாம்."

"அவள் ஒன்றுமே சொல்லவில்லை. நானும் தெரிந்து கொள்ள வேண்டுமென்று எவ்வளவோ கேட்டுப பார்த்தேன். அவள் 'அப்புறம் விளக்கமாய்ச் சொல்லுகிறேன்' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்."

"எல்லாம் எனக்குத் தெரியுமடி. நீ பெரிய கள்ளியாகி விட்டாய். 'நீலத்திரை' மருந்துக்கடையைப் பற்றிச் சொன்னாள். அங்கே அவள் புருஷன் என்னைப் பார்த்ததைச் சொன்னாள். அதோடு நிறுத்திவிட்டாள், இல்லையா? மேலே ஒன்றுமே சொல்லவில்லையே? என்னிடம் ஏன் மறைக்கிறாய்? நான் யாருக்கும், எதற்கும் அஞ்சமாட்டேன். தெரியுமாடி".

"ஐயோ, நீங்கள் தப்பாக நினைத்துக்கொண்டு ஏதேதோ பேசுகிறீர்கள். அவள் சத்தியமாக என்னிடம் ஒன்றுமே சொல்லவில்லை."

"போதும், மரியாதையாய்ப் போய் படு. என் கண்முன் நிற்காதே, போ"

விமலா கண்ணைத் துடைத்துக்கொண்டே சாப்பாட்டைக் கொண்டுபோய் சமையல் அறையில் வைத்து மூடிவிட்டுப் போய் படுத்துக்கொண்டாள். அவள் கண்களிலிருந்து நீர் வழியத் தொடங்கிற்று. அழுகையை அடக்கிக்கொண்டு குழம்பினாள்.

"அவள் ஏதேதோ சொல்லிவிட்டுப் போனாள். அதைச் சொன்னால் இவரோ சீறி விழுகிறார். ஒரு சங்கதியும் எனக்குத் தெரியவில்லை. கஷ்டப்படுவது நான். கடவுளே, என் வாழ்க்கை இனிமேல் இப்படித்தான் போகுமா?......?அவள் வேறு வந்து வேதனையைப் பெருக்கி விட்டாளே!......பெண் பிறவி எடுப்பது புண்பட்ட நெஞ்சத்தால் புழுவாய்த் துடித்துச் சாவதற்குத் தானா? என்றெல்லாம் எண்ணி மனம் கலங்கினாள். பக்கத்தில் குழந்தை நிம்மதியாய்த் தூங்கிக்கொண்டிருந்ததைத் திரும்பிப் பார்த்தாள்.

"ஐயோ! உன்மீதாவது அவர் அன்பாய் இருக்கக்கூடாதா? உன்னைக் கண்ணெடுத்தும் காண்பதில்லையே! நான் செய்த பாவத்தை நீயும் செய்தாயா! என் வயிற்றில் பிறந்தாயே! கடவுளே! அன்பில்லாத கணவருடன் இனி எப்படித்தான் காலந் தள்ளுவேன்?" என்று மேலும் பலவாறு எண்ணி வருந்தினாள். குழந்தையை அன்புடன் அணைத்துக்கொண்டு, கண்ணீர் வடித்துக்கொண்டே அயர்ந்து தூங்கிவிட்டாள்.

நள்ளிரவு சுமார் ஒரு மணி இருக்கும். விமலா படுக்கையை விட்டு எழுந்தாள். ஒவ்வொரு நிமிஷமும், அமைதியோ ஆனந்தமோ இல்லாமல் புழுவாய்த் துடித்துக் காலந் தள்ளுவதைக் காட்டிலும் இந்த உலகத்தைவிட்டே போய்விட வேண்டுமென்று உறுதிகொண்டு விட்டாள். பக்கத்தில் படுத்திருந்த அன்புக் குழந்தையைப் பரிவோடு பார்த்தாள். ஆனால், நீண்டநாள் வேதனைப்பட்டு துணிவுகொண்ட நெஞ்சமும் கொஞ்சம் தளரவேயில்லை.

"உன் தலை விதிப்படி ஆகட்டும். இனி என்னால் வேதனை தாங்க முடியாது. நான் செத்த பிறகாவது உன்மேல் அன்பு கொண்டு உன்னைக் காப்பாற்றட்டும்" என்று துணிவுடன் எழுந்தாள். கூடத்திற்கு வந்தாள். அவளுடைய கணவர் அங்கே காணவில்லை. திடுக்கிட்டுப் போய்விட்டாள்! வீடு முழுவதும் தேடினாள். எங்கும் காணவில்லை. மேலும், திகிலடைந்தாள்.

அவளுடைய துணிவெல்லாம் தூளாகிவிட்டது. அவள் பட்ட வேதனைக்கு அளவேல இல்லை. கண்ணீர் வடித்துக்

கொண்டே இரவு முழுவதும் விழித்திருந்தாள். பொழுது விடிந்த பிறகும் அவர் திரும்பி வரவேயில்லை. அவள் என்ன செய்வதென்றே தோன்றாமல், திக்பிரமை அடைந்தவளைப்போல சிலையாய் உட்கார்ந்து விட்டாள்.

* * *

மறுநாள் காலை.

"அவள் ரொம்பவும் நல்ல பெண். நல்ல அழகி. பொறுமையே உருவெடுத்தவள். இப்படிப்பட்ட புருஷனும் அவளுக்கென்று வாய்த்தாரே! அவள் என்ன பாபம் செய்தாளோ?" என்று மிகவும் இரக்கத்துடன் தன் கணவர் இராஜசேகரிடம் கூறினாள், இரஞ்சனி.

"நீ போய் விமலாவிடம் நடந்ததைச் சொல்லிவிட்டு வா, இரஞ்சனி"

"நான் எப்படி இதைச் சொல்லுவேன். ஏற்கனவே அவள் வேதனையால் மெலிந்து, ஒடுங்கி, உருக்குலைந்து கிடக்கிறாள். இன்னும் இதை வேறு சொன்னால் அவள் மனதில் இடி விழுந்தாற்போல இருக்குமே! நீங்கள் எப்படியாவது அவரை வீட்டில் கொண்டு போய்ச் சேர்த்து நல்வழிப்படுத்த வேண்டும்".

"என்ன இரஞ்சனி! அவர் என்ன, சிறு குழந்தையா; புத்தி சொல்லித் திருத்துவதற்கு? அறிவைக் காற்றிலே பறக்க விட்டு, அற்பர்களோடு உறவுகொண்டால் இப்படித்தான் புத்தி கெட்டு, புகழ் கெட்டு அலைவார்கள். சேரிடமறிந்து சேரவேண்டாமா? அவர் நன்றாக அனுபவிக்க வேண்டும். பட்டால்தான் தானாகத் திருந்துவார்."

"ஐயோ, அவள் பாபம், பேதைப் பெண். அவளுக்காகவாவது நாம் இரங்க வேண்டாமா? நீங்கள் எப்படியாவது....."

"நான் என்ன செய்வேன், இரஞ்சனி? சட்டம் எல்லோருக்கும் பொதுவானதுதானே?"

"போதுமே, உங்கள் சட்டமும் நீங்களும். விஷயம் வெளியே தெரிந்து அவருடைய மானம் போவதற்கு முன் நீங்கள் ஏதாவது செய்துதான ஆகவேண்டும்!"

"பார்க்கலாம், இரஞ்சனி. என்னால் முடிந்ததைச் செய்கிறேன், நீ உடனே போய் அவள் எப்படி இருக்கிறாள் என்று பார்த்து அவளுக்கு ஆறுதல் சொல்."

உடனே இரஞ்சனி விமலாவின் வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றாள். இராஜசேகரும் ஆபீசுக்குப் புறப்பட்டுப் போய்விட்டார்.

* * * *

"உமக்கு எத்தனை நாளாக இந்தப் பழக்கம் உண்டு? உண்மையைச் சொல்லிவிடும்"—இராஜசேகர் அதிகார தோரணையில் கேட்டார்.

"எனக்கு அந்தப் பழக்கமே கிடையாதே"—என்று சாதித்தார் தணிகாசலம்.

"என்னிடம் பொய் சொல்லித் தப்பித்துக்கொள்ள முடியாது.....இன்ஸ்பெக்டர் சார், நீங்கள் தயவு செய்து போகலாம். நான் பார்த்துக் கொள்ளுவேன். (இன்ஸ்பெக்டர் வெளியே போய்விட்டார்)......எத்தனை நாளாக இந்தப் பழக்கம்? சீக்கிரம் சொல்லும்."

"என்னைத் தவறாக இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள்."

"சரி, இருக்கட்டும். 'நீலத்திரை மருந்துக் கடை"க்கு போவதுண்டா?"

இதைக் கேட்டதும், ஒரு வேளை இவர் இரஞ்சனியின் கணவராக இருப்பாரோ என்று எண்ணிச் சற்று திகிலடைந்து," எப்பொழுதாவது போவேன்" என்றார் தணிகாசலம்.

"எதற்காக?"

"கடைக்காரரைப் பார்ப்பதற்காக. அவர் என் நண்பர்."

"எவ்வளவு காலமாக?"

"சுமார் ஐந்து அல்லது ஆறு மாதம், இருக்கலாம்."

"அப்படியானால், அவ்வளவு காலமாக உமக்கு இந்தப் பழக்கம் உண்டு என்று சொல்லும்."

"நீங்கள் தவறாக நினைக்கிறீர். பனைமரத்தின் கீழ் பால் குடித்தாலும் "கள் குடிப்பதாய்த்தான் சொல்லுவார்கள். அது போல......"

"போதும், நிறுத்தும். திருட்டுத்தனமாக கலப்புச் சாராயத்தைக் குடித்ததுமல்லாமல் பொய் வேறு சொல்லுகிறீரா? என்னை 'நீலத்திரைக்' கடையில் பார்த்ததாக நினைவிருக்கிறதா? அந்தக் கடையைச் சோதனையிட்டுக் கள்ளச் சாராயத்தைக் கைப்பற்றினேன். இப்பொழுது அந்தக் கடைக்காரன் கூண்டிலிருக்கிறான். அவன் மட்டுமல்ல. மருந்துக் கடைகளில் நீலத்திரையை அடையாளமாகத் தொங்கவிட்டு அதன் பின்னால் மதுபானங்களை விற்று வந்த கடைக்காரர்கள் பலரைப் பிடித்து கூண்டிலடைத்திருக்கிறேன். என் மனைவி இரஞ்சனி இப்பொழுது விமலாவிடம் எல்லாவற்றையும் சொல்லிக்கொண்டிருப்பாள். ஒரு குழந்தைக்குத் தந்தையாகியும், வீட்டைச் சற்றும் கவனிக்காமல் கயவர்களோடு சேர்ந்துகொண்டு திருட்டுத்தனமாய்க் குடிக்கிறீரே, உமக்கு மானமே கிடையாதா? என்ன மனிதன் ஐயா நீர்?" என்றெல்லாம் ஆத்திரம் பொங்கக் கூறினார் இராஜசேகர்.

தணிகாசலம் தலையைத் தொங்கவிட்டுச் சிலைபோல நின்றிருந்தார். அவமானத்தால் அவர் உடல் சுக்குபோலச் சுருங்கிற்று.

"அரசாங்கத்தின் சட்டத்தை மீறிய குற்றமே மிகப் பெருங்குற்றமாகும். மேலும், திருட்டுத்தனமாய்த் தயாரிக்கப்பட்ட கலப்புச் சாராயத்தைக் குடிப்பதால் குடலைக் கெடுத்துக் கொள்ளுகிறீரே தவிர இதனால் உமக்கோ உமது மனைவி மக்களுக்கோ என்ன லாபம்? என்ன சுகம்? நேற்று நீர் 'நீலத்திரை மருந்துக் கடையில் குடித்துவிட்டுத் திரும்பியதைப் பார்த்தேன். வெளியே வந்ததும் உம்மைக் கைது செய்ய நினைத்தேன். ஆனால், உம்மை ஏற்கனவே பார்த்திருந்ததால் நீர் யார் என்பதைத் தெரிந்து கொள்ளுவதற்காகவும், மேலும் துப்பறிய வேண்டி

மென்று எண்ணியதாலும் உம்மை மறைவாய்ப் பின் தொடர்ந்தேன். நீர் வீட்டுக்குள் நுழையும்பொழுது உமது வருகையை ஆவலுடன் எதிர்பார்த்து சன்னலின் முன் நின்று கொண்டிருந்த விமலாவைப் பார்த்தேன். நீர் விமலாவின் கணவர் என்பதைத் தெரிந்துகொண்டேன். உம்மை அங்கே கைது செய்தால் அக்கம் பக்கத்திலுள்ளவர் வேடிக்கை பார்க்க வந்து விடுவார்கள். அதனால் உமது மானம் போய்விடுமே என்றெண்ணி, விலாசத்தை மட்டும் குறிப்பிட்டுக்கொண்டு வீடு திரும்பினேன். ஆனால், நீர் மறுபடியும் நள்ளிரவில் குடித்துவிட்டுத் தெருவில் கூடமாடிச் சென்றிருக்கிறீர். இன்ஸ்பெக்டர் உம்மைப் பிடித்துக் கொண்டு வந்தார். உமது செய்கைக்காக நான் மிகவும் வருந்துகிறேன். சட்டப்படி உமக்கு சிறைத் தண்டனை கிடைக்கும். குற்றத்தை ஒப்புக்கொண்டு, அந்தப் பழக்கத்தையே அடியோடு மறந்துவிடுவதாக வாக்குறுதி தந்தால் உம்மை விடுதலை செய்வேன்" என்று உள்ளங் குமுறக் கூறி முடித்தார்.

தணிகாசலம், குனிந்த தலையை மெதுவாக நிமிர்த்தி, "நான் செய்தது தவறுதான். என்னை மன்னித்து விடுங்கள். இனி குடியைக் கனவிலும் நினைக்கமாட்டேன்" என்று மனம் உருகக் கேட்டுக்கொண்டான். அவர் கண்ணிலிருந்து ஒரு துளி நீர் சிந்திற்று.

இராஜசேகர் இரக்கப்பட்டு எழுந்து வந்து, தணிகாசலத்தின் முதுகில் தட்டிக் கொடுத்துக்கொண்டே, "கற்றறிந்தும் தீயோர் நட்பால் மதியிழந்து இவ்வாறு தீய காரியங்களைச் செய்யலாமா? இனிமேலாவது ஒழுங்காக நடந்து கொள்ளுங்கள். மனைவி மக்களிடம் அன்பாய் வாழ முயற்சி செய்யுங்கள......" என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தார்.

அப்பொழுது ஒரு தாணாக்காரன் அவர் முன் வந்து, சலாம் போட்டு நின்றான். "ஐயா, மருந்துக் கடைக்காரர்களைக் கைது செய்த செய்தி ஊரெல்லாம் பரவி விட்டது. திருட்டுச் சாராயம் விற்ற கடைகளின் மேல் மக்கள் கல்லை வீசுகிறார்கள். எங்கும் ஒரே ஆர்ப்பாட்டம். கள்ளச் சாராயம் விற்றவர்களுக்காகக் கொடும்பாவி கட்டித் தெருவிலே இழுத்துச் சென்று கொளுத்துகிறார்கள். கமிஷனர் உங்களை உடனே காண வேண்டுமென்கிறார்" என்று கூறினான்.

"சரி. இதோ வருகிறேன்......தணிகாசலம், நீங்கள் போகலாம். இனியாகிலும் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டுப் பரபரப்புடன் சென்றார் இராஜசேகரன்.

தலை குனிந்தவாறே வெளியே சென்றார் தணிகாசலம்.

வீட்டுக்குச் சென்றதும் கட்டிலின்மேல் மரம்போல் சாய்ந்தார் தணிகாசலம். அவர் போகு முன்பே இரஞ்சனி எல்லா விஷயத்தையும் விமலாவிடம் தெரிவித்துவிட்டுப் போய்விட்டாள். ஆனால், விமலா அதை அறிந்ததாக வெளிக்குக்காட்டிக் கொள்ளாமல், அவருக்குக் காபி போட்டுக்கொண்டு வந்து கொடுத்தாள்.

தணிகாசலம் காபியை வாங்கிக்கொண்டு விமலாவின் கையைப் பற்றினான்.

"விமலா" என்று புது அன்புடன் கூறினான். விமலாவின் உள்ளத்தில் மகிழ்ச்சி பிறந்தது. புன் முறுவல் செய்து கொண்டே கையை விடுவித்துக் கொண்டாள்.

தணிகாசலம் காபியை ஒரே மூச்சில் குடித்து முடித்தார். ஆனால், சிறிது நேரத்தில் 'லொட லொட' வென்று வாந்தி எடுத்துவிட்டார்.

வாயைக் கழுவ தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள் விமலா. தணிகாசலம், மீண்டும் வாந்தி எடுத்தார். அப்பொழுது கொஞ்சம் இரத்தமும் வந்தது. விமலா மிகவும் பயந்து விட்டாள். தணிகாசலம் மனதிலும் சற்றும் திகில் பிறந்தது. விமலா அடுத்த வீட்டுக்காரரிடம் சொல்லி டாக்டரை அழைத்துவரச் செய்தாள்.

"விமலா, என் வயிறு என்னவோ, செய்யறதே. என்னால் தாங்க முடியவில்லையே" என்று படுக்கையில் புரண்டார் தணிகாசலம்.

"விமலா, இனி என்னால் பிழைக்க முடியாது. என்னை மறந்து விடு விமலா. நான் பாபி. எனக்கே நான் எமனானேன். ஐயோ, என் வயிறு எரிச்சல் தாங்க முடியவில்லையே. விமலா, என் வாழ்வு முடிந்துவிட்டது"

"என்ன அத்தான்! என்ன என்னவோ பேசுறீங்க. நீங்க பயப்படவேண்டாம். டாக்டர் வந்து மருந்து கொடுத்தால் எல்லாம் சரியாய்ப் போய்விடும்" என்று விமலா தைரியம் கூறினாள். ஆனால், அவளுடைய மனதில் இருந்த அச்சத்திற்கு அளவே இல்லை.

"இல்லை, விமலா, உனக்குத் தெரியாது. நான்........என் குடலை எடுத்துவிட்டேன்...ஆ...இனி என்னை மறந்துவிடு...... சந்திரன் எங்கே......தூங்குகிறானா?...ஐயோ......"......புழுவாய்த் துடித்தார் தணிகாசலம்.

டாக்டர் வந்தார். நாடியைப் பார்த்தார். தணிகாசலம் மீண்டு வாந்தி எடுத்தார். இரத்தம் மேலும் அதிகமாய் வந்தது. அவர் உடம்பெல்லாம் வியர்த்து விட்டது. மேல் மூச்சு வாங்கிற்று. டாக்டர் ஏதோ மருந்தைக் கொடுத்துவிட்டு போய்விட்டார்.

"விமலா"......அதற்குமேல் தணிகாசலத்தால் பேச முடியவில்லை.

"அத்தான்" என்று அன்போடு கூறிவிட்டுப் பதிலை ஆவலோடு எதிர்பார்த்தாள் விமலா.

தணிகாசலம் வாய்திறக்க முயன்றார். ஆனால் முடியவில்லை. மேல் மூச்சுவாங்க, கையை நீட்டி ஏதோ பேச முயன்றார். கண்கள் சுழன்றன. மெதுவாகக் கை தாழ்ந்தது. தலையும சாய்ந்தது. "அத்தான்" என்று உலகமே அதிரும்படியாகக் கத்தினாள் விமலா.

அந்த ஒலி தன் காதில் விழாத தொலைவிற்குப் போய் விட்டார் தணிகாசலம்.

ஸ்ரீ சுயம்பிரகாச யோகினி

கே. ஈசுவரி அம்மாள் எம். ஏ.

★

தவ வலிமை பெற்ற பெரியார்கள் பலர் முற்காலங்களில் நமது நாட்டில் தோன்றி யிருக்கிறார்கள் என்று சரித்திரம் சொல்லுகின்றது. இது பொய்யல்ல உண்மை என்று தனது தூய வாழ்க்கையினூடே நிரூபித்துக் காட்டினார் ஸ்ரீ சுயம்பிரகாச யோகினி அம்மையார். இவ்வம்மையாரின் திருமொழிகளைக் கேட்டு பயனடைந்த பெண்மணிகள் பலர் கேரள நாட்டில் இன்னும் இருக்கிறார்கள்.

அம்மையார் கொல்ல வருடம் 1066 மார்கழி மாதம் கார்த்திகை நட்சத்திரத்தில் திருவிதாங்கூர்—நெடுமங்காடு தாலூகாவிலுள்ள ஒரு பிரபல நாயர் குடும்பத்தில் பிறந்தார். சிறு குழந்தையாக இருக்கும்போதே நல்ல சுறுசுறுப்புடனிருப்பார். பக்கத்து வீட்டுக் குழந்தைகளை வைது துன்புறுத்துவதில் அம்மையாருக்கு ஒரு தனி மகிழ்ச்சி. குழந்தைகளுக்கிடையே எப்பொழுதும் சண்டையை மூட்டி விட்டுக்கொண்டே யிருப்பார். தொல்லை பொறுக்காது, ஒருநாள் தாய் குழந்தையைக் கடும் தண்டனைக் குள்ளாக்கினாள். மனமுடைந்து போன குழந்தை கவலையே உருக்கொண்டாற்போல் மௌனமாகப் பலநாட்கள் ஒரு இடத்திலேயே பரசைவற்று இருந்து விட்டது. தாய் திடுக்கிட்டாள். ஐந்து வயதுக் குழந்தைக்கு இவ்வளவு பிடிவாதமா? நிலை தடுமாறிய தாய் குழந்தையை திருவனந்தபுரம்—தம்பானூர் சுப்பிரமணிய சுவாமிக் கோவிலுக்கு அழைத்துச் சென்றாள். அழுது கொண்டே யிருந்த குழந்தை களைப்பு மிகுதியினால் கோவில் மண்டபத்தின் ஒரு மூலையில் படுத்துத் தூங்கிவிட்டது.

தூக்கம் கலைந்து விழித்தபோது குழந்தையினது மனப்போக்கு முற்றிலும் மாறி யிருந்தது என்றாலும் பழைய கலகலப்பும், சுறுசுறுப்பும் திரும்பி வரவில்லை. எப்போதும ஓயாத சிந்தனைதான். எதைப்பற்றித்தான் மகள் இப்படிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறாள் என்று அறியாது திகைத்தாள் தாய்.

அம்மையார் பருவ மெய்ததும் மதுரைமாநகரில் அன்று ஒரு பிரபல வர்த்தகராக விளங்கிய ஸ்ரீ பைரவன் பண்டாரம் அவர்களுக்கு மகளை மணம் முடித்துக் கொடுத்தாள் தாய்.

இன்பம் நிறைந்த ஒரு இல்லற வாழ்க்கை மதுரையில் மெல்ல உருவாகிக்கொண்டே யிருந்தது. ஆனால் அது பூரண வளர்ச்சி யடையுமுன் கனிவின்றிக் கிள்ளி எறியப்பட்டது. ஆம், சுமார் ஆறுவருடக் காலந்தான் அந்த இல்லற வாழ்க்கை வளர்ந்தது. வ்யாபார விஷயமாகத் திருநெல்வேலிக்குச் சென்றிருந்த கணவர் திடீரென்று வீட்டுக்குத் திரும்பி வந்தார். வயிற்றை

வலிக்கிறது என்று படுக்கையில் சாய்ந்தார். அவ்வளவுதான் பிறகு அவர் எழுந்திருக்கவே இல்லை!

அம்மையாருக்குத் திருமண மாகும்போது பத்து வயது; கணவன் இறக்கும்போது பதினாறு வயது. நல்ல பருவமங்கை; விதவையாகி விட்டாள். இன்பக்கனவுகள் எல்லாம் நொறுங்கிச் சிதறின. இனி வாழ்ந்துதான் பயன்? தற்கொலை செய்ய முயற்சித்தாள். உறவினர்கள் சம்மதிக்கவில்லை; மீண்டும் திருமணம் செய்து வாழும்படி வற்புறுத்தினார்கள். அம்மையாருக்கு இது இஷ்டமில்லை. இல்லற வாழ்வே இனி வேண்டாமென்று முடிவு கட்டினார்; அதற்குப் பதிலாக, சன்னியாச வாழ்க்கையை மேற்கொள்ள ஆசைப்பட்டாள். மீண்டும் உறவினர்கள் தடுத்தனர். ஆனால் வெற்றி அம்மையாருக்குத்தான்.

திருவனந்தபுரத்துக்கு வந்தாள். திரு அய்யாசுவாமித் திருவடிகளிடம் சின்னாட்கள் உபதேசம் பெற்றாள். திரு அய்யாசுவாமி அவர்கள் அந்தக் காலத்தில் இந் நகரத்தில் மிகவும் பிரசித்தி பெற்றவராக விளங்கினார். ஸ்ரீ மூலம் திருநாள் மகாராஜாவுக்கு மத சம்பந்தமான விஷயங்களில் யோசனை கூறுபவர் என்ற முறையிலும், பிரிட்டிஷ் ரெஸிடன்ஸியிலே சூப்ரண்டாக வேலை பார்த்து வந்தவர் என்ற முறையிலும் மிகப் பிரபலமானவர். ஸ்ரீ சட்டம்பி சுவாமி அவர்களும், ஸ்ரீ நாராயணகுரு அவர்களும் இவரிடத்தில் 'உபதேசம்' பெற்றிருக்கின்றனர்.

திருவடிகளது காலத்துக்குப் பிறகு 'கொல்லத் தம்மை என்ற பெயரில் பிரபல மடைந்த ஸ்ரீமதி பிரம்மஞானானந்த ஸர்வஸாக்ஷி அம்ம திருவடிகளிடம் எட்டு வருடங்கள் உபதேசம் பெற்றார். இன்பம் நிறைந்த இவ் வருடங்களைப்பற்றி எங்கள் குருமாதா பிற்காலத்தில் அடிக்கடிச் சொல்வதுண்டு. துறவி வாழ்க்கை நடத்தவேண்டிய முறையை நனருகக் கற்றுத் தேர்ச்சி யடைந்த அம்மையார் 'கொல்லத் தம்மை' சமாதியானதும் குண்டறை—ஆசிரம காரியங்களைத் தாமே ஏற்றுத் திறமையாக நடத்தினார்.

காலம் செல்லச் செல்ல அம்மையாரது மனத்தில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. சமூக வாழ்க்கையிலிருந்து ஒதுங்கி வாழ்வது தவறு என்று பட்டது. வேதனைப்படுகின்ற ஆயிரக்கணக்கான மக்களிடையே வாழ்ந்து, அவர்களது கண்ணீரைத் துடைக்க முடியுமென்றால் அதை விடப் பெரிய பேறு வேறு இல்லை யென்று உணர்ந்தாள். வாழ்க்கையின் பரபரப்பே இல்லாத, அமைதியான குண்டறை—ஆசிரம வாழ்க்கை இனிமையானது என்றாலும் மேன்மையானது என்று அம்மையாருக்குத் தோன்றவில்லை. எனவே, திருவனந்த புரத்துக்கு வந்தாள். ஸ்ரீ சங்கரன் தம்பி அவர்களுடைய மனைவி வடசேரி அம்மை வீட்டில் ஸ்ரீ கொச்சு கல்யாணிப பிள்ளை போன்ற பெண்மணிகளின் உதவியால் 'மகிளா மந்திரம்' என்ற ஸ்தாப

னத்தை நிறுவினர். இந்த அரிய ஸ்தாபனத்தை நடத்தும் பொறுப்பு பிற்காலத்தில் ஸ்ரீசின்னம்மா என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சுயம்பிரகாச ஆசிரமம்

அம்மையாரது 'உபதேசம்' பெற ஏராளமான சிஷ்யர்கள் அம்மையாரால் நிறுவப்பட்ட 'சுயம்பிரகாச ஆசிரமத்திற்கு' வந்து தங்கினர். இவர்களில் மணமானவர்களும, ஆகாதவர்களும், குழந்தைகளும் உண்டு. யோகினி அவர்களின் முக்கிய சிஷ்யர்களாக விளங்கியவர்கள் டாக்டர் கே. மாதவன் பிள்ளை அவர்களும், அவர் மனைவியும், லெப்டினன்ட்ர்னல் சேற்றூர் கோபாலன் நாயர் அவர்களுமாவர். திரு. கோபாலன் நாயர் அவர்களை தற்பொழுது சுவாமி குருதாஸ் ஆனந்த் என்று அழைத்து வருகிறோம்.

சுயம் பிரகாச ஆசிரமம் குளத்தூர் என்ற கிராமத்தில் தான் அமைக்கப்பட்டிருக்கிறது. இதை நிறுவுவதற்கு டாக்டர் கே. மாதவன் பிள்ளை அவர்கள் பல வகைகளிலும் உதவி புரிந்திருக்கிறார். அம்மையாருக்குப் பிறகு குருதாஸ் ஆனந்த் அவர்கள் தான் ஆசிரமத்தை நிர்வகித்து வருகிறார்.

தனது நண்பர்களின் அன்றாட வாழ்க்கையில் ஏற்படுகின்ற அல்லல்களைப் போக்க எத்தனை எத்தனையோ வழிகளை (சித்திகளை) அம்மையார் கையாண்டார். ஒரு முறை கர்னல் கோபாலன் நாயர் அவர்கள் திடீரென்று நோய்வாய்ப்பட்டார். ஆசிரம கர்மங்களை ஒழுங்காகச் செய்ய இயலாது படுத்த படுக்கையாகி விட்டார். டாக்டர் ரங்காச்சாரி அவர்கள் வந்து பார்த்துவிட்டு, பயங்கர குடல்நோய் ஒன்று பிடித்திருக்கிறது என்றும், எனவே மருத்துவ மனைக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்றும் வற்புறுத்தினர். கர்னல் அவர்களுக்கு ஆசிரமத்தை விட்டு மருத்துவ மனைக்குச் செல்ல விருப்பமில்லை. குரு மாதா சொல்லிக் கொடுக்கின்ற பாடங்களைப் பாதியில் விட்டு விடவும் அவருக்கு இஷ்டமில்லை. ஆனால் நோய் குணமாக வேண்டுமே? அம்மையார் ஏழு நாட்களுக்கு ஏதோ மந்திரம் சொல்லி திருநீற்றை அள்ளி விட்டார். அவ்வளவுதான் எட்டாவதுநாள் அவரது வயிற்றுவலி இல்லாது போயிற்று! ஆனால் அம்மையாரது சொந்த வயிற்றில் வலி எடுக்க ஆரம்பித்து விட்டது! இங்ஙனம் பிறருக்கு வருகின்ற துன்பங்களைத்தான் ஏற்றுக்கொண்டு அவர்களுக்குத் துன்பத்திலிருந்து விடுதலை அளிக்க எங்கள் குரு மாதா என்றுமே தயங்கியதில்லை.

இதற்குச் சான்றாக இன்னொரு நிகழ்ச்சியை இங்கே குறிப்பிடுகிறேன். அம்மையார் பவானி என்ற கிராமத்தில் தங்கியிருந்த சமயம். அந்த ஊர் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ துரைசாமி ஐயர் அவர்களுக்குத் திடீரென்று மூளைக்குழப்பம் ஏற்பட்டது. பல மருத்துவ நிபுணர்கள் சிகிச்சை செய்தார்கள். பய

னில்லை. கடைசியில் அம்மையார் அவர் தலையில் கொஞ்சம் திருநீற்றை ஜபித்து இட்டார். இட்டதும் உடனேயே அவா சுய உணர்வு இழந்து தரையில் விழுந்து விட்டார். மயக்கம் விட்டு அவர் தன்னுணர்வு பெற்றபோது மனோநிலை சரியாகி விட்டதை அறிந்து எல்லோரும் சந்தோஷப்பட்டார்கள். எங்கள் குருமாதா என்ன மந்திரம் ஜபிப்பார்களோ தெரியாது, இது போன்ற அற்புதச் செயல்கள் பல பலமுறை செய்திருக்கிறார்கள் என்பது மட்டும் உண்மை.

ஒருநாள் கங்காநதிக் கரையில் அம்மையாரும் சிஷ்யரான ஸ்ரீ குருதாஸ் ஆனந்த் அவர்களும் 'ஹரிச்சந்திரகட்ட' என்ற இடத்தில் நின்று வேத விஷயங்களைப்பற்றி விவாதித்துக் கொண்டிருந்தனர். திடீரென்று அம்மையார் சிஷ்யரிடம் கண்களை மூடச் சொன்னார்; பிறகு திறக்கச் சொன்னார். திறந்த போது ஹரிச்சந்திர கதையிலுள்ள உள்ளத்தை உருக்குகின்ற மயான காட்சியைக் கண்டது போன்ற ஒரு பிரமை சிஷ்யனுக்கு! ஆம், இது வெறும் பிரமைதான்; எனாலும் இது எப்படித் தோன்றியது?

இது போன்ற பல அற்புதங்களை அம்மையார் செய்திருக்கிறார்கள். ஆனால் இத்தகைய அற்புதங்களில் நாங்கள் அதிக கவனம் செலுத்தக் கூடாது என்று அடிக்கடிச் சொல்லுவார். ஏனென்றால், இத்தகைய அற்ப விஷயங்களில் மனம் லயித்து விட்டால் ஆத்மாவுக்கு விமோசனம் கிடைக்கின்ற புனித நிலையை 'நிர்வாண நிலையை' அடைய இயலாது என்றும் சுட்டிக் காட்டுவார்.

எங்கள் குரு மாதாவுக்கு கலையிலும், இலக்கியத்திலும், அரசியலிலும், விஞ்ஞானத்திலும், ஜோதிடத்திலும் நல்ல அறிவிருந்தது. நாட்டியக்கலையிலும், இசைக்கலையிலும் எங்கள் குருமாதாவுக்கு அளவு கடந்த பற்றுதல் உண்டு. முருகக்கடவுளைப் பற்றியும், கிருஷ்ணபரமாத்மாவைப் பற்றியும் ஏராளமாய் பாடல்கள் தமிழ்மொழியில் இயற்றியிருக்கிறார்கள். நல்ல நுண்ணிய அறிவு படைத்தவராதலால் எங்கள் யோகினிக்கு மிக அழகாகவும் இனிமையாகவும் பேசத் தெரியும். அம்மையாரது கருத்து நிறைந்த சொற்பொழிவுகளைக் கேட்டு இன்புறாதவர்களே எங்கள் கிராமத்தில் இல்லையென்று சொல்லலாம். கடவுள், ஆத்மா மனித வாழ்க்கை போன்ற பெரிய விஷயங்களைப்பற்றி தெளிவாகச் சிந்தனை செய்து தனது அபிப்பிராயங்களை அம்மையார் வெளியிடுவதுண்டு. மனித ஆத்மாவுக்கு மோட்சம் கிடைக்க வேண்டுமென்றால், இவ்வுலக வாழ்க்கை தூய்மை நிறைந்ததாக இருக்க வேண்டுமென்றும, 'அகண்ட பிரமசரியம்' மிக மிக அவசியமென்றும் அடிக்கடி சுட்டிக் காட்டுவார். பற்றற்ற மனப்பாங்கும், தியாக உணர்ச்சியும் இருந்தால் தான் ஆத்மிக வாழ்க்கையில் மனநிம்மதி பெற முடியுமென்று குரு மாதா நம்பியிருந்தார். இந்து புராணங்களிலுள்ள தத்துவங்களையும் தற்கால

சமூக வாழ்க்கையின் நெறிகளையும் ஒன்றாக இணைந்தார். ஒவ்வொரு நபரும் அவரது வாழ்க்கையைத் தூய்மைபபடுத்தி விட்டால் அந்தச் சமூகம் தூய்மையாகிவிடும் என்பது அம்மையாரின் கருத்து.

சமூகம் முன்னேற வேண்டுமென்றால், அதில் வாழ்கின்ற பெண்கள முதலில் முன்னேற வேண்டுவது மிக மிக அவசியம். அவர்களது வாழ்க்கை தூய்மையாக இருப்பதோடு சமூகத்திற்குச் சேவை செய்ய வேண்டுமென்ற ஆசையும் அவர்களுக்கு இருக்க வேண்டுமென்று குரு மாதா சொல்லுவார். எங்கள் ஆசிரமத்தில் சமூக சேவை செய்ய விருப்பமுள்ள பெண்களுக்குத் தனி இடம் அமைத்துக் கொடுத்திருக்கிறோம். பெண்ணினத்தின் முன்னேற்றத்திற்காக அம்மையார் தனது வாழ்க்கையையே அர்ப்பணம் செய்து விட்டார் என்று சொல்லலாம். டாக்டர் கே. மாதவன் பிள்ளை அவர்களுக்குச் சொந்தமான 'கணேச விலாஸ்' மாளிகையில் 1638-ம் ஆண்டில் 'தத்துவ போதினி ஸமாஜத்தை' அமைத்தார். இந்த சமாஜத்தின் சார்பில் அடிக்கடி பஜனைகள், பிரசங்கங்கள் முதலியவை நடத்தப்படும். அம்மையார் இனிய தமிழ்மொழியில் தான் பேசுவார்கள். விஷயம் எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் அம்மையார் மிகவும் எளிய நடையில் இனிய உவமைகளால் லாகவமாக விளக்கிக் கூறுவார். நூற்றுக்கணக்கான பெண்மணிகள் எங்கள் குரு மாதாவின் இத்தகைய கருத்து நிறைந்த சொற்பொழிவுகளைக் கேட்டு பயனடைந்திருக்கிறார்கள்.

முதலில் மத சம்பந்தமான விஷயங்களைச் சொல்லிக் கொடுக்கும் ஒரு சிறிய ஸ்தாபனமாகத்தான் எங்கள் ஆசிரமம் அமைக்கப்பட்டது. ஆனால் அதிர்ஷ்ட வசமாக ஆசிரமம் இன்று வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டு உழைக்கு மளவுக்கு வளர்ச்சியடைந்திருக்கிறது. ஆசிரமத்தோடு சேர்ந்து ஒரு 'அநாதை மந்திரமும்' ஸ்தாபித்திருக்கிறோம். ஹரிஜன பாலகர்களுக்கு அங்கு இட மளிக்கப்படும். சமூக அமைப்பில் மிகவும் தாழ்ந்த நிலையிலிருக்கின்ற ஹரிஜனங்களுக்கிடையே ஆசிரம அங்கத்தினர்கள் உழைத்து வருகிறார்கள். கிராமப் பஞ்சாயத்துக்கள் நடத்துவதற்கும், மதப் பிரச்சாரக் கூட்டங்கள் நடத்துவதற்கும், கிராமங்களைச் சுத்தப்படுத்துவதற்கும் இவர்கள் ஹரிஜனங்களுக்கு உதவி புரிந்து வருகிறார்கள். அம்மையாருக்கு இந்தப் பாமர மக்களுக்கிடையே உழைப்பதென்றால் மிகவும் சந்தோஷமாக இருக்கும். நெறி தவறாத வாழ்க்கையின் அவசியத்தைப் பற்றியும், தர்ம சிந்தனையின் உயர்வைப் பற்றியும், உழைப்பின் தேவையைப் பற்றியும், உடல் நலத்தைப் பாதுகாக்கும் முறைகளைப் பற்றியும் இனிய தமிழ்மொழியில் தெளிவாக இவர்களுக்கு எடுத்துரைப்பார். ஒவ்வொரு வாரமும் பொதுக் கூட்டங்கள் நடத்தப்படும். இந்த ஏழை மக்களின் குடும்ப பிரச்னைகள் கூட இக் கூட்டங்களில் விவாதிக்கப்படும். ஜாதி

மதவேற்றுமைகள் இருக்கக் கூடாதென்று அம்மையார் தீவிரமாக வாதிடுவதுண்டு. எங்கள் ஆசிரமத்துக்கு அருகிலுள்ள ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமிக் கோவிலுக்குள் எல்லா ஜாதியினர்களுக்கும் எதேஷ்டமாய் நுழைந்து ஆண்டவனை தரிசிக்கலாம். எவ்விதத் தடையும் கிடையாது.

ஆசிரமத்தின் அன்றாடச் செயல்களை நிர்வகிப்பதற்குத் தேவையான பொருள் ஈட்ட அம்மையார் மலாயா நாட்டுக்குச் சென்றிருந்தார். அப்போது அங்குள்ள பலரும் அம்மையாரைத் தங்கள் குரு மாதாவாக ஏற்றுக்கொண்டு உபதேசம் பெற்றனர்.

ஆசிரமத்தின் சமூகத் தொண்டைப் பலப்படுத்தும் பொருட்டு பன்னிரெண்டு நபர்கள் கொண்ட ஒரு குழுவை சிருஷ்டித்தார். இதிலுள்ள அங்கத்தினர்களுக்கு சமூகத் தொண்டு செய்யத் தேவையான பயிற்சி அளிக்கப்பட்டது.

இங்ஙனம் நாட்டு மக்களுக்காக சுமார் முப்பது வருடங்களுக்குமேல் சலியாமல் உழைத்த எங்கள் குருமாதா தமது 53-வது வயதில் (1942 டிசம்பர் மாதம்) சமாதி நிலையை அடைந்தார். அவரது ஆத்மா சாந்தி பெறட்டும்.

ஆரணி-குப்புசாமி முதலியார் எழுதிய

கற்பக சுந்தரி

அல்லது

மூன்று கறைகளின் மர்மம்

இதில் பொதுவாய் ஆண்பாலார் பெண்பாலார் யாவர்க்கும் பல நற்புத்திகளைப் புகட்டத்தக்க விஷயங்களே அடங்கியிருக்கின்றன. நம் சகோதர சகோதரிகள் அவசியம் படிக்கத்தக்க கதை.

இரண்டு பாகங்கள் அடங்கியது

இதன் விலை ரூபா 3. (தபாற் செலவு வேறு.)

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167, சென்னை-1.

தமிழ்த்தாய்

'நலங்கிள்ளி'

★

காற்றாடே தவழ்ந்துவரும் மலர்கள் நாற்றம்,
காதுவழி புகுந்துளத்தைக் கிளுகிளுக்கும்
சாற்றரிய குழலிசையும் விண்படாத்தில்
தகத்தகென ஒளிர்வண்ணச் சேர்க்கையாலே
மாற்றியழித் தொருகணத்தில் புதுக்கித் தீட்டும்
மனமீர்க்கும் ஓவியமும்; திங்கள் கண்டே
சேற்றெழுந்த அல்லிமகள் முகமலர்ந்த
திறன் நோக்கித் தமிழணங்காள் கவிதை தந்தாள். 1

வான் முழக்கும் இடியாலும், கொடிபோல் மின்னி
வழங்குகின்ற காராலும்; தோகை தூக்கித்
தானாக ஆடுகின்ற மயில்கள் கூத்தும்
தடதடெனப் பொழிகின்ற மாரிவெள்ளம்
கானாறாய்க் காட்டாறாய் அருவியாகக்
கலகலெனச் சலசலெனக் கடுகியோடும்
தேனான இசையுங் குயிலிசையும் சேர்த்தே
செந்தமிழாள் கூத்திசையைச் செகமளித்தாள். 2

வெங்களிறின் நடைநோக்கி, வால்முறுக்கி
விழிசிவந்து போரெதிர்க்கும் புலியை நோக்கி
எங்கணுமே ஈடில்லாக் கான்வாழ் வேந்தன்
ஏறரிமாப் பெருமிதமும் நோக்கிக் கண்டு
பைங்கணரவின் சீற்றம்; பரிமா வேகம்
பாரினது பரிப்புந் திண்மை சேர்த்து
மங்காது புகழோங்கி வாழ்வதற்கே
மாப்புகழ் நம் தமிழன்னை வீரந் தந்தாள். 3

தாமரையில், முழுநிலவில், முகத்தைக் கண்டும்
தண்குவளைப் பைம்போதில், விழியைக் கண்டும்
ஊமையனாய்க் கிழத்தியைக் கண்டுழவன் சொக்கும்
உளங்கண்டு, வான்வளர்ந்து கடல்தொட் டீர்க்கும்
தேமதுர நிலைகண்டு, வல்லி சுற்றித்
திகழ்கின்ற மரநோக்கி விண்ணூடேகும்
வாமமிகு கார்முகில்திண் மலைபிணைக்கும்
வகைகண்டு தமிழ்நங்கை காத லீந்தாள். 4

தாய்மையதின் அன்புளத்தில் நண்பர் சிந்தும்
தகைசான்ற புன்கணீர் அருவியன்பில்
நோய்மையினில் துன்பத்தில் வறுமை வாட்டும்
நுவலரிதாம் இடுக்கண்ணில் பரிவு காட்டி
ஆய்ந்தமைந்த நெறிகூறி அன்பு காட்டும்
அயலாரின் உளநெகிழ்வில், குழவி பண்பில்
தோய்ந்தஅறக் கடவுளடி தொழுநெறிக்காம்
தூநெறியைத் தமிழ்த்தாய் இப்பார் தொகுத்தாள். 5

இலக்கிய உலகம்

சேந்தமிழ்ப் பித்தன்

(சென்ற இதழின் தொடர்ச்சி.)

14. பிறதுறை எழுத்தாளர்கள்

156 தாமச் கெம்பிச் (Thomas 'Kempis) 1380 - 1471 ஆங்கிலக் கட்டுரையாளர்.

157 லூசியச் அப்ளியச் (Lucius Apuleius) கி. பி. 125— மெய் விளக்கக் கொள்கையாளர்,

158 அரிச் டாடில் (Arish Datil) கி. மு. 385 - 322 யவன மெய் விளக்கக் கொள்கையாளர்; பலதுறை எழுத்தாளர்.

159 மார்கச் அரேலியச் (Marcus Aurelius) கி. மு. 121 - 180 மெய் விளக்கக் கொள்கையாளர், இலத்தின் வரலாற்றினர், கட்டுரையாளர்,

160 சியார்ச் பாரோ (George Borrow) 1803 - 1881 ஆங்கிலக் கட்டுரையாளர்.

161 சேம்ச் பாச்வெல் (James Boswell) 1740 - 1795 ஆங்கில வாழ்க்கை வரலாறாசிரியர்.

162 சான் புன்யன் (John Bunyan) 1628 - 1688 தொடர் உருவகக் கதையாசிரியர்.

163 எட்மண்ட் பருக் (Edmund Burke) 1729 - 1797 ஆங்கில அரசியல் எழுத்தாளர்.

164 சூலியச் சீசர் (Julius Caesar) கி. மு. 100 - 44 இலத்தீன் வரலாற்றினர்.

165 தாமச் கார்லைல் (Thomas Carlyle) கி. மு. 1795 - 1881 ஆங்கில வரலாற்றாசிரியர்.

166 வில்லியம் காக்ச்டன் (William Caxton) 1421-1491 ஆங்கிலக் கட்டுரையாளர்.

167 மார்கச் டுலிச் சிசேரோ (Marcus Tullius Cicero) கி. மு. 106 - 43 இலத்தின் கட்டுரையாளர்.

168 சார்லச் ராபர்ட் டார்வின் (Charles Robert Darwin) 1809 - 1882 ஆங்கிலக் கட்டுரையாளர்.

169 டெமாச்தின்ச் (Demosthenes) கி. மு. 385 - 322 யவன சொற்பொழிவாளர்.

170 ரின் டெச்கார்டி (Rene Descartes) 1596 - 1650 ஃபிரெஞ்சு மெய்விளக்கக் கொள்கையாளர்.

171 இபிக்டெடச் (Epictetus) கி. பி. 60 - யவன மெய்விளக்கக் கொள்கையாளர்.

172 இபிக்ரச் (Epicurus) கி. மு. 342 - 270 யவன மெய்விளக்கக் கொள்கையாளர்.

173 அனடோல் ஃபிரான்ச் (Anatole France) 1844 - 1925 ஃபிரெஞ்சு கட்டுரையாளர்.

174 சின் ஃபிராய்சார்ட் (Jean Froissart) 1338-1410 ஃபிரெஞ்சு வரலாற்றினர்.

175 சான் கால்ட் (John Galt) 1779-1839 ச்காட்லாந்து எழுத்தாளர்.

176 எட்வர்ட் கிப்பன் (Edward Gibbon) 1737 - 1794 ஆங்கில வரலாற்றினர்.

177 ஆடம் லிண்ட்சே கார்டன் (Adam Lindsay Gordon 1833 - 1870 ஆத்திரேலியக் கவிஞர்.

178 சான் ரிச்சர்ட் கிரீன (John Richard Green) 1637 - 1883 ஆங்கில வரலாற்றினர்.

179 சேக்கப லட்விக் கரோல் கிரிம் (Jacob Ludwig Carol Grimm) 1785 - 1863 செர்மன் பழம் புனை கதையாசிரியர்.

180 வில்எல்ம் கரோல் கிரிம் (Wilhelm Carol Grimm) 1786 - 1859 செர்மன் பழம் புனை கதையாசிரியர்.

181 ஃபிராங்காய்ச் பைர்ரி கில்லியும் கியுசட் (Francois Pierro Guilleume Guizot) 1789 - 1874 ஃபிரெஞ்சு வரலாற்றினர்.

182 ரிச்சர்ட் அக்ரிட் (Ricard Hakluyt) 1553 - 1616 ஆங்கில வரலாற்றினர்.

183 என்றி ஆல்லம் (Henry Hallam) 1777 - 1859 ஆங்கில வரலாற்றினர்.

184 வில்லியம் ஆச்லிட் (William Hazlitt) 1778 - 1830 ஆங்கிலக் கட்டுரையாளர்.

185 சியார் வில்எல்ம் எகல் (Georg Wilhelm Hegel) 1770 - 1831 செர்மன் மெய்விளக்கக் கொள்கையாளர்.

186 ஓ என்றி (O Henry) 1862 - 1910 அமெரிக்கச் சிறுகதை எழுத்தாளர்.

187 எராடடச் (Herodotus) கி. மு. 490 - 420 யவன வரலாற்றினர்.

188 ஆலிவர் வென்டெல் ஓல்ம்ச் (Oliver Wendell Holmes) 1809 - 1894 அமெரிக்க எழுத்தாளர், மருத்துவருமாவர்.

189 டேவிட் இயூம் (David Hume) 1711 - 1776 ச்காட்லாந்து வரலாற்றினர்.

190 சேம்ச் என்றி லை அண்ட் (Jan e[illegible]Henry Leigh Hunt) 1784 - 1859 ஆங்கிலக் கட்டுரையாளர்.

191 தாமச் என்றி அக்ஃச்லி (Thomas Henry Huxly) 1825 - 1895 ஆங்கிலக் கட்டுரையாளர்.

192 கலைமுனைவர். சாமுவேல் சான்சன் (Dr. Samuel Johnson) 1709 - 1784 ஆங்கிலச் சொற்றொகுதி தொகுத்தவர்; கட்டுரை யாசிரியருமாவர்.

193 ஃபிளாவியச் சோசப்பச் (Flavius Josephus) 57 - 97 சிவிச் நாட்டு வரலாற்றினர்.

194 இம்மான்யுல் காண்தி (Immanuel Kant) 1724 - 1804 செர்மன் மெய்விளக்கக் கொள்கையாளர்.

195 சார்லச் லேம்ப் (Charles Lamb) 1775 - 1834 ஆங்கிலக் கட்டுரையாளர்.

196 ஆண்டுரு லேங் (Andrew Lang) 1814 - 1912 ச்காட்லாந்து எழுத்தாளர்.

197 ஃபிரான்சிச் டக் டி லா ரோஃபியு கால்டு (Francis Duc-de-la Rochefoucauld) 1613 - 1680 ஃபிரெஞ்சு எழுத்தாளர்.

198 காட்ஃபிரிட் வில் எல்ம் வான் லிப்னிட்ச் (Golttfried Wilhelm Von Leibnitz) 1646 - 1716 செர்மன் மெய்விளக்கக் கொள்கையாளர்.

199 லிவி (Livy [Titus Livius]) கி. மு. 53—கி. பி. 17 இலத்தின் வரலாற்றினர்.

200 மார்டின் லூதர் (Martin Luthur) 1483 - 1546 செர்மன் சமய எழுத்தாளர்.

201 நிக்கோலோ மக்கியவெல்லி (Niccolo Machiavelli) 1469-1527 இத்தாலியக் கட்டுரையாசிரியர்.

202 மாரைச் மைட்டர்லிங்க் (Maurice Maeterlinck) 1862— பெல்சிய கட்டுரையாளர்.

203 சர். தாமச் மலோரி (Sir. Thomas Malory) 1434 - 1470 ஆங்கிலப் பழம்புனை கதையாசிரியர்.

204 பெர்னுட் டி மேண்டி வில்லி (Bernard de Mandeville) 1670 - 1733 ஆங்கில மெய்விளக்கக் கொள்கையாளர், வசை எழுத்தாளர்.

205 மார்கச் வாலெரிச் மார்டியலிச், மார்டியல் (Marcus Valerius Martialis. Martial) கி. பி. 38 - 41—102-103 இலத்தீன் பொருள் செறிதொடரெழுத்தாளர்.

206 ஐன்ரிச் கார்ல் மார்க்ச் (Heinrich Karl Marx) 1818-1883 செர்மன்; அரசியல் பொருளியல் ஆய்வெழுத்தாளர்.

207 சான் ச்டார்ட் மில் (John Stuart Mill) 1806 - 1873 ஆங்கில மெய்விளக்கக் கொள்கையாளர்.

208 சான் என்றி நியூமேன் (John Henry Newman) 1801 - 1890 ஆங்கில எழுத்தாளர்.

209 சர். ஐசக் நியூடன் (Sir Isaac Newton) 1642 - 1727 ஆங்கில இயற்கை மெய்விளக்கக் கொள்கையாளர், அறிவியல் கலைஞர்.

210 ஃபிரிட்ச் வில் எல்ம் நீட்சி (Friedrich Wilhelm Nietzsche) 1844-1900 செர்மன் மெய்விளக்கக் கொள்கையாளர்.

211 ப்ளெய்ச் பாச்கல் (Blaise Pascal) 1623 - 1662 ஃபிரெஞ்சு மெய்விளக்கக் கொள்கையாளர்.

212 வால்டெர பேட்டர் (Walter Pater) 1839 - 1894 ஆங்கிலக் கட்டுரையாளர்.

213 சாமுவேல் பெப்பிச் (Samuel Pepys) 1632-1703 ஆங்கில நாட்குறிப்பெழுத்தாளர்.
214 பிளேட்டோ (Plato) கி. மு. 429 - 347 யவன மெய்விளக்கக் கொள்கையாளர், சாக்ரடீசின் மாணவர்.
215 பிளினி (Pliny) கி பி. 23 - 79 உரோம வரலாற்றாசிரியர்.
216 மார்செல் ப்ரூச்ட் (Marcel Proust) 1871-1922.
217 சோசப் இயர் நெச்ட் ரினன் (Joseph Ernest Renan) 1823 - 1892 ஃபிரெஞ்சு கட்டுரையாசிரியர்.
218 சான் ரச்கின் (John Ruskin) 1819 - 1900 ஆங்கிலத் திறனாய்வாளர், கட்டுரையாளர்.
219 ஆர்தர் ச்கோபென் அயர் (Arthur Schopenhauer) 1788-1860 செர்மன் மெய்விளக்கக் கொள்கையாளர்.
220 செனிகா (Seneca) கி. மு. 5 - கி. பி. 65 இலத்தின் மெய் விளக்கக் கொள்கையாளர்.
221 சாக்ரடீச் (Socrates) கி. மு. 470-399 யவன மெய் விளக்கக் கொள்கையாளர்.
222 ராபெர்ட் சௌதி (Robert Soxthey) 1774 - 1843 ஆங்கிலக் கட்டுரையாளர்.
223 எர்பெர்ட் ச்பென்சர் (Herbert Spencer) 1820 - 1903 ஆங்கிலக் கட்டுரையாளர்.
224 பருச் ச்பினோசா (Baruch Spinoza) 1632 - 1677 டச்சு மெய் விளக்கக் கொள்கையாளர்.
225 சர். ரிச்சர்ட் ச்டீல் (Sir. Richard Steele) 1671 - 1729 ஆங்கிலக் கட்டுரையாளர்.
226 ட்ரானக்விலச் கயச் சுடோனிச் (Tranquillus Gaius Suetonius) ஏறத்தாழ கி. பி. 50 - 120 உரோம வரலாற்றாசிரியர்.
227 சோனதன் ச்விஃப்ட் (Jonathan Swift) 1667 - 1745 ஆங்கில வசை எழுத்தாளர்.
228 கார்னிலியச் டேசிட்ச் (Carnelius Tacitus) 54 - 120 இலத்தின் வரலாற்றினர்.
229 இப்பாலிட் அடால்ப் டெய்ன் (Hippolyte Adolphe Taine) ஃபிரெஞ்சு திறனாய்வாளர்-வரலாற்றாசிரியர்.
230 சேன் சாக்ச்ட் (Jan Tschakste) 8859 - முதல் லாட்வியா குடியரசுத் தலைவர், எழுத்தாளர்.
231 வால்டேயர் (Voltaire) 1694-1678 ஃபிரெஞ்சு கட்டுரையார்.
232 க்செனோபான் (Xenophon) கி. மு. 430 - 355 யவன வரலாற்றினர்.

16. மேலைநாட்டுப் பெண் எழுத்தாளர்கள்

233 விக்கி பாம் (Vicki Baum) இவர் செர்மன் எழுத்தாளர். 'கிராண்ட் உணவு விடுதி' 'Grand Hotel', 'மறைவுச் சொற்றொடர்' 'Secret Sentence', 'விழும் விண் மீன்' 'A Falling Star' என்ற அரிய நூல்களை ஈன்றெடுத்தவர்.

234 மார்கரெட் கென்னெடி (Margaret Kennedy) 'நிலை அணங்கு' 'The Contant Nymph' என்ற நூலால் சிறப்புற்றார். இஃது திரைப்படமாக வெளிவந்துள்ளது. இக் கதை பன்முறை நாடகங்களாக நடிக்கப் பட்டது. இவர் நூலில் உண்மை வாழ்க்கையின் எதிரொலியைக் காணலாம்.
235 செல்மா லாகெர்லூஃப் (Selma Lagerloff) இவர் ச்வீடன் பெற்ற புகழ்மிக்க ஆசிரியர். 1909-ம் ஆண்டில் இலக்கியப் பணிக்காக நோபல் பரிசு பெற்றார். 'Gosta Berlings Saga' என்ற நூல் இவரைப் புகழேணியில் ஏற்றியது 'Invisible Links', Jerusalem', 'The Adventure of the Nils', 'An Autobiograph' என்பன இவரின் பிற அரிய குழந்தைகள்!
236 ரோச் மேகாலே (Rose Macaulay) இப் புதுமைப் புதிர் ஆசிரியை. 'Potterism told by a Idiot' என்ற நூலால் ஏற்றம் பெற்றார்.
237 ரிபெக்கா வெச்ட் (Rebecca West) இவர் 'Harriet Hume', 'The Thinking Reed' என்ற இலக்கியக் குழந்தைகளால் ஒண்புகழெய்தினார். இன்றைய நாகரிக உலகச் சிக்கல்களை மெய்விளக்கக் கொள்கையோடு பொருத்தி ஆராய்ந்து எழுதும் சீரிய கருத்தோவியர்.
238 விர்சினா உல்ஃப் (Virgina Wolf) இப்புதின ஆசிரியை. 'Jacob's Room', 'Mrs Dalloway', Orlando', 'To The Light House', 'The Waves' என்பனவற்றின் அன்னையராவார்.
259 சி. பி. ச்டெர்ன் (G. B. Stern) இவரின் அரிய படைப்பு 'Tents of Israel' என்பது.
240 இடித் வார்டன் (Edith Wharton) இம் மகளாரின் 'George Eliot' என்னும் நூல் இவரது இளம்படைப்பாகும். 'The Age of Innocence', 'The Children', 'Hudson River Beacketed' என்பன ஏனைய சீரிய இலக்கியக் குழந்தைகளாகும்.
241 சிக்ரிட் அன்ட் செட் (Sigrid Undset) இவர் 'The Acts', 'The Son Avenger', Kristin Lauransdatter' (including 'The Cross' and 'The Mistress of Husaby') என்பன மனித உணர்ச்சிகளைத் தூண்டிக் கவரும் பண்புடைய இலக்கியங்களாம்.

இவர்கள் நீங்கலாக பற்பல துறைகளான வரலாறு, செலவு நூல், மெய்விளக்கக் கொள்கைத் துறை, கடிதங்கள், அறிவியல், கணக்கு, வாழ்க்கை வரலாறு ஆய துறைகளில் சீரிய படைப்புக்களை ஈன்றளித்த இலக்கியத் தாயார் சிலரைக் காணலாம்.—

242 பேராசிரியர் பரி (Prof. Bury) இவர் 'History of Ancient Greece,' 'History of Rome' என்பவற்றைப் படைத்

தார். 'The Idea of Progress' என்ற நூல் இவரின் புலமையையும் ஆற்றலையும் வெளியிடும் ஒப்பற்ற நூல்.

243 பேராசிரியர் ஜி. எம். டிரிவிலியன் (Prof. G. M. Trovelyan) 'இங்கிலாந்தின் வரலாறு' என்பது இவரின் சிறிய நூல். ஆங்கில வரலாற்றில் சில பருவங்களை மிக அழகாக வடித்தெடுத்தவர்.

244 ஆர்தர் ப்ரையண்ட் (Arthur Bryant) இரண்டாம் சார்லசின் வாழ்க்கையை எழுதினவர்.

245 லைட்டன் ச்ட்ராச்சி (Lvtton Strachey) இவரின் 'Eminent Vietorians', 'Queen Victoria', 'Elizabeth and Essex' என்பன யாவருமறிந்த ஒண்மை நூல்கள்.

செலவு நூற்கள்

246 H. V. மார்ட்டன் (H. V. Morton) இவர் பல நூற்களின் ஆசிரியர்.

247 லாரென்ச் அப் அரேபியா (Lawrence of Arabia) இவரின் 'The Seven Pillars of Wisdom' படிக்கவேண்டிய புத்தகத்தில் ஒன்றும்.

இல்லயிர் பெல்லாக் (Hilaire Belloc), ஏ. ஜி. மாக்டொனெல் (A. G. Mccdonell), ஈவ்லின் வா (Evelyon Waugh), எச். எல். மென்க்கென் (H. L. Mencken) என்பவர்கள் வகைத்துறை நூலுலகத்தில் சிறப்புள்ள எழுத்தாளர்களாவர்.

ராபர்ட் லிண்ட் (Robert Lynd), பிவிர்லி நிகோலச் (Beverly Nichols) என்பவர்கள் கட்டுரை வன்மைக் கைவரப் பெற்றவர்கள்.

ஈவ்லின் அண்டர் இல் (Evelyn Under Hill), பெட்ரண்ட் ரச்சல் (Betrand Russell), சி. இ. எம். ஃபோட் (C. E. M. Poad) என்போர் மெய் விளக்கத் துறையில் கொடுமுடியை எய்திய எழுத்தாளர்கள்.

விண்டேம் லிவ்ச் (Wyndham Lewis) எழுதிய 'Time and Western Man' என்ற நூலும், ஒட்டோ ச்பெங்லெர் (Otto Spengler) எழுதிய 'Decline of the West' என்ற நூலும் சிறியவை.

பேராசிரியர் சர். ஃபேம்ச் ஃபீன்ச் (Prof. Sir. Fames Feans) எழுதிய 'The Mysterious Universe' ஓர் அரியதொரு புத்தகமாகும். பேராசிரியர் ஃபுலியன் அல்சலி அறிவியலியலில் சிறிய எழுத்தாளராவர்.

எப். டபிள்யு. என். சல்லிவேன், கணக்கு, அறிவியல் துறை எழுத்தாளராவர்.

ஜி. டி. எச். கோல் (G. D. H. Cole), சர் வில்லியம் பெவ்ரிட்ச் Sir William Beveridge), பேராசிரியர் கினிச் (Prof. Keynes), பேராசிரியர் ராபின்ச் (Prof. Robbins), பேராசிரியர் க்லே (Prof Clay) என்போர் பொருளியல் துறை எழுத்தாளர்களாவர். பேராசிரியர் லச்கி (Prof. Laski) வாழ்வியல் துறைச்சிக்கலை ஆய்ந்தெழுதியவர்.

சி. எச். லிவிச் (C. S. Lewis), காம்ப்டன் மேக்கென்று (Compton Mackenzie), அப்டன் சிங்க்லேயர் (Upton Sinclair), பிட்டர் செனே (Peter Cheyney), இடித் சிட்வெல் (Edith Sitwell), அச்பெர்ட் சிட்வெல் (Osbert Sitwell), சாச்சி வெரெல் சிட்வெல் (Sacheverell Sitwell), அலெக்சி டால்ச்டாய் (Alexi Tolstoy), ஜியார்ச் பாரடின் (George Borodin), ஒலஃப் ச்டாப்லிடன் (Olaf Stapleton), லிவிச் மம்ஃபோர்ட் (Lewis Mumford), ஏ. என். ஒயிட் எட் (A. N. White Head), எச். எம். டாம்சன் H. M. Tomlinson), இவார் பிரௌன் (Ivor Brown), ஜே. ஏ. ச்பென்டர் (J. A. Spender), ஆர். டி. கௌல்ட் (R. T. Gould), டுருதி செயிர்ச் (Dorothy Sayers), அகாதா கிரிச்டி (Agatha Christie), நகய்யோ மார்ச் (Nagio Marsh) என்போர் இலக்கியச் சோலையில் வளர்ந்துள்ள இனிய பசிய பண்ணைகள்!

சிம்னான் (Simenon) என்ற ஃபிரெஞ்சு ஆசிரியர் 'Inspector Maigret' என்பதை உருவாக்கியவர். இவரின் படைப்புக்கள் பதினெட்டு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இருபத்திரண்டு கதைகள் திரைப்படமாக்கப்பட்டுள்ளன.

'Servitude et Grandeurs Francaises' என்ற நூலை இயற்றிய அராகானும் (Aragon) 'Cecile Among the Pasquiers' என்ற நூலை எழுதிய ஜியார்ச் டுஎமிலும் (Georges Duhamel), 'A Woman Among the Pharisees' என்ற பொத்தகத்தைத் தீட்டிய ஃபிரான்காய்ச் மரியக்கும் (Franbois Mauriac), 'France' என்பதை எழுதிய பைர்ரி மெயில்லாட்டும் (Pierre Maillaud), 'Le Silence de la Mer' என்ற நூலை எழுதிய வெர்கரும் (Vercors) போன்ற அளவிடற்கரிய எத்துணையோ எழுத்துழவர்கள் வான மீன்களை ஒப்ப வளைந்து சிறந்து வாழ்கின்றனர். சாந்துணையும் கற்று வரினும் சாகாத கல்வியினை என்னென்றும் போற்றல் ஒல்லும்?

இலக்கியச் சோலையில் மேலெழுந்த வாரியான ஒரு கண்ணோட்டம் விட்டோம். இந்த மிகச் சிறிய முயற்சியே களைப்பை உண்டாக்கி விட்டது போலத் தோற்றமளிக்கிறது. அறிவு என்பது வானைவிடப் பரந்தது; கடலைவிட ஆழமானது; நிலத்தைவிடப் பெரியது; மனத்தைப்போல நுண்ணுணர்வினது. அறிய அறியத்தான அறிவின் அளப்பரும் களிப்பருள் தெரியும்!

இலக்கியம் மக்களின் தனிப்பெருங் குழந்தைகளில் முதன்மையானது. வாழ்க்கையில் விடுதலையை விழையும் உணர்ச்சி மிக்க அறிவு உயிர்களை ஒரு தனி உலகத்திற்கு அழைத்துச் சென்று, அன்னையாய், ஐயனாய், செவிலியாய், தோழியாய், தோழனாய், தலைவனாய் அமைந்து அன்பாறுதலளித்துப் புரப்பது இலக்கியக் கலை. வாழ்க்கையில் சோர்வை, வெறுப்பை, ஆறுதலின்மையை, அமைதியின்மையை, புறக்கணிப்பை, பூசலை, இகலை, பழியை பொய்மையை, போலியை, வாழாமையை, இடுக்கணைக் கண்டு, கலுழ்ந்து, கலங்கி, களைத்து அலமுற்று மயங்கும் பகுத்தறிவினருக்கு நம்பிக்கையை, நல்லமைதியை, ஆறுத

இதயராணி

ஆர். மணி.

★

இரவு மணி 1 அடித்தது. எங்கும் ஒரே இருள்; ஒரே அமைதி. பகலெல்லாம் சந்தடியிலும், கூக்குரலிலும் சிக்கி அல்லலுற்ற கொழும்பு மாநகர் அயர்ந்து நித்திரை போயிற்று. பேயும், அணங்கும், கழுகும் ஆங்காங்கே சிற்சில இடங்களில் மட்டும் சுற்றித் திரிந்தன.

ஆனால் ரவிச்சந்திரன் மட்டும் தூங்காமல் மாடியின் வராண்டாவில் இங்கு மங்குமாகத் தள்ளாடித் தள்ளாடி நடந்துகொண்டிருந்தான். அவன் முகமெல்லாம் ஜில்லென வியாபித்திருந்தது. அவனுடல் உலைகளத்திலிட்ட இரும்பெனக் காய்ந்தது. தொடர்ந்து கடந்த மூன்று நாட்களாக அவன் காதைத் துளைத்துவந்த விம்மல் ஒலியும், விக்கலொலியும் சிறிது ஓய்ந்தது., அவன் வாய் மட்டும் முணக ஆரம்பித்தது.

"அவள் துரோகி, கற்பிழந்தவள், என் ராணி கற்பிழந்தவள். அவள் ஒரு நுகரப்பட்ட மலர். நான் வஞ்சிக்கப் பட்டேன். வஞ்சகி; எவ்வளவு தூய்மையாகப் பேசினாள். நம் காதல் நிர்மலமான வானில் களங்கமற்று ஒளி வீசும் மதி என்றாளே! எங்கே அவள். தூய்மை! சதிகாரி, சதிசெய்து விட்டாளே. அவளை நான் எவ்வளவு உள்ளன்புடன் நேசித்தேன். என் வாழ்வு, ஜீவன் எல்லாம் அவளே என்றல்லவா இருந்தேன். அவள் பசப்பினாள்; வேஷ மிட்டாள். கற்பிழந்தும் கற்பரசி போன்று நடித்தாள். அன்பரே என அருமையாகக் கொஞ்சினாள். எங்கே அவள் அன்பு; சாகஸக்காரி. அவளின் சாகஸ வலையில் என்னை வீழ வைத்ததோ டல்லாமல் அவளை என் மனைவி என்று உலகோர் அறியவும் ஆக்கிக் கொண்டாளே. அவளை நான் அணு வணுவாகச் சிதைத்தாலும் தகும். அவளின்

லணைப்பை, அழகை, அருளை, விரிவுணர்வை, உரிமையை, விடுதலையுணர்ச்சியை, பெருமையை நல்கும் எழிற் கனவுக்குமரியே கலைச் செல்வி: மொழிக்கொரு முகமும், காலத்திற்கொரு கோலமும், நிலைக்கொரு காட்சியும் நல்கும் இப்பொது மகளாகிய ஒப்பில் கற்புச் செல்வி அறிஞர் தம் வழிபாட்டுக்கும், வணக்கத்திற்கும், வாழ்த்திற்கும் உரியவளாகிறாள்.

இலக்கிய உலகம் இன்ப உலகம். இன்னெழிற் கனவுகள் மலிந்த பொன்னெழில் சோலை. உண்மை விளக்கும் ஒண்மை அன்னை. எண்ணங்கள் உருவாகும் வண்ண உலைக் கூடம். வாழ்வின் தலையாய பேறுகளில் இலக்கியத்தைச் சுவைப்பது தனிப் பெரும் பேறு. இலக்கிய உணர்வு அமைவதற்கு அறிவு படிப் படியாகப் பல நிலைகளைக் கடக்க வேண்டும். உணர்வை நுண்மை யாக்கி, அறிவை ஒண்மை யாக்கி, வாழ்வை இனிமை யாக்கி வளஞ்செய்யும் பேரழகுப் பெரு நிலையம் இலக்கிய உலகம்.

துரோகத்திற்கு ஏற்ற பரிசு அதுதான்" என்று அவனது வெந்த மனதின் வேதனை முனகலாக வெளிக் கிளம்பியது. அவனால் அதற்கு மேல் நிற்க முடியவில்லை. கால்கள் நிலை தளர்ந்தன; உடல் கிடுகிடுவென ஆடியது; தடாலென வராண்டாவின் ஓரத்திலிருந்த ஒரு மேஜைமீது விழுந்தான். மேஜையும் கீழே சாய்ந்தது. சிறிது நேரம் அங்கே அமைதி நிலவியது. ரவிச்சந்திரனுக்கு அப்பொழுதுதான் சுய நினைவு உதித்தது. கண் விழித்துப் பார்த்தான். மேஜையினுள் வைக்கப்பட் டிருந்த பழைய காகிதங்க ளெல்லாம் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன. உடனே எழுந்து ஸ்விட்சைத் தட்டினான். வராண்டா முழுவதும், ஒளி வீசியது. எங்கேயாவது உடம்பில் காயம் பட்டதோ என்று கூடப் பார்க்கவில்லை. சிதறிக் கிடக்கும் காகிதங்க ளிடையே பழைய டைரி ஒன்று இருக்கக் கண்டான். அதைமட்டும் கையி லெடுத்துக் கொண்டு சோபாவில் போயமர்ந்து டயரியின் ஒவ்வொரு பக்கமாகப் புரட்ட ஆரம்பித்தான். கடந்த காலச் செய்திகள் ஒன்றன்பின் ஒன்றாக அவன் மனத்திரையில் காட்சியளிக்க ஆரம்பித்தன.

* * * *

"அவள் ஒரு சிங்களப் பெண்; அவன் ஒரு இந்தியன். ஆனால் சிலோனில் வசிக்கும் ஒரு ராணுவ அதிகாரி! இவர்களிருவரும் ஒரு புக் ஸ்டாலில் (Book Stall) சந்திக்கிறார்கள். அது முதல் அவர்களின் காதல் வளர ஆரம்பித்தது. அன்று மாலை 5 மணியிருக்கும். அவர்களிருவரும் சந்திக்கும் பொழுது. பூம், பூம் என்று ஹாரன் கொடுத்த படியே ஒரு பிளஷர் வந்து புக் ஸ்டாலின் முன நின்றது. சடக்கெனத் திரும்பினான் ரவிச்சந்திரன். அழகே உருவான ஒரு சேல்விழிச் சிங்காரி பிளஷரை விட்டு இறங்கிக் கொண்டிருந்தாள். அந்தச் சிங்களச் சிங்காரியின் அரை நிர்வாண ஆடை அவன் கருத்தைக் கவர்ந்தது. அவளையே விழுங்கி விடுபவன் போல் பார்த்துக் கொண்டிருந்தான். கைப் பையை எடுத்துக் கொண்டு அவசரமாக ஸ்டாலின் (Stall) உள்ளே நுழைந்துக் கொண்டிருந்த அவள் மிகவும் வேகமாக அவனை அணுகிக் கொண்டிருந்தாள். அவன் நிலைமையை சமாளித்துக் கொண்டு முன் நோக்கி நடந்தான். இருந்த போதிலும் நாகரீகம் என்று சொல்லிக் கொண்டு அங்கங்கள் தெரியும்படி அலங்கோலமாய் ஆடை அணிந்திருப்பது அவனை சும்மா விடவில்லை. நடந்துகொண்டே திரும்பிப் பார்த்தான். ஒருமுறை, இருமுறை, மூன்றாம்முறை, அவசரமாக வந்துகொண்டிருந்த அவள் அவன் மேல் மோதினாள். இருவரும் ஒரு கணம் ஸ்தம்பித்து விட்டனர். கண்கள் ஒன்றோடொன்று சந்தித்தன.

"மன்னிக்க வேண்டும்" என அவளின் கொவ்வை வாய் கொட்டிய வார்த்தை அவனை ஆனந்தத்தி லாழ்த்தியது.

"மன்னிக்க வேண்டும்" அதே சொல்லை அவனும் முணகினான். இருவரும் பிரிந்தனர்.

* * * *

'மிஸ்டர், இந்த புத்தகங்களுக் கெல்லாம் பில் போடுங்கள்' என கவுண்டரில் இருக்கும் நபரை அவசரப் படுத்திக் கொண்டிருந்தாள் அவள். அவனும் அதே கவுண்டரை அடைந்தான்.

பில்லிற்குப் பணம் செலுத்த பர்ஸைத் திறந்தாள் அவள். மறுகணம் செய்வதறியாது திகைத்தான். சுற்றும் முற்றும் திரும்பிப் பார்த்தாள். அவனைத் தவிர வேறு யாரும் அங்கில்லை. அவளின் விழிகள் அவனைக் கண்டு மொழி பேச ஆரம்பித்தன. நிலையறிந்த அவன் பில்லிற்குப் பணம் செலுதத முன்வந்தான். மறுத்தாள் அவள். ஆனாலும் மறு மாற்றமின்றி அதை ஒப்புக் கொள்ள நிலைமை தூண்டியது. சிறிது நேரத்தில் இருவரும் புக் ஸ்டாலின் வெளியே காட்சியளித்தனர்.

"மன்னிக்க வேண்டும் ...... இதோ என் முகவரி ...... தயவு செய்து நாளை என்னிடம் வந்து பணம் பெற்றுச் செல்லுங்கள். தங்களின் உதவியை என்றும் என்னால் மறக்க முடியாது" என நன்றி கலந்த பார்வையுடன் அவனை உற்று நோக்கினாள்.

அவளின் தேன் மொழியிலே தெவிட்டாத இன்பங் கண்ட அவன் தன்னை அறியா வண்ணம், "சரிதான்" எனத் தலையசைத்தான்.

பிளஷர் ஸ்டார்ட் (Start) ஆனது. அவள் போய் வருகிறேன் எனக் கையசைத்தாள். அவன் அவளையே பார்த்துக் கொண்டு அசையாது நின்று விட்டான்; வண்டி மறைந்தது. அவள் தந்த முகவரி அவன் கையிலிருந்து கீழே நழுவியது. அவனின் சிந்தனையும் சிதறியது. கீழே குனிந்து நோக்கினான்.

"ராணி, ரெங்கசாமி நாயர், 18, செனய்நகர், கொழும்பு" என அவள் தந்த முகவரி முன்நின்றது.

"ராணி! ... ... இது அவள் பெயர். என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு சென்ற இதய ராணியின் பெயர். சிந்தனையைச் சிதறடிக்கும் அவளின் சிவந்த அதரங்கள்; உள்ளத்தை ஊடுருவிச் செல்லும் அவளின் வேல்விழிப் பார்வை; கருத்தைக் கவரும் கண்ணாடிக் கன்னங்கள்: ஆடவரின் அறிவைக்கூட மழுங்கச் செய்யும் அவளின் அன்ன நடை. இவைகளெல்லாம் என்னை ஆட்கொண்டனவே என அல்லலுற்றான். அந்தக் கண நேரத்தில் கணக்கற்ற எண்ண அலைகள் அவனின் உள்ள வானில் பிரயாணம் செய்ய ஆரம்பித்தன.

* * *

மறு நாள் காலை செனய் நகரடைந்தான். அவனின் வரவை எதிர்நோக்கி வழிமேல் விழி வைத்திருந்தவள் போல் வாசலின் முன் காட்சியளித்த அவள் புன்னகையை வரவேற்பாக அளித்தாள். அவன், சிறிது அவள் பக்கத்தில் நெருங்கவும், வெட்க மிகுதியால் தலை குனிந்த வண்ணம் வீட்டினுள்ளே ஓடினாள். ரவிச்சந்திரன் அவளைப் பின் தொடர்ந்தான். சிறிது நேரத்தில் பணத்துடன் அவன் முன் நின்றாள்.

"நான் இங்கு வந்தது பணம் வாங்குவதற்கல்ல. உன் மதி முகத்தை......"

அவளின் கொவ்வைச் செவ்வுதட்டிலே மறு முறையும் ஒரு மயக்கப் புன்னகை தவழ்ந்து மறைந்தது. அவனைத் தன் தந்தைக்கு அறிமுகப் படுத்தினாள் அவள்.

"வணக்கம்: நான் உமக்கு மிகவும் கடமைப் பட்டுள்ளேன்; ராணி உங்களைப் பற்றி மிகவும் சொன்னாள்."

"இல்லை; இது என் கடமை என்றான.

அவர் மெதுவாகச் சிரித்தார். சிறிது நேரத்தில் ஏதோ அவசர காரியமாக நாயர் வெளியே சென்று விட்டார். தனிமை கிடைத்த அந்த இரு இளம் உள்ளங்கள் கலந்து உறவாடின. களிப்பு மிகக்கொண்டன, கருத்து ஒற்றுமையைக் கண்டு. அவளின் விழிகளின் அசைப்பிலே மின்னிட்ட பொலிவு அவனை வா வா வென்று அழைப்பது போலிருந்தது. அவன் உடல், உள்ளமெல்லாம் போதை யேறியது. நிலைமை மறந்தான்; கட்டியணைத்தான். கணக்கற்ற முத்தங்கள் பொழிந்தான். மது உண்ட வண்டிடம் அகப்பட்ட மலரானாள் அவள். மறுகணம், அதோ அப்பா வரும் ஓசை கேட்கிறது. விடுங்கள் என்னை எனப் பதறினாள். உடனே விலகினர் இருவரும். இனிமேல் நடக்கப் போகும் அவர்களின் காதல் களியாட்டங்களுக்கு அன்றே ஒத்திகை போடப்பட்டது.

ரவிச்சந்திரன் நாயரிடம் வெளிச் செல்ல விடை கோரினான்.

"அடிக்கடி இங்கு வந்து செல்லுங்கள்."

மிகவும் நன்று என்று சொல்லிக் கொண்டே நடையைக் கட்டினான்.

ராணி அவனை யனுப்ப வாசலில் நின்றுகொண்டிருந்தாள்.

"மாலை 5 மணிக்கு இங்கு வருவீர்களா? ... அல்லது ..."

"நோ ... நோ ... கட்டாயம் வருகிறேன். நீ இதே இடத்தில் ரெடியாக நின்று கொண்டிருக்க வேண்டும், தெரிந்ததா?" என அவளின் கன்னத்தை மெதுவாகத் தட்டினான்.

இது முதல் அவர்கள் காதல் வளர ஆரம்பித்தது. சினிமா, டிராமா, வீட்டுத் தோட்டம், பீச்சு (Beach), பார்க் (Park) இவைகளெல்லாம் அவர்கள் காதல் விளையாட்டின் உறைவிடமாயின. மாலை வேளையிலே, மதுவுண்ட வண்டுகள் மகிழ்ச்சியுடன் ரீங்காரமிட்டு சுற்றித் திரியும வேளையிலே இருவரும் பீச்சை அடைவார்கள். அங்கு :—

ராணி! இந்த நீலவான் எவ்வளவு களங்கமற்று இருக்கிறது... இது அவன் கூறுவான்.

அது நம் மனதைவிட அவ்வளவு தூய்மையானதல்ல... இது அவள் கூறுவது.

இத்தென்றல் எவ்வளவு இனிமையாக இருக்கிறது இது அவள் கொவ்வைச் செவ்வுதடுக்கொட்டிய வார்த்தைகள்.

ஆம்: இது உன் ரோஜாக் கன்னத்தை மலர்விக்கிறது. இது அவன் பதில்.

இவ்வாறு, சிங்காரப் பண்ணிசைப்பிலே அவர்கள் காதல் வளர பஞ்ச பூதங்கள் ஒவ்வொன்றும் துணை புரிந்தன.

மாதம் ஒன்று உருண்டோடியது. ரவிச்சந்திரனின் விடுமுறையும் முடிந்தது. காதலர்களின் களிப்பும் கரைந்தது. மறுநாள் ராணுவப் பயிற்சிசாலை செல்ல ஆயத்தப் படுத்திக்கொண்டிருநதான்.

சார்...போஸ்ட்...எனக் கூறியவண்ணம் தபால்காரன் ஒரு ரிஜிஸ்டர் லெட்டரை நீட்டினன். கையொப்பமிட்டு அதை வாங்கி கவரின் மேலுள்ள தலைமை ராணுவ‍ப் பயிற்சி சாலையின் முத்திரையை உற்று நோக்கினன். ஏனோ அவன் கைகள் நடுங்கின. அவசர அவசரமாக கவரை உடைத்துப் பார்த்தான். அதில் அவனை வேலையினிமித்தம் கண்டிக்கு மாற்றியிருப்பதாக இருந்தது.

உலகமே இருண்டு விட்டதுபோல் அவன் கண்களுக்குக் காட்சியளித்தது. மயக்கம் வருவதுபோல் தோன்றியது. அவ்வாறே நாற்காலியில் சாய்ந்து விட்டான். சிறிது நேரம் கழித்து விழித்துப் பார்த்தான். ராணி அவன் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தாள். கடிதத்தை நீட்டினள் அவனிடம். கதறினள். கண்ணீர் வடித்தாள். அவசியம் கண்டிக்குத் தாங்கள போக/வேண்டுமா என வினவினள். என் ஒப்பந்தத்தின் பிரகாரம் இன்னும் இரண்டு வருடங்கள் அங்கு அவசியம வேலை செய்ய வேண்டும் என்றுன்.

அப்படியானல் நம் காதல்......

நம் காதல் அமரத்துவம் வாய்ந்தது. (ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்த போதிலும் என் இதயம் என்றும் என் ஆருயிர் ராணிக்கே...என ஆறுதல் அளித்தான்.

மறுநாள் கண்டிக்குப் புறப்பட ஆயத்தமானன். கண்ணீருடன் வழியனுப்பினள் அவள். காலமும் கடமையும், அந்த இளம் உள்ளங்களை வெட்டிப் பிரித்தன. கடிதங்கள் அந்த வெட்டிப் பிரித்த உள்ளங்களை ஒட்டியது.

தங்கள் வரவு நோக்கிக் கண்ணீர் உகுத்த வண்ணமிருக்கும் என் கயல் விழிகள் எனத் தன் பிரிவாற்றுமையைப் பற்றி விளக்கி வரைவாள் அவள். அன்பே உருவான தன் எழுத்துக்களால் ஆறுதலளிப்பான் அவன். ஒரு கடிதத்தில் அவள தான் பார்த்த சினிமாவைப் பற்றி விமர்சனம் தீட்டுவாள். மற்றொரு கடிதத்தில் தன் சினேகிதிகளுடன் படகுப போட்டி நடத்தியதைப் பற்றி விவரிப்பாள். இன்னுமொரு கடிதத்தில் இவள் பிக்னிக் சென்றதைப் பற்றி பிரமாதப் படுத்துவாள். இவ்வாறு உடைந்த உள்ளங்களுக்கு உறுதி அளித்த அந்தக் கடித இணைப்பு சுமார் இரணடு வருடகாலம் நீண்டது.

மூனரும் வருடம் ஆரம்பம். ரவிச்சந்திரன் தன் வேலை முடிந்து கொழும்பை அடைந்தான். மறைந்த மாணிக்கத்தை மறுபடியும் அடைந்தவள்போல் மகிழ்வெய்தினள் அவள். தன் அன்பு மொழிகளையே அணியாக அளித்தான் அவளுக்கு. பொலிவிழந்த அவள் மேனி மகிழ்ச்சியால் புது மெருகேறியது. மூன்றும் நாள் பத்திரிகை வெளி வந்தது. அதில் பிரபல

திருமணம் என்றத் தலைப்பில் ரவிச்சந்திரன், ராணி இவளிருவருக்கும் நேற்று பதிவுத் திருமணம் செய்து கொண்டார்கள் என அவர்களின் புகைப்படத்துடன் பொறிக்கப்பட்டிருந்தது.

* * * *

அன்று அவர்களிருவரின் முதல் இரவு......காதல் வானிலே ஜோடிப் புறுவெனத் திரிந்த அவர்கள் இன்பத்தின் எல்லையை எட்டிப் பிடிப்போம் என எண்ணி இறுமாந்திருந்தார்கள். ஆனல் அவர்கள் எண்ணியபடி நடக்கவில்லை. அவர்கள் கட்டிய இன்பக் கோட்டைகளெல்லாம் தகர்த்தெறியப் பட்டன. மகிழ்ச்சி நிரம்பும் என எண்ணிய அறையிலே மயானத்தின் அமைதி நிலவியது.

* * * *

மலர் பரப்பிய மஞ்சத்திலே, சந்தனம் சவ்வாது வாசனைகள் நிரம்பிய அறையிலே தன் தேன்மொழியாளின் தென்றல் வரவு நோக்கிக் காத்திருந்தான் ரவிச்சந்திரன். சலங்கை சிலுக்க, சிற்றிடை துவள அன்னம் புல்லின் மெல்லிய நடை நடந்து கையில் பாற்செம்புடன் உள்ளே நுழைந்தாள் ராணி.

வருக, வருக......அம்மையாரின் வரவு நோக்கி எவ்வளவு நேரம் காத்திருப்பது என வரவேற்றுன்.

அவள் புன்னகையே பதிலாக அளித்தாள். பாற்செம்பை அப்பால் வைத்துவிட்டு மெதுவாக அவன் பக்கத்தில் வந்தமர்ந்தாள்.

அவன் சிறிது அப்பால் நகர்ந்தான்.

ரவீ......என பேச்சை ஆரம்பித்த அவள் மீதிப் பேச்சை முடிக்க முடியாமல் மூச்சுத் திணறினள். பிறகு திடீரென எழுந்து வாந்தி எடுத்தாள். இதைக் கண்டு அஞ்சினன் அவன். உடனே ஒரு லேடி டாக்டருக்கு (Lady Doctor)ப் போன் (Phone) செய்தான். அவர் நன்ருக ராணியின் உடலை பரிசோதனை செய்துவிட்டு ரவிச்சந்திரனைத் தனியாகக் கூப்பிட்டு, மிஸ்டர் நீங்கள் இன்னும் சிறிது நாளில் ஒரு குழந்தைக்கு அப்பா ஆகப் போகிறீர்கள். இதைக் கேட்டதும் திகைத்தான் அவ்ன்.

டாக்டர் நன்ருகப் பரிசோதித்தீர்களா?

ஏன்? இதில் சந்தேகமா!

வணக்கம்: தாங்கள் போகலாம் என அவருக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டு நேராக ராணியிடம் சென்றுன. கண்ணீருடன் காட்சியளித்த அவள் அவனைக் கண்டதும் கோவெனக் கதறினள். நான சொல்வதைக் கேட்கவேண்டும் என மன்றுடினள்.

முடியாது. துரோகி! எல்லாம் எனக்குத் தெரியும். உன் சாகஸம் இன்றுதான் தெரிந்தது. உன் தேன் சொரியும் பேச்சு, வெளிவேஷம் என்னை மயக்கியது. உன் பேச்சை அமுதமென நம்பினேன். ஆலகால விஷமென எண்ணவில்லை. நான் ஏமாந்தேன் என வசைமாரி பொழிந்துவிட்டு அறையைவிட்டு வெளியேறினன். தன் கண்ணீரைக் காணிக்கையாக வைத்தாள்.

உதறித் தள்ளிவிட்டு வெளியே வந்தான். சிறிது நேரத்திற்கு முன் அவன் கட்டிய இன்பக் கோட்டை சரிந்தது. முதலிரவு அவர்களின்பத்தின் கடைசி இரவாக மாறியது.

நாட்கள் மூன்று கடந்தன. காதலர்களிடையே கருத்து வேற்றுமை நிலவியது. உண்மையை அவனிடம் எடுத்துரைக்க முன் வருவாள் அவள், அவனின் கோர முகத்தைக் கண்டதும அந்தத் தைரியம் நிலைத்து நிற்காது. முகத்தைக் கைகளால் பொத்தி விம்மி அழுதுகொண்டு திரும்பி விடுவாள்.

புத்தி சுவாதீன மற்றவன்போல் அங்குமிங்கும் அலைந்தான் அவன். அழுதழுது வீங்கிய அவளது மதிமுகம் மங்கிப் பிரகாசித்தது. இரவில் இருவருக்கும் தூக்கமில்லை. விம்மி விம்மி அழும் அவளின் ஒலியும், இடை இடையே முணரும் அவனது மந்த ஒலியுமே அந்தகாரத்தைப் பிளந்தது. அவனது சிந்தனையும் கலைந்தது.

* * * *

தொடர்ச்சியாக இருந்த விம்மி விம்மி அழும் ஓசை சிறிது ஓய்ந்தது. அமைதி எங்கும் நிலவியது. எங்கோ ஜாமச் சேவல் ஒன்று கூவும் ஓசையும் கேட்டது. 'என் உள்ளத்தைப் பறித்து என் வாழ்வின் இன்பத்தையெல்லாம் பாழாக்கினாளே பாதகி. அவள் இவ்வுலகில் இருப்பதைக் காட்டிலும் இறப்பதே மேல் நானே அவளுக்கு ஓர் முடிவு கட்டுவேன். இதோ! இந்தக் கத்தியால் அவளைக் கொன்று என் பாவத்தைத் தொலைப்பேன்' என உருவிய கத்தியுடன் மெதுவாக அறையினுள் நுழைந்தான். ஆனால் அவள் அங்கிருக்கவில்லை. எங்குதான முடிவில் இன்பம் காண முடியுமோ அங்கு சென்று விட்டாள். எல்லா இடங்களிலும் தேடினான். முடிவாகக் கடிதம் ஒன்று அவளின் படுக்கையிலிருக்கக் கண்டான். அதைப் பிரித்து ஆவலுடன் படிக்க ஆரம்பித்தான்.

"அன்பரே!

இன்று தாங்கள் என்னை வெறுக்கிறீர்கள். அன்பே, கண்ணே என மொழிந்த அதே வாயால் துரோகி, வஞ்சகி என வசைமாரி பொழிகிறீர். காரணம் நான் கற்பிழந்தவள் என்பதற்காக.

அதே சமயம் தாங்கள் நான் எவ்வாறு கற்பிழந்தேன் என்பதைச் சிந்திக்கத் தவறி விட்டீர்கள். வஞ்சகமும் சூதும், பொறாமையும் நிறைந்த இவ்வுலகில் தன்மான உணர்ச்சியுடன் ஒரு பெண் வாழ முடியாது என்பதை உணர்ந்த பினகூட நான் உயிருடன் இருக்க விரும்பவில்லை. அதுவும் கற்பிழந்தவளென்ற நிலையில் மனித வாழ்க்கையே முற்றிலும் நான் வெறுக்கிறேன். உண்மையை உணர்ந்த பின் என் உள்ளம் எவ்வளவு தூய்மையானது என்பதை அறிவீர்களென நம்புகிறேன். அந்த நம்பிக்கையே என் வாடிய உயிரைச் சாந்தியடையச் செய்யும்.

அன்று இரவு எட்டு மணியிருக்கும். நான் என் தோழிகளுடன் பீச்சிலிருந்து திரும்பி வீட்டை அடையும் பொழுது—

வாசலினுள்ளே நுழையும் போதே என் தந்தை யாரோ ஒரு இளைஞனுடன் பேசிக்கொண் டிருந்தார். அவர் நான் வருவதைக் கண்டதும், அதோ ராணியும் வந்துவிட்டாள் என என்னை அறிமுகப் படுத்தினார். அந்த இளைஞனை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தேன். ஏன் இவ்வாறு பார்க்கிறாய், தெரியவில்லையா? இவன்தான் உன் ஒன்றுவிட்ட அத்தை மகன், சேகர். சிறிது நாட்களுக்கு முன் தான் அமெரிக்கா சென்று படித்து வந்தான் என அவரை அறிமுகப் படுத்தினார் எனக்கு.

வணக்கம் என்றேன்.

அவரும் வணக்க மென்றார். அந்த இளைஞனுடன் பேச வேண்டுமென்ற ஆர்வ மெனக்கு இருந்தபோதிலும் உன் உடல் நிலை அதற்கு இடங்கொடுக்க வில்லை; களைப்பாக இருந்தது. காலையில் பேசிக்கொள்ளலாமென அவரிடம் விடை பெற்றுக் கொண்டு சாப்பிடாமல் படுக்கையறையை அடைந்தேன். ஒரே வெக்கையாய் இருந்தபடியால், ஜன்னல், வாசல் கதவு எல்லாவற்றையும் திறந்துவிட்டு மெதுவாகப் படுக்கையில் சாய்ந்தேன். நித்திரா தேவி என்னுடன கொஞ்சி விளையாட ஆரம்பித்தாள். நான் அசந்து உறங்கிவிட்டேன்.

இரவு மணி 1 இருக்கும். யாரோ என்னைத் தொடுவது போல் உணர்ச்சி தட்டியது. கண் விழித்தேன்; எங்கும் ஒரே இருள். ஜன்னல், வாசல் கதவுகளெல்லாம மூடியிருந்தன. என் பக்கத்தில் யாரோ ஒருவர் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. பயத்தால் கோவெனக் கதறினேன்.

"ராணி, அஞ்சவேண்டாம்; நான்தான் சேகர்" என என் வாயைப் பொத்தினான்.

"நள்ளிரவில் ஒரு பெண்ணின் படுக்கை யறையில் தங்களுக்கு என்ன வேலை; தயவு செய்து வெளியே செல்லுங்கள்" என ஆரம்பித்தேன்.

உன் பொலிவுதரும் பொன்னான மேனி என்னைப் போதையிலாழ்த்தியது; உனது வேல்விழிப் பார்வை என் உள்ளத்தைப் புண் படுத்தியது; மேலும் வடக்கிலிருந்து வீசும் வாடைக்காற்று என் உடலை இன்ப வேதனைப் படுத்தியது; இன்ப வானிலே ஜோடிப் புறுவென சுயேச்சையுடன் பறந்துச் செல்ல இங்கு வந்தேன் என என் கைகளைப் பற்றினான். மறுத்தேன்; மன்றாடினேன். கூக்குரலிடுவேன் எனப பயமுறுத்தினேன்; வெளியே செல்ல எத்தனித்தேன; எதிலும் பலனில்லை. புலிவாயில் சிக்கிய மான்போலானேன். என்னைக் கட்டி யணைத்தான்; முத்தங்கள் பொழிந்தான். நானென்ன மரக்கட்டையா உணர்ச்சியற்றிருக்க! உணர்ச்சியால் உந்தப் பட்டேன். உலகை மறந்தேன். அந்த இரவு இன்பத்தின் ருசி எனக்குக் கிட்டியது.

பொழுது புலர்ந்தது; கடந்ததை எண்ணிக் கண்ணீர் வடித்தேன். ஆறுதல் சொல்ல அந்த வஞ்சகன் முன் வரவில்லை.

ஆனால் ஏதோ அவசர காரியமென என் தந்தையிடம் விடை பெற்றுக் கொண்டு வெளியேறி விட்டான்.

மாதம் இரண்டு கழிந்தது. அவன் விதைத்த பாபத்தின் விதை என் வயிற்றில் வளர ஆரம்பித்தது. என் வாழ்வுப் பாழடைந்ததெனக் கதறினேன். அப்பொழுதுதான் என் தலைவிதியை நொந்து கொண்டேன். மூன்றும் மாதம் கண்ணீரும் கட்டிலுமே நான் காணும் பொருளாயின. அதே சமயம் தாங்கள் கண்டியிலிருந்து வந்தீர்கள். தங்கள் அன்பு மொழி கேட்டு ஆறுதலடைந்தேன். நான் வழுக்கி விழுந்தவளாயிருந்தும் என் வாழ்வை எவ்வாறு சீர்படுத்த முடியும் என்ற குருட்டு நம்பிக்கை என்னை ஊக்கமளித்தது. தங்களின் சீர்திருத்தப் பேச்சு நான் செய்த பாவத்தை மறக்கச் செய்தது. தங்களை ஒரு சமூக சீர்திருத்தவாதி என் நம்பினேன். அதன் பயனே நம் திருமணம் நடந்தேறியது. என் வயிற்றில் வளரும் பாவத்தின் சின்னம் என்றாவது தங்களுக்குத் தெரியாமலிருக்காது என நான் நம்பவில்லை. ஆனால் நம் முதலிரவில் எனக்கு மயக்கம் வரும் அல்லது வாந்தி வரும் என நான் எதிர்பார்க்கவில்லை. நான் கற்பிழந்தவள் எனத் தாங்கள் அறிந்தீர்; கடும் சினங் கொண்டீர். அப்பொழுது உங்களின் சீர்திருத்தப் பேச்சு உங்களிடம் தலையெடுக்க மறுத்தது. வஞ்சகி, துரோகி என்று திட்டினீர். உண்மையை எடுத்துரைக்க என் பேதை மனம் முன்வரவில்லை. கண்ணீரிடையே கழித்தேன் கடந்த மூன்று நாட்களை. தாங்கள் என்னை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. உயிர் வாழ்வதில் பயனில்லை என அறிந்தேன். நான் செய்த பாவத்திற்கு அதுவே பிராயசித்தம் என எண்ணினேன். தாங்கள் இக் கடிதத்தை அடையும் பொழுது என் உயிர் முடிவிலா இடத்திற்கு யாத்திரை செய்து கொண்டிருக்கும். என் அன்பு என்றும் மறவாதது. தங்களுக்கே உரியது. என் உயிர் உடலைவிட்டு நீங்கிய போதிலும் என் ஆவி உங்களைச் சுற்றியே வந்து கொண்டிருக்கும். தங்களைக் கண் காணிப்பதிலே என் வாழ்க்கையின் பயனை அடைவேன்

இங்ஙனம்,
சாவிலும் தங்களன்பை மறவா
ராணி.

ரவிச்சந்திரனின் கைகள் நடுங்கின. கடிதம் கீழே நழுவியது. பேயறைந்தவள் போல் நின்றான்.

அந்த துரோகி தொலைந்தாள் என முணு முணுத்தான்.

மறுகணம் ஆ......என்ன சொன்னேன் அவள்...ராணி...... என் இதயராணி எனக் கதறினான்.

மணி டாண் டாண் என்று ஆறு அடித்தது. எங்கோ சங்கொலி கேட்டது தெருவை எட்டிப் பார்த்தான். ஏதோ ஒரு சவத்தின் ஊர்வலம் தெற்கிருந்து வடக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

அவள் யார்? ★

அருளரசன் ★

மன்னும் இயற்கைச் செல்வம்— அவள்
வழங்கத் தொலையாச் செல்வம் !
மின்னும் எவையும் அவளே !— அவள்
மேலாங் கவிஞர் தெய்வம் !
பொன்னும் பொருளும் வேண்டாள் !— அவள்
புதுமைக் கூத்தைச் செய்வாள் !
இன்னுங் கேள்நீ தம்பி !—எழில்
என்னும் மங்கை அவளே ! 1

அடிவான் பரிதி காண்பாய்—மிசை
அவிழும் பகலைக் காண்பாய் !
படிமேல் இவ்வொவ் வொன்றும்—அவள்
பண்ணும் தொழிலே யன்றோ
முடியும் அவளைக் காண !— அவள்
முற்போக் குடையார் பிறவி !
அடியார் உள்ளக் கோயில்—தன்னில்
அமர்ந்தி ருப்பாள் அவளே ! 2

விரிந்த வெளியும் நிலனும்—அவள்
விளைத்த பொருளின நலனும்
தெரிந்தா ரில்லை மக்கள்—இன்னும்.
திருந்தா உள்ளம் பூண்டார் !
புரிந்த துண்டோ தம்பி—அவள்
புகழின் உருவச் சின்னம் ?
சரிந்தி டாமல் காப்பாள்—நாம்
சாகாத் தன்மை பெறுவோம் ! 3

பொழிலும் தளிரும் அவளே—நளிர்
புனலும் மலரும் அவளே ;
எழிலும் நிழலும் அவளே !—அவளே
எங்கும் எங்கும் அடடா !
தொழிலும் துறையும் உடையார்— தம்
தோளின் மிசையும் அவளே ;
விழிகள் குளிரக் காண்பாய்—இந்த
விண்ணும் மண்ணும் அவளே ! 4

இல்லா வையம் இல்லை—அவள்
இல்லா உயிர்கள் இல்லை !
பொல்லா நெறிகள் போக்கிப்—புத்தம்
புதிய பாதை மேவி
எல்லா நெஞ்சும குளிரக்—குடி
ஏறி விளங்கும் கடவுள் !
இல்லா விடமே யில்லை !— அவள்காண
இயற்கை யன்னை ! அன்னை ! 5

சமுதாய நலத்திட்டம்

வே. தில்லைநாயகம்

★

'இந்தியாவின் உயிர், கிராமங்களில் ஒடுங்கி யிருக்கிறது' என்றார் காந்தியடிகள். அத்தகு கிராமங்கள் தன் கையே தனக்குதவி என்று தனக்கு வேண்டியதைத் தானே செய்து கொள்ள வேண்டும். கல்வி, சுகாதாரம், விவசாயம், தொழிற்றுறை, சமுதாய எழுச்சி ஆகிய அனைத்திற்கும் அந்தந்தப் பகுதி மக்கள் கூட்டுறவு முறையில் பாடுபட்டுப் பலன்கண்டு, பலம்பெற்று முன்னேற வேண்டும். அதுவே நாடு முன்னேற—நாட்டு மக்கள் வாழ்வு பெற—வழி கோலும் என்ற அடிப்படையில் பிறந்தது சமுதாய நலத்திட்டம்.

இந்தியனின் சராசரி வயது 32. இந்தியன் பெறும் வருமானமோ ஆண்டொன்றுக்கு ரூ. 255 மட்டுமே. இந்த நிலைமை திருந்த வழி என்ன? கிராமத்து மக்கள் அறியாமை அகன்று, அறிவு பெற கல்வி வேண்டும். நோயற்று வாழவேண்டும். வாழ்பவன் உழைக்க வேண்டும். உழைக்க வழியும் வசதியும் வேண்டும். இதன் மூலமாக இந்நாட்டு மக்கள் உயர வேண்டும். இதற்கு அரசாங்கம் அடி கோலுகிறது; ஆதரவு தருகிறது. நூறு கோடி ரூபாய்கள் உதவவும் திட்டமிட்டிருக்கிறது. இதுவே சமுதாய நலத்திட்டத்தின் வேலை. ஐந்தாண்டு திட்டத்தில் ஒரு பகுதியுமாகும்.

ஆரம்ப முயற்சியாக—பரீட்சார்த்த முறையாக—இந்தியாவில் ஏறத்தாழ ஐம்பது இடங்களைத் தேர்ந்தெடுத் திருக்கின்றனர். ஒவ்வொரு பகுதியும் 300 கிராமங்களை உள்ளடக்கி யிருக்கும். சமுதாய நலத்திட்டத்தில் பயிற்சிபெற்ற ஒருவர் ஆரம்ப வேலைகளுக்கு வேண்டியதைச் சொல்லால் — செயலால் — பணத்தால் உதவிபுரிவார். முதலில் விவசாயமும், நீர்ப்பாசனமும் முன்னேற்றப் பெறும். அடுத்துப் போக்கு வரத்துச் சாதனங்களும், தொழிற்றுறையும் கவனிக்கப் பெறும். தொடர்ந்து கல்வி, மருத்துவ வசதிகள் ஏற்பாடு செய்யப்படும். இதை மக்கள் புரிந்து முன்னேறத் தொடங்கியதும் பொறுப்பனைத்தும் அப்பகுதி மக்களிடமே ஒப்புவிக்கப் படும். இதுவே சமுதாய நலத்திட்டத்தின் வேலை முறை. அதன்படி தமிழகத்தில் கோயமுத்தூர் மாவட்டத்தில் கோபி - ஈரோடு - பவானி - தாராபுரம் பகுதியிலும், மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டை - மேலூர் - மதுரைப் பகுதியிலும் வேலை நடைபெற்று வருகிறது.

சமுதாய நலத்திட்டம் என்பது இந்தப்பெயர் சூட்டப்படாமலே தமிழகத்தில் ஆதி நாளிலிருந்து நடந்துவரும் ஒரு முறையாகும். சோழ அரசு ஓங்கியிருந்த காலத்தில் கிராமம் ஒவ்வொன்றும் தன்னாட்சியுடன் தனக்கு வேண்டியதைத் தானே செய்து கொண்டு முன்னேறிற்று என்று வரலாறு கூறுகிறது. 'கிராமத்திற்குத் திரும்புங்கள்' — 'கிராம ராஜ்யம் நடத்துவோம்' என்று காந்தியடிகள் கூறிவந்ததும் இந்த அடிப்படையில் தான். ஆனால் அவர் நம்மிடமிருந்து மறைந்த பின்னர்தான் அவர் சொல்லின் மதிப்பை யுணர்ந் திருக்கிறோம். உத்தரப் பிரதேசத்தில் நடைபெறும் எட்டாவா சமூகப் பணியும், பம்பாயில் நடைபெறும் சர்வோதயப் பணியும், சென்னையில் நடைபெறும் பிர்க்கா அபிவிருத்திப் பணியும் இந்த அடிப்படையைச் சார்ந்ததென்றே சொல்லலாம்.

இத்தகு முயற்சியி லீடுபட்டுள்ளவர்கள் தற்பெருமையின்றி கிராமத்து மக்களோடு ஒன்றி நடைபெறுவன வற்றிற்கு ஆக்கந் தேட வேண்டும். பஞ்சாபிலே கலெக்டர் எப். எல். பிரையின் உழைத்ததுபோல உழைக்க வேண்டும், உழைத்து பலன் காண வேண்டும். அலிபூர் சமுதாய நலத்திட்டத்தைப் பண்டித நேரு ஆரம்பித்து வைத்துவிட்டு வந்ததிற்கப்புறம் வெகு நாளைக்கு யாரும் ஒரு கல்லைக்கூட அப்புறம் இப்புறம் எடுத்துப் போடவில்லை யென்ற சேதி தினத்தாள்களில் வெளியானது போல் நடந்து கொள்வது அழகல்ல; அறிவுடைமை யாகாது. அரசாங்கமும், அரசாங்கப் பணியாளர்களும், பொது மக்களும் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும். நாடு முன்னேறும்; நாட்டு மக்கள் சிறப்புப் பெறுவர்; நாமும் பயன் பெறலாம்.

ஸ்ரீ மத்

விவேகானந்த சுவாமிகள்

விரிவான திவ்ய சரித்திரம்

(3-ம் பதிப்பு)

சுவாமிகளின் அதியற்புதமான சரித்திரமும், அரிய உபதேசங்களும் அநுபவசாரமான கடிதங்களும், மேலான பிரசங்கங்களும் இடையிடையே விளங்குகின்றன. சுவாமிகள் அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய பிரதேசங்களில் பூசஞ்சாரம் செய்து வேதாந்த விஷயங்களை விரிவாக உபன்யசித்து ஹிந்து மதத்தை நிலைநாட்டியது இதில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. இவ்வளவு விரிவான சரித்திரம் இதுவரை எவராலும் வெளியிடப்படவில்லை. கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டு முழு காலிகோ பைண்டு செய்யப்பட்டது.

இதன் விலை ரூபா 5. தபாற் செலவு வேறு.

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167, மதறாஸ்-1.

தொடர் கதை:

வாழ்க்கைப் புயல்

/எஸ்.என்.கோ.ராஜன்/

"என்ன? நிறுத்துவதா? இந்த அநாசாரக் கழுதையை அடிப்பதை நிறுத்துவதா? எதற்காக?' என்று கத்தினார் வேலாயுதம், சரவணனைத் தன் சிவந்த கண்களால் முறைத்துப் பார்த்து.

"நாதியற்ற இந்த ஏழை படும் அவஸ்தையை என் கண்களால் நான் பார்த்துக்கொண்டிருக்க முடியாது!' என்று முறைப்பாகவும், சிறிது கோபத்துடனும் பேசினான் சரவணன்.

'பார்க்க முடியாவிட்டால் கண்களை மூடிக்கொண்டு வெளியே போ!" என்று ஏளனமாகக் கூறிவிட்டு, முன்னிலும் அதிக ஆக்ரோஷ வெறியுடன் கண்ணனை அடிக்கக் கையை ஓங்கினார் வேலாயுதம்.

சட்டென்று சரவணன் அவர்மேல் பாய்ந்து ஓங்கிய கையைப் பிடித்துக்கொண்டான். வேலாயுதம் கோபத்தால் தன் நிலை அழிந்தார். தன் கையை விடுவித்துக்கொண்டு சரவணனின் முகத்தின் மேல் ஒரு குத்து விட்டார். அதை லாவகமாகச் சமாளித்துக் கொண்ட சரவணன், வேலாயுதத்தின்மேல் பாய்ந்து அவர் கையிலிருந்த பிரம்பைப் பிடுங்கி 'சளார், சளார்' என்று வேலாயுதத்தை அவர் எதிர்பாராத வகையில் அடித்தான். அதைக் கண்ட எல்லோரும் செயலற்று திடுக்கிட்டு நின்றுவிட்டனர்.

சட்டென்று சரவணன் தரையின் மேல் சுருண்டு விழுந்து கிடந்த கண்ணனைத் தூக்கிக்கொண்டு வகுப்பறையை விட்டு வெளியேறினான். வேலாயுதமோ, தாயாரம்மாளோ, மற்றச் சிறுவர்களோ, ஒன்றும் பேசவும், செய்யவும் தோன்றாமல் சிலைபோல் சமைந்து விட்டனர்!

வகுப்பறையைவிட்டு வெளியேறிய, சரவணன், கண்ணனைத் தனது அறைக்கு வெளியே படுக்க வைத்துவிட்டு! அறைக்குள் நுழைந்து தனது துணி மணிகளை எடுத்து மூட்டை கட்டலானான். கந்தசாமி கொடுத்த கடிதத்தை மறதியாக எங்கோ வைத்துவிட்டானதலால் அதைத்தேடி எடுக்கச் சற்று நேரமாகிவிட்டது. பிறகு வெளியே வந்தான். கண்ணனைப் படுக்கவைத்த இடம் காலியாக இருந்ததைக் கண்டு திடுக்கிட்டான்.

கண்ணனைக் காணாத சரவணன் மீண்டும் வகுப்பறைக்குள் நுழைந்தான். அங்கே சிறுவர்கள் ஒன்று கூடி ஏதேதோ பேசிக் கொண்டிருந்தனர்.

"கண்ணன் எங்கே?" என்று அவர்களைப் பார்த்துக் கேட்டான் சரவணன்.

பேசிக்கொண்டிருந்த சிறுவர்கள் வாய் மூடி மௌனியாகிவிட்டனர் மீண்டும் அதே கேள்வியைப் போட்டான் சரவணன், சிறுவர்கள் சரவணனைப் பார்த்துக் கண்கொட்டாமல் விழித்தனரே தவிர, பதிலொன்றும் சொல்லவில்லை.

காணமற்போன கண்ணனைப்பற்றி அவர்களிடம் தகவல் அறிந்துகொள்ள முடியாதென்று தீர்மானித்தான் சரவணன்

உடனே அவ்வகுப்பறையை விட்டகன்று வீடு முழுதும் தேடிப் பார்த்தான். கண்ணன் காணப்படாததுடன், வேலாயுதமோ, தாயாரம்மாளோ, கண்ணம்மாளோ கூட எங்கும் காணப்படவில்லை!

இனியும் அங்கிருந்தால் ஆபத்து என்றறிந்த சரவணன் மீண்டும் சென்னைக்கே திரும்பிவிடத் தீர்மானித்து, வீட்டை விட்டு வெளியேறினான்.

கண்ணனைக் காணாத கவலை ஒருபுறம்; கையில் காசில்லாமல் சென்னைக்கு எப்படிப்போவது என்கிற ஏக்கம் மற்றொருபுறம்! முடிவு காணாத சிந்தனை லோகத்தில் சஞ்சரித்தவாறு தன்னையும் மறந்தவனாய், சென்னையை நோக்கிச் செல்லும் பாதையில் நடக்கலானான் சரவணன்.

கவலை வாடிய அவன் உள்ளத்தில் கடும் சோதனைக்குள்ளான வேலாயுதத்தின் 'பள்ளிக்கூடம்' என்ற நகரத்திலிருந்து தப்பி வந்து விட்டோமே என்ற மகிழ்ச்சி உதயமாயிற்று. ஆனால் கண்ணனைப் பற்றி நினைக்கும்போது அம்மகிழ்ச்சி மங்கலாயிற்று

இவ்வாறான சிந்தனைச் சுழலில் சிக்குண்ட சரவணன் தன்னைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்ற உணர்வே இல்லாதவனாய் எதிரே வந்து கொண்டிருந்த ஒருவர்மீது மோதிக்கொண்டான்.

சுய உணர்வைப் பெற்ற அவன் மன்னிப்புக்கோரத் தலையை உயர்த்தியபோது தனக்கெதிரே கண்ணனைப் பிடித்துக்கொண்டு ராமசாமி நிற்பதைக் கண்டு ஆச்சரியமும் ஆனந்தமும் கொண்டான்.

உடனே கண்ணனைக் கட்டித்தழுவி, "நீ இங்கேயா இருக்கிறாய்? இங்கே எப்படி வந்தாய்?" என்று கண்ணனையும், ராமசாமியையும் மாறி மாறிப் பார்த்தவாறு கேட்டான்.

"நீங்கள் என்னைத் தனியே விட்டு விட்டுப் போய்விட்டீர்கள். அப்பொழுது நான் மயக்கமாகக் கிடந்தேன். பிறகு மயக்கம் தெளிந்து கண்களைத் திறந்தபோது, எங்கோ அதல பாதாளத்தில் இருட்டறையில் கிடப்பதுபோல உணர்ந்து திடுக்கிட்டேன். அப்பொழுது அறைக்கதவை யாரோ திறக்கும் சத்தம் கேட்டு எழுந்து நின்றேன். ராமசாமி அண்ணன் அறைக்குள் நுழைந்ததைக் கண்டு அவரைக் கட்டிப் பிடித்துக்கொண்டு அழுதேன்..." என்று மேலும் பேசமாட்டாதவனாய்ப் பெருமூச்சு வாங்கப் பேச்சை நிறுத்தினான் கண்ணன்.

"வீட்டில் நடந்த ரகளையை எல்லாம் ஜன்னலின் வழியாகப் பார்த்தேன். நீ கண்ணனைத் தூக்கிக்கொண்டுபோய் உன் அறைக்கு வெளியே கிடத்திவிட்டுப் போனதும் வேலாயுதம் இவனைத் தூக்கிக்கொண்டுபோய் பின் கட்டு அறையில் போட்டு, கதவை வெளித் தாழ்ப்பாள் போட்டுவிட்டுப் போனதைக் கண்டேன். பிறகு அவரும், அவர் மனைவியும், எங்கோ வெளியே போனார்கள். கண்ணம்மாள் என் வீட்டிற்கு வந்து என் மனைவியிடம் நடந்ததைப் பெரிய கதைபோலச் சொல்லிக்கொண்டிருந்தாள். அது தான் சமயமென்று வீட்டிற்குள் நுழைந்து, கண்ணனை அழைத்துக்கொண்டு உன்னைத் தேடியவாறு இந்தப் பாதையின் வழியாகப் போய்க்கொண்டிருந்தோம், அதிர்ஷ்ட வசமாக நீயே பின்னால் வந்து கொண்டிருந்ததைக் கண்டு உன்னை நோக்கி ஓடி வந்தோம். இருவரும் முட்டி மோதிக்கொண்டோம்!" என்றான் ராமசாமி சிரித்துக்கொண்டே.

"நான் துணிமணிகளை எடுத்துக்கொண்டு வரும்போது மிகவும் முக்கியமான கடிதம் ஒன்று அகப்படாமல், தேடி எடுக்க நேரமாகி விட்டது! அதுதான் இவ்வளவு கலாட்டாவிற்கும் காரணம்!" என்றான் சரவணன்.

"அதுவும் ஒரு விதத்தில் நல்லதுதான்! இல்லாவிட்டால்—அதாவது இத்தகைய சந்தர்ப்பம் நேர்ந்திராவிட்டால் நீயும், கண்ணனும் வேலாயுதத்தின் பிடியிலிருந்து தப்பியிருக்க முடியாது! ...அது சரி; இப்பொழுது நீ எங்கே போவதாக உத்தேசம்?" என்றான் ராமசாமி.

"சென்னைக்குத்தான்!"

"கையில் ஏதாவது காசு வைத்திருக்கிறாயா?"

சரவணன் ராமசாமியைப் பார்த்து மௌனம் சாதித்தான். பிறகு, "ஒரு தம்பிடிகூட என் கையில் இல்லை, அண்ணா!..." என்று மேலும் ஏதோ பேச முயற்சித்தான் சரவணன். ஆனால் பேச்சு வாயைவிட்டு வெளிவரவில்லை.

"பைத்தியக்காரன்! இச் சிறுவனைக் கூட்டிக்கொண்டு அவ்வளவு தூரம் நடந்து போகவா உத்தேசம்?

"அதுதான், அண்ணா, யோசிக்கிறேன்! உங்களிடம் கொஞ்சம் பணம் இருந்தால் கொடுங்கள் ஊருக்குப் போனதும் அனுப்பி விடுகிறேன்."

"தருகிறேன். ஆனால் திருப்பி அனுப்புவதைப் பற்றிக் கவலைப் படாதே!" என்று கூறித் தன் ஜேபியிலிருந்து பத்து ரூபாய் நோட்டை எடுத்துச் சரவணனிடம் நீட்டினான் ராமசாமி.

சரவணன் அதை வாங்கிக்கொண்டு, "ரொம்பவும் நன்றி, அண்ணா! உங்கள் உதவியை நான் என்றென்றும் மறக்கமாட்டேன். இதற்குப் பிரதி உபகாரமாக நான் என்ன செய்யப்போகிறேனோ தெரியவில்லை!" என்றான்.

"போதும், போதும்! அதிகம் பேசி அலட்டிக் கொள்ளாதே!

"அதிருக்கட்டும்...இந்த விஷயம் வேலாயுதத்திற்குத் தெரிந்தால்?"

"என்ன செய்வார் அவர்?...தெரிந்தால்தானே செய்வதற்கு? நான் எனது சாதுரியத்தினால் அவரது நம்பிக்கையைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறேன தெரியுமா? அவருக்கு மிகவும் உதவியாக இருப்பது போலவும், அதே சமயம் ஏழைச் சிறுவர்களுக்கு உதவி செய்தவாறும் நான் நன்றாக நடிக்கக் கற்றுக்கொண்டிருக்கிறேன். அதைப்பற்றி நீ கவலைப் படவேண்டாம். எல்லாவற்றையும் நான் கவனித்துக் கொள்கிறேன். நானே கண்ணனைத் தப்பியோட விட்டேன் என்று சொன்னாலும், அதை வேலாயுதம் நம்பமாட்டாராக்கும்!...சரி அடுத்த ரயிலுக்கு இன்னும் கால்மணி நேரம்தான் இருக்கிறது. சீக்கிரம் ஸ்டேஷனுக்குப் போய்ச் சேருங்கள்...கண்ணா! நான் வரட்டுமா? ஜாக்கிரதையாக இருந்துகொள்!" என்று கூறி, கண்ணனைத் தட்டிக் கொடுத்து, விடை பெற்றுக் கொண்டான் ராமசாமி.

சரவணனும் கண்ணனும் ஸ்டேஷனை நோக்கி வேகமாக நடந்தனர்.

'ராமசாமி அண்ணனுக்கு என்மேல் அலாதிப் பிரியம், அண்ணா!" என்றான் கண்ணன் நன்றி கலந்த குரலில்.

"ராமசாமி ரொம்பவும் நல்லவர்!" என்றான் சரவணன்.

"அது சரி, அண்ணா! வாத்தியார் என்னை மறுபடியும் கண்டு பிடித்து விட்டால் என்னை அவரிடம் அனுப்பமாட்டீர்களே?" என்றான் கண்ணன் அச்சம் தோய்ந்த குரலில்.

"அவனிடமா? உன்னையா? ஊஹூம்! பயப்படாதே! என்ன ஆனாலும் சரி, உன்னை மறுபடியும் அந்த முரடனிடம் அனுப்பப் போவதில்லை. உன்னை அவனிடம் மறுபடியும் அனுப்பத்தானா நான் இவ்வளவு கஷ்டப்பட்டேன்?" என்றான் பச்சாதாபத்துடன் கபடற்ற கண்ணனைப் பார்த்து.

"நான் உங்களுக்கு வேலைக்காரனாக இருக்கிறேன், அண்ணா! எனக்கு ஒன்றுமே தேவை இல்லை. உங்களருகில் இருந்தால் அதுவே எனக்குப் பரமானந்தம்!"

"இனி நீ என்னுடனேயே இருப்பாய்! கவலை வேண்டாம். கஷ்டம் வந்தாலும், சுகம் வந்தாலும் இருவரும் சேர்ந்தே அனுபவிப்போம்!...உம்...சீக்கிரம் நட! நேரமாகி விட்டது!

சரவணனிடமிருந்த மூட்டையை வாங்கித் தோளின்மேல் போட்டுக்கொண்டு, என்றும் கண்ணறியாத குதூகலத்துடன் நடந்தான் கண்ணன். அவனையுமறியாமல் அவன் வாய் பாட ஆரம்பித்தது.

கடைசியாக ரயிலேறிச் சென்னையை அடைந்தனர் கண்ணனும் சரவணனும், சென்னையை அடைந்த அவர்கள் முதலில் கந்தசாமி கொடுத்திருந்த விலாசத்திற்குப் போனார்கள்.

* * *

கந்தசாமிக்கு வயது ஐம்பது அவன் ராயபுரத்தில் வசித்து வந்தான். மனைவி மக்கள் யாருமில்லாத ஒண்டிக்கட்டை. விரிஞ்சிபுரத்திலிருந்து எதிர்பாராத வகையில் திடீரென்று வந்து தோன்றிய சரவணனையும், கண்ணனையும் கண்டு ஆச்சரியப்பட்டாலும், மகிழ்ச்சியுடன் அவர்களை வரவேற்று உபசரித்தான் பசிதீர உணவளித்த பின் அவர்கள் திடீரென்று கிளம்பி வந்ததன் காரணத்தை விசாரித்தான். சரவணன் நடந்ததை ஆதிமுதல் அந்தம்வரை விவரமாகச் சொன்னான்.

பிறகு, 'என் தாயார், தங்கை ஜீவரத்தினம் ஆகியோர் சௌக்கியம்தானா? அவர்களுக்கு என் சிற்றப்பன் ஏதாவது உதவி செய்தாரா?" என்று வினவினான்.

அதற்குக் கந்தசாமி அவர்கள் சௌக்கியத்தைப்பற்றியும், சீதாவுக்கு உடைகள் தைக்கும் கடையில் தேவலிங்கம் வேலை வாங்கிக்கொடுத்து, தனி வீட்டையும் ஏற்பாடு செய்ததைப்பற்றியும் கூறினான்.

"நான் மறுபடியும் சென்னைக்கே திரும்பிவிட்ட சமாசாரம் அவர்களுக்குத் தெரியவேண்டாம், தாதா! எனக்கு ஏதாவது வேலை கிடைத்துச் சம்பாதிக்கும்வரை அவர்களை நான் பார்க்கப் போவதில்லை. அப்படிப் போய்ப்பார்த்தால் என்னையும் அவர்களுடன் இருக்கச் சொல்வார்கள், தானும் அவர்களுடன் சேர்ந்து அவர்களுடைய கஷ்ட ஜீவனத்தை அதிகப்படுத்த விரும்பவில்லை!..... அதிருக்கட்டும், தாதா! என் சிற்றப்பனுக்கு வேலாயுதத்தினிடமிருந்து ஏதாவது கடிதம் வந்ததா?". என்று ஆவலுடன் கேட்டான்.

"ஆமாம், தம்பி! இன்று காலையில் தான் ஒரு கடிதம் வந்தது. அதில் நீ நேற்று அவனை உயிரோடு வதைத்து விட்டதாகவும்,

கேவலமான நிலைமையில் அவன் இன்றும் படுக்கையில் கிடப்பதாகவும், அத்துடன் அவன் மனைவியின் நகைகளைத் திருடிக்கொண்டு எங்கோ ஓடிவிட்டதாகவும், நீ ஒரு சோதா என்றும், போக்கிரி என்றும், திருடன் என்றும் கண்டவாறு எழுதியிருக்கிறான்!" என்று தான் ரகசியமாகக் கண்ட கடிதத்தின் வரலாற்றைக் கூறினான் கந்தசாமி.

அதைக் கேட்ட சரவணனுக்குக் கோபம் கொந்தளித்தது. நடந்த உண்மையை மீண்டும் எடுத்துரைத்தான்.

"இப்படித்தான் இருக்கவேண்டும் என்று நான் சந்தேகப்பட்டேன். நீ இப்படியெல்லாம் செய்யமாட்டாய் என்று எனக்கு என் மனமே சொல்லிற்று, தம்பி!" என்றான் கந்தசாமி.

"சரி, இப்பொழுதே நான் என் சிற்றப்பாவிடம் போய் நடந்த உண்மையைக் கூறுகிறேன். மேலும் வேலாயுதத்தின் வெளிவேஷத்தையும், அவன் நடத்தும் பள்ளிக்கூடத்தின் லட்சணத்தையும் அம்பலப்படுத்துகிறேன்!" என்று சரவணன் படபடப்புடன் சொல்லி எழுந்தபோது, கந்தசாமி அவனைத் தடுத்து, "அவர் அதை நம்புவார் என்று நினைக்கிறாயா, தம்பி? அந்தப் பள்ளிக்கூடத்தைப் பற்றியும், வேலாயுதத்தைப்பற்றியும் அவருக்குத் தெரியும் என்று நடித்ததைவிட அதிகமாகவே தெரியும்!" என்றான்.

"தனக்குத் தொல்லை தராதபடி என்னை ஒதுக்கித்தள்ளப் பார்த்தார் என்கிற விஷயம் இப்பொழுதுதான் பட்ட வெளிச்சமாகிறது!" என்று வெறுப்புடன் சொல்லிக்கொண்டே எழுந்து தன் சிற்றப்பனிடம் போகப்புறப்பட்டான் மீண்டும்.

"ஆனால் நீ இப்பொழுது போய் அவரைப் பார்க்க முடியாது, தம்பி!"

"ஏன்?"

"அவர் எங்கோ வெளியூருக்குப் போயிருக்கிறார். திரும்பிவர மூன்று நாளாகும். அவர் வந்தவுடன் போகலாம். அதுவரை நீ உன் தாயாரிடமும் போகவேண்டாம். என்னிடமே இரு!" என்று சமாதானப்படுத்தினான் கந்தசாமி.

அப்பொழுது கண்ணன் பிரயாண அசதியினால் வெறும் தரையின்மேல் படுத்துச் சுகமாகத் தூங்கிக்கொண்டிருந்தான். அதைக் கண்ட கந்தசாமி ஒரு பாயை விரித்து அதன்மேல் அவனைப் படுக்க வைத்தான். பிறகு இருவரும் உட்கார்ந்து பேசலானார்கள்.

"என் சிற்றப்பனுக்குக் கடிதம் வந்த செய்தி என் தாயாருக்குத் தெரியுமா?" என்று கேட்டான் சரவணன்.

"தெரியாதென்றே நினைக்கிறேன். கடிதம் வந்தபொழுது அவர் பிரயாணத்திற்கு ஆயத்தம் செய்துகொண்டிருந்தார், ஆகையால் தெரிந்திருக்க நியாயமில்லை!" என்றான் கந்தசாமி.

பிறகு எதிர் காலத்தைப்பற்றி எண்ணமிட்டனர். தனக்கு ஒரு வேலை கிடைத்தால் தேவலை என்றும், அதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபடவேண்டும் என்றும், கண்ணனுக்கும் ஒரு சிறிய வேலை தேடவேண்டும் என்றும் கூறினான் சரவணன்.

அப்பொழுது எதிர் வீட்டிலிருந்து பெரும் கூச்சல் கிளம்பிற்று. "ஐயோ!... ஐயோ!... ஐயோ!... நெருப்பு!" என்ற கூச்சல் வானைப் பிளந்தது. கூச்சலைக் கேட்டு, வெளியே வந்து பார்த்தனர் கந்தசாமியும், சரவணனும், எதிர் வீட்டில் கூட்டம் கூடியிருந்தது. உடனே அங்கே சென்று கூட்டத்தை விலக்கி உள்ளே புகுந்தனர்.

வீட்டிற்குள் ஒரு அறையில் தீப்பற்றி ஜ்வாலை வீசி எரிந்துகொண்டிருந்தது. அந்த வீட்டில் குடியிருந்த புருஷோத்தமர் என்பவருடைய குழந்தையும் அதை வைத்துக்கொண்டிருந்த வேலைக்காரச் சிறுமியும் அவ்வறையினுள் இருந்தபொழுது ஜன்னலுக்குக் கட்டியிருந்த திரை விளக்கில் பட்டுத் தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்ததுடன், அருகில் இருந்த தூக்கில் தொங்கவிடப்பட்டிருந்த துணிகளும், சுவரினோரம் வைக்கப்பட்டிருந்த பொருள்களும் எரிந்துகொண்டிருந்தன. அறைக்குள் தீயின் ஜ்வாலை சூறாவளிபோல் வீசிக்கொண்டிருந்தது. அதனருகில் குழந்தை வீறிட்டுக் கதறியவாறு துடி துடித்துக் கொண்டிருந்தது. தூர விலகி நின்ற வேலைக்காரச் சிறுமி ஒன்றும் செய்யத் தோன்றாமல் கைகளை உதறிக் கூக்குரலிட்டவாறு தவித்துக்கொண்டிருந்தாள். அறைக்கு வெளியே நின்றிருந்தவர்கள் உள்ளே நுழைந்து அவர்களைப் பிடித்து இழுத்துக்கொண்டுவரத் தைரியமில்லாதவர்களாய் அப்படியே நின்று அலறித் துடித்தனர். அதைக் கண்ட சரவணன் எல்லோரையும் தள்ளிவிட்டு, அறையினுள் பாய்ந்து வீறிட்டு அலறிக்கொண்டிருந்த குழந்தையைத் தூக்கிக்கொண்டு, பயத்தால் நடுங்கிக்கொண்டிருந்த சிறுமியைப் பிடித்து இழுத்துக்கொண்டு வெளியே வந்தான்!

குழந்தைக்கும் சிறுமிக்கும் ஒன்றும் ஆபத்தில்லை என்பதை அறிந்ததும், எல்லோருடைய திகைப்பும் பயமும் நீங்கிற்று. பிறகு நெருப்பு அணைக்கப்பட்டது. புருஷோத்தமரும், அவர் மனைவி பார்வதியும் தங்கள் குழந்தையைக் காப்பாற்றிய சரவணனை ஒரு வீரனாகப் புகழ்ந்தனர்.

அவ்வீட்டில் பீதி ஒழிந்து அமைதி நிலவிய பிறகு சரவணனுடைய வரலாற்றைக் கேட்டறிந்தார் புருஷோத்தமர். அவர் பரிதாபப்பட்டதுடன் வேண்டிய உதவி செய்வதாகவும் வாக்களித்தார்.

பிறகு சரவணன் எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டு கந்தசாமியுடன் அவன் வீட்டிற்கு வந்தான். சிறிது நேரம் பேசிய பின் இருவரும் உறக்கத்தில் ஆழ்ந்தனர்.

* * * *

மறுநாள் சரவணன் வேலை தேடும் படலத்தை ஆரம்பித்தான். சென்னை நகரமெங்கும் வேலை தேடி அலைந்தான். ஆனால் கண்ட பலன் தோல்விதான்! பட்டதாரிகளுக்கே வேலை கிடைக்காத இக்காலத்தில் எஸ் எஸ். எல் ஸி. கூடத் தேறாத சரவணனுக்கு என்ன வேலை கிடைக்கப்போகிறது? அற்ப சம்பளத்திற்குக்கூட ஒரு வேலையும் கிடைக்கவில்லை. வெய்யிலில் அலைந்த களைப்பும், பசி வேதனையும் வாட்டச் சோர்வடைந்தவனாய் கந்தசாமியின் வீட்டை நோக்கி நடக்கலானான்.

அவன் நடந்து சென்ற தெருவில் இப்பக்கமும் அப்பக்கமும் பார்த்தவாறு போய்க்கொண்டிருந்த அவன் கண்களுக்கு, ஒரு கட்டிடத்தில் 'வேலை தேடித்தரும் ஸ்தாபனம்' என்றிருந்ததைக் கண்டு களிப்படைந்தவனாய் அக்கட்டிடத்தை நோக்கி விரைந்து உள்ளே நுழைந்தான்.

அங்கே வேலை காலியிருக்கும் ஜாபிதாவைப் பார்த்தான். ஆனால் எல்லாம் பயிற்சி பெற்ற யோக்கியதாம்சம் கொண்டவர்களுக்கேற்ற வேலையாக இருந்ததால் அதிருப்தியும் ஏமாற்றமும் அடைந்-

தான். இருந்தபோதிலும் அங்கிருந்த குமாஸ்தாவிடம் ஏதாவது வேலை காலி இருக்கிறதாவென்று விசாரித்தான்.

அந்த குமாஸ்தா சரவணனை ஒரு நிமிஷம் கண்ணிமைக்காமல் பார்த்துவிட்டு, "வெளியே காலி யிருக்கும் வேலைகளின் ஜாபிதா இருக்கிறதே, கவனிக்கவில்லையா?" என்றான்.

"கவனித்தேன். ஆனால் அந்த வேலைகளுக்கேற்ற பயிற்சியும், யோக்கியதாம்சமும் எனக்கில்லை!"

"அப்படியா?...உன் பெயரை இங்கு பதிவு செய்துகொண்டிருக்கிறாயா?"

"இல்லை!"

"அப்படியானால் உன் பெயரைப் பதிவு செய்துகொள் முதலில், பிறகு வேலை ஏதாவது காலி இருக்கிறதா என்று கேள்!" என்று கேள்!" என்று குமாஸ்தா கூறி, பெயரைப் பதிவு செய்யும் முறையையும் விளக்கினர்.

உடனே சரவணன் தன் பெயரைப் பதிவு செய்துகொண்டான். பிறகு குமாஸ்தா ஒரு நோட்டுப் புஸ்தகத்தைப் புரட்டி, தம்பு செட்டித் தெருவில் வசிக்கும் திருவரங்கம் செட்டியார், எம். எல். ஏ. வுக்கு ஒரு குமாஸ்தாவும், காரியதரிசியும் வேண்டியிருப்பதாகத் தெரிவித்தார்.

சரவணன் சம்பளத்தைப் பற்றிக் கேட்டான்.

"அதெல்லாம் எனக்கென்ன தெரியும்? அங்கே போய் விசாரித்துப்பார்" என்றார்.

"தம்பு செட்டித் தெருவில் எத்தனையாவது நெம்பர் வீடு?"

"எனக்கு எத்தனையாவது நெம்பர் என்று தெரியாது. ஆனால் அந்தத் தெருவில் இருப்பதெல்லாம் ஒரே ஒரு எம். எல். ஏ. தான். சுலபமாக அவர் வீட்டைக் கண்டு பிடித்து விடலாம்!"

இவ்வளவுடன் சரவணன் திருப்தியடைய வேண்டியதாயிற்று. பிறகு தம்பு செட்டித் தெருவை அடைந்து திருவரங்கம் செட்டியாரின் வீட்டைத் தேடலானான். அப்பொழுது ஒரு வீட்டிற்குள் ஜனங்கள் கும்பல் கும்பலாகப் போய் வருவதைக் கண்டான் அவர்களிடம் விசாரித்தால் செட்டியாரின் பங்களாவைச் சுலபத்தில் அறியலாம் என்று எண்ணி அவர்களிடம் சென்று விசாரித்தான். அவர்கள் போய்வரும் பங்களாதான் அவன் தேடிவந்த பங்களா என்பதைக் கேட்டு சரவணன் மகிழ்ச்சியுடன் அவர்களுடன் சென்றான்.

தன்னைப்போலவே அவர்களெல்லோரும் வேலைக்காகத்தான் வந்திருப்பார்கள் என்று சரவணன் எண்ணினான். எல்லோரும் பங்களாவிற்குள் நுழைந்து முன்புற ஹாலில் வரிசையாக அமர்ந்தனர்.

அங்கே நின்றிருந்த தடித்த மனிதன் அவர்களைப் பார்த்து "ஒவ்வொருவராக உள்ளே போங்கள்!' என்றான் பலத்த குரலில்.

ஒவ்வொருவராக உள்ளே போய்த் திரும்பி வந்தனர். அவர்கள் பேசிய விஷயங்களிலிருந்து அங்கே வேலையைத் தேடி வரவில்லை என்றும், தங்கள் சொந்த விஷயமாக எம். எல். ஏ. வைப் பார்க்க வந்தவர்களென்றும் சரவணன் ஊகித்து அறிந்தான்.

சரவணன் அவர்கள் எல்லோரும் போகும்வரை காத்திருந்தான். எல்லோரும் போனபின் அவன் தடித்த மனிதனிடம் சென்று தான் வந்த காரியத்தைச் சொன்னான். அவனை உள்ளே போகும்படி சொன்னான் அம்மனிதன்.

உள்ளே சென்ற சரவணன் அங்கே மேஜைக்கருகில் அமர்ந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்த எம். எல். ஏ. விற்கு வணக்கம் செலுத்தினான்.

எம். எல். ஏ. அவனை ஒரு நிமிஷம் முறைத்துப் பார்த்தார். அந்தப் பார்வை சரவணனுக்கு அச்சத்தை விளைவித்தது.

"எதற்காக வந்திருக்கிறாய்?" என்றார் எம். எல். ஏ. கரகரத்த குரலில்.

சரவணன் வந்த விஷயத்தைச் சொன்னான்.

"ஓ! நீ என்னுடைய காரியதரிசியாக இருக்க விரும்புகிறாயா? ...உம்...இருப்பாயா?" என்றார்

சரவணன் ஒரு கணம் திகைத்தான். பிறகு சமாளித்துக் கொண்டு, "இருப்பேன், சார்!" என்றான் கம்மிய குரலில்.

"நீ என்ன வேலை செய்வாய்?"

"காரியதரிசிக்கு என்னென்ன வேலைகள் இருக்குமோ அவற்றையெல்லாம் செய்யத் தயார், சார்!"

"அவை என்னென்ன வென்றுதான் சொல்லேன்?"

"அதாவது...உங்களுக்கு வரும் தபால்களுக்குப் பதில் எழுதுவது; உங்களுடைய ரிகார்டுகள், கடிதங்கள், டாகுமெண்டுகள் முதலியவற்றைத் தேதிவாரியாக அடுக்கி 'பைலில்' வைப்பது; உங்களுடைய தினசரி வேலைகளை டைரியில் குறித்து வைத்து ஞாபகப்படுத்துவது; நீங்கள் பிரசங்கம் செய்யும் விஷயங்களை அப்படியே எழுதிவைப்பது...இதுபோல் என்றால் உங்களுக்கு எந்தெந்த வகையில் உதவி செய்ய முடியுமோ அவைகளைச் செய்கிறேன்."

எம். எல். ஏ. ஒரு நிமிஷம் எதோ யோசனை செய்தார். பிறகு, "அது சரி... ஆ! உன்னுடைய பெயரென்ன?" என்றார்.

'சரவணன், சார்!"

"ஆ! சரவணன்! எனக்கொன்றும் அவ்வளவு வேலைகள் செய்யத் தேவை இல்லை. பத்திரிகைகளில் வரும் உள் நாட்டு வெளி நாட்டுச் செய்திகள், அரசியல் செய்திகள், ஆகியவற்றைப் படித்துச் சொல்லவேண்டும். அத்துடன் என் சொந்த விவகாரங்களுக்கு வேண்டிய சில விஷயங்களையும் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். நான் விரும்பும்போது அவைகளை எடுத்துச் சொல்ல வேண்டும். அத்துடன் மட்டும் நில்லாமல் நான் வெளியில் செய்யும் பிரசங்கங்களை எழுதிவைக்க வேண்டும். நடு நடுவிலே சில ஹாஸ்யங்களைச் சேர்த்து எழுதவேண்டும்.

"தெரிந்தது, சார்!"

"மேலும் பல பிரமுகர்கள் இருக்கும் கூட்டத்திற்கு என்னுடன் வந்து அவர்களிடையே என்னைப்பற்றிப் பலவாறு புகழ்ந்து பேச வேண்டும்!"

"நல்லது...இதற்கெல்லாம்...சம்பளம்...எவ்வள வென்று சொல்லவில்லையே, சார்?"

எம். எல். ஏ. திருவரங்கம் செட்டியார் சில நிமிஷங்கள் ஆழ்ந்து சிந்தித்துவிட்டு, சரவணனைப் பார்த்து, "ஒரு மாதம் சும்மா வேலை செய். உன் திறமையைப் பார்த்துவிட்டு இரண்டாம் மாதத்திலிருந்து சம்பளம் போட்டுத் தருகிறேன்!

"ஒரு மாதத்திற்குச் சம்பளமில்லாமல் சும்மா வேலை செய்ய வேண்டுமா?" என்று வியப்பும் கலவரமும் கலந்த குரலில் கேட்டான் சரவணன்.

(தொடரும்.)

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

ஜய வருஷ ஐப்பசி கலியுகாதி 5056, சாலிவாகனம் 1877,

பசலி 1364, ஹிஜிரா 1374 கொல்லமாண்டு 1130,

இங்கிலீஷ் 1954 அக்டோபர்—1954 நவம்பர்

ஐப்பசி	அக்டோபர்	வாரம்.	திதி.	நட்சத்ரம்	அமிர்தாதி யோகம்.	விசேஷங்கள்
1	17	ஞா	சஷ்24-20	திரு57-20	சி60	துலா விஷு புண்யகாலம்
2	18	திங்	சப்20-58	புன56-40	அ56-40சி	காலாஷ்டமி, தேதி மழை
3	19	செவ்	அ19-15	பூச57-33	சி60	... ...
4	20	புத	நவ19-13	ஆ60-00	சி60	த்ரிதின ஸ்ப்ருக்
5	21	வியா	தச20-40	,, 0-05	சி0-05 அ	... ...
6	22	வெ	ஏ23-20	மக3-50	ம3-50சி	சர்வ-மத்வ ஏகாதசி
7	23	சனி	து27-03	பூர8-43	சி8-43ம	சனிப் பிரதோஷம்
8	24	ஞா	திர31-48	உத்14-22	அ60	நரகசதுர்த்தி ஸ்நானம்
9	25	திங்	சது37-08	அ20-50	சி20-50சி	தீபாவளி பண்டிகை
10	26	செவ்	அ43-00	சித்27-45	சி60	சர்வத்ர ~ அமாவாசை, கேதார விரதம்
11	27	புத	பிர49-18	சு35-10	சி60	
12	28	வியா	துதி55-50	வி42-50	சி60	
13	29	வெ	திரு60-00	அ50-23	சி 0-23ம	
14	30	சனி	,, 2-18	கே57-50	சி60	
15	31	ஞா	சது8-25	மூ60-00	அ60	
16	1	திங்	பஞ்13-43	,, 4-28	சி4-28ம	
17	2	செ	சஷ்17-48	பூ10-03	சி10-03சி	
18	3	புத	சப்20-15	உ14-08	அ14-08சி	
19	4	வியா	அ20-10	திரு16-13	சி60	
20	5	வெ	நவ19-03	அ16-18	சி60	
21	1954 நவம்பர் 6	சனி	தச15-18	சத14-20	அ14-20ம	பீஷ்மபஞ்சக விரதம்
22	7	ஞா	ஏ9-35	பூ10-23	சி10-23அ	சர்வ-மத்வ-ஏகாதசி
23	8	திங்	து2-18 திர53-43	உ4-55 ரே58-08	சி60	பிரதோஷம், த்ரிதினஸ்ப்ருக், யோகீஸ்வர த்வாதசி
24	9	செ	சது44-18	அ50-33	சி60	வைகுண்ட சதுர்தசி
25	10	புத	○ப34-33	ப42-45	சி42-45அ	பீஷ்ம பஞ்சகவிரத பூர்த்தி
26	11	வியா	ப24-55	✱கி35-03	சி60	கிருத்திகை விரதம்
27	12	வெ	து15-53	ரோ28-10	சி28-10சி	சாதுர் மாஸ்ய த்விதியா
28	13	சனி	தி7-40	மிரு22-18	சி60	சங்கஷ்ட சதுர்த்தி
29	14	ஞா	ச1-10 பஞ்50-18	திரு17-53	சி60	த்ரிதினஸ்ப்ருக்
30	15	திங்	சஷ்53-08	புன15-15	அ15-15சி	விருச்சிகரவி கா-58-28

			கே
	2-புத-வ-ஆ 9-சுக்-வ-ஆ 18-பு-வ-ஆ 23-பு-வ-வி 28-சு-சு(வ) 30-குரு-ஆ		குரு புரே
சந்			
ரா	சுக்	ஆ,செப் சனி-பு	

Edited, Printed and Published by N. MUNISWAMI MUDALIAR, at the "ANANDA BODHINI PRESS", No. 6, Lawyer Chinnathambi Mudali Street, Sowcarpet, Madras.

சர்வமேக நிவாரணத் தைலம்

இந்தப் பிரசித்திபெற்ற இராஜ சஞ்சீவி திராவகத்தை, காலை மாலை இரண்டு வேளை களிலும் 10-நாட்கள் வரை உட்கொண்டால் வெகு நாட்களாகத் தேகத்தில் ஊறிய மேக ரோகங்கள், மேக வாயு, தனுர்வாதம், முழங் கால் வாதம், குதிக்கால் வாதம், சகலமான தடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிப்பு இரணங்கள், குழிப் புண்கள், புரை யோடுகிற புண்கள், திமிர் வாய்வு, கைகால் விரல்களில் மேகநீர் தங்கிய நோய்கள், கிரந்தி முதலிய கிரந்திப் புண்கள், துடைவாழை படைகள், நகக்கணுநோய், சகல மூலங்கள் முதலிய ரோகங்கள், நெருப்பிலிட்ட பஞ்சு போல் போகும். இது அநேக ஜனங்களின் துன்பத்தை நீக்கிச் சௌக்கியத்தை உண்டு பண்ணி அதிக அனுபவத்திற்கு வந்தது. கடின பத்தியமின்றி, பால், நெய், கறி முதலியவைக ளுடன் சாப்பிடக்கூடியதும், தேக இளைப்பு, ஆயாசம் முதலியவைகளை உண்டாக்காமல் சுக மாக்கி வியாதிகளைக் கண்டித்துச் சுகப்படுத் தக்கூடியதுமாகிய உண்மையான மருந்து.

இதன் விலை ரூபா. 1—8—0 தபாற் கூலி 1—0—0

சீதபேதி (டிசென்டாரி) பவுடர்

இரத்தபேதி, சீதபேதி, சீதமும் இரத்தமும் கலந்த பேதி, மலத்துடன் இரத்தம் வருதல், மூலக் கடுப்பு அடி வயிற்று நோய் முதலான வியாதிகள் குழந்தைகள் முதல் பெரியோர் வரையில் யாருக்கிருந்தாலும் 4-வேளையில் இம் மருந்து அவற்றைத் தப்பாமல் தடுக்கும்.

ஒரு புட்டியின் விலை அணா 8. தபாற் கூலி 1-0-0

கூந்தல் வளரும் துளி

இதை நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெ யில் கலந்து பிரதி தினம் மயிருக்குப் பூசி வந்தால் கூந்த லானது ஆலம் விழுதுபோல் உண்மையாய் வளரும். அதில் பேன் சேராது; சுண்டு உண்டாகாது; மயிர் உதிராது. வழுக்கை விழுந்த இடத்திலும் மயிர் முளைக்கும்.

புட்டி 1-க்கு விலை அணா 12. தபாற் கூலி 1—0—0.

கார்டோலின் ஆஸ்தமா நிவாரணி

சளி இருமல், சுவாச காசம் முதலிய பிரான்கியல் ஆஸ்தமா நோய்கள் 10 நாளில் தீரும். ஆஸ்மா இருமல் எந்த நிலையில் இருந்தாலும் குணத்திற்கு உத்திரவாதம். குணமில்லை என்று நிரூபித்தால் பணம் திருப்பித் தரப்படும் பத்தியம் இல்லை. 50 மாத்திரைகள் கொண்ட புட்டி 1க்கு ரூ. 12. தபாற்கூலி ரூ. 1. இம்மருந்துக்கு எப்போதும் ரூ. 5/-அட்வான்ஸ் அனுப்பி விடவேண்டும்.

தனலட்சுமி கம்பெனி,

நெ. 6, லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை-1.

காப் கியூர் என்னும் க்ஷய அரி

கப இருமல், இரைப்பு அல்லது மந்தகாசம், க்ஷயம், சளி, இருமல், கக்குவாய் இருமல், பெருத்த இருமல், தொண்டை நோய், சுவாச காசம், கடினமான ஜலதோஷம், அபாயமான கூழை இருமல், தொண்டை எரிச்சல், தொண்டைக் கரகரப்பு, இருமலினால் தூக்கம் பிடியாமை, குளிர்ச்சியான வஸ்துவைச் சாப்பிடுகிறதினாலும் பனியில் நனைவதினாலும் உண்டாகும் சாதாரண இருமல் முதலான வியாதிகளை நான்கு தினத்தில் கண்டித்துக் கோழையை வெளியில் தள்ளி நோயாளி கன்றாகத் தூங்கச் செய்யும்.

புட்டி 1-க்கு விலை ரூபா 1. தபாற் கூலி 1-0-0

ஜி. கியூர்

இது 3-தினத்தில் குணப்படுத்தும்

மேக உஷ்ணத்தால் தாது கெட மூலத்தில் அக்னி அதிகரிப்பதனால் கள்ளநோய், நீரடைப்பு, சதையடைப்பு, பவுத்திரம், அரையாப்பு முதலியன இந்த நோயின் மூலமாய் ஏற்படும். நீர்க்கடுப்பும், குத்தலும், எரிச்சலும் காண்பதுண்டு. இவைகளை நீக்கி நல்ல சுகத்தைக் கொடுக்கக் கூடிய அநுபவ மருந்து இது. பத்தியம் கிடையாது. இதனை உபயோகிக்கும் விவரம் மருந்துடன் அனுப்பப்படும்.

புட்டி 1-க்கு விலை ரூபா 1. தபாற் கூலி 1—0—0

காஸ்டோலின்

கீழ்க்குறித்தசரும வியாதிகளுக்கு காஸ்டோலின் ஓர் இணையற்ற "சஞ்சீவி"—அரிப்பு, மண்டைக் கரப்பான், தாமரைப்படை, கண்டமாலை, மேகப்பத்து, அரையாப்புக்கட்டி, கரப்பான், அழுக்குத் தேமல், கன்னப்புற்று, குழிப்புண், மார்ச்சிலந்தி, முகப்பரு, முகச்சொறி, பித்தவெடிப்பு, தினவு, சேற்றுப்புண், சொறி, சிரங்கு, நாரைப்புண், நாம்புச் சிலந்தி, விஷக்கடிகள், வெட்டுக் காயம், வெண் குட்டம், தேள் கடி, ஆறாத ரணங்கள், புரை புண் முதலிய எந்த நோயையும் குணப்படுத்தி நலம் செய்வதாகும்.

டப்பி 1-க்கு விலை ரூ. 0—8—0. 3 டப்பி வரையில் தபாற் கூலி 1—0—0
ஆகையால் எப்போதும் 3 டப்பிகளை தருவித்துக் கொள்ளுங்கள்.

கோல்டனல்

இரத்தமின்மை, பலவீனம், பித்தசோகை, காமாலை முதலியவைகளுக்கு கைகண்ட மருந்து. சாப்பிட்ட 10 நாட்களில் இரத்தம் பெருகும், நரை கருக்கும், பலம் உண்டாகும். புளியேப்பம், குடல் புண், வயிற்றுவலி, குன்மம் முதலிய வயிற்றுக் கோளாறுகள் அறவே ஒழியும். பத்தியம் இல்லாதது. 4 மாதம் உபயோக மருந்தின் விலை 2—0—0

தபாற் கூலி 1—0—0

தனலட்சுமி கம்பெனி,

நெ. 6. லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை-1.

சர்வ தேள் விஷ சஞ்சீவினி

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்)

நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையிருப்பில் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனானி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. இதை நாள்பட வைத்திருப்பதால் இதன்குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாய்க்காலி, செய்யான், பாம்பு, எலி முதலியவற்றின் விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் இது அடியோடு நீக்கக்கூடியது. இது இரண்டுவித மருந்துகள் அடங்கியது. இதை உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 8 தபாற்கூலி 1—0—0 மூன்று பாக்கெட்டுகள் தருவித்தாலும் தபால் செலவு 1-0-0 தான். டஜன் 1-க்கு விலை ரூபா 5; தபாற்கூலி 1—8—0

சுகபேதி மாத்திரை

இந்த மாத்திரையில் 2-முதல் 5-வரை தேக திடமறிந்து மாத்திரையைச் சாப்பிட்டு கொஞ்சம் ஜலம் சாப்பிடவும். இவ்விதம் சாப்பிட்டால் சுகமாய் பேதியாகிவிடும். மாத்திரையை அனுப்பும்பொழுது உபயோகிக்கும் முறையை தெரிவிக்கிறோம்.

25-மாத்திரை அடங்கிய புட்டி 1-க்கு விலை அணா 6 தபாற்கூலி 1—0—0.
மூன்று புட்டிகள் தருவித்தாலும் தபாற் கூலி 1—0—0 தான்.

கண்நோய் மருந்து

இது கண்நோய், கண்குத்தல், கூசல், நீர் வடிதல், மங்கல், அந்திமாலை, பீளை கட்டல், சதை வளர்ந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும். மாணாக்கர்களுக்கும் ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் இது மிகச் சிறந்த ஔஷதம். இதை உபயோகிப்பவர் கண்ணாடி போடவேண்டியதில்லை.

புட்டி 1-க்கு அணா 10. தபாற்கூலி 1—0—0.

இரண்டு புட்டிகள் தருவித்தாலும் தபாற் கூலி 1—0—0 தான்.

தனலட்சுமி கம்பெனி,

நெ. 6. லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை-1.

தமிழ் நாவல்களும் கதைப் புத்தகங்களும்

ஆரணி-குப்புசாமி முதலியார் இயற்றியவை

	ரூ.	அ.
இரத்தினபுரிரகசியம் 9-பாகமும்	18	14
ஞானசெல்வாம்பாள் 5-பாகம்	9	10
கற்பகச் சோலையின் அற்புதக் கொலை ...	2	0
கடற்கொள்ளைக்காரர்2பாகம்	4	0
மதனாம்பாள் 2-பாகம் ...	4	0
லோகநாயகி ...	1	0
விளையாட்டுச் சாமான் ...	1	6
பவளத்தீவு 2-பாகங்கள் ...	3	12
தபால்கொள்ளைக்காரர்கள் ...	1	0
அமராவதி 2-பாகங்கள் ...	5	0
மஞ்சள் அறையின் மர்மம் ...	2	0
கற்கோட்டை ...	2	8
பூங்கோதை ...	0	12
வீரநாதன்	0	12
[illegible]னகபூஷணம் 2-பாகமும்	4	0
[illegible]	2	[illegible]
தின[illegible]சுந்தரி	1	8
சந்தி[illegible]பாய்	2	8
இரா[illegible]மணி	2	8
இர[illegible]பாய் ...	2	8
மதன[illegible]ணம் ...	2	0
சுவர்ண[illegible]பாள் ...	0	12
தேவசுந்தரி	2	0
குணசுந்தரன்	1	0
ருத்மாஸனி ...	1	0
ஆனந்தஸிங் ...	2	0
மின்சார மாயவன் ...	2	0
ஆனந்தசிங்கின்அஷ்டஜயங்கள்	2	0
அரசூர் இலக்ஷ்மணன் ...	3	0
கைவல்லிய நவநீத வசனம் ...	2	4
சகோதரவாஞ்சை ...	0	5

	ரூ.	அ.
கம்பராமாயணவசனம் ...	4	0
ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரித்திரமும் உபதேசங்களும்	3	8
விவேகானந்தர் சரித்திரம் ...	5	0
தமிழ் மெடீரியா மெடிகா ...	3	8
மாதவி மாதவன் 2-பாகம் ...	2	4
மலையாள பகவதி ...	1	4
அற்புத நவநீத ரம்பை ...	1	8
ஆட்ட விகட விலாச விநோதம்	0	10
சோட்டி கார்த்தியாயினி ...	0	14

	ரூ.	அ.
தாசி ரமணி ...	1	8
உயிரோவியம் ...	1	8
யான் ஏன் பெண்ணைப் பிறந்தேன் ...	2	0
இவ்வுலகை திரும்பிப்பாரேன்	1	12
சிலப்பதிகார ஆராய்ச்சி ...	2	0
ஆர்ய மத சித்தாந்தம் ...	3	0
பூலோக லக்ஷ்மி கதை ...	0	14
கனகரத்தினம் ...	0	12
கண்டிராஜா நாடகம் ...	0	12
குசேலோபாக்கியான வசனம்	1	0
உதயணன் ...	0	6
தசக்கிரீவன் ...	0	14
போஜ சரித்திரம் ...	0	[illegible]
சதானந்தர் ...	1	4
கர்ணன் சரிதை ...	0	12
பீஷ்ம விஜயம் ...	0	10
[illegible]சிங்கன் ...	0	7
ஸ்ரீ[illegible]ருந்தாசர் ...	0	10
அரிச்ச[illegible]திரன் சரிதை ...	0	8
மணவா[illegible]ன் ...	0	5
பரசுரா[illegible]மன் ...	0	3
சிசுபாலன் ...	0	8
அ[illegible]தன் ...	0	4
தசாவதார மகிமை ...	0	6
கிருஷ்ணன் தூது வசனம் ...	0	8
சண்டோபாக்யானம் ...	0	6
கருணாகரரும் சத்தியசீலரும்	0	8
சத்தியவசனன் ...	0	4
விமலன் ...	0	4
கண்ணபிரான் ...	0	4
செய்யுட்பாடத்திரட்டு ...	0	4
நாலு மந்திரி கதை ...	0	4
மங்களேசுவரன் ...	0	6
தக்கன் ...	0	6
சீமந்தனி ...	0	8
நான்குகோடி ...	0	4
மதிமோசவிளக்கம் ...	1	0
மெய்க்காதலி ...	0	12
மேனுமினுக்கி கதை ...	0	12
வீணைகானன் ஞானேந்திரி ...	0	8
கோமளவல்லி கதை ...	0	12
விகடவல்லி கதை ...	0	6
தாலிகட்ட மறந்த கதை ...	0	7

இந்திர கவசமென்னும் சர்வ தேவதா வசியம் விலை ரூபா 1-4-0.

ஆனந்தபோதினி - ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167, சென்னை-1.

வெளி வந்துவிட்டது!

ஸ்ரீமத் கம்ப இராமாயண வசன சங்கிரகம்

(சப்த காண்டங்கள் அடங்கியது)

(நான்காம் பதிப்பு)

"நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் தோள்வலி கூறு வோர்க்கே."

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விவரித்துக் கூறும் இந்த இராமாயணம் புண்ணிய மிக்க கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதா லுண்டாகும் பயன்கள் அளவிடுதற்கு அரியனவாகும். இதனை பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலட்சுமி கடாக்ஷமுண்டாகும்.

மிக்க திருத்தங்களோடு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.
முழு காலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது.
ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது.

விலை ரூபா 4 தபாற் செலவு வேறு

மதனாம்பாள்

இதில், காளிங்கனாகிய லோகநாதன் என்னும் ஓர் நயவஞ்சகன், சகோதரத் துரோகியாய் அவனை அடுத்துக் கெடுத்தலும், பட்டாபிராமன் என்னும் ஓர் உத்தமனைக் காதலித்திருந்த மதனாம்பாள் என்னும் உத்தமியைத் தான் மணஞ் செய்துகொள்ள விரும்பி, வேலாயுதன் என்பவனைத் தன் மோசச் செய்கைகளுக்குத் துணைக்கருவியாகக் கொண்டு பல வஞ்சனைகளைச் செய்து, மதனாம்பாளை ஆதரித்து வந்த பாங்கிக்காரர் மனைவியாகிய விமலாபாயைப் பயமுறுத்தி, மதனாம்பாளைத் தன் விருப்பத்திற் கிணங்கச் செய்வதும், பாங்கியில் மகாமாயக் களவு நடத்தி அக்குற்றத்தை நிரபராதியாகிய பட்டாபிராமன் மேல் சுமத்துவதும் படிப்போர்க்கு ஆச்சரியத்தை விளைவிக்கும்.

2-பாகங்கள் விலை ரூபா 4 தபாற் செலவு வேறு

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, சென்னை-1.

ஆனந்தபோதினி
Regd. No. M 1150.
Registered as a News Paper in Ceylo

தற்காலத்தில் மனிதர்கள் பால்ய சேஷ்டையாலும், இ
த்தப் போக்காலும் அவர்க
உண்டான 20-வகை ரோகங்
கள், சூலைரோகம், குன்மரோகம், பித்தபா
கை கால் முடக்கு, ஓய்வாய்வு, பித்த எப்பம், செ
தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீர
பசியில்லாமை, தாதுஹீனம், தேக உஷ்ணசக்
ணில் நீர்வடிதல், சோமபல், நித்திரை யில்
தலை சுழற்றல், நீர் இறங்கும்போது
முடியாத பாதையைத் தரும் தகி மேக
வைகளை ஆச்சரியப்படத்தக்க விதம்
விடும். இதற்கு மிஞ்சின லேகிய மண்டப
க்குமில்லை.

சிங்கபலத்தைத் தருவதேது ?

அமிர்த சஞ்சீவி லேகிய

அயக்காந்த செந்து

லட்சுமி கம்பெனி, 6. லாயர் சின்ன ம்பி முதலி தெரு.

Edited, Printed and Published by N. MUNISWAMI MUDALIAR
"ANANDA BODHINI PRESS", No. 6, Lawyer Chinnatham